24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 40
பக்கங்கள்: 56


சுடர் 33 கதிர் 329 ஐப்பசி 04ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை 21 ஒக்ரோபர் 2018 வள்ளுவர் ஆண்டு 2049

# போர்க்குற்றச்சாட்டில் சிக்கிய தளபதியை இலங்கைக்கு திருப்பி அனுப்பியது ஐ.நா.

கொழும்பு, ஒக்ரோபர் 21

மாலியில் ஐ.நா. அமைதிப்படையில் பணியாற்றும் இலங்கைப் படைப்பிரிவின் கட்டளை அதிகாரி போர்க்குற்றம் சுமத்தப்படும் ஒருவர் என்றும், அவரை உடனடியாக நாடு திரும்புமாறு உத்தரவிடப்பட்டுள்ளதாகவும், ஐ.நா. பொதுச் செயலரின் பேச்சாளர் ஸ்டீபன் டுஜாரிக் தெரிவித்துள்ளார்.

இலங்கைப் போரில், போர்க்குற்றங்களை இழைத்தார் என்று குற்றம்சாட்டப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டதை அடுத்து, லெப்.கேணல் கலன பிரியங்கார லங்காமித்ர அமுனுபுரேவை, உடனடியாகத் திருப்பி அழைக்குமாறு ஐ.நா. பொதுச் செயலர் அன்ரனியோ குட்ரெஸ், அரசிடம் கோரியுள்ளார் எனவும் டுஜாரிக் கூறினார். » 53



## 'றோ' மீதான வதந்திக்கு மகிந்தவா காரணம்?

### இந்திய ஊடகம் ஊகம்

கொழும்பு, ஒக்.21
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தன்னைக் கொல்வதற்கான சதி முயற்சியில் 'றோ' ஈடுபட்டுள்ளதாகத் தெரிவித்தார் என்ற வதந்தி பரவுவதற்கு முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச காரணமாக இருக்கலாம் என்று இந்தியாவின் எக்கனமிக் ரைம்ஸ் ஊடகம், இலங்கை அரச வட்டாரங்களை மேற்கோள் காட்டிச் செய்தி வெளியிட்டுள்ளது. » 06

## எங்கள் ஆட்சியில் நடந்திருந்தால் பதில் வேறு விதமாக இருந்திருக்கும்

### கொக்கரிக்கிறார் கோத்தபாய

கொழும்பு, ஒக். 21
எங்களின் ஆட்சிக் காலத்தில், போர்க் குற்றச்சாட்டு சுமத்தி இராணுவ அதிகாரியை ஐ.நா. திருப்பி அனுப்பியிருக்குமாயின் எங்களின் பதில் வேறு விதமாக இருந்திருக்கும். ஐ.நா. அமைதிப் படையில் உள்ள ஒட்டுமொத்த இராணுவத்தினரையும் நாம் திருப்பி அழைத்திருப்போம். இவ்வாறு முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.
கோட்டையில் நேற்று இடம் » 06

## தெல்லிப்பழையில் 11கிலோ மாவாவுடன் சந்தேகநபர் கைது

யாழ்ப்பாணம், ஒக். 21
வடக்கு மாகாண மூத்த பொலிஸ் அத்தியட்சகர் கணேசநாதனுக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைவாக தெல்லிப்பழைப் பிரதேசத்தில் 11 கிலோ மாவாவுடன் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். » 50

## எங்கள் பிரதிநிதிகளுக்கு தோசையே போடத்தெரியாது

### கூறுகிறார் விக்கி

யாழ்ப்பாணம், ஒக். 21
அரசியலில் தோசையை எப்போது திருப்ப வேண்டும் என்று தெரிந்து வைத்திருக்க வேண்டும் என அமரர் சௌம்மியமூர்த்தி தொண்டமான் கூறுவார். தோசையே போடத் தெரியாதவர்கள் தான் எமது பிரதிநிதிகளாக இருக்கின்றார்கள். இவ்வாறு » 53

## எங்கள் தமிழ்த் தலைவர்கள் மேடைப் பேச்சுக்கே லாயக்கு

### இப்படிச் சொல்கிறார் விக்கி

யாழ்ப்பாணம், ஒக். 21
சிங்கள மக்கள் தமது இனத்தைக் காப்பதற்காக திட்டங்களை வகுத்துச் செயற்பட்ட போது எமது அரசியல் தலைவர்கள் மேடைப் பேச்சாளர்களாக மேடைகளில் வீர முழக்கங்களை முழங்கிவிட்டு வீட்டுக்குச் » 53

## அரசியல் பழிவாங்கலில் ஈடுபட்டார்; முதலமைச்சர் மீது குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஒக். 21
வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சராக டெனீஸ்வரன் பதவியில் தொடர்கின்றார் என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்காலக் கட்டளை வழங்கியது. திணைக்களத் தலைவர் களுக்கான கூட்டத்தை டெனீஸ்வரன் உடனடியாகக் கூட்டியிருந்தார். இந்தக் கூட்டத்துக்குச் சென்ற வடக்கு மாகாண போக்குவரத்து » 06

## ஜமால் கொல்லப்பட்டார்

## தன்மீதான குற்றச்சாட்டை ஏற்றது சவூதி அரேபியா!



இஸ்தான்புல், ஒக். 21
மாயமான செய்தியாளர் ஜமால் துருக்கியில் உள்ள சவூதித்தூதரகத்தில் கொல்லப்பட்டார் என்ற தகவலை சவூதி அரேபியா முதன் முறையாக நேற்று ஏற்றுக்கொண்டுள்ளது. இதையடுத்து சவூதிக்கு எதிராக அமெரிக்கா, » 53

## தமிழ் அரசிலிருந்து விலகினார் அனந்தி

### புதிய கட்சி அறிமுகம் இன்று

யாழ்ப்பாணம், ஒக். 21
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியிலிருந்து விலகுவதாக, வடக்கு மாகாண சபையின் மகளிர் விவகார கூட்டுறவு அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன் கடிதம் ஊடாக அறிவித்துள்ளார். தனது பதவி விலகல் கடிதத்தைத் தமிழ் அரசுக் கட்சிக்கு நேற்றுக் கையளித்துள்ளார்.
2013ஆம் ஆண்டு மாகாண சபைத் தேர்தலின் » 53

### கூட்டமைப்பு உடைந்தால்

## தென்னிலங்கை கட்சிகளே மாகாண சபையை கைப்பற்றும்

### எச்சரிக்கிறார் செல்வம் எம்.பி.



வவுனியா, ஒக். 21
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பல கூறுகளாக உடைந்தால், தேசியக் கட்சிகள் வடக்கு மாகாண சபையைக் கைப்பற்றி ஆட்சி அமைக்கும் நிலமை ஏற்படும் அபாயம் இருக்கின்றது. சரியோ, பிழையோ விடயங்களை எப்போதும் பேசித் தீர்க்க வேண்டும். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்களில் ஒருவரு » 06

SDB வங்கியிடமிருந்து நிலையான வைப்புக்களுக்கு கவர்ச்சிகரமான வட்டி
011 5 411 411
12.00% வ.தே.வ. 12.36% 06 மாதங்கள்
13.00% வ.தே.வ. 12.93% 13 மாதங்கள்
12.50% வ.தே.வ. 12.50% 12 மாதங்கள்
அழையுங்கள்: 0115 411 411
SDB வங்கி
Fitch Rating BB+ (stable). Reg. No: PB62PQ

# ரணிலும் மோடியும் டில்லியில் சந்திப்பு

## இரு நாட்டு உறவு தொடர்பில் பேச்சு

கொழும்பு, ஒக்.21

இந்தியா சென்றுள்ள தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அந்த நாட்டுத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடியை நேற்றுச் சந்தித்தார். இந்தச் சந்திப்பு இந்தியத் தலைநகர் புதுடில்லியில் நடைபெற்றது.



இந்தியா - இலங்கை இடையிலான உறவுகளை வலுப்படுத்தல், வர்த்தகம், முதலீடுகள் மற்றும் கடல்சார் பாதுகாப்புத் தொடர்பாகக் கவனம் செலுத்தப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரம சிங்கவுக்கும், இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ்க்கும் இடையேயும் நேற்றுச் சந்திப்பு நடந்துள்ளது. இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளை வலுப்படுத்துவது தொடர்பாகப் பேசப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

இந்திய அரசின் நிதியுதவியில் இலங்கையில் முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்களின் முன்னேற்றம் தொடர்பாகத் தலைமை அமைச்சர் ரணில் விக்கிமசிங்க, சுஷ்மா சுவராஜ்க்கு விளக்கமளித்துள்ளார். இந்தச் சந்திப்பின் பின்னர் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும், இந்திய நடுவண் அரசின் உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்குக்கும் இடையேயும் சந்திப்பு நடந்துள்ளது. அதில் இரு நாடுகளின் பாதுகாப்பு மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு ஒத்துழைப்பு என்பன தொடர்பாக ஆராயப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை, இலங்கை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவைக் கொலை செய்ய இந்திய உளவு அமைப்பான றோ முயற்சி செய்தது என்று தகவல்கள் வெளியாகிப் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில் இரு நாட்டுத் தலைமை அமைச்சர்களும் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர். மேலும், கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முன்னைய அபிவிருத்தித் திட்டத்தை இந்தியாவுக்கு வழங்கவேண்டும் என்று தலைமை அமைச்சர் ரணில் அமைச்சரவைக் கூட்டத்தில் தெரிவித்திருந்த நிலையில், அரச தலைவர் மைத்திரிபால அதற்கு எதிர்ப்பு வெளியிட்டிருந்தார். இவ்வாறானதொரு நிலையிலேயே தலைமை அமைச்சர் இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ளார். (ற)

# மைத்திரியின் செயலகத்தில் பூனைகளுக்கு குடும்பக் கட்டுப்பாடு!

கொழும்பு, ஒக். 21

அரசதலைவர்மைத்திரிபாலவின் செயலகத்தில்பெருகியுள்ளபூனைகளை அங்கிருந்து அகற்ற உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு கொழும்பு மாநகர சபையிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த3ஆண்டுகளாகஅரசதலைவர்செயலகத்தில்பூனைகள்வேகமாக பெருகி வருவதாகக்கூறியே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த கொழும்பு மாநகர சபையின் தலைமை கால்நடை மருத்துவர் தர்மவர்த்தன, பூனைகளை அங்கிருந்து அகற்றுவது சாத்தியமில்லை என்று கூறியுள்ளார். பூனைகளைக் கொண்டு சென்று விடுவதற்கான நிலையங்கள் இல்லை என்று சுட்டிக்காட்டிய அவர், அடுத்த வாரமளவில் அந்த பூனைகளுக்கு குடும்பக் கட்டுப்பாடு செய்ய நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் கூறியுள்ளார். (5)

# விக்கியின் வழக்கு மீண்டும் ஒத்திவைப்பு

கொழும்பு, ஒக். 21

வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மேன்முறையீட்டு மனு அடுத்த மாதம் 8ஆம் திகதி வரையில் மீண்டும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண அமைச்சரவையிலிருந்து நீக்கப்பட்டமைக்கு எதிராக பா. டெனீஸ்வரன் மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

அந்த வழக்கு மீதான நீதிமன்றின் இடைக்காலக் கட்டளை ஜூன் மாதம் 29ஆம் திகதிபிறப்பிக்கப்பட்டது. வடக்குமாகாணஅமைச்சராக பா.டெனீஸ்வரன் தொடர்வதாகக் கூறப்பட்டிருந்தது.

இந்தக்கட்டளைக்குஎதிராகவடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தார். இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொள்வதா இல்லையா என்பது தொடர்பில் நீதிமன்றம் இதுவரை தீர்மானிக்கவில்லை.

டெனீஸ்வரன் மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்த மூல வழக்கைவிசாரித்தநீதியரசர்களில் ஒருவரான தெஹிதெனிய, முதலமைச்சரின் மேன்முறையீட்டு நீதிமன்றவழக்கைவிசாரிக்கும்நீதியரசர்கள் குழாமில் உள்ளடக்கப்பட்டிருந்தார். டெனீஸ்வரன் தரப்புச் சட்டத்தரணிகள் உயர்நீதிமன்றத்தில் அதற்கு ஆட்சேபணை வெளியிட்டிருந்தனர். இதனால் உயர் நீதிமன்றத்தில் வழக்கு மூன்று தடவைகள் ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

வழக்கு உயர் நீதிமன்றில் கடந்த மாதம் 28ஆம் திகதி எடுத்துக் கொள்ளப்பட்டது. இரண்டு நீதியரசர்களே அமர்வில் இருந்தமையால் வழக்கு மீண்டும் ஒத்திவைக்கப்பட்டது. அடுத்த மாதம் 19ஆம் திகதி எடுத்துக் கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்தநிலையில், ஈவாவனசுந்தர, பிரசன்ன ஜயவர்தன மற்றும் எல். ரீ. பீ. தெஹிதெனிய ஆகிய மூவரடங்கிய நீதியரசர்கள் முன்னிலையில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. டெனீஸ்வரன் தரப்புச்சட்டத்தரணிகள், தெஹிதெனிய அடங்கிய ஆயம் முன்பாக வழக்கைவிசாரிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். இதனையடுத்து வழக்கு மீண்டும் ஒத்திவைக்கப்பட்டது. (5)

# முச்சக்கரவண்டிச் சாரதிகளை வாள்களுடன் மிரட்டிய கும்பல்

## நெல்லியடியில் பதற்றம்

யாழ்ப்பாணம், ஒக்.21

வாள்கள் மற்றும் பொல்லுகளுடன் வந்த கும்பல், முச்சக்கர வண்டிச் சாரதிகளைமிரட்டியது. இந்தச்சம்பவத்தால் நெல்லியடிப் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை பெரும் பதற்றம் நிலவியது.

நெல்லியடி மற்றும் துன்னாலைப் பகுதிகளில்வழிப்பறிக்கொள்ளைச் சம்பவங்கள் அண்மைக் காலமாக இடம்பெற்று வந்தன. துன்னாலை குடவத்தைப்பகுதியால்வந்தஒருவரின் 'பேர்ஸ்'வழிப்பறிக்கொள்ளையர்களால் நேற்றுமுன்தினம் பறிக்கப்பட்டது. 'பேர்ஸை' பறிகொடுத்தவர், வழிப்பறிக் கொள்ளையர்களின் உந்துருளி இலக்கத்தைகுறித்தெடுத்துள்ளார். நெல்லியடிப்பொலிஸாரிடம்அதனைவழங்கியுள்ளார். பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர். சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் ஒருவரை இனம்கண்ட பொலிஸார்அவரைமடக்கிப்பிடிக்கமுற்பட்டனர். பொலிஸாரைதலைக்கவசத்தால்தாக்கிவிட்டுசந்தேகநபர்தலைமறைவாகிவிட்டார்.

இதன் பின்னர், நெல்லியடிச் சந்திக்கு அருகில் உள்ள முச்சக்கர வண்டிச் சாரதிகளை சுமார் 10பேர் கொண்ட கும்பல் வாள் மற்றும் பொல்லுகளுடன் வந்து மிரட்டியுள்ளது. வழிப்பறிக் கொள்ளையரை, பொலிஸாரிடம் காட்டிக் கொடுத்தது முச்சக்கரவண்டிச்சாரதிகளேஎன்று தெரிவித்தே அவர்கள் மிரட்டல் விடுத்துள்ளனர். பொலிஸாருக்கு முறைப்பாடுசெய்யப்பட்டது. பொலிஸார் சம்பவ இடத்துக்கு வந்ததும் அந்தக் கும்பல் தப்பியோடிவிட்டது. பொலிஸார் அவர்களை விரட்டிச் சென்றனர். ஆனால் அவர்கள்பிடிபடவில்லை. இதனால் அந்தப் பகுதியில் பெரும் பதற்றம் நிலவியது. (5,7,422)

# அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டும்

## அதில் மாற்றுக் கருத்துக்கள் இல்லை என்கிறது ஜே. வி. பி

யாழ்ப்பாணம், ஒக்.21

இலங்கைச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் அனைவரையும் விடுவிக்க வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. மகிந்த அரசில் விடுதலைப் புலிகள் அமைப்பின் மூத்த உறுப்பினர் ஒருவர் பிரதி அமைச்சர்பதவிமற்றும், கட்சியில் உயர் பதவி வகிக்க முடியுமாக இருந்தால் சிறு குற்றங்கள் புரிந்த அரசியல் கைதிகளை ஏன் விடுதலைசெய்ய முடியாது?. -

இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் மக்கள்விடுதலைமுன்னணியின் (ஜே. வி. பி.) செயலர் ரில்வின் சில்வா.

வரிகள் அதிகரிப்பு, பொருள்கள் விலையேற்றத்தைக் கண்டித்து கொழும்பில் நடத்தவுள்ள போராட்டத்துக்கு ஆதரவு கோரி மக்கள் விடுதலை முன்னணியால் யாழ்ப்பாணத்தில் துண்டறிக்கைகள் நேற்று வழங்கப்பட்டன. அதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே ரில்வின் சில்வாமேற்கண்டவாறுகூறினார்.

அவர் தெரிவித்ததாவது.

அரசியல் கைதிகள் விடுதலைக்காகநாம்தொடர்ச்சியாகஅழுத்தம் கொடுத்து வருகின்றோம். பெரும் குற்றச்சாட்டுக்கள்சுமத்தப்பட்டுள்ளவர்கள் தொடர்பில் நீதிமன்றின் ஊடாகமுழுமையானவிசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு அதன் ஊடாகத்தீர்வைப்பெற்றுக்கொள்ள வேண்டும். அது அரசியல்ரீதியான தீர்மானத்தின் ஊடாக எடுக்கப்பட வேண்டும்.

மகிந்த அரசு தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின்மூத்தஉறுப்பினர் ஒருவருக்குப் பிரதி அமைச்சர் பதவி, கட்சியில் உயர் பதவி கொடுக்க முடியும் என்றால், அவர்களுக்கு எதிராக வழக்கு எதுவும் தாக்கல் செய்ய முடியாது என்றால் சிறு குற்றங்கள் புரிந்த அரசியல் கைதிகளை ஏன் விடுதலை செய்ய முடியாது?. அரசு அரசியல் கைதிகள் விடயத்தில் அரசியல் ரீதியான தீர்மானம் ஒன்றை எடுக்க வேண்டும் - என்றார். (ற-8)

# அரசுக்கு எதிரான போராட்டத்துக்கு ஆதரவு வழங்குமாறு துண்டறிக்கை




கொழும்பு, ஒக்.21

இலங்கை அரசின் வரி அதிகரிப்பு, பொருள்கள்விலையேற்றம்என்பவற்றைக் கண்டித்து நடத்தவுள்ள போராட்டத்துக்கு தமிழ் மக்கள் ஆதரவுவழங்கவேண்டும்என்று கோரிமக்கள்விடுதலைமுன்னணியால் யாழ்ப்பாணத்தில் நேற்று துண்டறிக்கைகள் வழங்கப்பட்டன.

யாழ்ப்பாணம் நகரப் பேருந்து நிலையத்துக்கு முன்பாக இந்தத் துண்டறிக்கைகள் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டன.

வரிகள் அதிகரிப்பு, பொருள்களின் விலை அதிகரிப்பு, இலங்கை சிங்கபூர்வர்த்தகஒப்பந்தம், அரசசொத்துக்களை விற்றல், ஊழல் மோசடிகள் என்பவற்றைக் கண்டித்து நாளை மக்கள் விடுதலை முன்னணி கொழும்பில் போராட்டம் ஒன்றை நடத்தவுள்ளது. அந்தப் போராட்டத்துக்குஆதரவுவழங்கக் கோரியே நேற்றுத் துண்டறிக்கைகள் வழங்கப்பட்டன. அந்தக் கட்சியின் செயலர் ரில்வின் சில்வா உட்படக் கட்சி உறுப்பினர்கள் துண்டறிக்கைகள் வழங்கும் செயற்பாட்டில் கலந்து கொண்டனர். (ற-8)



# துப்பாக்கி ரவை நேற்று மீட்பு

யாழ்ப்பாணம், ஒக். 21

காங்கேசன்துறை வீதியில் சுன்னாகம் சந்திக்கு அண்மையாக, வர்த்தக நிலையத்துக்கு எதிரே நேற்றுக் காலை 9.30 மணியளவில் புதிய துப்பாக்கி ரவை மீட்கப்பட்டது.

துப்பாக்கி ரவை வர்த்தக நிலையத்துக்குஎதிரேதிடீரெனகாணப்பட்டமையால், அந்தப்பகுதியில் சிறிதுநேரம்பரபரப்புநிலவியது. வீதி வழியாகச் சென்ற பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. அவர்கள் அதனை மீட்டுச் சென்றனர்.

துப்பாக்கிரவை மீட்கப்படுவதற்கு முன்னர்கடற்படையினர் அந்தப் பகுதியில் நடமாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (5,105)

# போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் உண்மை நிலையை அறிய முயற்சியுங்கள்

## மன்னார் வாழ்வுதய இயக்குநர் அருட்பணி செ.அன்ரன் தெரிவிப்பு

**மன்னார்,ஒக்.21**
**கடந்த 30 வருடப் போரால் பாதிக்கப்பட்ட மக்களின் உண்மை நிலையை இங்கு வரும் சிங்கள மக்கள் அனைவரும் அறியவேண்டும். அறியமுயற்சியுங்கள். அவ்வாறு அறிவதன் மூலமே உண்மையான சமாதானத்தையும் சகவாழ்வையும் அடைய முடியும் என மன்னார் வாழ்வுதய இயக்குநர் அருட்பணி செ.அன்ரன் அடிகளார் தெரிவித்தார்.**



கரித்தாஸ் வாழ்வுதய நிறுவனத்தினால் நடைமுறைப்படுத்தப்படுத்தப்பட்டு வரும் சர்வமதசெயற்பாடுகளின் ஒருபகுதியான, பல்வேறுபட்ட மத மற்றும் இனத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் மத்தியில், நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையில் வெவ்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த மக்களை ஒன்றிணைத்து, அவர்கள் மத்தியில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நிகழ்வு நேற்று முன்தினம் மாலை 4.30 மணியளவில் வாழ்வுதய இயக்குநர் அருட்பணி செ. அன்ரன் அடிகளார் தலைமையில் வட்டக்கண்டல் பாடசாலை பொது மண்டபத்தில் இடம்பெற்றது.

நிகழ்வுக்கு மன்னார் வாழ்வுதய நிறுவனத்தின் அழைப்பை ஏற்று கொழும்பு மறை மாவட்டத்தை சேர்ந்த மும் மத மற்றும் சிங்கள மக்கள் பிரதிநிதிகளும் பொது மக்களும் கலந்து கொண்டனர்.

இவர்களுடன் இணைந்து குறித்த நிகழ்வில் வட்டக்கண்டல் பிரதேசத்தை சோர்ந்த மக்கள், வாழ்வுதய நிறுவன ஊழியர்கள் அரச ஊழியர்கள், மற்றும் ஏனைய சர்வ மத பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் கலந்து கொள்ள கொழும்பு மாவட்டத்தில் இருந்துவந்த சிங்கள மக்களை வரவேற்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் அடிக்கடி மத சின்னங்கள் இனம் தெரியாத நபர்களால் சேதமாக்கப்பட்டும் உடைக்கப்பட்டும் வருகின்றன. மதத் தலைவர்களிடமும் மக்களிடமும் ஒற்றுமை இல்லாத பட்சத்தில் மத நல்லிணக்கமானது சிதைவடையக்கூடிய வாய்ப்பு காணப்படுகின்றது

இவ்வாறான சிலை உடைப்புக்கள் நல்லிணக்கத்தைச் சீர் குலைக்க இடமளிக்கக் கூடாது.

எனவே நல்லிணக்கத்துக்கான செயற்பாடுகள் அவசியம் அந்தச்செயற்பாடுகள் தொடர்ச்சியாக இடம்பெறவேண்டும் . இங்குவந்துள்ள சிங்கள மக்கள் அனைவரும் இங்கு வாழும் மக்களின் உண்மை நிலையை அறிய வேண்டும்.

கடந்த 30 வருட போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் உண்மை நிலையை அறிய முயற்சியுங்கள். அவ்வாறு அறிவதன் மூலமே உண்மையான சமாதானத்தையும் சகவாழ்வையும் அடையமுடியும் என மேலும் தெரிவித்தார். (56)

# வாள் வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞர் கைது

சாவகச்சேரி, ஒக். 21
ஆபத்தான வாள் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இளைஞரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்று உத்தரவிட்டது.

சாவகச்சேரி வடக்கு, சோலையம்மன் கோயிலடியில் 3 இளைஞர்கள் ஆபத்தான வாள்களுடன் நிற்கின்றனர் என்று சாவகச்சேரிப் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளது. அவர்கள் அந்த இடத்துக்குச் சென்றுள்ளனர். பொலிஸாரைக் கண்ட இளைஞர்கள் அங்குள்ள வீடொன்றுக்குள் ஒளிந்துள்ளனர். பொலிஸார் வீட்டைச் சுற்றிவளைத்துத் தேடியுள்ளனர். இரு இளைஞர்கள் தப்பியோட ஒருவர் பொலிஸாரால் மடக்கிப் பிடிக்கப்பட்டார். வாள் ஒன்றும் அங்கிருந்து கண்டுபிடிக்கப்பட்டது. இந்தச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை நடந்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் நேற்று முன்தினம் சாவகச்சேரிப் பதில் நீதிவானிடம் முற்படுத்தப்பட்டார். சந்தேகநபரை எதிர்வரும் 30ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ற-9,159)

# அரசகாணியில் மரம் தறித்தவர்கள் கைது

கிளிநொச்சி, ஒக். 20
கிளிநொச்சி, கோரக்கன்கட்டு, விளோவோடையில் அரச காணியில் மரங்களைத் தறித்தமை தொடர்பாக 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கிளிநொச்சி மாவட்டப் போதைப்பொருள் தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி சதுரங்க தெரிவித்தார்.

அரசகாணியில் சிலர் அனுமதியின்றி ஜே.சி.பி. இயந்திரம் கொண்டு துப்புரவுப் பணியில் ஈடுபடுகின்றனர் என்று கிராம அலுவலர் வழங்கிய தகலுக்கு அமைய பொலிஸாரால் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இரு ஜே.சி.பி. வாகனங்களின் சாரதிகள், மற்றும் காணிக்கு உரிமை கோரிய நபர் ஆகியோரே கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர்கள் நீதிமன்ற நடவடிக்கைகளுக்காக கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-6)

# ஒதியமலையில் நினைவுத்தூபி அமைக்க பொலிஸாரால் தடை

முல்லைத்தீவு. ஒக். 21
ஒதியமலைப்படுகொலை நினைவுத் தூபியை அமைப்பதற்கு பிரதேச மக்கள் எடுத்த முயற்சிக்கு ஒட்டுசுட்டான் பொலிஸார் தடைவிதித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

ஒதியமலையில் படுகொலை செய்யப்பட்ட இடத்தில் நினைவுத் தூபி அமைப்பதற்கு நேற்று நடவடிக்கை எடுக்கப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறீஸ்கந்தராசாவின் நிதி ஒதுக்கீட்டில் இந்தத் தூபி அமைக்கப்படவிருந்தது. அதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிலையில் அதற்கு ஒட்டுசுட்டான் பொலிஸாரால் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலைப் பொறுப்பதிகாரி தெரிவித்தாவது

நினைவுத்தூபி அமைப்பதற்கான அனுமதியைப் பொலிஸ் நிலையத்தில் காண்பித்துவிட்டு நினைவுத் தூபியை அமைக்க முடியும் என்று பொது அமைப்புக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்துவிட்டு அனுமதி பெற்றுத் தூபியை அமைக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. என்றார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லைக்கிராமங்களில் ஒன்றான ஒதியமலையில் 1984ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 02ஆம் திகதி 33 தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். அவர்களின் நினைவாகவே தூபி அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. (ற-ரி3)

# வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்கு உலர் உணவு



தென்மராட்சி, ஒக். 21
தென்மராட்சியில் வரட்சியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இரண்டாம் கட்ட உலர் உணவுப் பொருள்கள் அடுத்தவாரம் வழங்கப்படவுள்ளன.

பிரதேசத்தின் 60 கிராம அலுவலர் பிரிவுகளிலும் வறட்சியால் பாதிக்கப்பட்ட 5 ஆயிரத்து 452 விவசாயக்குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு முதலாம் கட்ட உலர் உணவுப் பொதிகள் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் ஊடாக வழங்கப்பட்டன.

இரண்டாம் கட்ட உலர் உணவுப் பொருள்கள் தற்போது வழங்கப்படவுள்ளன. இந்த உலர்உணவுப்பொதிகள் இடர்முகாமைத்து அமைச்சால் அனுப்பி வைக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

2 அங்கத்தவர் கொண்ட குடும்பத்துக்கு 4 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர்உணவுப் பொதியும், மூன்றுக்கும் அதற்கு மேற்பட்ட அங்கத்தவர்கள் கொண்ட குடும்பத்துக்கு 5 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர்உணவுப் பொருள்களும் வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

பிரதேசத்தில் மிகவும் வறுமை நிலையில் உள்ள பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், மாற்று வலுவுள்ளோரைக்கொண்ட குடும்பங்கள் முன்னுரிமையின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு அடுத்தவாரம் உலர்உணவுப் பொருள்கள் வழங்கப்படவுள்ளன என்றும், பிரதேச செயலக அலுவலர்களால் கிராம அலுவலர் பிரிவு ரீதியாக நேரில்சென்று அவை வழங்கப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

பிரதேசத்தில் 5 ஆயிரத்து 452 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் தற்போது ஆயிரத்து 500 பொதிகளே அனுப்பப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-9,159)

# சீருடையில் நின்ற மாணவனைத் தாக்கிய இலங்கைப் போக்குவரத்துச் சபை சாரதி

## மாங்குளம் பொலிஸாரால் நேற்றைய தினம் கைது

மாங்குளம்.ஒக்.21
மாங்குளம் பனிக்கன்குளம் பகுதியில் பாடசாலை சீருடையில் நின்ற மாணவனை தாக்கினார் என்ற குற்றச்சாட்டில் இலங்கை போக்குவரத்துச் சபைச் சாரதி மாங்குளம் பொலிஸாரால் நேற்றைய தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

சண்முகம் தவசீலன் என்னும் மாணவன் கடந்த 18 ஆம் திகதி பனிக்கன்குளம் பகுதியில் சீருடையில் நின்ற வேளையில் சாரதி தாக்கினார் என குற்றச்சாட்டப்படுகின்றது.

பருத்துத்துறைச் சாலைக்குரிய கொழும்பு சேவையில் ஈடுபடும் பேருந்தின் சாரதி தாக்குதல் மேற்கொண்டதாக மாங்குளம் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டிருந்தது.

இருப்பினும் நேற்றுக் காலை வரையில் குறித்த பேருந்தின் சாரதி பொலிஸாரால் கைதுசெய்யப்படவில்லை. என்றும் பொலிஸார் மீது நம்பிக்கை இல்லை எனத் தெரிவித்த கிராம மக்கள், நேற்றுக் காலை பனிக்கன்குளம் சந்தியில் கிராம அபிவிருத்தி சங்கம், இளைஞர்கழக உறுப்பினர்கள் ஏனைய அமைப்புக்களின் உறுப்பினர்கள் பொதுமக்கள் என அனைவரும் ஒன்று சேர்ந்து பருத்துத்துறை பேருந்து அப்பகுதியை அடைந்தவேளையில் பேருந்தினை வழிமறித்து நிறுத்தினர். இதனையடுத்து சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸாரால் பேருந்து மாங்குளம் பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்று விசாரணை மேற்கொள்ளப்பட்டனர்.

இருப்பினும் சம்பவம் நடந்த தினம் கடமையாற்றிய சாரதி மற்றும் நடத்துநர் பேருந்தில் கடமையில் இல்லாததோடு உரிய சாரதி பொலிஸ் நிலையம் வருவதாக தகவல் வழங்கப்பட்டமையால் பேருந்து தொடர்ந்தும் பயணிக்க அனுமதிக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து பொலிஸ் நிலையம் வந்த சாரதியை மாங்குளம் பொலிஸார் கைதுசெய்தனர். இவ்வாறு கைதுசெய்யப்பட்ட சாரதியை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதேநேரம் குறித்த மாணவர்கள் பேருந்தின் மீது கல்வீசித் தாக்கமுற்பட்ட காரணத்தினாலேயே தாக்கியதாக சாரதி பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார். (105)

# பரிசளிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக். 21
இலங்கை சாரணர் சங்கத்தின் பருத்தித்துறைக் கிளைச் சங்கத்தின் பரிசளிப்பு நிகழ்வு இன்று இடம்பெறவுள்ளது.
பருத்தித்துறை சாரணர் கிளைச் சங்கத்தின் தலைவர் ஆ.சிறி தலைமையில் ஆவரங்கால்நடராஜாஇராமலிங்க வித்தியாலயத்தில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இந்தப் பரிசளிப்பு நிகழ்வு நடைபெறவுள்ளது.
முதன்மை விருந்தினராக வடக்கு மாகாணக் கல்வி, கலா சார, விளையாட்டுத் துறை மற்றும் பண்பாட்டலுவல்கள் அமைச்சர் க.சர்வேஸ்வரன் கலந்துகொள்ளவுள்ளார். (ம)

*யாழ்ப்பாணக் குடாநாட்டில்*

# பனாட்டு உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 21
**யாழ்ப்பாணக் குடாநாட்டில் பனம் களியில் இருந்து பனாட்டு உற்பத்தி செய்யும் நடவடிக்கைகள் தற்போது அதிகரிக்கப்பட்டுள்ளன என்று பனை அபிவிருந்திச் சபை தெரிவித்தது.**

பனை அபிவிருத்திச் சபையின் உதவியுடன் 42 பனம் உற்பத்தியாளர் சங்கங்கள் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள நிலையில், அந்தச் சங்கங்களின் ஊடாக ப் பனாட்டின் உற்பத்தியை அதிகரிப்பது என்று பனை அபிவிருத்திச் சபை தீர்மானித்துள்ளது.
கடந்த வருடத்தில் பனாட்டுக்கு இருந்த கிராக்கியை அடுத்தும், சுற்றுலாப் பயணிகள் பனாட்டைக் கொள்வனவு செய்ய வெளிப்படுத்திய ஆர்வத்தை அடுத்தும் பனாட்டின் உற்பத்தி இந்த வருடம் அதிகரிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-17)

## வாணிவிழாக்கள்

**நானாட்டான் சிவராஜா சைவ வித்தி.**



நானாட்டான் சிவராஜா சைவ வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் சரஸ்வதி பூசை நிகழ்வுகள் நடைபெற்றன.

**கிளிநொச்சி இந்து கல்லூரி**



கிளிநொச்சி இந்து கல்லூரியின் வாணிவிழா நிகழ்வு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு பொன்சபாபதி மண்டபத்தில் இந்து மாமன்ற தலைவர் திருமதி க.ஜெயரட்ணம் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் தேவதாஸ் காந்தி சுவாமிகள் கலந்து கொண்டு அறநெறிக்கருத்துக்களை கூறி மாணவர்களுக்கு அருளாசி வழங்கினார். தொடர்ந்து மாணவர்களது கலைநிகழ்வுகளும் பட்டிமன்றமும் நடைபெற்றன.

**போக்கட்டி அ.த.க. பாடசாலை**



போக்கட்டி அ.த.க. பாடசாலையின் வாணி விழா நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு பாடசாலை அதிபர் தி.அபராஜிதன் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. இந்த விழாவில் தவசிகுளம் கண்ணகை அம்மன் ஆலயத்தின் தலைமைக் குருவான சிவப்பிரகாச குருக்கள் வாணி விழாவை முன்னிட்டு சிறப்பு வழிபாடுகளை நடத்தினார். மாணவர்களின் கலைநிகழ்வுகளும் நடைபெற்றன. (ம-159,9)

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மக்கள் சந்திப்பு நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம், ஒக். 21
தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின்மக்கள்சந்திப்பு இன்றுயாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளது. யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரியின் மஹ்மூத் மண்டபத்தில் இன்று காலை 9.30 மணிமுதல் இந்தச் சந்திப்பு நடைபெறவுள்ளது.
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை.சேனாதிராசா, நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான அய்யூப் அஸ்மின், இ.ஜெயசேகரம், யாழ்ப்பாணம்மாநகரமுதல்வர் இம்மனுவல் ஆனோல்ட் ஆகியோர் மக்கள் சந்திப்பில் ஈடுபடவுள்ளனர். (ம)

# வடமராட்சி கிழக்குப் பகுதியில் கேபிள் தொலைபேசி இணைப்பு

*ரெலிகொம் நிறுவனம் முன்னெடுப்பு*

யாழ்ப்பாணம், ஒக். 21
'சிறிலங்கா ரெலிக்கொம்' நிறுவனம் வடமராட்சி கிழக்கு பிரதேசத்துக்கு கேபிள் வசதியுடனான தொலைபேசி இணைப்பை மேற்கொள்ளும்பணிகளை நேற்றுமுன்தினம்வெள்ளிக்கிழமை ஆரம்பித்துள்ளது.
உடுத்துறை ஆழியவளை, செம்பியன்பற்று, வத்திராயன் ஆகிய பிரதேசங்களுக்கு இந்தக் கேபிள் இணைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தற்போது முதற்கட்டமாக இந்தப் பிரதேசங்களைச் சேர்ந்த மக்களுக்கு 240 இணைப்புக்கள் வழங்கப்படவுள்ளன. நவீனவலையமைப்புடன்கூடியஇணையத்தளவசதிகளும்இந்தப் பிரதேசங்களுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ளன. (ம-17)

# கைதடி நூலகத்துக்கு வாசிப்பு மாத விருது!

சாவகச்சேரி, ஒக். 21
தேசியநூலகஆவணவாக்கல்சேவைகள்சபையால் கடந்த வருடம் பொது நூலகங்களுக்கிடையில் நடத்தப்பட்ட தேசிய வாசிப்பு மாத செயற்பாடுகளின் பிரகாரம் சாவகச்சேரி பிரதேச சபையின் கைதடி பொது நூலகம் விருதுக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.
வருடாவருடம் சபையால் நடத்தப்படும் தேசிய வாசிப்பு மாதச் செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு சிறப்பாகச் செயற்பட்ட நூலகங்களைத் தெரிவுசெய்து கடந்த 11 வருடங்களாக விருதுகளும் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படுகிறது.
கைதடி பொது நூலகம் கடந்த 2016ஆம் ஆண்டு மேற்கொண்டதேசியவாசிப்புமாதச்செயற்பாடுகளுக்காக விருதைப் பெறவுள்ளது. (ம-9)

# வாசிப்பு மாதத்தை முன்னிட்டு மாணவர்களுக்குப் போட்டிகள்

சாவகச்சேரி, ஒக். 21
சாவகச்சேரிநகரசபையின்சாவகச்சேரிபொதுநூலகத்தினர் தேசியவாசிப்புமாதத்தைமுன்னிட்டுபாடசாலைமாணவர்களிடையே சில போட்டிகளை நடத்தி வருகின்றனர். சில போட்டிகள் அடுத்த வாரம் நடைபெறவுள்ளன.
அந்த வகையில் நாளை திங்கட்கிழமை பி.ப. 3 மணிக்கு தரம் 3 மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டியையும் நாளைமறுதினம்செவ்வாய்க்கிழமைபி.ப3மணிக்குதரம் 4மாணவர்களுக்கானபொதுஅறிவும்நுண்ணறிவுப்போட்டியையும் நடத்தவுள்ளனர். அத்துடன் எதிர்வரும் 27ஆம் திகதி காலை 9.30 மணிக்கு தரம் 2 மாணவர்களுக்கான வாசிப்புபோட்டியும்நண்பகல்11.30மணிக்குதரம்5மாணவர்களுக்கான பேச்சுப் போட்டியும் நடைபெறுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)

# மானம்பூ திருவிழா

**மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில்**



மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் மானம்பூ திருவிழா நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்றது.

**நல்லூர் சிவன் கோவில்**



நல்லூர் சிவன் கோவிலில் நேற்றுமுன்தினம் மாலை மானம்பூதிருவிழா நடைபெற்றது. (ம-27,17)






யாழ்ப்பாணம் உடுவில் மான்ஸ் தமிழ்க்கலவன் பாடசாலையின் பரிசளிப்பு நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. முதன்மைவிருந்தினராக நல்லூர்பிரதேசசுகாதாரமருத்துவ அதிகாரி அ.ஜெயக்குமரன் கலந்து கொண்டார். (ம)

# முக்கிய பாடங்களுக்கு ஆசிரியர்கள் இல்லை

## கிராஞ்சி மாணவர்கள் நெருக்கடியில்

**கிளிநொச்சி ,ஒக். 21**

**கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரிக் கோட்டத்துக்கு உட்பட்ட கிராஞ்சிப் பாடசாலையில் முக்கிய பாடங்களுக்கான ஆசிரியர்கள் இன்மையால் மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் எனப் பெற்றோர் கவலை தெரிவிக்கின்றனர்**

இந்த வருட இறுதியில் சாதாரண தரப் பரீட்சையில் சுமார் 20 க்கும் மேற்பட்ட மாணவர்கள் தோற்ற உள்ளனர். எனினும் முக்கியமான பாடங்களுக்கு ஆசிரியர் இல்லாத நிலையே பாடசாலையில் உள்ளது எனப் பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

விஞ்ஞானம், அழகியல், சுகாதாரம் போன்ற பாடங்களுக்கு ஆசிரியர்கள் இல்லை. இதனால் எமது பிள்ளைகளின் கல்வி நிலை வீழ்ச்சி அடைகிறது. அதனை நிவர்த்தி செய்ய வேண்டும் எனவும் பெற்றோர் வலியுறுத்துகின்றனர். இது தொடர்பாகக் கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர் யோன் குயின்ரசி டம் கேட்ட போது, "அழகியல் பாடங்களுக்கான ஆசிரியர் நியமனங்கள் 4 வருடங்களாக வழங்கப்படவில்லை. விஞ்ஞான பாட ஆசிரியர் மாற்றல் பெற்றுள்ளார். மிக விரைவில் நியமனம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்" எனத் தெரிவித்தார்.

பெற்றோர் இது தொடர்பாக தம்முடன் கலந்துரையாடியதாகவும். மேலதிக வகுப்புக்கள் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளது என்



## பயனாளிகளுக்கு தென்னங்கன்றுகள் வழங்கும் நிகழ்வு

மன்னார்,ஒக் .21

மரநடுகை வாரத்தை முன்னிட்டு தென்னைப் பயிர்ச் செய்கை சபையால் மானிய முறையில் தென்னங்கன்றுகள் வழங்கும் நிகழ்வும் நடுகைக் குழிகளுக்கான மானியக்கொடுப்பனவு வழங்கும் நிகழ்வும் கடந்த 12 ஆம்திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் வேலங்குளம் பிரதேசத்துக்குட்பட்ட பொதுவிளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது . (110)



## திருவள்ளுவர் சிலை வவுனியாவில் திரைநீக்கம்

வவுனியா ,ஒக் .21

வவுனியாவில் திருவள்ளுவர் சிலை திரை நீக்கம் செய்யும் நிகழ்வும், தெற்கு வலயக் கல்வி பணிப்பாளர் இராதாகிருஸ்ணனுக்கு மதிப்பளிக்கும் நிகழ்வும் கடந்த 17 ஆம் திகதி, இலங்கைத் திருச்சபைக் கலவன் பாடசாலையின் அதிபர் இ.நவரட்ணம் தலைமையில் இடம்பெற்றது.

தெற்கு வலயக்கல்விப் பணிப்பாளரால் பாடசாலை வளாகத்தில் அமைக்கப்பட்ட திருவள்ளுவர் சிலை திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டது.

நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய தெற்கு வலயக் கல்வி பணிப்பாளர் முத்து ராதாகிருஸ்ணன் நடைபெறவுள்ள க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் மாணவர்கள் மனவிருப்பத்துடனும் ஆசிரியர்களின் பங்களிப்புடனும் கல்விகற்றால் நிச்சயமாக அதிகூடிய பெறுபேறுகளைப் பெற முடியும். ஆகவே இந்தச் சந்தர்ப்பத்தை ஆசிரியர்களும், மாணவர்களும் சரியாகப் பயன்படுத்த வேண்டும் எனவும் தெரிவித்தார். (110)




## பாடசாலைக்கு உதவித்திட்டங்கள் வழங்கல்



மன்னார்,ஒக் .21

மன்னார், கணேசபுரம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்களுக்கு 'புளூஸ்' அபிவிருத்தி அமைப்பினால் உதவிகள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வு கடந்த 17 ஆம்திகதி காலை, பாடசாலை அதிபர் திருமதி கவிதா தலைமையில் இடம் பெற்றது. 'புளூஸ்' அபிவிருத்தி அமைப்பினால் முன்னெடுக்கப்பட்ட பாடசாலை வளாக சீரமைப்பு மற்றும் சுற்று வேலி அமைத்தல் போன்ற பணிகள் நிறைவடைந்து கையளிக்கப்பட்டதுடன் அதன் வேலைத் திட்டம் அடங்கிய பெயர்ப்பலகை புதிய மடு வலயக்கல்விப் பணிப்பாளர் சத்தியபாலனால் திறந்து வைக்கப்பட்டது. நிழல் பிரதி இயந்திரம், மாணவர்களுக்கான தைத்த சீருடையும் நிகழ்வில் வைத்து வழங்கி வைக்கப்பட்டன.

குறித்த வேலைத் திட்டத்துக்கான நிதியானது புலம்பெயர்ந்த இலங்கைத் தமிழ் உறவுகளால் வழங்கிவைக்கப்பட்டது . (56)



## பச்சிலைப்பள்ளிக்கு மின்விளக்குகள்

கிளிநொச்சி ,ஒக் .21

பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபையால் மின்விளக்குகள் பொருத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தவிசாளர் சு .சரேன் தெரிவித்துள்ளார் .முதற்கட்டமாக பளை நகரம்,சந்தைப் பகுதிகளில் மின்விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. மக்கள்,பச்சிலைப்பள்ளி வர்த்தகர்களின் வேண்டுகோளின் அடிப்படையில் இந்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அத்துடன் இன்னும் சில நாள்களின் கிராமிய மின்விளக்குகளும் வட்டார ரீதியாகப் பொருத்தப்படவுள்ளது என்றும் தவிசாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (6)



## கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டிருந்த இருவர் கைது

கிளிநொச்சி, ஒக். 21

தருமபுரம், நெத்தலியாற்றுப் பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டிருந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கிளிநொச்சி மாவட்ட போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி சதுரங்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நெத்தலியாற்றுப் பகுதியில் கசிப்பு உற்பத்தி இடம்பெறுவதாக கிடைக்பெற்ற தகவலுக்கு அமைய சுற்றிவளைப்பு நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

இதன் போது கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டிருந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களிடம் இருந்துஆயிரத்து 365 போத்தல் கோடாவும், 62 போத்தல் கசிப்பும், கசிப்பு உற்பத்தி உபகரணங்களும், உந்துருளி ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் சான்றுப்பொருள்களுடன் மேலதிக விசாரணை மற்றும் நீதிமன்ற நடவடிக்கைக்காகத் தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்று கிளிநொச்சி மாவட்ட போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி சதுரங்க தெரிவித்தார்.

சிறப்புப் 'பிரிவான போதைப்பொருள் தடுப்புப்பிரிவு கிளிநொச்சி மாவட்ட மூத்த பொலிஸ் அத்தியட்சகர் பாலித்த ஆர். சிறிவர்தன, பொறுப்பதிகாரி சதுரங்க மற்றும் உப பொலிஸ் பரிசோதகர் திமித்து தலைமையில் இயங்கி வருகின்றது. (6)

## முன்பள்ளி மாணவர்களுக்கு உதவி வழங்கல்

முல்லைத்தீவு மாவட்டம் விசுவமடு தேராவில் பகுதியில் அமைந்துள்ள மதுசா முன்பள்ளி மாணர்களுக்கு இராணுவத்தினரால் கற்றல் உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டுள்ளன. முன்பள்ளிக்கு விளையாட்டு மைதானமும் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வு கடந்த 19 ஆம் திகதி நடைபெற்றது . 68ஆவது படைத்தளபதி மேஜர் ஜெனரால் பெர்னான்டோ 68 - 3ஆவது படைப்பிரிவின் தளபதி கேணல் ஜெயசிங்க மற்றும் கிராம அலுவலர், முன்பள்ளிகளின் இணைப்பாளர் ஆகியோர் கலந்துகொண்டனர். (ரி3)



## தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் அதிக புள்ளிகளைப்பெற்ற மாணவர்கள்

கொடிகாமம், ஒக்.21

கிளிநொச்சி புனித பற்றிமா றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சைக்கு 33 மாணவர்கள் தோற்றினர். இவர்களில் 10 மாணவர்கள் வெட்டுப் புள்ளிக்கு மேல் பெற்று சித்தியடைந்துள்ளனர்.

புகழினி சந்திரலிங்கம் - 184, லிதுசாயினி பாலசுந்தரம் - 181, தமிழினி மனோகரராசா - 180, பவிசன் செபஸ்ரின் - 180, ஆர்த்தனா நாகசுதீஸ்கரன் - 174, யதுசாலினி யசிகரன் - 172, டிலானி பரமேஸ்வரன்- 172, விதுசா ரவிச்சந்திரன் - 171, பிரதீப் டன்ஸ்ரன் - 168, குறியாலன் அருளானந்தம் -165 ஆகியோரும் - 23 மாணவர்கள்-70 புள்ளிகளுக்கு மேலும் பெற்றும் சித்தியடைந்துள்ளனர். (159)



## தமிழ் -சிங்கள கலாசார ஆற்றுகை நிகழ்வு

வவுனியா,ஒக் .21

வவுனியாவில் தமிழ் சிங்கள கலாசார ஆற்றுகை நிகழ்வு வவுனியா காமினி வித்தியாலயத்தில் வவுனியா தெற்கு வலயக்கல்விப் பணிப்பாளர் முத்து இராதாகிருஸ்ணன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது வலயமட்டத்தில் இடம்பெற்ற தமிழ்த் தினப் போட்டி மற்றும் சிங்கள தினப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. தமிழ், சிங்கள கலாசாரத்தை வெளிப்படுத்தும் மாணவர்களின் பல்துறை சார் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் வவுனியா வடக்கு கல்விப் பணிப்பாளர் திருமதி அன்னமலர் சுரேந்திரன், வவுனியா கோட்டக்கல்வி அதிகாரி எம்.பி.நடராஜா, பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (110)

## உழுந்து மானியம் வழங்கும் நிகழ்வு

வவுனியா ,ஒக் .21

'நாம் பயிரிட்டே நாம் உண்போம் வேலைத்திட்டத்தின் கீழ்' வவுனியாவில் உழுந்து மானியம் வழங்கும் நிகழ்வு வவுனியா மதகுவைத்தகுளம், அரசடிக்குளம் பொதுநோக்கு மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

மதகுவைத்தகுளம் கமக்கார அமைப்புத்தலைவர் க.தயா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் விவசாய பிரதி அமைச்சர் அங்கஜன் இராமநாதன் மற்றும் மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் கே.கே.மஸ்தான் ஆகியோரால் விதை உழுந்துகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன. உழுந்து விதைக்கும் நிகழ்வும் இடம்பெற்றது. (110)



# திருத்தப்படாத வீதியால் திண்டாடும் பொதுமக்கள்



வவுனியா,ஒக் .21

வவுனியா குடியிருப்பு பகுதியிலிருந்து பூந்தோட்டம் செல்லும் முதன்மை வீதி நீண்ட காலமாகச் சீராக்கப்படவில்லை. இதனால் பாடசாலை மாணவர்கள், முச்சக்கரவண்டிகள், ஈருருளிகளில் பயணம் மேற்கொள்பவர்கள்எனப் பலரும் பெரும் அசௌரியங்களுக்குட்பட்டுள்ளதுடன், பாடசாலை மாணவர்கள் அடிக்கடி விபத்துக்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

குடியிருப்பு பகுதியிலுள்ள இலங்கை திருச்சபை தமிழ்க்கலவன் பாடசாலையில் கல்வி கற்கும் பூந்தோட்டம் மாணவர்கள் பலர், இந்த வீதியை பயன்படுத்தி வருகின்றனர். நீண்டகாலமாகவே இந்த வீதி குன்றும் குழியுமாகக் காட்சியளிக்கின்றது. மாணவர்களை பாடசாலைக்கு அழைத்துச் செல்லும் பெற்றோர்கள் முதல் வாகனச்சாரதிகள் வரை அனைவரும் இந்த வீதியைத் திருத்தித் தருமாறு கோரியுள்ள நிலையிலும், இன்று வரையிலும் இந்த வீதி திருத்தப்படவில்லை. 100 மீற்றர் நீளமுடைய வீதியில் சில இடங்களில் பெரிய குன்றும் குழியும் ஏற்பட்டுள்ளது. எனவே குறித்த வீதியைத் திருத்தி மாணவர்களின் பாதுகாப்பான பய

### தென்னிலங்கை...

மான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

வவுனியா, ஆச்சிபுரம் பகுதியிலுள்ள பெண் தலைமைத்துவக் குடும்பத்துக்கு தமிழீழ விடுதலை இயக்கத்தின் இளைஞரணியினரின் ஏற்பாட்டில் ஒரு இலட்சத்து 30 ஆயிரம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட தற்காலிக வீடு நேற்றுக் கையளிக்கப்பட்டது.

வீட்டு உரிமையாளரான பெண்மணியின் கணவர் மற்றும் இரு ஆண்பிள்ளைகள் இராணுவத்தால் கைது செய்யபட்;டனர். அவர்கள் தொடர்பில் இதுவரை எந்தத் தகவலும் இல்லை. அவர் மூன்று பெண்பிள்ளைகளுடன் கூலி வேலைசெய்து தனது வாழ்க்கையை நகர்த்தி வருகின்றார். தற்போது வசிக்கும் மண்ணாலான குடிசை இடிந்துவிழும் நிலையில் இருகின்றது. இவ்வாறானதொரு நிலையிலேயே தற்காலிக வீடு அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

வீடு கையளித்த பின்னர் உரையாற்றுகையிலேயே செல்வம் அடைக்கலநாதன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

வடக்குமாகாண சபை மக்களின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்ததாக நான் கருதவில்லை. அபிவிருத்தி விடயத்தில் மாகாணசபை பெரியளவில் எதுவும் செய்யவில்லை. கொழும்பு அரசு தருகின்ற நிதி போதாது என்று சொன்னோமே தவிர, நிதியை நாம் தேடவில்லை. இந்தியா உள்பட எமக்கு ஆதரவான பல நாடுகளிடம் முதலமைச்சரோ அமைச்சர்களோ நிதியை பெற்று அதன் மூலம் பல விடயங்களை சாதித்திருக்கலாம்.

ஒற்றுமையை நாம் வலியுறுத்தி அதிக ஆசனங்களைப் பெற்று ஆட்சிப்பீடமேறிய நாங்களே ஒற்றுமையாக இருக்கவில்லை. அது பெரிய சாபக்கேடு. எங்களுக்குள்ளேயே அடிபட்டுக்கொண்டோம். மாகாண சபையிடம் மக்கள் எதிர்பார்த்தமை அதிகமாக இருந்தது.

முதலமைச்சர் புதிய கட்சி தொடங்கப்போகின்றார் என்று இதுவரை உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை. அறிவிக்காத வரை நான் அது குறித்துக் கருத்துச் சொல்ல முடியாது.

நாங்கள் ஒற்றுமையாக இருப்பதன் மூலமே தென்னிலங்கை கட்சிகளுக்குச் சவாலாக இருக்க முடியும். தென்னிலங்கை எங்களைப் பிரித்தாளும் தந்திரத்தின் ஊடாக, தனது நடவடிக்கைகளை வடக்கில் செயற்படுத்தும். தமிழ்ச் சமூகம் மற்றும் தமிழ்க் கட்சிகள் பிரிந்து நிற்கின்ற நிலமை ஏற்படுமேயானால். எமது கொள்கை, இலட்சியம் வீணாகிப் போகின்ற நிலையேற்படும்.

பிரிக்கின்ற சந்தர்ப்பத்தை நாம் உருவாக்கக் கூடாது என்பது எமது கட்சியின் கருத்து. ஒற்றுமை தொடர்பாக முயற்சிகளை நாம் எடுத்துக் கொண்டு இருக்கின்றோம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனுடனும், முதலமைச்சருடனும் இது தொடர்பாகக் கதைத்திருக்கிறோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்னும் இரண்டு மூன்று கட்சிகளாகப் பிரிகின்ற போது ஒரு பெரிய ஆபத்தை நாங்கள் சந்திக்க வேண்டும். ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து வடக்குமாகாணசபையை கைப்பற்றுவதற்கான அபாயம் உள்ளது. சரி பிழை எப்போதும் இருக்கும். அதனைப் பேசித் தீர்க்க வேண்டும் என்றார். (5,110)

### 'றோ' மீதான...

அரச தலைவர் மைத்திரி தொடர்பான வதந்திகள் பரவுவதற்கு இலங்கையின் முன்னாள் அரச தலைவர் மீண்டும் அதிகாரத்தை கைப்பற்றுவதற்காக மேற்கொண்டுள்ள முயற்சிகளே காரணமாகயிருக்கலாம் என்று எக்கணமிக் ரைம்ஸ் குறிப்பிட்டுள்ளது.

இந்தியாவுக்கும் இலங்கையின் தற்போதைய ஆட்சியாளர்களுக்கும் இடையில் உள்ள நல்லுறவை குழப்பும் முயற்சியாகவே இது இடம்பெற்றிருக்கலாம் எனவும் எக்கனமிக்ஸ் ரைம்ஸ் குறிப்பிட்டுள்ளது. இரு அரசுகளுக்கும் இடையிலான உறவு எவ்வளவு தூரம் பாதிக்கப்படுகின்றது என்பதே மகிந்த ராஜபக்சவின் மீள்வருகையை சாத்தியமாக்கும் எனவும் எக்கனமிக்ஸ் ரைம்ஸ் தெரிவித்துள்ளது.

அடுத்த அரச தலைவர் தேர்தல் மூலம் மீண்டும் அதிகாரத்தை கைப்பற்றுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ள முன்னாள் அரசதலைவர் மகிந்த 'றோ' குற்றச்சாட்டு குறித்த வதந்தியைப் பரப்பியிருக்கலாம் என்று இலங்கை அரச வட்டாரங்கள் தெரிவித்தன என்று எக்கனமிக்ஸ் ரைம்ஸ் தெரிவித்துள்ளது.

இலங்கை - இந்தியாவுக்கு இடையில் நல்லுறவை விரும்பாத சக்திகளிடமிருந்தே இந்த வதந்தி உருவாகியிருக்கலாம் என்று ஊடக தகவல்கள் தெரிவிக்கின்றன எனவும் எக்கனமிக்ஸ் ரைம்ஸ் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, அரச தலைவர் மைத்திரிபால அமைச்சரவைக் கூட்டத்தில் 'றோ' மீது குற்றம்சாட்டியதாக தாம் வெளியிட்ட செய்தி சரியானது என்று 'த ஹிண்டு' ஊடகம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (5)

### அரசியல்...

அதிகார சபையின் தலைவர் நீக்கிலஸ்பிள்ளை, அவரது பதவிக் காலம் முடிவடைவதற்கு முன்னதாகவே வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனால் பதவி நீக்கப்பட்டுள்ளார்.

வடக்கு மாகாண போக்குவரத்து அதிகார சபையின் தலைவராக, வடகிழக்கு மாகாண சபையின் பிரதித் தலைமை (நிதி) செயலராகப் பணியாற்றிய க.மகாலிங்கம் கடந்த புதன்கிழமை பதவியேற்றார். அவருக்கான நியமனம், இந்த மாதம் முதலாம் திகதியிடப்பட்டு வழங்கப்பட்டுள்ளது. இருப்பினும், கடந்த 17ஆம் திகதியே பதவியேற்றுள்ளார்.

பதவி நீக்கப்பட்டமை தொடர்பில் நீக்கிலஸ்பிள்ளைக்கு அறிவிக்கப்படவில்லை. கடந்த 17ஆம் திகதி அவரும் பணிமனைக்குச் சென்றுள்ளார். இதன்போதே வேறொருவர் நியமிக்கப்பட்டமை தெரியவந்துள்ளது.

வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன், 2016ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 19ஆம் திகதி நீக்கிலாஸ்பிள்ளையை அதிகார சபையின் தலைவராக நியமித்திருந்தார். அவரது பதவிக் காலம் மூன்று ஆண்டுகளாகும். இவ்வாறானதொரு நிலையிலேயே அவர் பதவி நீக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, மேன்முறையீட்டு நீதிமன்றம் வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சராக டெனீஸ்வரன் தொடர்கிறார் என்றும் அவர் அமைச்சுப் பதவியைத் தொடர இடையூறு விளைவிக்கக் கூடாது என்று இடைக்காலக் கட்டளை வழங்கியிருந்தது. தீர்ப்பு நடைமுறைப்படுத்தப்படவில்லை என்று நீதிமன்ற அவமதிப்பு வழக்கு முதலமைச்சருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், போக்குவரத்து அமைச்சருக்குரிய அதிகாரத்தைப் பயன்படுத்தி முதலமைச்சர் விக்னேஸ்வரன் இந்த நியமனத்தை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5,105)

### எங்கள்...

பெற்ற எலிய அமைப்பின் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

இந்த அரசு பன்னாட்டுச் சமூகத்தை வென்றிருப்பதாக கூறுவது உண்மையாயின், ஐ.நா. சமாதானப் படையில் பணியாற்றச் சென்ற இராணுவக் கட்டளைத்தளபதியை திருப்பியழைக்குமாறு விடுத்திருந்த ஐ.நாவின் அறிவிப்பை நிராகரித்துக் காட்டவேண்டும். இன்று ஐரோப்பிய நாடுகள் எமது நாட்டு இராணுவத்தினரைப் புறக்கணிக்கும் நிலமை காணப்படுகின்றது. இறுதிப் போரில் கலந்து கொண்டவர்களை அவர்கள் தங்களது நாடுகளுக்குள் பிரவேசிக்க அனுமதிக்காத ஒரு நிலமை காணப்படுபகின்றது - என்றார். (5,31)

# விபரீதமான விளைவுகள் ஏற்படமுன்னர் மீனவர் பிரச்சினைக்குத் தீர்வுவேண்டும்

## பொலிஸ் பொறுப்பதிகாரி அவசர வலியுறுத்தல்

மன்னார், ஒக். 21

பாரதூரமான விளைவுகள் ஏற்படமுன்னர் பாப்பாமோட்டை மீனவர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணுங்கள் என்று மன்னார் மாவட்ட அடம்பன் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மடுவத்த வேண்டுகோள்விடுத்துள்ளார்.

மன்னார் மாந்தை மேற்கு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

நீண்டகாலமாக இழுபறி நிலையில் உள்ள பாப்பாமோட்டை மீனவர்களுக்கும் தோட்ட வெளி மீனவர்களுக்குமான பாப்பாமோட்டை பலகமுனை பாடுப் பிரச்சினை விரைவில் சுமுகமாகத் தீர்க்கப்படவேண்டும். தவறின் உயிராபத்தை விளைவிக்கும் வகையில் மீனவர்கள் மோதிக் கொள்ள இடமுண்டு.

இந்தப் பிரச்சினை நீதிமன்றம் சென்று பின்னர் மாவட்டச் செயலரிடம் சென்று பங்குத் தந்தையர்களிடமும் சென்று தீர்க்கப்படவில்லை. தினமும் ஒருவர் மாறி ஒருவர் வலைகளை அறுத்துக் கொள்கிறார்கள்.

சில நாள்களுக்கு முன்னரும் இந்தக் குற்றச்சாட்டில் சிலரைக் கைது செய்துள்ளோம். நாம் எமது கடமையைச் செய்கிறோம். புரிந்துணர்வோடு மீனவர்கள் பிரச்சினைக்குத் தீர்வு காணஅனைவரும் முன்வாருங்கள். இல்லையெனில் தற்போது வலைகளை வெட்டிக்கொள்பவர்கள் நாளை விபரீதமான முடிவுகளையும் எடுக்கக்கூடும் - என்றார்.

இந்த விடயம் மீளவும் நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது என்று அந்தக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. (4,213)



## முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்லத்தில் நேற்று துப்புரவுப் பணி

முல்லைத்தீவு, ஒக். 21

முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்லத்தில் பொதுமக்கள் நேற்றுத் துப்புரவுப் பணியில் ஈடுபட்டனர்.

முல்லைத்தீவு முள்ளியவளையில் அமைந்துள்ள மாவீரர் துயிலும் இல்ல வளாகத்தில் படையினரின் முகாம் அமைந்துள்ளது. அதன் ஒரு சிறிய பகுதி வெறுமையாகக் காணப்படுகிறது. அதில் கடந்த வருடம் பொதுமக்கள் மாவீரர் தின நிகழ்வைச் சிறப்புற நடத்தினர்.

எதிர்வரும் மாவீரர்தின நாளை முன்னிட்டு வடக்கு, கிழக்குப் பகுதிகளில் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்களை துப்பரவு செய்யும் பணியில் மக்கள் ஈடுபட்டுள்ளார்கள்.

நேற்றைய துப்புரவுப் பணியில் வடக்கு மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன், பிரதேச சபை உறுப்பினர்களான க.விஜிந்தன், சி.லோகேஸ்வரன், ந.ஜெகன், த.அமலன் உள்ளிட்ட பொதுமக்கள் ஈடுபட்டனர். (4,ரி3)

## 35 பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகள் சபை உறுப்பினர் ஜெயசேகரன் வழங்கினார்

பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் தெரிவு செய்யப்பட்ட 35 பயனாளிகளுக்கு 8 இலட்சம் ரூபா பெறுதிமதியான வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு யாழ்ப்பாணப் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் அண்மையில் இடம்பெற்றது.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் இ.ஜெயசேகரத்தின் மாதாந்த சம்பளப்பணம் மற்றும் குறித்தொதுக்கப்படும் நிதியில் இருந்து அவை வழங்கப்பட்டன. (4)



## ஒரு லட்சம் பேர் வாழும் முல்லையில் 16,102 வாகனங்களே பதிவில் உள்ளன

யாழ்ப்பாணம், ஒக். 21

முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்போது ஒரு லட்சம் பொதுமக்கள் வாழும் நிலையில் இன்று வரை 14 ஆயிரத்து 732 உந்துருளிகளும் 784 முச்சக்கர வண்டிகளுமே அந்த மாவட்டத்தின் பதிவில் உள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

வடக்கு மாகாணத்தில் மக்கள் தொகை குறைந்த மாவட்டமாக முல்லைத்தீவு காணப்படுகிறது. மாவட்டத்தின் நிலப்பரப்பு விஸ்தீரணத்தின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் போதுமான போக்குவரத்து வசதிகள் கிடையாது என்று அந்த மாவட்ட மக்கள் தொடர்ச்சியாகக் கருத்துத் தெரிவித்து வருகின்றனர்.

மாவட்டத்தில் பதிவில் உள்ள சகல வகை வாகனங்களின் விவரங்களையும் பிரதேச செயலகங்களில் 2017ஆம் ஆண்டுக்கான வரி செலுத்தியதன் அடிப்படையில் பெறப்பட்டது.

இவற்றின் அடிப்படையில் கரைதுரைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் 5 ஆயிரத்து 425 உந்துருளிகள், 67 மகிழூர்ந்துகள், 95 மூடுந்து கள்(வான்), 345 முச்சக்கர வண்டிகள், 71 பார ஊர்திகள், 26 பேருந்துகள் ஆகியவற்றின் உரிமையாளர்கள் வரி செலுத்துகின்றனர் என்று பதிவிலுள்ளன. துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவில் 2 ஆயிரத்து 280 உந்துருளிகள், 5 மகிழூர்ந்துகள், 76 மூடுந்துகள், 14 பேருந்துகள் ஆகியவற்றின் உரிமையாளர்கள் வரி செலுத்துகின்றனர் என்று பதிவிலுள்ளன.

மாந்தை கிழக்குப் பிரதேச செயலாளர் பிரிவில் 111 உந்துருளிகள், 14 முச்சக்கர வண்டிகள் வரிசெலுத்தப்பட்டு பதிவில் உள்ளன.

புதுக்குடியிருப்புப் பிரதேச செயலாளர் பிரிவில் 4 ஆயிரத்து 184 உந்துருளிகள், 31 மகிழூர்ந்துகள், 20 மூடுந்துகள், 315 முச்சக்கர வண்டிகள் 44 பேருந்துகள் ஆகியவற்றின் உரிமையாளர்கள் வரி செலுத்தியுள்ளனர்.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் ஆயிரத்து 854 உந்துருளிகள், 6 மகிழூர்ந்துகள், 9 மூடுந்துகள், 110 முச்சக்கர வண்டிகள், 34 பாரவூர்திகள் 3 பேருந்துகள் வரி செலுத்தப்பட்டு பதிவில் உள்ளன என்று வரி செலுத்தப்பட்டுள்ளது.

வெலிஓயாவில் 888 உந்துருளிகள், 10 மகிழூர்ந்துகள், 65 மூடுந்துகள் ஆகியவற்றின் உரிமையாளர்கள் வரி செலுத்துகின்றனர். இதன் அடிப்படையிலேயே மாவட் டத்தின் முகவரியை உடைய பதிவின் பிரகாரம் 14 ஆயிரத்து 742 உந்துருளிகள், 784 முச்சக்கர வண்டிகள், 119 மகிழூர்ந்துகள், 265 மூடுந்துகள், 87 பேருந்துகள்,105 பாரவூர்திகள் ஆகியன பதிவில் உள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏனைய மாவட்டப் பதிவில் இருந்து உரிம மாற்றம் செய்யப்பட்ட குறிப்பிட்டளவு வாகனங்களும் காணப்படுகின்றன என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (4,105)

அரசியல் கைதிகளை

## இனியும் சிறையில் வைத்திருப்பது நல்லிணக்கத்துக்குப் பாதகம்தான்!

### அவர்களுக்குப் பொதுமன்னிப்பு வழங்குமாறு சர்வமதப் பேரவை மைத்திரியிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 21

சிறையில் நீண்ட காலமாக விசாரணை இன்றி வாடுகின்ற அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும். அவர்களைத் தொடர்ந்து சிறையில் தடுத்து வைத்திருப்பது மனிதாபிமானம் அற்றது மட்டுமல்ல நல்லிணக்கத்துக்குப் பாதகமானது.

இவ்வாறு யாழ்ப்பாண மாவட்ட சர்வமதப் பேரவையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அவர்கள் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டதாவது,

வடுக்களையும் வலிகளையும் தாங்கியவர்களை வாழ வழி செய்ய வேண்டும்.

வாழ்ந்த காலத்தில் வடுக்களையும் வலிகளையும் சுமந்த இவர்கள் நிம்மதியாக வாழ வேண்டிய காலத்திலும் சிறைக்குள் வாடிக் கொண்டிருப்பது வேதனைக்குரியது. நல்லாட்சி பிறந்தது என்று மகிழ்ச்சியுடன் எதிர்பார்த்திருந்த அவர்களுடைய கனவுகள் தவிடு பொடியாகியுள்ளன.

போர் முடிந்து பல ஆண்டுகள் கடந்தபோதும் அதன் பெயரால் பல குடும்பங்கள் சீரழிந்தமை முடிவுக்குக் கொண்டு வரவேண்டும்.

அரசியல் கட்சிகள் முழுப் பலத்தையும் பிரயோகித்துப் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தீர்வு வழங்க வேண்டும்.

அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவே! அரசியல் கைதிகள் விடயத்தில் கவனஞ்செலுத்தி பொது மன்னிப்பின் அடிப்படையில் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும். இதுவே நிரந்தரமான அமைதியையும் சமாதானத்தையும் ஏற்படுத்தித் தரவல்லது - என்று குறிப்பிட்டுள்ளனர். (4)

## முன்னோர்களின் வாழ்க்கை முறைகள் பற்றி அடுத்த தலைமுறை அறிந்திருக்கவேண்டும்

### வடக்கு கல்வி அமைச்சர் வலியுறுத்தல்

யாழ்ப்பாணம், ஒக். 21

வடக்கு மாகாண அடையாளங்கள் அழிக்கப்பட்டு மாற்றப்பட்டுள்ளன. எங்களுக்கு பின்னால் வரக்கூடிய சமூகம் எங்கள் முன்னோர்களின் வாழ்க்கையையும் அதன் அம்சங்களையும் தெரிந்து கொள்ளவேண்டும்.

இவ்வாறு வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டம் மாந்தை கிழக்கு அம்பாள்புரம் மாங்குளம் மல்லாவி முதன்மை வீதியில் தமிழரின் தொன்றுதொட்ட வாழ்வியலைப் பிரதி பலிக்கும் திறந்தவெளி அருங்காட்சியகத்துக்கான 'தமிழர் நாகரிக மையம்' கடந்த வியாழக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

அதில் உரையாற்றுகையில் சர்வேஸ்வரன் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் ஆதிக்குடிகளான தமிழ்மக்கள் இது சிங்கள பௌத்த நாடு என்று சொல்வது முரண்பாடுதான்.

நாட்டின் ஆதிக்குடிகளான தமிழ் மக்களின் அடையாளம், பண்பாடு, கலாசாரம் அனைத்தையும் இல்லாமல் செய்வதன் ஊடாக இது சிங்கள பௌத்த நாடு என்று நிறுவலாம் என்று இலங்கை சுதந்திரம் அடைந்த காலத்தில் இருந்து பல்வேறு முனைகளில் அரசு பல நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது.

மாகாண சபையின் ஐந்து ஆண்டு காலம் சில நாள்களில் முடிவடையவுள்ளது. மாகாணசபை ஒன்றும் செய்யவில்லை என்று தவறான விமர்சனம் ஒன்று உள்ளது.

கல்வி விடயத்தில் கடந்த ஆண்டு வடக்கு மாகாணம் உயர் கல்வி சித்தியில் முதலாவது இடத்தைப் பிடித்துள்ளது. இதனைத் தக்கவைத்துக் கொள்ள நிறைய வேலைகள் செய்ய வேண்டியுள்ளன.

சாதாரணதரப் பரீட்சையில் வடக்கு மாகாணம் இலங்கையில் 9ஆவது இடத்தில் இருந்தது. முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் கடந்த ஆண்டு 6 வீத சித்தி அதிகரித்துள்ளது - என்றார்.

நிகழ்வில் 'தமிழர் நாகரிக மையத்தை வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் திறந்து வைத்தார். அதில் அதிகாரிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர். (4,ரி3)

## நாவற்குழியிலுள்ள பிணமுருங்கை மயான கொட்டகையை சீர்செய்யுமாறு கோரிக்கை

கொடிகாமம், ஒக். 21
சாவகச்சேரிப் பிரதேச சபையின் நாவற்குளி உப அலுவலக எல்லைக்குட்பட்ட நாவற்குழி பிணமுருங்கை இந்து மயானத்தில் சேதமடைந்து காணப்படும் எரிகொட்டகையை மழை ஆரம்பிப்பதற்கு முன்னர் சீரமைக்குமாறு இவ்வாறு சபை உறுப்பினர் தி. தங்கவேலு பிரதேச சபைத் தவிசாளரிடம் கேட்டுள்ளார்.
நாவற்குழி கிழக்கு கோவிலாக்கண்டி, கைதடி நாவற்குழி ஆகிய கிராம அலவலர் பிரிவு களைச் சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் இந்த மயானத்தைப் பயன்படுத்துகின்றனர்.
இந்த மயானத்தில் அமைக்கப்பட்டிருந்த எரிகொட்டகையில் பொருத்தப்பட்டிருந்த தகரங்கள் நீண்டகாலமாக சேதமடைந்து காணப்படுகிறன.
மழைகாலம் ஆரம்பித்தால் எரிகொட்டகையில் வைத்து சிதை எரிக்க முடியாத நிலை காணப்படும்.
எனவே மழைகாலம் ஆரம்பிக்க முன்னர் சேதமடைந்த தகரங்களைச் சபை நிதியின் மூலம் சீரமைக்க வேண்டுமென்று கேட்டுள்ளார். (4.159.9)



சாவகச்சேரி நகரசபையின் சாவகச்சேரி பொது நூலகத்தினர் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான சித்திரம் வரைதல் போட்டி பொது நூலக மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது. (9,159)

## உயிருதிர் காலத்தின் இசை விமர்சன அரங்கு

கொடிகாமம், ஒக். 21
பதுளை சேனாதிராஜாவின் 'உயிருதிர் காலத்தின் இசை விமர்சன அரங்கு' நிகழ்வு கொழும்பு தமிழ்ச்சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் இன்று மாலை 5 மணிக்கு நடைபெறும். பேராசிரியர் சபா. ஜெயராசா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு சிறப்பு விருந்தினராக பேராசிரியர் சோ. சந்திரசேகரம் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.
கொழும்பு கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் ஏற்பாட்டில் 2017 ஆம் ஆண்டின் சிறந்த சிறுகதைத் தொகுப்புக்கான அரச கொடகே சாகித்ய விருதுகளை வென்றவர் சேனாதிராசா என்று தெரிவிக்கப்பட்டது. (4,159)

### நவீனமயப்படுத்தல் ஊடாக

# கல்வியைக் கட்டியெழுப்ப 100 மில்லியன் டொலர் உதவி

### இலங்கைக்கு உலக வங்கி வழங்குகிறது
### நாளை செயற்றிட்டம் ஆரம்பமாகிறது

யாழ்ப்பாணம், ஒக். 21
இலங்கையின் கல்வியைக் கட்டியெழுப்ப உலக வங்கி 100 மில்லியன் டொலர் கடனுதவி வழங்கவுள்ளது என்று கொழும்பு கல்வி அமைச்சு தெரிவித்தது. கல்வி அமைச்சின் தகவலின்படி கல்வியைக் கட்டியெழுப்பும்பணி நாளை ஆரம்பிக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

இலங்கைகல்வித்துறைசார் அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் இந்த நிதி வழங்கப்படவுள்ளது.
2018 - 2024 வரையான காலப்பகுதிக்குள் இந்த வேலைத்திட்டத்தை நடைமுப்படுத்தத்திட்டமிடப்பட்டுள்ளது.
இந்தத்திட்டத்தின் ஆரம்பநிகழ்வு நாளை முற்பகல் 10 மணிக்கு கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தலைமையில் இடம்பெறவுள்ளது.
முதலாம் நிலை மற்றும் இரண்டாம் நிலைக் கல்வியைத் தரமானதாகக் கட்டியெழுப்புவதும் இந்தத் திட்டத்தின் முக்கிய குறிக்கோள் எனத் தெரிவிக்கப்பட்டது. இந்த வேலைத்திட்டத்தின் ஊடாக ஐந்து ஆண்டுகள் காலப்பகுதிக்குள் ஆங்கில மொழி மற்றும் கணித பாட விதானங்களை விருத்தி செய்தல் மற்றும் தொழில்சார் வழிகாட்டலை பலமாக்கல், டிஜிற்றல் கற்றல் உபகரணப் பாவனையை விருத்தி செய்தல், பாடசாலை மற்றும் தொழில்சார் ஆசிரியத்துறையை அபிவிருத்தி செய்தல், ஆசிரிய மத்திய நிலையங்களை மேம்படுத்தல், முழுமையான சேவைக்கான ஆசிரியப் பயிற்சி ஒன்றை முன்னெடுத்தல், கல்வித்தரத்தை உறுதிப்படுத்தல், கற்பித்தல் மதிப்பீடுகளை நவீனமயப்படுத்தல், பாடசாலைகளைக் கட்டியெழுப்பும் வேலைத் திட்டங்களைப் பலமாக்கல், கல்வித் தலைமைத்துவம் மற்றும் முகாமைத்துவத்தை அபிவிருத்தி செய்தல், கல்வியின் ஊடாக சமூகநீதி மற்றும் உள்ளகச் செயற்பாடுகளை விருத்தி செய்தல், கல்வியின் ஊடாகச் சமூக ஒருங்கிணைப்பை விருத்திசெய்தல், பாடசாலைச் சுகாதார ஆலோசனை மற்றும் நன்நடத்தைகளைப் பலப்படுத்தல் ஆகிய திட்டங்களை முன்னெடுக்க அரசு திட்டமிட்டுள்ளது. அரசின் "2030 நிலையான அபிவிருத்தி" திட்டத்தின் நோக்கங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் பலமான இலங்கையை உருவாக்கும் "2025 நோக்கு " என்ற திட்டத்தின் கீழ் உள்ள செயற்பாடுகளை வெற்றி கொள்வதற்கும் இந்தத் திட்டம் பக்கபலமாக இக்கும்.
திட்டம் கல்வியமைச்சு தேசியமட்ட நிறுவனங்கள், மாகாணக் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் நடைமுறைப்படுத்துவது அரசின் எதிர்பார்ப்பாக உள்ளது - என்று கல்வி அமைச்சின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது. (4)



## வாழ்வாதாரத்துக்கான உதவிகளை வடக்கு விவசாய அமைச்சு வழங்கி

யாழ்ப்பாணம், ஒக். 21
தென்மராட்சியில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.
வடக்கு மாகாண விவசாய அமைச்சு உதவிகளை வழங்கியது.
சாவகச்சேரி கால்நடை சுகாதார வைத்திய பணிமனையில் கால்நடை வைத்திய அதிகாரி தலைமையில் நிகழ்வு நடைபெற்றது.
நிகழ்வில் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் க. சிவநேசன் அமைச்சின் இணைப்புச் செயலாளர் ஞா. கிஷோர், சாவகச்சேரி நகரசபைத் தலைவர் திருமதி சிவமங்கை இராமநாதன் ஆகியோர் கலந்து கொண்டு பயனாளிகளுக்கான பொருள்களை வழங்கினர்.
கோழி வளர்ப்புக்குத் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்குக் கோழிக் கூடு மற்றும் கோழிக்குஞ்சுகளும் கால்நடை வளர்ப்புக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பசுக்கள் மற்றும் ஆடுகள் வழங்கப்பட்டன - என்று தெரிவிக்கப்பட்டது. (4,8)

## தென்மராட்சிக் கலைமன்றத்தின் சிறப்புற்ற கலாசாரப் பெருவிழா



கொடிகாமம், ஒக். 21
தென்மராட்சிக் கலைமன்றத்தினர் நடத்தும் கலாசாரப் பெருவிழா கலைமன்ற கலாசார மண்டபத்தில் நேற்றுப்பிற்பகல் சிறப்பாக இடம்பெற்றது.
கலைமன்றத் தலைவர் க. மோகனராஜலிங்கம் தலைமையில் இது நடைபெற்றது.
முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் கே. சயந்தன் கலந்துகொண்டார். தென்மராட்சி உதவிப் பிரதேசசெயலர் செல்வி க. வினோஜிதா, சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் திருமதி. சர்வேஸ்வரன், யாழ்ப்பாண தமிழ்ச் சங்கத் தலைவர் ச. லலீசன், மருதங்கேணி பிரதேசசெயலர் க. கனகேஸ்வரன், சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர் இ. சிவமங்கை, சாவகச்சேரிப் பிரதேச சபைத் தவிசாளர் க. வாமதேவன், சாவகச்சேரிப் பிரதேச சபை உபதவிசாளர் செ. மயூரன், ஆசிரியர்கள், கலைஞர்கள், ஆர்வலர்கள், அரச பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.
விருந்தினர்கள் சாவகச்சேரி சிவன் கோவிலிலிருந்து விழாமண்டபம் வரை மங்கள வாத்தியங்களின் இசையுடன் அழைத்து வரப்பட்டனர்.
"எங்கள் பண்பாடு படும்பாடு" எனும் தலைப்பில் நற்றமிழ்வேந்தன் கவிஞர் த. நாகேஸ்வரன் தலைமையில் கவியரங்கம் இடம்பெற்றது. கவியரங்கக் கலைஞர்கள், மங்கள வாத்தியக் கலைஞர்கள் முதன்மை விருந்தினரால் பொன்னாடை போர்த்தி மதிப்பளிக்கப்பட்டனர்.
சாவகச்சேரி இசைநடனக் கல்லூரியின் இயக்குநர் தெ. திருவேரகனின் கர்நாடக சங்கீத இசை விருந்தும் கலைநிகழ்வுகளும் அங்கு இடம்பெற்றன. (4,159,9)



அபான்ஸ் எலைட் காட்சியறைகள் தினமும் இரவு 9.00 மணிவரை திறந்திருக்கும்
hp acer Lenovo Haier DELL
பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு அதி நவீன தொழில்நுட்பம், தனிப்பட்ட மறறும் மதிப்புமிக்க அனுகுலங்கலோடும் .பிரத்தியேக மடிக்கணனிகள் அபான்ஸிடமிருநது மட்டுமே
0% வட்டி
ஆரம்ப கட்டணம் இல்லை*
15 மாதம் வரையிலான தவணை கட்டண வசதிகள்
eஸ்கோலே
மாணவர்களுக்கான சிறந்த மடிக்கணினிகள்
மேலும் தரம் 5 புலமைப்பரிசில் மாணவர்களுக்கும் செல்லுபடியாகும்
Upto 3 Year EXTENDED Warranty
ACER 576G i3 Win
i3 8th Gen
4GB RAM | 1TB HDD
Windows 10 | 15.6" Display
ரூ. 95,890
விசேட விலை ரூ.80,590
FREE 2 Years Warranty
HP 15 DA0002 i3
i3 8th Gen
4GB RAM | 1TB HDD
Windows 10 | 15.6" Display
ரூ. 80,090
FREE 2 Years Warranty
HP 15 DA0028 i5
i5 8th Gen
4GB RAM | 1TB HDD
Windows 10 | 15.6" Display
ரூ.116,190
விசேட விலை ரூ. 96,390
FREE 2 Years Warranty
ACER 576G i5
i5 8th Gen
6GB RAM | 1TB HDD | 2GB VGA
15.6" Display | Windows 10
ரூ.125,990
விசேட விலை ரூ.101,990
FREE 2 Years Warranty
FREE Printer or DVD Writer
ACER A6-A3
AMD A6 9220
4GB RAM | 1TB HDD
Linux | 15.6" Display
ரூ.66,290
விசேட விலை ரூ.56,090
Warranty - Up to 3 Years
HP 15 BW 504
AMD A9 9420
8GB RAM | 1TB HDD | 2GB VGA
Windows 10 | 15.6" Display
ரூ.93,390
விசேட விலை ரூ. 81,590
FREE 3 Years Warranty
Lenovo
LENOVO IP320 i7
i7 8th Gen | 8GB RAM | 1TB HDD
4GB VGA | 15.6" FHD Display
Windows 10
ரூ.156,090
விசேட விலை ரூ.133,690
Warranty - Up to 3 Years
ACER Nitro 5
Intel Core i7
16GB OPTANE MEMORY
4GB RAM | 1TB HDD
GTX 1050 4GB VGA | Windows 10
ரூ. 202,990
விசேட விலை ரூ.182,590
FREE 3 Years Warranty
FREE GIFTS
FREE Virus Guard
No.1 FASTEST BROADBAND NETWORK
Sri Lanka Telecom
50% DISCOUNT 50|50 50GB FREE
SLT Fibre | 4G LTE | Megaline
ஆகியவற்றின் புதிய இணைப்புகளுக்கு 50% வரையிலான விலைக்கழிவு
SLT Fibre
4G
MEGALINE
Megaline Voice + Broadband
ஆகியவற்றின் புதிய இணைப்புகளுக்கு 4 Port WiFi Router இலவசம்
எல்லா புதிய இணைப்புகளுடன் 50GB Data Pack இலவசம்
*நிபந்தனைகளுக்கு உட்பட்டது
0115886655 (MON - SAT)
/abansit
For Credit card Holders
60 Months Instalment Plans
Upto 16% off
HSBC
Nations Trust Bank
HNB
PEOPLE'S BANK
NDB bank
Abans




அபான்ஸ் எலைட் காட்சியறைகள் தினமும் இரவு 9.00 மணிவரை திறந்திருக்கும்.
LG | HiFi
பிரம்மாண்ட சப்தம்...
PMPO 6,500w
USB playback
Portable In
DVD
DM5540
ரூ.52,999
விசேட விலை
ரூ.45,999
15
ரூ.10,000
பெறுமதியான நீங்கள் விரும்பும் எந்தவொரு பொருளும் இலவசம்!
12
PMPO 2,600w
DVD VIDEO
HDMI
DOLBY DIGITAL
Bass Blast
Portable In
USB playback
Bluetooth
ரூ.13,000
தள்ளுபடி
DM5360
ரூ.32,999
விசேட விலை
12
மாதங்கள் வரை செலுத்திடுங்கள்
PMPO 12,500w
Bluetooth
DVD
Bass Blast
USB playback
Portable In
DM8360
ரூ.61,999
ரூ.56,999
மாதாந்தம்
ரூ.4,639/-
*நிபந்தனைகள் உண்டு
15
PMPO 9,000w
USB playback
Portable In
DVD
Bass Blast
DM7630
ரூ.71,999
மாதாந்தம்
ரூ.4,883/-
PMPO 32,500w
Bluetooth
USB playback
Dance Lighting
DJ Effects
Party Thruster
Wireless Party Link
DJ Loop
12
CJ88
ரூ.112,999
ரூ.79,999
மாதாந்தம்
ரூ.7,619/-
0115999000
Buy Abans.com
அபான்ஸ், அபான்ஸ் எலைட் மற்றும் அங்கீகாரம் கொண்ட முகவர்களிடம் பெறலாம்.
லோயல்டி அட்டைகளுக்கு இன்றே விண்ணப்பியுங்கள்
Abans


நல்லதொரு நாளைக்கான நம்பிக்கையை விதையுங்கள்
நாளைய வாழ்வில் வெல்ல வேண்டுமாயின், நான் வெல்வேன் என்ற நம்பிக்கையை இன்றே நீங்கள் விதைக்க வேண்டும். நீங்கள் உங்கள் மீது வைத்துள்ள தன்னம்பிக்கையே நீங்கள் முன்வைக்கும் ஒவ்வொரு அடியையும் பலப்படுத்தும். அத்தன்னம்பிக்கை தான் நாளை உங்கள் வெற்றிக்கு வழிவகுக்கும்.
நல்லதொரு நாளைக்கான நம்பிக்கையைத் தரும்
சனிக்கிழமை அதிர்ஷ்டம்
உதிக்கும் சூரியன் போல் நம்பிக்கையானது
வளமான வாழ்விற்கு
D 05 05 05 32


எல்லா நாளும்
சுபமான
நாட்களே
D 05 05 05 32
2017.08.31
சுபசகுனம் என்பது சுபநாளுக்கான ஓர் தொடக்கம் ஆகும்.
எந்நாளும் அதிஷ்டத்தை கொண்டு வரும் அந்நாளின் சுபசகுனமான, அத கோடிபதியினால் இப்பொழுது எல்லா நாட்களும் சுபமான நாட்களே.
அத கோடிபதி ஒன்றை வாங்கி நீங்களும் இன்றே கோடீஸ்வரர் ஆகுங்கள்.
வளமான வாழ்விற்கு
அத
கோடிபதி
தினமும் கோடீஸ்வரராகும் வரம்






## அராலி மகா வித்தியாலய வருடாந்த பரிசளிப்புவிழா

கொடிகாமம், ஒக். 21

யாழ்ப்பாணம் அராலி மகா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா கடந்த 16ஆம் திகதி நடைபெற்றது.

வித்தியாலய அதிபர் சபாரத்தினசிங்கி தலைமையில் நடைபெற்ற விழாவில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தனும், சிறப்பு விருந்தினராக வலி. மேற்குப் பிரதேச சபைத் தவிசாளர் நடனேந்திரனும் கலந்து கொண்டனர்.

விருந்தினர்கள் கௌரவிக்கப்பட்டு பாண்ட் வாத்திய அணிவகுப்புடன் வரவேற்கப்பட்டனர். மங்கல விளக்கேற்றல், வரவேற்பு நடனம் என்பன இடம்பெற்றன. பாடசாலையின் நிறுவுநர் நினைவுப் பேருரையை முன்னாள் உப அதிபர் அம்பலவாணர் வழங்கினார். தொடர்ந்து விருந்தினர்களின் உரைகள் இடம்பெற்றன. மாணவர்களுக்கான பரிசில் வழங்கலும், கௌரவிப்பும், சாதனையாளர்கள் கௌரவிப்பும் இடம்பெற்று நன்றியுரையுடன் நிகழ்வுகள் நிறைவுபெற்றன. (ற-159)











# போசாக்குத் திட்டங்கள் தொடர்பாக கருத்தமர்வு

சாவகச்சேரி, ஒக். 21
தென்மராட்சியில் போசாக்கு திட்டம் தொடர்பான செயலமர்வுகளை பிரதேச திட்டமிடல் அலகினர் மேற்கொண்டுள்ளனர்.
பிரதேச பொருளாதார அபிவிருத்தி அலுவலர்களுக்கான செயலமர்வு நேற்றுமுன்தினம் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது.
போசாக்கும் ஆரோக்கியமான சமுதாயமும் என்னும் தலைப்பில் மருத்துவர் கே.ஐங்கரனும், போசாக்கு உணவுப் பழக்கவழக்கங்கள் என்ற தலைப்பில் பொது சுகாதாரப் பரிசோதகர் ம.பிரபாகரனும், எமது கிராமங்களின் வளங்களுக்கேற்ற வகையில் சுயதொழில் உருவாக்கலும் வறுமை ஒழிப்பும் என்னும் தலைப்பில் பிரதேச சமுர்த்தி அலகின் தலைமைப்பீட சமுர்த்தி முகாமையாளர் இ.அன்ரனியும் கருத்துரைகள் வழங்கினர் .
போசாக்கு குறைவான குடும்பங்களென பிரதேசத்தில் இனங்காணப்பட்ட குடும்பங்களுக்கான விழிப்புணர்வுச் செயலமர்வு விரைவில் பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

(ஞ-9,159)

Mobitel Master unlimited
நாடு முழுவதும் Unlimited Calls
மாதாந்தம் ரூபா.1,500/-
Sri Lanka Telecom Mobitel
1717



முன்னால் வளைவுப் பாதை

வளைவுகள் உள்ள ஒப்ஷன்களுக்குச் செல்லாது, இருந்தது போலவே வாகனத்தை ஒரிஜினலாக அமைத்துக்கொள்ள, வசதிகளைப் பெற்றுத் தரும் பெஸ்ட் ஒப்ஷனைத் தெரிவு செய்யுங்கள்.

பிழையான OPTION ஐ தெரிவு செய்யாது
BEST OPTION ஐ தெரிவு செய்யுங்கள்

தேசத்தின் மோட்டார் வாகன காப்புறுதிதாரரிடமிருந்து
MOTORPLUS
யதார்த்தத்திற்கோர் காப்புறுதி

SLIC
ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ்
தந்தையும் தாயும் போன்று

www.srilankainsurance.com
உடன் அழைப்பிற்கு - (011) 2 357 357
https://www.facebook.com/SLICorporation/
https://www.facebook.com/SLIMotorPlus/

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

After A/L's Join PLATINUM PARTNER No.1 BTEC Centre in Sri Lanka



BTEC HND
BUSINESS MANAGEMENT
• Management • Marketing • Human Resource Management
Leading to BA(Hons)

20 வருடகால தொழிற்துறை சார்ந்த உயர்கல்வித்துறையில் நம்பகமும், சிறப்புமிக்கதுமான BCAS Campus உடன் இணைந்து UGC அங்கீகாரம் கொண்ட UK பட்டப்படிப்புகளை தொடருங்கள்...

- நவீன கற்றல் முறை மற்றும் சூழல்
- அனுபவமிக்க சிரேஷ்ட விரிவுரையாளர் குழாம்
- இலகு தவணைக் கட்டணம்
- பிரசித்தி மற்றும் பெறுமதி வாய்ந்தது

Pearson | University of East London | University of Wolverhampton

MADHU 0777 102131
SANCHU 0777 692318
INTAKE NOW ON
BCAS Jaffna Campus,
#. 16, Point Pedro Road, Jaffna.
20 YEARS
ISO 9001:2008 CERTIFIED


021 221 9910 | info@bcas.lk | www.bcas.lk
BCAS Ranked "Platinum Partner" No.1 once again


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர்
## கறுப்பையா தேவர் சிவலிங்கம்

(யாழ்.தாமரை உணவக உரிமையாளர் – கிளிநொச்சி)

திதி:– திரயோதசி (21.10.2018)



கண்ணிமைக்கும் நேரத்தினுள் கரைந்துவிட்ட
ஓராண்டில் உங்கள் நினைவுகள்
சற்றும் அகலாது எம் நெஞ்சோடு
நிறைந்திருக்கிறது
உங்கள் பாதங்களில் எங்கள் கண்ணீரை
காணிக்கையாக்கி ஆத்மசாந்திக்காய்
பிரார்த்திக்கும்....

நீங்கா நினைவுகளுடன்
**குடும்பத்தினர்.**
இராமநாதன் லேன்,
கோண்டாவில் வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

பிறப்பு 07.08.1955
இறப்பு 02.11.2017

(CS/19444)(1L,17)

# FLORENCE NIGHHTINGAALE School of nursing

படித்து விட்டு ஒரு நல்ல தொழில் வாய்ப்பு இல்லாமல் இருக்கும் உங்களுக்கு ஒரு அரிய வாய்ப்பு



- ஒரு வருட பயிற்சி பாடநெறி
- நிரந்தர வேலை வாய்ப்பு
- கிழமைகளில் 02 நாள்கள் மட்டுமே வகுப்புக்கள் நடைபெறும்
- மிகக் குறைந்த கட்டணத்திலேயே மிகச் சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக் கப்படுகின்றது.
- பயிற்சிக் காலத்தில் வேலை வாய்ப்புக்களை பெற்றுக்கொள்ளலாம்.

**தகைமை**

- O/L, A/L
- வயது : 18 - 35 வரை

**முகவரி:**

- குஞ்சர் கடையடி கரணவாய் மத்தி, நெல்லியடி. (சுபாஸ் பேக்கரி மேல் தளம்) T.P.: 021 433 8919 077 298 4849
- K.K.S.Road, மருதனார்மடம் (ஆஞ்சநேயர் கோவில் முன்பாக) T.P.: 021 492 8916 076-222 6438

**Hotline :** 077 718 6438

F/b - F.N.School of nursing.

Viber - 076 222 6438

(cs.20553)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 27 . 11 . 1941

மறைவு 01 . 11 . 2017

### திருமதி சின்னமணி மாணிக்கம்

திதி: 21.10.2018

ஆண்டு ஒன்றானதோ எம்
அன்னை எமைப் பிரிந்து
அன்புடன், பண்புடன் எம்மை வழிநடத்திய
எம் ஆருயிர் தெய்வமே எப்போது
காண்போம் உம் இனிய முகம்
ஆறாத் துயரினால் தவிக்கிறோம்
மீண்டெழுந்து வரமாட்டீர்களா அம்மா?

என்றும் நினைவில்

**கணவர், பிள்ளைகள், குடும்பத்தினர்.**

வராத்துப்பளை, பருத்தித்துறை.

## மரண அறிவித்தல்

### பொன்னம்பலம் கஜேந்திரன்

(ப.நோ.கூ.ச.கி. முகாமையாளர் - வற்றாப்பளை)



தோற்றம் 25.07.1968 மறைவு 18.10.2018

கோரமோட்டையைப் பிறப்பிட மாகவும், குமாரபுரத்தை வதிவிட மாகவும் கொண்ட பொன்னம் பலம் கஜேந்திரன் 18.10.2018 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்க ளான பொன்னம்பலம் - ஈஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சுவாமிநாதன் மற் றும் சீதேவி தம்பதியரின் மருமக னும், கிருஸ்ணபவானியின் (ஆசி ரியர் தண்ணீரூற்று சி.சி.த. க.பா.) அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை கள் நாளை (22.10.2018) திங்கட் கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மாவடிப்புலவு இந்து மயானத் துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: **குடும்பத்தினர்.**

(c7956)


## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி ஐயாகடையடி A - 9 வீதிக்கு அண்மையாக பயன்தரு மரங்கள் உள்ள நன்னீர்க் கிணற்றுடன் கூடிய 07 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தரகர்கள் தேவையில்லை, விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

077 917 3908

(cs.cs 150433 (11))




பிறந்தநாள் விழாக்கள், திருமண வைபவங்கள் ஆண்டு நிறைவுக் கொண்டாட்டங்கள். ஒன்று கூடல்கள் மாநாட்டுத் தேவைகள் போன்ற அனைத்து தேவைகளுக்கும்

வடமராட்சி மண்ணில் 5 வருடகாலமாக சிறந்த சேவையாற்றி வரும்

**விக்னேஸ்வரா**

திருமண மண்டபம்


தொடர்புகளுக்கு : Yarl Beach Hotel & Restaurant

077023 2289 / 021 226 1567 Vallai, Point Pedro Road, Jaffna.

info@yarlbeachhotel.lk yarlbeachhotel.lk


## மரண அறிவித்தல்

தோற்றம் 14 11 1931



மறைவு 09 10 2018

### C.K. தியாகராஜா

ஓய்வுபெற்ற பிரதி பணிப்பாளர் (நகர அபிவிருத்தி அதிகார சபை)

யாழ். கொட்டடியைப் பிறப்பிடமாகவும், கொழும்பு பம்பலப்பிட்டி Clifford Placeஐ வசிப்பிடமாகவும், மருதானை NHDA Flats ஐ வதிவிடமாகவும் கொண்ட குட்டித்தம்பி தியாகராஜா கடந்த 09.10.2018 செவ்வாய்க்கிழமை அன்று லண்டனில் இறைவனடி சேர்ந்தார். அன்னார், காலஞ்சென்றவர்களான குட்டித்தம்பி தில்லையம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற சுப்பிரமணியம், மனோன்மணி தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற தையல்நாயகி அவர்களின் அன்புக் கணவரும், பாலகிருஷ்ணன்(ரகு - அவுஸ்ரேலியா), சோதிமலர் (ராதை - இலங்கை), ரதி (லண்டன்), ரவிவர்மன் (அவுஸ்ரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான மனோன்மணி, ஜெயரட்ணம், ராஜரட்ணம், சண்முகராஜா, சரஸ்வதி மற்றும் லண்டனில் வசிப்பவருமான டாக்டர். துரைரட்ணம் அவர்களின் அன்புச் சகோதரரும், சுபோதினி (அவுஸ்ரேலியா), சோமசிறி (இலங்கை). குணாளன் (லண்டன்), சுதர்சினி (அவுஸ்ரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை, இரத்தினசபாபதி, டாக்டர். நரபாலசிங்கம், சச்சிதானந்தன், பஞ்சாட்சரம் மற்றும் கமலா, பவளம், பத்மினி, லோகநாயகி, டாக்டர் தவீந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், காயத்திரி, கஜேன், தினத், மதுரா, நிஜன், உமேஷ், லிங்கேஷ், துர்கேஷ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக சனி (27-10-18) ஜெயரட்ன மலர்சாலையில் வைக்கப்பட்டு, ஞாயிறு மதியம் (28-10-18)இறுதிக்கிரியைகளின்பின் பொரளை இந்து மயானத்திற்கு தகனக்கிரிகைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:

மகன்: தி. பாலகிருஸ்ணன்(ரகு). தொ.பேசி:0112716046

மகள் : திருமதி. S. சோதிமலர்(ராதை) தொ.பேசி:0718290344

இல. 07, எபனேசர் பிளேஸ், தெகிவளை.


## வீடு வாடகைக்கு

மன்னார் வீதி ( A 32) நாவற்குழியில் புகையிரத நிலையம், மாகாணசபை அலுவலகம், வைத்திய சாலைகள், கடைகள் ஆகியவை அமைந்துள்ள A9 வீதிக்கு அருகே வருமானத்துடன் உடனடியாக வீடு வாடகைக்கு உண்டு.

(உத்தியோகத்தர்கள் விரும்பத்தக்கது)

021 205 0955, 076 228 3482

(S/20681)(11,17)

## வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்கு

கொழும்புத்துறை வீதி, கணக்கர் சந்திக்கு அருகில் அமைந்த நாலுபரப்பு இரண்டு குழியுடன் அமைந்த மாபிள் பதித்த வீடும் Out House உம் விற்பனைக்கு உண்டு.

(CS/20670) (11,17)

ஆ.சுந்தரலிங்கம் - 077 742 0240

## விற்பனைக்கு

Hero Honda ZMR Black, Model 2009, 250 cc மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

விலை 3½ இலட்சம்

077 418 9782, 077 952 3378

(C9743) (11,17)

## விற்பனைக்கு

சவுக்கு, தேக்கு, மருது, நாவல், மலை வேம்பு, இலுப்பை, புங்கை, சமண்டலை, கயூ, கறுவா, கராம்பு, அன்னமுன்னா, சீதாபழம், வேம்பு, சித்திரவேம்பு, முழு நெல்லி, அரி நெல்லி, விலும்பி, கோப்பி, பாலை, முதிரை, நல்ல இன தென்னங்கன்று, மாங்கன்று வகை, தேசி, தோடை, பலா, கொய்யா, மாதுளை, செவிளைதென்னை, கமுகு, வெற்றிலை, பெசன்புறுட், ஈரப்பலா, ரெட்லேடி பப்பா, முருங்கை, யம்பு, கமுகு, கத்தாளை, முந்திரிகைக்கன்று, அம்பர் லாங்கன்று மேலும் பல இன பூங்கன்று வகை றோசா (ஒட்டு) சாடி வகைகளும் விற்பனைக்குண்டு.

077 612 9343/ 077 279 0431

நியூ லங்கா பாம்.
பலாலி வீதி, ஊரெழு மேற்கு.
கணேசா பாடசாலைக்கு அருகில்.

கிளை : கே.கே.எஸ். வீதி. இணுவில்.

## இப்பொழுது திரையில்




| | |
|---|---|
| Cine World -Kotahena 10.30/2.30/6.30 (0775-766365) | Majestic - Jaffna 4.30 (0212-227712) |
| Raja - Jaffna 10.30/2.30/6.30 (0212-227332) | Saru Cinema - Point Pedro (0775-163461) |
| G.K.Cinemax - Kalmunai 10.30 (0672-226792) | Suganthi - Batticaloa 2.00 (0652-223516) |
| Bala - Chavakachcheri One Show Only (0776-991002) | Dinusha - Navalapitiya 10.30 (0542-222423) |
| Kibesh - Mankadu One Show Only (0785-925899) | Nahams - Chunnaham 10.30 (0542-222423) |

மற்றும் நாடெங்கிலும் உள்ள ஏனைய திரையரங்குகளிலும்

## இப்பொழுது திரையில்

A Cinema Entertainments (Pvt) Ltd Release





### வடக்கு, கிழக்கு

| | |
|---|---|
| Majestic Jaffna | 10.30/1.30/4.15/7.00 pm |
| Raja Jaffna | 10.30/2.30/6.30 |
| Saru Cinema Point Pedro | 10.30/2.30/6.30 |
| Vijaya Batticaloa | 10.30/2.30/6.30 |
| Vasanthi Vavunia | 10.30/2.30/6.30 |
| Archana Akkaraipattu | 10.30/2.30/6.30 |
| SARASWATHY Trinco | 10.30/2.30/6.30 |

மற்றும் நாடெங்கிலும் உள்ள ஏனைய திரையரங்குகளிலும்

Distributed by: Cinema Entertainments (Pvt) Ltd (CEL)

## மரண அறிவித்தல்கள்



### மயில்வாகனம் வரதராசா (வரதன்)

இல.236/3, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் வரதராசா நேற்று (20.10.2018) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - மங்கையற்கரசி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - மனோன்மணி தம்பதிகளின் அன்பு மருமகனும், சத்தியவதியின் (மணி) அன்புக் கணவரும், கேமமாலினி, சத்தியமோகனா, சத்திய ராஜினி, சத்தியவிஜிதா, அஜந்தா ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற ரவீந்திரன் (நாதன்) மற்றும் சந்திரசேகர், குவேந்திரன், ஜீவன், சிவாநந்தன் (தீபன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கெங்காதரன் (கொழும்பு), வடிவாம்பிகை (சுவிஸ்), ஞானசேகரம், இராஜேஸ்வரி, கிரிதரன் (சுவிஸ்), மங்களேஸ்வரி (சுவிஸ்), காலஞ்சென்ற மகேஸ்வரன் (சந்திரன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், அம்புஜம் (கொழும்பு), ஜெகதீசன் (சுவிஸ்), கமலவதனி, குமாரதேவன், சசிகலாதேவி (சுவிஸ்), தவக்குமார் (சுவிஸ்), காலஞ்சென்றவர்களான சர்வானந்தசிவம், சத்தியசீலன், சத்தியபாமா மற்றும் சறோஜினிதேவி, சந்தானலட்சுமி, சகுந்தலாதேவி, சத்தியபாஸ்கரன், சதீஸ்வரி, சத்தியபாஸ்கரி ஆகியோரின் அன்பு மைத்துனரும், கருணாநிதி, கருணாகரன், தமிழினி, நிதர்சனா, கிருஷாந், துளசி, திவ்வியா, சோபியா, கஜித்தா, டிலக்ஷன், நிபிதா, ரம்மியா, சங்கவி, மதுமிதன், சிபானுஜன், மோனிஷா, தனு ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.10.2018) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வில்லூண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**இல.236/3, ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(CS/20700)(11,17)

**தகவல்**
**குடும்பத்தினர்.**

**077 760 0013**

## மரண அறிவித்தல்கள்



### நடராசா சரஸ்வதி

உரும்பிராய் கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா சரஸ்வதி நேற்று (20.10.2018) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற நடராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சின்னையா - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான பாலசுப்பிரமணியம்,சிவயோகம் மற்றும் கனகாம்பிகை, சிதம்பரநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஞானாம்பிகை, ராஜினி, செல்வதி ஆகியோரின் அன்புத் தாயும், ஜெயபரிபாலன், மோகனதாஸ், முருகானந்தம் ஆகியோரின் அன்பு மாமியும், லகீசன், ஜனானி, ஆரணி, பார்த்தீபன், சாம்பவி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.10.2018) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**உரும்பிராய் கிழக்கு,**
**உரும்பிராய்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**0775795396**

(cs14355)(13,17)



### தனுக்கோடி சுப்பிரமணியம்

நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும், விநாயகபுரம் துணுக்காயை வதிவிடமாகவும் கொண்ட தனுக்கோடி சுப்பிரமணியம் 19.10.2018 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தனுக்கோடி - சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வேலாயுதர் - சிவகாமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், நாகம்மாவின் அன்புக் கணவரும், நல்லம்மா, நாகேந்திரன், மனோன்மணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை, விஜயலக்சுமி, அரியபுத்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், சத்தியசீலன் (கோட்டக்கல்விப் பணிப்பாளர் - மாந்தை கிழக்கு), ஞானசீலன் (சுவிஸ்), அன்பரசி (விநாயகபுரம்), மங்கையற்கரசி (பிரான்ஸ்), கேதீஸ்வரன் (ஸ்கந்தபுரம்), காலஞ்சென்ற வைத்தீஸ்வரன், புவிநாயகன் (அதிபர்- பொன்னகர் தமிழ்வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கலைச்செல்வி (ஆசிரியை - யோகபுரம் மகாவித்தியாலயம்), உமையகுமாரி (சுவிஸ்), புண்ணியமூர்த்தி (விநாயகபுரம்), உதயகுமார் (பிரான்ஸ்), திருமலர் (ஸ்கந்தபுரம்), தமிழ்ச்செல்வி (ஆசிரியை - யோகபுரம் மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், செந்தூரன், யோதிதா, காலஞ்சென்ற ஆரூரன், ஆரண்யன், செந்துஜா, டசிந்தன், காலஞ்சென்ற தயானந்தன், கஜந்தன் (அதிபர் -மூன்று முறிப்பு அ.த.க. பாடசாலை), சகிதா, கோகுலன், சோபிகா, பிரியந், ஜனனிகா, பிரதீஸ், யனுசா, கிருசா, ஜெனுசா, கோபிசன், லோஜினா, கனிவிழி, பிரணவி ஆகியோரின் அன்புப் பேரனும், ஆரபியின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.10.2018) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் மல்லாவி சந்தைக்கு அருகிலுள்ள இல.53, அனிச்சியன்குளத்திலுள்ள மகனது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10 மணியளவில் அனிச்சியன் குளம் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:- குடும்பத்தினர்.**

(C/80114)(11,17)

**077 024 3113, 077 248 6978**



### திருமதி பரமேஸ்வரி நடராசா

இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி நடராசா நேற்று (20.10.2018) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சின்னையா - தங்கச்சியம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை - ஆச்சியம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற காசிவேந்தன் மற்றும் காசிக்குமரன், காயித்திரிதேவி, காஞ்சனாதேவி, காசினிதேவி (ஆசிரியை - யா/ அள.அருணோதயக் கல்லூரி), கௌசலாதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும், புஸ்பலோஜினி (பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்), ஜெயபாரதி, பத்மசிறி, ரவீந்திரன், வித்தகன் ஆகியோரின் அன்பு மாமியாரும், வேந்தினி, நாவேந்தன், சுவேதன், நமிர்தா, களோயன், ஆருயன், பிரவிகா, அபிசன், அறிவகன், சர்வகன், கஸ்வினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அமிர்தலிங்கம், கணேசலிங்கம், சண்முகலிங்கம், முத்துலிங்கம், சிவகாமசுந்தரி, பூமலர், கந்தசாமி, இராசேஸ்வரி ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.10.2018) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பூவோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**"வங்கியடி ",**
**இணுவில் கிழக்கு, இணுவில்.**

(CS/20700)(11,17)

**தகவல்**
**குடும்பத்தினர்.**

**077 302 3052**

இலங்கையில் சக்தி வாய்ந்த நிறுவனமான **ARPICO** யாழ் பிராந்தியத்துக்கு உடனடியாக வேலைவாய்ப்பை வழங்க முன்வந்துள்ளது.

வேலைவாய்ப்புகள்...

- Development Manager
- Risk Assessment Manager
- Consultant




உங்களுக்கு கிடைக்கும் அனுகூலங்கள்

1. ஒவ்வொரு வருடமும் வெளிநாட்டு சுற்றுலாக்கள்
2. உள்நாட்டு [NAFLIA,NASCO] வெளிநாட்டு [MDRT,IQA,IAQ] தர சான்றிதழ்கள்.
3. இலவச ஆயுட் காப்புறுதி குடும்பத்துக்கு மருத்துவக்காப்புறுதி

எதிர்பார்க்கப்படும் தகைமைகள்....

க.பொ.த சாதாரணப் பரீட்சையில் கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தி
தமிழில் சிறந்த தொடர்பாடல் திறன்

நேர்முகத்தேர்வில் கலந்து உங்கள் வாழ்வை வளமாக்கி கொள்ளுங்கள்....

0773595599 | 0775889571



## காணி விற்பனைக்கு

யாழ். தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரிக்கு அருகில் அம்பனைச் சந்தியில் பிரதான வீதிக்கு அருகில் உள்ள 16 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை.

**077 017 6770**



## கடை வாடகைக்கு

யாழ்.கோண்டாவில் சந்தியில்
200 சதுர அடி அளவுள்ள
கடை வாடகைக்குண்டு.
(தரகர் தேவையில்லை)

**076 303 1551** (ACO/333) (11,17)

## காணி விற்பனைக்கு

டச் வீதி ( Dutch Road )
வர்த்தலவிளான், தெல்லிப்பழையில்
32½ பரப்புக் காணி
விற்பனைக்குண்டு. (ACO/331) (11,17)

**071 819 8165, 076 498 9102**

## வகுப்புக்கள்

**தரம் 01 - 05**
**வகுப்புக்களுக்கான**
**சிங்களம், ஆங்கிலம்**
**இலகு மொழிக்கல்வி**


**077 672 0902 - கொக்குவில்** (CS/20714) (11,17)

## வீடு வாடகைக்கு

நாவற்குழி A-9 வீதியில் ஏழு அறைகள்,
இரண்டு விறாந்தை (Hall), மூன்று
இணைந்த குளியலறைகள், வாகனத்தரிப்பிட
வசதி கொண்ட மேல்மாடி
வீடு வாடகைக்கு உண்டு.

**077 606 2944** (CS/20719) (11,17)


## மரண அறிவித்தல்



### கந்தசாமி கெங்காதரன்

பலாலியைப் பிறப்பிடமாகவும் அராலி மத்தி வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி கெங்காதரன் 19.10.2018 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி - தங்கம் தம்பதியரின் பாசமிகு மகனும், மகேந்திரன் - நல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சித்திராவின் (தாதியர் - காரைநகர் பிரதேச வைத்தியசாலை) பாசமிகு கணவரும், மகேஸ்வரி, பவளராணி, விஜயரட்ணம், சின்னத்தங்கச்சி, யோகேந்திரன், சிவஷம்பு, வேவி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.10.2018) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வேலங்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள்.**

**அராலி மத்தி,**
**வட்டுக்கோட்டை.**

(c7956)

## மரண அறிவித்தல்

பிறப்பு 22 . 11 . 1929



இறப்பு 19 . 10 . 2018

### திருமதி திரேசம்மா துரைசிங்கம்

சிறுவிளான், இளவாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திரேசம்மா துரைசிங்கம் 19.10.2018 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - அன்னேசம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற துரைசிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பிறிம்றோஸ், மரியதாஸ் மற்றும் பற்றிமாநாயகி, பிரான்சிஸ்கா, அமலதாஸ், மேரி புஸ்பமலர், மேரி ராஜேஸ், மேரி அன்ரலீனா ஆகியோரின் பாசமுள்ள தாயாரும், திருச்செல்வம், சிவகுமார், சாந்தி, இருதயதாசன், விஜயன், பாலச்சந்திரன் ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்றவர்களான அருட்சகோதரி கொலம்பா (திருக்குடும்ப கன்னியர் மடம்), கயித்தாம்பிள்ளை மற்றும் அருளம்மா, பிலமினா, அருளானந்தம், காலஞ்சென்றவர்களான அருள்நேசன், மரியநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க நிகழ்வுகள் 23.10.2018 செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் பெரியவிளான் புனித யுவானியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித யுவானியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**சிறுவிளான்.**
**இளவாலை.**

**தகவல்:-**
**விஜயதாசன் - மருமகன்**

**077 167 2031**


## வீடு வாடகைக்கு

வெளிநாட்டில் இருந்து அல்லது வெளிமாவட்டங்களில் இருந்து யாழ்ப்பாணம் வருவோர் தங்குவதற்கான சகல வசதிகளையும் கொண்ட வீடு/அறைகள் (A/C, Non A/C) யாழ் நகரில் நாள், வார, மாத அடிப்படையில் வடகைக்கு கொடுக்கப்படும்


தொடர்புகளுக்கு
0779184018, 0763591514

## வாகனம் வாடகைக்கு

**VAN FOR Hire KDH Highroof**
**Original Passanger Carrier**
**12 seater Dual A/C, Line A/C**

வார/மாத வாடகைக்கு கொடுக்கப்படும்
அரச/தனியார் நிறுவனங்கள் விரும்பத்தக்கது
தொடர்புகளுக்கு
0779184018, 0763591514


## மரண அறிவித்தல்



### நல்லையா சிவபரன் (கண்ணன்)

**(உரிமையாளர் - வேல்முருகன் ரேடர்ஸ் )**

காரைநகர் களபூமி சந்திரந்தையைப் பிறப்பிடமாகவும், இல.47, சிவன் புதுவீதியை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட நல்லையா சிவபரன் (கண்ணன்) 19.10.2018 வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் நல்லையா (ஓய்வுபெற்ற இ.போ.ச.சாரதி - காரைநகர் சாலை) - வடிவாம்பிகை தம்பதிகளின் பாசமிகு புதல்வரும், காலஞ்சென்ற இராசரத்தினம் மற்றும் நாகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும், சிவதர்சினியின் அன்புக் கணவரும், மதுசிகா, மயூரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், தயாபரன் (இலங்கை பெற்றோலியக் கூட்டுஸ்தாபனம் - யாழ்ப்பாணம்), கஜிதரன் (தேசிய சேமிப்பு வங்கி - சுன்னாகம்), சித்திரா ஆகியோரின் அன்புச் சகோதரரும், தயா, சிவானந்தபாலன், ரவிபாலன், கிரிவாசன், சிவகௌரி, கார்த்திகா, பவானி, கல்யாணி ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - தெய்வானை தம்பதிகளினதும், பொலிஸ் நடராசா - சின்னம்மா தம்பதிகளினதும் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.10.2018) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்புயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல. 47, சிவன் புதுவீதி,**
**திருநெல்வேலி. 077 474 4510** (C/20727)(11,17)

**தகவல்**
**குடும்பத்தினர்.**


MCS — BIT




## கொழும்பு பல்கலைக்கழகத்தின்
வெளிவாரிப் பட்டப்படிப்பு

## விஞ்ஞானமாணி-தகவல் தொழில்நுட்பம்

- கற்கை நெறிகள் MCS நிறுவனத்திலும் பரீட்சைகள் யாழ் பல்கலைக்கழகத்திலும் நடைபெறும்.
- க.பொ.த உயர் தரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் நேரடியாகவும் ஏனையோர் FIT A/L கற்கை நெறியில் சித்தியடைவதன் மூலமும் விண்ணப்பிக்க முடியும்.
- இவ்வாண்டு பரீட்சைக்கு தோற்றி பெறுபேற்றுக்காக காத்திருப்போரும் விண்ணப்பிக்க முடியும்.
- கற்கை நெறியில் முதல் ஆண்டைப் பூர்த்தி செய்யும் மாணவர்களுக்கு கொழும்பு பல்கலைக்கழகத்தின் Diploma in Information Technology (NVQ5)சான்றிதழ் வழங்கப்படும்.
- கற்கைநெறி முழுவதனையும் பூர்த்தி செய்வதன் மூலம் நீங்களும் ஒரு கணனிப் பட்டதாரியாகலாம்.
- மேலும் முதுமாணிக்கற்கைநெறியை கொழும்பு, மொரட்டுவ, பேரதெனிய மற்றும் பிரித்தானிய அமெரிக்க கனடிய பல்கலைக்கழகங்களில் வேலை செய்துகொண்டே தொடர முடியும்.
- எந்தவொரு பல்கலைக்கழக மாணவர்களும் **BIT** கற்கைநெறியைப் பயில்வதற்கு பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.
- மேலும் ***BIT** கற்கை நெறியினை பயிலும் மாணவர்களுக்கு **Higher Diploma in Information Techonology** சான்றிதழ் பெறும் சந்தர்ப்பம்.

*அரசவங்கிகளில் வெளிநாடுகளிலும் **System Engineer, System Administrators (CCNA, MTA,MCSA, MCSE-USA** தகைமைகளையும் பெற்றுக்கொள்ள முடியும்.

*உயர் வேலைவாய்பிற்கான உத்தரவாதம்.

*முதலாம் ஆண்டு கற்கும் போதே. Diplom in Ms office, Web Desighing, Hardware, Networking, Photoshop ,English , Java Programming உள்ளிட்ட 7க்கு மேற்பட்ட டிப்ளோமா சான்றிதழ்களையும் பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பம்.

* 2000 ம் ஆண்டு முதல் நூற்றுக்கணக்கான தகவல் தொழில் நுட்ப பட்டதாரிகளை உருவாக்கி உள்ளநாட்டிலும் வெளிநாட்டிலும் உயர் வேலைவாய்ப்பை பெற்றுக்கொடுத்த நிறுவனம்

**விண்ணப்பப் படிவங்களிற்கும் மேலதிக விபரங்களிற்கும், நேரில் MCS IT CAMPUS, யாழ். பல்கலைக்கழகம் அருகில்**

**சிறந்த பெறுபேற்றுக்கான சிறப்பு விருதினை கொழும்பு பல்கலைக்கழத்திடமிருந்து விருதினை வென்ற நிறுவனம்**

CIMA
Chartered Institute of Management Accountants




- சர்வதேச அங்கீகாரம் பெற்ற கற்கை நெறி.
- 16வயதிற்கு மேற்பட்ட எவரும் பயிலலாம்.
- சர்வதேச அங்கீகாரம் பெற்ற கற்கை நெறி
- 2008 ஆம் ஆண்டு யாழில் இக்கற்கை நெறியை தொடர்ச்சியாக சிறப்பாக நடாத்தி வரும் அங்கீகாரம் பெற்ற பயிற்சி நிறுவனம். பரீட்சை மையம்.
- பல நூற்றுக்கணக்கான CIMA UKதகைமையாளர்களை உருவாக்கி உயர் வேலை வாய்ப்பை பெற்றுக்கொடுத்த நிறுவனம்.
- சிறந்த பேறுபேற்றுக்கான விருதினை CIMA _UK நிறுவனத்திடமிருந்து வென்ற நிறுவனம்.
- Diploma in Accounting Package, Diploma in English, Diploma in Msoffice Totally Free

புலமைப்பரிசிலிற்கும் மேலதிக விபரத்திற்கும்
Type<Course>Name> send to 772 395 895

# உள நலன் காப்போம்!

## ஆரோக்கியமான சமூகக் கட்டமைவை உருவாக்குவதற்கான சிந்தனை



அ.சயந்தன்

"செய்யும் தொழிலே தெய்வம்" என்பர். அதாவது தொழில் புரியும் இடமே ஆலயம். ஆலயமென்பது இறைவன் குடிகொண்டு வாழும் இடம். இதை ஒத்ததாகவே வேலைத்தளங்கள் அமையவேண்டும். அதன் தேவைப்பாடே தற்காலத்திலும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இன்று மன அழுத்தம் என்பது வேலைத் தளங்களில் இருந்தே அதிகம் ஆரம்பிப்பதாக அறியமுடிகின்றது. வேலைத் தளங்கள் பல சந்தர்ப்பங்களில் ஊழியர்களின் மன ஆழ்ம அடித்தளங்களில் உறுதியற்ற தன்மையைக் கொண்டுவரக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்திவிடுகின்றன. உடல் உழைப்பற்ற வேலைகளே அதிகமாக உள்ளன. இதனால் இன்றைய கால ஓட்டத்தின் வழியே மன அழுத்தம் இல்லாதவர்களே இல்லை என்றே கூற வேண்டும்.

### மன அழுத்தம்

தொழில் வழங்குநர் மற்றும் தொழில் பெறுநர்களுக்கிடையேயான புரிந்துணர்வின்மை, தனக்கு ஏற்புடைய தொழிலைத் தெரிவு செய்யாமை. கட்டாயத்துக்காக தொழில் புரிதல் போன்ற செயல்நிலைகள் மன அழுத்தங்களை ஏற்படுத்தலாம். பலவீனமான மன அமைப்பைக் கொண்டவர்களே எளிதில் மன அழுத்தத்துக்கு உள்ளாகின்றனர்.

இக்கால வேலைத் தளங்களின் கட்டமைவை எடுத்து நோக்கின், அவை நவீன தொழில்நுட்பங்களின் படிமுறையான ஆளுகைக்கு உட்பட்டுள்ளன. வேலையை ஆரம்பித்து வைக்கும் செயலிகளாகவும் வேலையை நிறைவாக பூர்த்தி செய்யும் கருவிகளாகவும் இலத்திரனியல் சாதனங்கள் முதன்மைபெறுகின்றன. தனித்துவத்தைப் பெற்றுக் கொண்டுள்ளன. இதன்வழியே மனரீதியான குழப்பநிலைகளையும், பாதிப்புகளையும் அதிகமாக ஏற்படுத்தி வரும் நோய் காவிகளாக இலத்திரனியல் சாதனங்கள் திகழ்கின்றன.

### தொழில்நுட்பங்கள் தரும் மனக் குழைவு

மனிதர்கள் மனிதர்களைவிடவும் நவீன தொழில்நுட்ப சாதனங்களிடமே அதிகரித்த தேவைப்பாடுகளை உணர்கின்றனர். தேவைகளை எதிர்பார்க்கின்றனர். இதனால் மனிதர்களிடையேயான உணர்வு ரீதியான உறவுப் பரிமாற்றம் அற்றுப்போகின்றது. உறவுகளுக்கிடையேயான கவனச்சிதறல்கள் அதிகரிக்கின்றன. ஏனையவர்களின் கருத்துக்கு மதிப்பளியாமை, அனுசரித்துப்போகாத தன்மை, அடுத்தவர் பேச்சை அலட்சியப்படுத்தும் தன்மை, ஆலோசனைகளைக் கேட்கும்; தன்மை போன்ற பண்பியல்புகள் இயல்பாகவே அற்றுப்போனவர்களாக உருவாகி வருகின்றனர்.



### அதிகாரத் தொனிப்பும் வேலையின்மையும்

தொழில் வாய்ப்பைப் பெற்றுக் கொள்வதென்பது மிகப் பெரிய பிரச்சினையாகத் தோற்றம் கொண்டுள்ளது. குறிப்பாக வேலையற்ற பட்டதாரிகளின் உருவாக்கமும் அவர்களின் செறிவும் அதிகரித்துள்ளது. இதிலிருந்து மீண்டு வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொண்டோர் தொழில் நிறுவனங்களில் ஏற்படுகின்ற பிரச்சினைகளை அனுசரித்துச் செல்வதில் அதிக இடர்பாடுகளை எதிர்கொள்கின்றனர். இவை இன்னொரு அழுத்தத்தின் பரிணாமமாக வெளிக்கிளம்புகின்றன.

இதனிடையே பணிப்புறக்கணிப்பு, போராட்டங்கள் வரையறையின்றி தொடர்கின்றன. இவ்வாறு அமைதியின் சூழ்நிலையற்ற குழப்பங்கள் அதிகரித்த கட்டமைப்பாகத் தொழில் நிறுவனங்கள் மாற்றங் கண்டுள்ளன. உளநலம் பேணல் அற்று வேலைத்தளங்கள் வேதனைக்குரிய தளங்களாக மாறிவருகின்றன. இதை எம்மத்தியில் இயங்கும் அதிக தொழில்நிறுவனங்களிடையே காணக்கூடியதாகவுள்ளது.

உயரதிகாரிகள் சிலர் வேலை வாய்ப்புகளை உருவாக்கும் சிந்தனைத்திறன் உள்ளவர்களாகவும், இன்னும் சிலர் கடமைக்கும், சுற்றுநிருபங்களுக்கும் அமைவாகச் செயற்பட்டும் செயலாற்றியும் வருபவர்களாக உள்ளனர்.

இதன் காரணமாக அதிகமானோர் பாதிப்புக்குள்ளாகின்றனர். இவர்களால் சமூகத்துக்கு ஆரோக்கியமான அபிவிருத்தி ஏற்படுத்துவது என்பது கடினமான கைங்கரியம்.

எமது பிரதேசத்தைப் பொறுத்தவரையில் அரச நியமனத்தையே அதிகமானவர்கள் எதிர்பார்க்கின்றனர். உண்மையில் அரச நியமனம் பெறுவது என்பது கடினமான விடயம். ஆனால் அதைப் பெற்றுவிட்டால் பின்னர் பணிபுரிதல் பற்றி அக்கறை கொள்ளவேண்டியதில்லை எனச் சிலர் கருதுகின்றனர்.

### மன அழுத்தத்தின் வகை மாதிரிகளும் பாதிப்பும்

மன அழுத்தம் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் அதிகரிக்கும் போதே அது வேலை செய்யும் இயலுமையைப் பாதிக்கின்றது. உடலியக்கத்தைப் பாதிக்கின்றது. நடத்தைக் கோலத்தில் அதிகரித்த மாற்றத்தை ஏற்படுத்திவிடுகின்றது. அதைச் சரியான முறையில் கையாளவேண்டும். அப்போதுதான் பாதிப்புகளிலிருந்து அவர்கள் பாதுகாக்கப்படுகின்றனர்.

இன்று தொற்றா நோய்களான குருதிய முக்கம், நீரிழிவு, பாரிசவாதம் மற்றும் புற்றுநோய்கள் போன்றன ஏற்படுவதற்கான காரணங்களை முழுமையாக கண்டு கொள்ள முடியாத நிலை காணப்படுகிறது. ஆனாலும் மேற்போந்த தொற்றா நோய்களுக்கான காரணியாக மன அழுத்தத்தையும் கருத்தில் எடுத்து நோக்க வேண்டியுள்ளது. அண்மைக்காலத்தில் அதிகளவான இளவயது மட்டத்தினர் பாரிசவாத நோய்க்கு ஆளாகிவருகின்றனர். பொதுவாக எந்த நோயாயினும் மன அழுத்தம் அதிகரிக்கும்போது நோயின் தீவிரத் தன்மையும் அதிகரிப்பதைக் காணக்கூடியதாக உள்ளது.

உள நிலையின் பாதிப்புகள் உடலைத்தாக்கி உடல் நோய்களை உண்டுபண்ணலாம். உடலில் ஏற்பட்ட நோய்கள் காலப்போக்கில் மனநிலையையும் பாதிப்படையச் செய்யலாம். எனவே உடலைப் போன்று மனதையும் பாதுகாத்துக் கொள்ள வேண்டியதும் மிக அவசியமான தேவைப்பாடாக உள்ளது.

எமது அன்றாட வாழ்வில் ஏற்படும் வேலைச் சுமைகளில் இருந்து மீண்டு ஆரோக்கியமாக வாழ்வதற்கு நகைச்சுவை உணர்வுடன் கூடிய உளநலன் இன்றியமையாத ஒன்றாக விளங்குகிறது. இதைத்திறன் சார்ந்த விடயமாகவே கொள்ளலாம்.

தலையிடி ஏற்படும் போது அதை மாத்திரைகள் கொண்டு குணமாக்கவே எண்ணுவோம். ஆனால் அதற்கு வேறு உளவியல் காரணங்கள் இருப்பதை நாம் அறிய முற்படுவதில்லை. நாம் உடல் நலத்துக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தை உளநலன் சார்ந்து கொடுக்காமையே சிறிய பிரச்சினைகள் பெரிய பிரச்சினைகளாக மாற்றங்காண வாய்ப்பை ஏற்படுத்திவிடுகின்றன.

நித்திரை இல்லையெனில் உறக்கம் தரும் மாத்திரைகளைப் பாவிக்கிறோம். இதற்கு அடிமையாதல் என்பது உடல் நலக் கேட்டை அதிகமும் தரும். இந்த மாத்திரைகள் பயனளிக்காவிடின் அவர்களின் நிலை கவலைக்கிடமானதே.

உளநலம் என்பது மருத்துவமனைகளில் மனநோய்ச் சிகிச்சைப் பிரிவில் காணப்படுகின்ற விடயமல்ல. அது நோயற்றிருக்கும் நிலை என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். அதுமட்டுமல்லாது உடல், உள, குடும்ப, சமூக மற்றும் ஆன்மீக நன்நிலைகளையும் உள்ளடக்கியதாகும்.

புகைத்தல், மதுசாரப் பாவனை, போதைப்பொருள் பாவனை அதிகரித்தமை போன்றனவும் உளநலப் பாதிப்புகளே. ஆரோக்கியமான சமூகங்களிடையே இவ்வாறான தீய பழக்கங்கள் காணப்படாது என்பது தொடர்பில் கரிசனை கொள்ள வேண்டும். சிந்தனை பூர்வமாக புரிந்து நடந்துகொள்ள முயற்சிக்க வேண்டும்.

அண்மைக்காலமாக தற்கொலை செய்வோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதைக் காணலாம். தற்கொலைகளுக்கு பல காரணங்கள் செல்லப்பட்டுவருகின்றபோதும், மனம் சார்ந்த காரணங்களே அதிகம் செல்வாக்குச் செலுத்திவருகின்றன. அதாவது மனஅழுத்தமே தற்கொலைச் செயல்நிலையில் அதிகம் செல்வாக்கு செலுத்துவதைக் காணலாம்.

### தேவையான பணியாளுமை

ஆக, அன்பான அரவணைப்பையும், வார்த்தைப் பிரயோகங்களையும், நல்ல சிந்தனைகளையும், பணிவான நடத்தைக் கோலங்களையும் எம்மிடையே உருவாக்கிக் கொள்வோம். அதன்வழி சமூகத் தனிமங்கள் ஒவ்வொருவருடைய சிந்தனை வெளிகளையும் நேர்மறையான எண்ணங்கொண்டு கூட்டிணைத்துக் கொள்வோம். உளநலன் பெற்ற ஆரோக்கியமான சமூகமாக வாழப் பழகிக்கொள்வோம்.

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# கட்சி விளையாட்டு!

வடக்கு மாகாண அமைச்சரும், தமிழ் அரசுக் கட்சியால் ஒழுங்கு நடவடிக்கைக்கு உள்ளாக்கப்பட்டிருந்தவரும், விடுதலைப் புலிகள் இயக்க முன்னாள் மாவட்ட அரசியல் பொறுப்பாளர்களில் ஒருவராக இருந்தவரான எழிலனின் மனைவியுமான அனந்தி சசிதரன் தமிழ் அரசுக் கட்சியில் இருந்து விலகியுள்ளார். அதற்கான உத்தியோகபூர்வ கடிதத்தை கட்சியின் செயலாளருக்கு அவர் அனுப்பி வைத்துள்ளார். புதிய கட்சி ஒன்றைத் தொடங்குவதற்கான முன்னேற்பாடாகவே அவர் இவ்வாறு கட்சியிலிருந்து விலகிச்செல்கிறார் என்று கூறப்படுகின்றது.

ஈழத் தமிழர் சுயாட்சிக் கழகம் என்ற பெயரில் புதிய அரசியல் கட்சி ஒன்றை அவர் தொடக்கவுள்ளார் என்று செய்திகள் வெளியாகி இருந்தன. அதை அவரும் ஏற்றுக்கொண்டிருந்தார். தேர்தல்கள் திணைக்களத்தில் இந்தப் பெயரில் கட்சி ஏற்கனவே பதியப்பட்டுவிட்டது. இனி நடக்க இருப்பது வெறும் தொடக்க நிகழ்வு மட்டுமே.

ஈழத் தமிழர் அரசியலில் மற்றொரு கட்சியாக அனந்தியின் கட்சியும் முளைத்து நிற்கப்போகின்றது. இதற்கிடையில் எதிர்வரும் 24ஆம் திகதி தன்னுடைய எதிர்கால அரசியல் குறித்து அறிவிக்கப் போகிறார் என்று வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனும் அறிவித்திருக்கிறார். கூட்டமைப்புக்கு வேண்டாதவராகிவிட்ட அல்லது விக்னேஸ்வரனுக்குக் கூட்டமைப்பு இனி வேண்டாம் என்றாகிவிட்ட நிலையில், அவரும் ஒரு புதிய கட்சியைத் தொடங்குவாரா? இல்லை மக்கள் இயக்கம் எதையாவது தொடங்குவாரா? அல்லது ஏற்கனவே இருக்கும் தமிழ் மக்கள் பேரவையைத் தனது தனித் தலைமையின் கீழான அமைப்பாக மாற்றிக்கொள்வாரா? என்கிற கேள்விகளுடன் நகர்ந்து கொண்டிருக்கின்றன நாள்கள்.

மற்றொரு புறத்தில் ரெலோ அமைப்பிலிருந்து வெளியேறிய அதன் கொள்கை பரப்புச் செயலாளர் கணேஸ் வேலயுதமும் ஒரு புதிய கட்சியைத் தொடக்கிக் கொண்டிருக்கிறார்.

இவற்றுக்கு மறுபுறத்திலே இத்தகைய உதிரிக் கட்சிகளைச் சேர்த்துக்கொண்டு ஒரு கூட்டமைப்பாக இயங்குவது குறித்த பேச்சுக்களும் நடக்கின்றன. வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தனிக் கட்சி ஆரம்பித்தால் அவரது தலைமையின் கீழ் இணைந்து செயற்படுவதற்குத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தயாராக இருக்கின்றது என்று அந்தக் கட்சி அறிவித்திருக்கிறது. கூட்டமைப்பிலிருந்து விலகிச் சென்ற ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியும் முதலமைச்சரின் தலைமையில் செயற்படுவதற்குத் தயாராக இருப்பதாகவே காட்டிக்கொள்கிறது.

ஆக, தமக்குத் தனித்துவம் வேண்டும் என்று பிரிந்து போனவர்கள் பின்னர் எப்படியாவது ஒன்று சேரவேண்டும் என்று முக்கி முனகுவதும் சேர்ந்த பின்னர் எப்படித் தனியே பிரிந்து செல்வது என்று முறுக்கிக் கொள்வதுமாக ஈழத் தமிழர்களின் அரசியல் கடந்த சில தசாப்தங்களாவே சிதைந்துபோய்க்கிடக்கின்றது.

இது இன்று நேற்று நடப்பதல்ல, தொடக்கம் முதலே இதுதான் நிலமையாக இருந்துவருகிறது. அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியிலிருந்து பிரிந்த தமிழ் அரசுக் கட்சி, பின்னர் காங்கிரஸ், தமிழ் அரசு, தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் எல்லாம் இணைந்து தமிழர் விடுதலைக் கூட்டணியை உருவாக்கின. இதில் தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ் சிறிது காலத்திலேயே வெளியேற, காங்கிரசும் தமிழ் அரசுக் கட்சியும் தமிழர் விடுதலைக் கூட்டணியாக உருமாறின. ஆனால் இன்றோ மூன்றும் மூன்று கட்சிகளாகத் தனியுருவம் காட்டி நிற்கின்றன.

1989 பொதுத்தேர்தலில் கூட்டணி, ஈ.பி.ஆர்.எல்.எவ்., ஈ.என்.ரி.எல்.எவ்., ரெலோ ஆகிய கட்சிகள் இணைந்தே போட்டியிட்டன. பின்னர் இந்தக் கூட்டில் இருந்த ஒவ்வொரு கட்சியும் கூடத் தனித்தனியே பிரிந்துகொண்டன. 2001 பொதுத் தேர்தலில் காங்கிரஸ், தமிழ் அரசு, ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ். ஆகியன சேர்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்றன. இப்போது அதிலிருந்து காங்கிரஸ், ஈ.பி.ஆர்.எல்.எவ்., வெளியேறிவிட்டன. புளொட் உள்ளே வந்திருக்கிறது.

இவற்றுக்கு இடையே ஜனநாயகப் போராளிகள் கட்சி, மறுவாழ்வளிக்கப்பட்ட தமிழ் விடுதலைப் புலிகள் கட்சி ஆகியனவும் உருவாகின. உள்ளூராட்சித் தேர்தலில் மீண்டும் ஜனநாயகப்போராளிகள்கட்சி கூட்டமைப்புடன்சேர்ந்துபோட்டியிட்டது.

ஆயுதப் போராட்டம் தொடங்கிய காலத்திலும்கூட இது போன்றே புற்றீசல்களாகப் பல இயக்கங்கள் தோன்றின. இன்று அவற்றின் பெயர்களை நினைவு வைத்திருப்பவர்கள் எத்தனை பேர் என்பதே கேள்விக்குறி. அதற்குச் சற்றும் சளைக்காமல் கட்சிகளின் உருவாக்கத்திலும் கடந்த 30 ஆண்டுகளாகத் தமிழர்கள் முன்னேறிக் கொண்டே இருக்கிறார்கள்.

மக்களோ எல்லோரும் சேர்ந்து வந்தீர்களானால் உங்களுக்கே வாக்கு என்று பல தேர்தல்களில் சொல்லிப் பார்த்துவிட்டார்கள். ஆனாலும் மக்களின் நலனுக்காக என்று சொல்லிக்கொண்டு ஒவ்வொருவரும் தனிக் கட்சி தொடங்குவதையும் பின்னர் அதே மக்கள் நலனுக்காகத் தங்களுக்கு இடையில் தேர்தல் கூட்டு வைத்துக் கொள்வதையும் ஒரு விளையாட்டாகவே வைத்திருக்கிறார்கள் போலும்.

# நினைவழியாப் படுகொலைகள்!

மு.ஈழத்தமிழ்மணி

**இன்று யாழ். போதனா மருத்துவமனைப் படுகொலையின் 31 ஆவது ஆண்டு நினைவுநாள்**

நாடுகளுக்கு இடையேயான போரானாலும், உள்நாட்டில் இனக் குழுமங்களிடையே ஏற்படுகின்ற உரிமைசார் ஆயுதவழி விடுதலைப் போராட்டமானாலும் அங்கு அமைவு கொண்டுள்ள பொதுப் பணி நிறுவனங்கள் மீது குறிப்பாக, மருத்துவமனைகள், ஆலயங்கள், அகதிமுகாம்கள் மீது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தாக்குதல் சம்பவங்கள் மேற்கொள்ளப்படக்கூடாது என்பது பன்னாட்டளவில் பொதுவான விதியாக ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளது.



**தமிழர் தாயகம் கண்டுகொண்ட அளவிடமுடியாத இழப்புக்கள்**

ஆனால், இலங்கையைப் பொறுத்தவரையில் மூன்று தசாப்த காலமாக இடம்பெற்ற உள்நாட்டுப் போர் நடவடிக்கைகள் காரணமாகத் தமிழர் தாயகம் அளவிடமுடியாத இழப்புக்களைச் சந்தித்துள்ளது. மருத்துவமனைகள் பலவும் இலங்கை அரச படைகளாலும், இந்திய 'அமைதிப்படை'யினராலும் பல சந்தர்ப்பங்களில், மிகமோசமான முறையில் தாக்கப்பட்ட அசம்பாவிதங்கள் இடம்பெற்றுள்ளன.

தமிழர் தாயகத்தில் உயிர் காக்கும் நிலையமாக அமைந்து, வடமாகாண மக்களுக்கு மருத்துவசேவைகளை வழங்கி வருகின்ற யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை மூன்று தசாப்த காலப் போரில் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட மருத்து வமனையாக விளங்குகிறது. அதுவிதமே இறுதிப் போர் நடைபெற்ற காலப்பகுதியில் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மருத்துவமனையும் இலங்கை அரச படைகளின் மிலேச்சத்தனமான தாக்குதலுக்கு உள்ளானமை யாவரும் அறிந்த விடயம்.

அந்தவகையிலே யாழ் .போதனா மருத்துவமனையில் சிகிச்சைபெற்றுக்கொண்டிருந்த நோயாளர்கள், பணியாளர்கள் உட்படப் பல நூற்றுக்கணக்கானோரை இலங்கை மற்றும் இந்திய அரச படையினர் துப்பாக்கிச் சூடு,எறிகணைத் தாக்குதல், விமானத் தாக்குதல், விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல் மேற்கொண்டு படுகொலை செய்த சம்பவங்கள் மறந்துபோகமுடியாதவை. மறுக்கப்படவும் முடியாதவை. ஈழத் தமிழர்களுடைய வரலாற்றின் முக்கிய பக்கங்களில் இவை குருதிக்கறை படிந்த காலங்களாக இன்றும் ஞாபகம்கொள்ளப்படுகின்றன.

**மருத்துவமனைக்குள் எறிகணை வீச்சு!**

1987ஆம் ஆண்டு முற்பகுதியில் அரச படைகளுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற போரில், கோட்டையில் நிலைகொண்டிருந்த அரச படையினர் அதிகாலை வேளையில் யாழ். நகரை இலக்கு வைத்துக் கடுமையான எறிகணைத் தாக்குதல்களைத் தொடர்ச்சியாக மேற்கொண்டனர். அருகில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை மீதும் எறிகணைத் தாக்குதல் இடம்பெற்றது. அப்போதைய வெளிநோயாளர் பிரிவுக்கு அண்மையில் அமைந்துள்ள 19 மற்றும் 20 ஆம் இலக்க ஆண்களுக்கான சிகிச்சை விடுதியில் இரண்டு எறிகணைகள் வீழ்ந்து வெடித்தன. இதில் ஒரு பணியாளர் மற்றும் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்த 10 நோயாளர்கள் வரை கொல்லப்பட்டனர். ஐந்து நோயாளர்கள் வரையில் படுகாயமடைந்தனர்.

**இந்திய 'அமைதிப் படை'யின் கோரத் தாண்டவம்**

1987ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29ஆம் நாள் இந்திய-இலங்கை அரசுகளின் தலைவர்களுக்கிடையில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்துக்கு அமைவாக, ஈழத் தமிழர்களைப் பாதுகாத்தல் என்ற முகதாவில் அமைந்த இராஜதந்திர நகர்வாக 'அமைதிப்படை'யை வடக்குக் கிழக்குப் பிரதேசங்களுக்கு இந்திய அரசு அனுப்பியிருந்தது. ஆனால் தமிழ்மக்கள் மீது கரிசனையின்றி வெறுப்பையும் பகைமை உணர்வையும் உருவாக்கிய இந்திய 'அமைதிப்படை'யினர் விடுதலைப்புலிகள் மீதான போரைத் தீவிரப்படுத்தினர்.

அமைதிப்படைகள் என்ற போலித் திரைமுகத்தை கிளித்தெறிந்துவிட்டுத் தங்களது கொலை வெறி முகத்தைக் கொடூரமாக வெளிக்காட்டினர். ஒக்ரோபர் மாதம் 21 ஆம் மற்றும் 22ஆம் திகதி ஆகிய இரண்டு தினங்களிலும் மனிதத் தன்மையற்று மனித உயிர்களை வேட்டையாடத் துணிந்தனர். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை வளாகத்தினுள் புகுந்து மருத்துவர்கள், தாதியர்கள், பணியாளர்கள் உட்பட 100 இற்கும் மேற்பட்ட நோயாளர்களையும் சுட்டுக் கொன்றனர். மருத்துவமனை வளாகத்திலேயே பணியாளர்களையும், நோயாளர்களையும், பாதுகாப்புத் தேடித் தஞ்சம் புகுந்தவர்களையும் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கினர். அந்தக் கொடிய நினைவுகள் 31 ஆண்டுகள் கடந்தபோதிலும் இன்றும் ஞாபகங்களில் நிழலாடித் தாங்கொணாத வேதனைகளையும், துன்பங்களையும் தந்துகொண்டிருக்கின்றன.

**மருத்துவமனைக்குள் இந்தியப்படையினர் அராஜகம்!**

சம்பவ தினத்தன்று இந்தியப் படையினர் நடத்திய எதிர்பாராத தாக்குதல்களால் மருத்துவமனைச் செயற்பாடுகள் ஸ்தம்பிதம் அடைந்தன. மருத்துவர்கள் மற்றும் சக உத்தியோகத்தர்கள் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு கட்டடங்களுக்குள் பாதுகாப்புத்தேடி ஒளித்துக்கொண்டனர். 'பழைய ஒன்பதாம் இலக்க பெண்களுக்கான சிகிச்சை விடுதி, தாதிகள் அலுவலகம், மேற்பார்வையாளர் அலுவலகம், பிரதம அலுவலகம், மருத்துவர்களின் விடுதி, கண்விடுதி, என்பு முறிவு சிகிச்சை விடுதி, கதிர்இயக்கப்பிரிவு' என மருத்துவமனை வளாகத்தை படையினர் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தனர்.

பிற்பகல் வேளையில் மேற்கொள்ளப்பட்ட எறிகணைத் தாக்குதல் சம்பவத்தில் பழைய எட்டாம் இலக்கப் பெண்கள் விடுதியில் இருந்தவர்களுள் 10 பேர் வரை கொல்லப்பட்டனர். ஏனைய விடுதிகளிலுள்ள நோயாளர்கள், மக்கள், உத்தியோகத்தர்கள் பாதுகாப்பைத்தேடிப் பிரசவ விடுதிக்குள் தஞ்சமடைந்தனர். பிற்பகல் 2 மணிக்கு மேல் ஆரம்பித்த கொலை வெறியாட்டம் இரவாகியும் கட்டுக்குள் வரவில்லை. மேற்பார்வையாளர் அலுவலகத்திலும், தாதியர் அலுவலகத்திலும் கடமையிலிருந்த மேற்பார்வையாளர்கள் இருவர், சிற்றூழியர்,பொறுப்புத் தாதிய பரிபாலகர் என அனைவரும் சுட்டுக்கொல்லப்பட்டனர். ஒக்ரோபர் மாதம் 21 ஆம் திகதி இடம்பெற்ற படுகொலைச் சம்பவத்தில், மருத்துவர்கள் இருவர் உட்பட பிரதம தாதிய உத்தியோகத்தர், பணியாளர்கள் 18 பேர், 70க்கும் மேற்பட்ட நோயாளர்கள், அப்பாவி மக்கள் உயிரிழந்தனர்.

நடந்த சம்பவங்களை அறிந்துகொள்வதற்காக ஒக்ரோபர் மாதம் 22 ஆம் திகதி அதிகாலை வேளையில் வெள்ளைக் கொடியுடன் மருத்துவமனை வளாகத்தினுள் உட்பிரவேசித்த குழந்தைகள் சிகிச்சை மருத்துவ நிபுணர் சிவபாதசுந்தரம் உட்பட மூன்று தாதியர்கள் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டனர்.

**மனிதாபிமானமற்ற படுகொலைகள்**

ஈழத் தமிழர்களின் போர்க்கால வரலாற்றின் வரிசையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நடந்தேறிய படுகொலைகள் மனிதாபிமானத்துக்கப்பால் பாரததேசத்தால் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டன என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. இவ்விதமாகத் தமிழர் தாயகத்தில் இடம்பெற்ற இராணுவ அடக்குமுறைகளையும், அட்டூழியங்களையும் தமிழ் மக்கள் இலகுவில் மறந்துவிடமாட்டார்கள். இவை அனைத்தும் வலியும், துயரமும் நிறைந்த நாள்களாக நினைவுகொள்ளப்படுகின்றன.

# இந்த உயிர் இங்கே போனால் என்ன? கடல் கடந்து அங்கே போய்ப் போனால் என்ன?

தேவநாயகம் தேவானந்த்

## தமிழ்த் தலைவன் மு.கருணாநிதி -49

'இலங்கையில் தமிழருக்கெதிரான போரை நிறுத்து' என்ற கோரிக்கையை முன்வைத்துத் தமிழகம் 2008ஆம் ஆண்டிலிருந்து போராட்டக் களமானது. அதன் உச்சமாக முத்துக்குமாரின் தீக்குளிப்பு அமைந்திருந்தது என்பதைப் பார்த்தோம். அப்போது தமிழக அரசின் சார்பில் முதலமைச்சர் கருணாநிதி, டெல்லிக்குக் கடிதம் மேல் கடிதம் அனுப்பினார். இலங்கை விடயத்தில் தலையிட்டுத் தமிழருக்கெதிரான போரை நிறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். அந்தக் கடிதங்களால் பயனேதும் நிகழவில்லை. இந்த வேளை, "இனிக் கலைஞர் இலங்கைப் பிரச்சினை தொடர்பாக டில்லிக்கு 'மிஸ்கோல்' போட்டேன் என்று அறிவிப்பார்" என்றுகூறிப் போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் கிண்டலடித்தார்கள்.

**இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் போராட்டம்**

தமிழகத்தில் ஈழப்போராட்டத்தைத் தீவிரப்படுத்தியது 2008ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் இந்தியாவின் ஹைதராபாத் மாநிலத்தில் கூடிய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக் குழு. இலங்கையில் போர் நிறுத்தம் கோரித் தமிழகம் முழுவதும் உணவு ஒறுப்புப் போராட்டத்தை நடத்துவது என முடிவுசெய்தார்கள். இந்தத் தீர்மானம் இந்தியத் தேசிய அளவில் சலனங்களை உண்டாக்கியது.

இந்த முடிவுக்குத் தமிழகம் முழுவதும் அமோக ஆதரவு கிடைத்தது.


**தி.மு.காவின் கூட்டமும் ஏனைய கட்சிகளின் புறக்கணிப்பும்**

இதைத் தொடர்ந்து, தி.மு.க சார்பில் சென்னையில் பொதுக்கூட்டம் நடத்தப்பட்டது. அதில் "இலங்கையில் நம் சகோதரர்கள் செத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த உயிர் இங்கே போனால் என்ன, கடல் கடந்து அங்கே போய்ப் போனால் என்ன? போர்நிறுத்தம் கொண்டுவர இலங்கை அரசை மத்திய அரசு நிர்ப்பந்திக்க வேண்டும். இல்லையென்றால் இனியும் இந்தப் பதவி எதற்கு என யோசிக்க வேண்டி இருக்கும்" என்று கருணாநிதி, மத்திய ரசை அந்தக் கூட்டத்தில் எச்சரித்தார்.

"இலங்கையில் இனப்படுகொலைக்கு இந்திய அரசு உதவி செய்கிறது" எனத் தமிழகத் தலைவர்கள் பகிரங்கமாக இந்திய மத்திய அரசைக் குற்றம்சாட்டினர். இதே காலகட்டத்தில கருணாநிதி தலைமைச் செயலகத்தில் அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டினார். அ.தி.மு. க., ம.தி.மு.க., தே.மு.தி.க., பா.ஜ.க. ஆகிய கட்சிகள் அந்தக் கூட்டத்தைப் புறக்கணித்தன.


**பதவி விலகுவதான தீர்மானமும் அது நீர்த்துப்போனமையும்**

"இரண்டு வாரங்களுக்குள் மத்திய அரசு போரை நிறுத்த முயலாவிட்டால் தமிழக அமைச்சர்கள் அனைவரும் பதவிவிலகுவார்கள்' என்று இந்தக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதையடுத்து, டெல்லிக்குச் சென்ற பசில் ராஜபக்சவுடன் பேச்சு நடத்திய அப்போதைய இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி, சென்னைக்குச் சென்று முதலமைச்சர் கருணாநிதியைச் சந்தித்துப் பேசினார். அதையடுத்து, "பதவி விலகல் மூலம் மத்திய அரசுக்கு நெருக்கடி வழங்கப்போவதில்லை" என்றார் கருணாநிதி.



**போராட்டங்களும் போர்நிறுத்தம் செய்யக்கோரிய தீர்மானமும்**

2008ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் வகுப்புப் புறக்கணிப்புப் போராட்டம், ராமேஸ்வரத்தில் திரையுலகினர் திரண்டு போராட்டம், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் ரயில் மறியல் போராட்டம் என்று ஈழத்தமிழரைக் காப்பாற்றுவதற்காகத் தமிழகம் போராட்டக் களமாகியது. இதேவேளை காங்கிரஸ் கட்சி 'இறையாண்மைக்கு எதிராகப் பேசுகின்றனர்' எனத் தமிழகச் சட்டப்பேரவையில் பிரச்சினை எழுப்பியது. போர்நிறுத்தக் கோரிக்கையை வலியுறுத்திய போராட்டங்கள் தீவிரம் ஆகிக்கொண்டே இருக்க, முதலமைச்சராக இருந்த கருணாநிதிக்கு நெருக்கடி ஏற்பட்டது. அதனால் சென்னையில் தி.மு.க. சார்பில் மனிதச் சங்கிலிப் போராட்டம் நடத்தப்பட்டது. பின்னர் கருணாநிதி போர்நிறுத்தத்தை வலியுறுத்திச் சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றினார். இதன் பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்தார் கருணாநிதி அப்போது செய்தியாளர் ஒருவர், "இலங்கைத் தமிழர்களுக்காக அனைத்துக் கட்சிக் கூட்டம் போட்டு சிறப்புத் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பினீர்கள், நிதி வசூலித்துக் கொடுத்தீர்கள், விரைவு நடவடிக்கைகள் எடுத்தீர்கள். ஆனால் நீங்கள் பதவி விலக வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் ஜெயலலிதா திரும்பத் திரும்பச் சொல்லி வருகிறாரே?" என்று கேட்டார். அதற்குக் கருணாநிதி சொன்னார், "என் மீதுள்ள அனுதாபமும் பரிதாபமுமே காரணம். கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக இலங்கைப் பிரச்சினைக்காகக் கஸ்ரப்படுகிறாரே முதல்வர் என்பதற்காககத் தான் அப்படிக் கூறுகிறார்'' என்றார். தொடர்ந்து 2008ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நான்காம் திகதி தமிழகத் தலைவர்களுடன் இந்தியத் தலைமை அமைச்சர் மன்மோகன் சிங்கைச் சந்தித்தார் கருணாநிதி.



**கிளிநொச்சி நகர் இராணுவத்தால் முற்றுகையிடப்பட்டது**

இதேவேளை 2008ஆம் ஆண்டு டிசம்பரில் கிளிநொச்சி நகர் இலங்கை இராணுவத்தால் கைப்பற்றப்படுகிறது. கனரக ஆயுதங்கள் மூலம் ஆயிரக்கணக்கான மக்கள் கொத்துக்கொத்தாகக் கொல்லப்பட்டனர். போரை நிறுத்துமாறு மத்திய, மாநில அரசுகளை வலியுறுத்தித் தமிழகத்தில் நாளுக்கு நாள் போராட்டம் வலுத்தது. 'இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கம்' உருவாக்கப்பட்டது. இந்தப்பின்னணியில் தான் 2009ஆம் ஆண்டு ஜனவரி 29ஆம் திகதி சென்னை-நுங்கம்பாக்க த்தில் முத்துக்குமார் தீக்குளித்துச் சாவடைந்தார். இந்த நிலையில், கருணாநிதி, 2009ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் மூன்றாம் திகதி தி.மு.காவின் சார்பில் 'இலங்கைத் தமிழர் நல உரிமைப் பேரவை' எனும் புதிய அமைப்பை உருவாக்கினார். "இலங்கைப் பிரச்சினைக்காகப் போராடுவதாகக் கூறி, என் ஆட்சியைக் கவிழ்க்கச் சதி.... இந்தப் பேரவை நடத்தும் நிகழ்ச்சிகளில் யாருடைய மனதையும் புண்படுத்தாத முழக்கங்கள் இருக்கவேண்டும்" என்று அவர் கூறியது, முக்கியத்துவம் பெற்றது.

(தொடரும்)

## ஆசிரியருக்கான கடிதம்

# உளநலம் பாதிக்கப்பட்டவர்களின் மனதைப் புண்படுத்தாதீர்கள்!

அனைத்துத் தரப்பினராலும் உலக உளநாள் கடைப்பிடிக்கப்படுகிறது. உளநலம் பாதிக்கப்பட்டவர்களுக்காக அப்போது பலதரப்பட்டவர்கள் குரல் கொடுக்கிறார்கள். இவர்கள் உளநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவு தெரிவித்து வருவது ஒருவித மகிழ்ச்சியே. ஆனால், நம்மில் சிலர் உளநலம் பாதிக்கப்பட்டவர்களைக் கிண்டல், கேலி செய்வது மனதுக்கு வேதனை அளிக்கின்றது.

எனது கணவரைப் பருத்தித்துறை மருத்துவமனையிலுள்ள உளநலக் கிளினிக் பிரிவுக்கு அதிகாலை 6 மணியளவில் கூட்டிச் சென்றேன். எனது கணவர் இறுதிக் கட்டப்போர்ப் பின்னடைவு மற்றும் அவலச் சாவுகளைத் தாங்கிக் கொள்ள முடியாது கடுமையான மன உளச்சலுக்கு உட்பட்டு ஒன்பது வருடங்களாகச் சிகிச்சை பெற்று வருகின்றார். முடங்கிய நிலையில், தொழில் ரீதியாகவும் பாதிக்கப்பட்டுத் தற்போது தனது காலத்தைக் கழித்து வருகின்றார். அவருடைய கிளினிக் அட்டையை அங்குள்ள ஒழுங்கின்படி அடுக்கி விட்டு அமர்ந்திருந்தோம். நாம் அமர்ந்திருந்த பகுதியில் வேறு கிளினிக்குகளும் நடைபெற்றுக் கொண்டிருந்தன. வேறு பல நோயாளர்களும் அமர்ந்திருந்தனர். அந்தப் பகுதிக்கு வந்த இரண்டு இளைஞர்கள் அங்கு அமர்ந்திருந்த இரண்டு இளைஞர்களுக்கு உளநலப் பிரிவுக் கிளினிக் பகுதியைக் காட்டி, "உந்த அறைக்குள் என்ன கிளினிக்...?" என்று கேட்க, அவர்களோ, "உது விசர்க் கிளினிக்" என்றனர். அவர்கள் கூறும்போது எல்லோரும் சிரித்தனர். அதைப் பார்க்கும்போது மனம் பற்றி எரிந்தது. எனது கணவர் கண் கலங்கி விட்டார்.

எந்த வலி வந்தாலும் எனக்கும் அதில் பங்குண்டு, நான் ஒதுங்கக் கூடாது, எனது பங்களிப்பும் இந்த மண்ணுக்குத் தேவை என்று உணர்ந்து எமது மக்களுக்காகப் பல இடையூறுகளை எதிர்கொண்டு, தோல்வியைத் தாங்க முடியாது மனமுடைந்தவர் இன்று அந்தச் சில மக்களே இப்படிக் கூறும் போது அவரது மனம் எப்படித் தாங்கும்? உளநலம் மற்றைய நோய்கள்போல் அல்ல. எவரை எந்த நேரத்தில் தாக்கும் என்பது தெரியாது.

இன்றைய சூழலில் உளநலப் பிரிவினர், மருத்துவர்கள் எத்தனையோ சவால்களுக்கு மத்தியிலும் உளநலம் பாதிக்கப்பட்டவர்களை அன்போடும், ஆதரவோடும் அரவணைத்து வருகின்றனர். ஆனால், எம்மில் சிலர் இப்படியாக மனம் நோகும் விதத்தில் நடப்பது வேதனைக்குரியது. உங்களால் உதவி செய்ய முடியாவிட்டாலும் பரவாயில்லை உளநலம் பாதிக்கப்பட்டவரிகளின் மனதைப் புண்படுத்தாமல் இருந்தாலே போதும்.

***பாதிக்கப்பட்டவர்***

# நித்திய சுகம் 387

உடலே கோயில்

# உணர்வழியியல் மருத்துவம்

மருத்துவர் வசுமதி தேவநேசன்

உணர்வழியியல் என்பது, உணர்வை இழத்தல் அல்லது அழித்தல் ஆகும். அதாவது சத்திர சிகிச்சையின்போது வலி, வேதனை போன்ற இதர உணர்வுகளைப் போக்கி தேவையேற்படின் நினைவைத் தற்காலிகமாக இழக்கச் செய்து நோயாளியைப் பராமரித்தலாகும். இந்தவகையான உணர்வழித்தல் பொது மக்கள் மத்தியில் அறிமுகப்படுத்தப்பட்ட நாளே உலக உணர்வழியியல் நாளாக கடைப்பிடிக்கப்படுகிறது. இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட இந்த உணர்வழியியல் துறையானது இன்று பல வழிகளிலும் முன்னேற்றமடைந்துள்ளது. குறிப்பாக பல சவால்மிக்க சத்திரசிகிச்சைகளை மிகவும் பாதுகாப்பாக மேற்கொள்ளக்கூடிய அளவுக்கு வளர்ச்சி அடைந்துள்ளது.

**உணர்வழியியலை மேற்கொள்ளும் வழிமுறைகள்**

உணர்வழியியலை பல வழிமுறைகளில் மேற்கொள்ள முடியும். அவையாவன,

- பகுதி பிரிவு மயக்க மருந்து.
- பிராந்திய மயக்க மருந்து.
- பொது மயக்க மருந்து.


**பகுதி பிரிவு மயக்க மருந்து**

பகுதி பிரிவு மயக்க மருந்து வழிமுறையில், சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்படும் பகுதி மட்டும் உணர்வழிக்கப்படும். அதாவது குறிப்பிட்ட பகுதிக்கு மட்டும் மருந்தைப் பூசுவதன் மூலமோ, விசுறுவதன் மூலமோ அல்லது ஊசியினூடாக உட்செலுத்துவதன் மூலமோ விறைக்கவைத்து வலியின்றி சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்படுகிறது. நவீன மருத்துவத்தில் கழியொலி அலைகளின் வழிகாட்டலின் மூலம் பகுதி பிரிவு மயக்க மருந்துச் சிகிச்சை மேலும் பாதுகாப்பான முறையில் மேற்கொள்ளப்படுகிறது.

உதாரணமாக பல் பிடுங்கும்போது இந்த முறையே பல வேளைகளில் பின்பற்றப்படுகிறது. விரல்களின் தோல்களில் சிறு காயங்கள் ஏற்படும்போது, இந்த முறை இலகுவாக வலியகற்ற உபயோகிக்கப்படுகிறது.

**பிராந்திய மயக்க மருந்து**

இரண்டாவதாக பிராந்திய மயக்க மருந்து வழிமுறை மருத்துவம் என்பது, உடலில் ஒரு பாகத்தை விறைக்க வைத்தல் ஆகும். குறிப்பாக பெரிய நரம்புகளில் அல்லது முள்ளந்தண்டுப் பகுதிக்கு அண்மையாக மயக்க மருந்தை ஏற்றுவதன் மூலம் உணர்வழிக்கப்படுகின்றது. உதாரணமாக 'முள்ளந்தண்டு அனஸ்தீசியா' என்னும் பிராந்திய மயக்க மருந்து இன்று பெரும்பாலும் பல சத்திரசிக்ச்சைகளுக்குக் கொடுக்கப்படுகிறது. உதாரணமாக 'சிசேறியன் செக்டியன்' எனப்படும் மகப்பேற்று சத்திரசிகிச்சையில் இந்த வழிமுறையே பெரும்பாலும் உபயோகிக்கப்படுகிறது. இந்த முறையில் உடலின் வயிற்றுப் பாகமும் கால்களும் விறைத்த நிலையில் சத்திரசிகிச்சையை நோவின்றி மேற்கொள்ள முடியும். இதன்போது நோயாளி உணர்வுடன் இருப்பதோடு மருத்துவர்களுடன் உரையாடிக் கொண்டிருக்க முடியும். தன் குழந்தையையும் உடனடியாகப் பார்வையிடக்கூடியதாக இருக்கும். முள்ளந்தண்டுப் பகுதியில் விறைப்பு மருந்து ஏற்றுவதால் நோயாளிக்கு ஏற்படும் பக்கவிளைவுகள் குறைவாகவே இருக்கும். ஆனால் மக்கள் மத்தியில் முதுகுவலி நீண்டகாலம் இருக்கும் என்ற தப்பான அபிப்பிராயம் உள்ளது.



**பொது மயக்க மருந்து**

மூன்றாவதாக பொது மயக்க மருந்து உணர்வழியியல் எனப்படுவது, நோயாளியை ஒரு தற்காலிக தூக்கம் போன்ற நிலைக்க உட்படுத்தி வலியின்றி சத்திர சிகிச்சையை மேற்கொள்வதாகும். நாளத்தினூடாக மருந்தை ஏற்றுவதன் மூலமாகவோ அல்லது மூச்சின் ஊடாக உள்ளிழுப்பதன் மூலமாகவோ பொது மயக்க மருந்தின் போது உணர்வழிக்கவும், வலியகற்றவும் மருந்துகள் ஏற்றப்படும். சிலவேளைகளில் சில சத்திரசிகிச்சைகளை இலகுவாக்கும் பொருட்டு தசையிழக்கிகளும் பயன்கொள்ளப்படுகின்றன. இதன்போது நோயாளிக்கு செயற்கைச் சுவாசம் அளிக்கப்படும். நோயாளியின் வாயினூடாவோ அல்லது மூக்கின் ஊடாகவோ ஒரு குழாய் போன்ற உபகரணம் செலுத்தப்பட்டு அதனூடாக ஒட்சிசனும் இதர வாயுக்களும் அனுப்பப்படும். மேலும் சத்திரசிகிச்சையின் வகை, நேரம் என்பவற்றைப் பொறுத்து மேலதிக மருந்துகள் நாளத்தினூடாகவோ அல்லது சுவாசத்தி னூடாகவோ தொடர்ந்து வழங்கப்படும்.

**உணர்வழியியல் மருத்துவத் துறை**

இவ்விதமாக பல வகைப்பட்ட உணர்வழியியல் மருத்துவத்தை மேற்கொள்கின்ற மருத்துவரை 'மயக்க மருந்தியல் நிபணர்' என அழைப்பர். இவர்களின் தரம் பல வழிகளில் வகைப்படுத்தப்படும். எந்த ஒரு மருத்துவரும் அவரது உள்ளகப் பயிற்சி முடிந்ததும் மயக்கமருந்தியலாளராக வர முடியும். அதற்கு அவர் மயக்க மருந்து ஆலோசகரிடம் ஆறு மாத கால பயிற்சியைப் பெற வேண்டும். அதன் பின்பு அவரது அனுபவம் திறமை என்பவற்றுக்கு மேலதிகப் பயிற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும். அதற்கான போட்டிப் பரீட்சை மருத்துவப் பட்டப்பின் படிப்புக்கான மருத்துவ நிறுவனத்தால் நடத்தப்படுகின்றது. இந்தப் போட்டிப் பரீட்சையில் தேர்ச்சி பெறுவோர் மேலதிக பயிற்சிகளை இலங்கையில் உள்ள பொது மருத்துவமனைகளில் மேற்கொள்ள முடியும். மூன்று வருடகாலப் பயிற்சி முடிந்ததும் மீண்டும் ஒரு பரீட்சையில் சித்தியடைந்து வெளிநாட்டு வேலை அனுபவத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

**நோயாளிகளின் பாதுகாப்பே முதன்மையானது**

இப்படியாக பயிற்சி பெற்று வெளியேறுகின்ற மருத்துவ நிபுணர்களதும், மருத்துவர்களதும் முதன்மை நோக்கமாக இருப்பது நோயாளியின் பாதுகாப்பே ஆகும். ஆகவே, எந்த ஒரு உணர்வழியியல் மேற்கொள்ள முன்பும், உணர்வழியியலின்போதும் மற்றும் உணர்வழியியலின் பின்பும் உணர்வழியியல் மருத்துவரின் கவனிப்பின் கீழ் நோயாளி இருப்பார். சத்திரசிகிச்சை ஆரம்பிப்பதற்கு முன்பாக நோயாளி சத்திரசிகிச்சைக்குத் தகுதியானவர் தானா எனப் பரிசோதிப்பார்.



அவசரமற்ற சத்திரசிகிச்சையாக இருக்கும் சந்தர்ப்பத்தில் நோயாளி உணர்வழியியல் சிகிச்சைப் பகுதிக்குசெல்வதற்கான அறிவுறுத்தல் வழங்கப்படும். அங்குள்ள மருத்துவர் நோயாளியின் உடல் நிலையைப் பரிசோதித்து மேலதிக குருதிச் சோதனைகளை, தேவையான ஏனைய மருத்துவ பரிசோதனைகளை மேற்கொள்வதற்கான ஆலோசனையை வழங்குவார். நீரிழிவுநோய், உயர் குருதி அழுத்தம், இருதய நோய்கள் கட்டுப்பாட்டில் இல்லாதவிடத்து நோயாளர்கள் அந்தந்த துறைசார்ந்த விசேட மருத்துவ நிபுணர்களின் ஆலோசனையைப் பெறும்படி அறிவுறுத்தப்படுவர். உணர்வழியியலின்போது மருத்துவர், நோயாளியைப் பராமரித்து உணர்வழியியலின் பின்னரான நோயாளியைக் கவனித்தல், வலி நிவாரணம் வழங்கல் போன்றவற்றையும் தேவையேற்படின் அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் கண்காணிப்பையும் வழங்குவார்.

உணர்வழியியல் நாளன்று கடைப்பிடிக்க வேண்டிய உணவு தவிர்ப்புப் பற்றி நோயாளிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்படும். சாதாரணமாக திண்ம உணவு வகைகளுக்கு ஆறு மணத்தியாலங்களும், திரவ உணவு வகைகளுக்கு இரண்டு மணித்தியாலங்களுக்கும் கட்டுப்பாடு இருக்கும். பால், சோடா போன்ற பானங்கள் திரவ உணவுகளுக்குள் அடங்கமாட்டாது. தற்செயலாக இந்த உணவுக் கட்டுப்பாடு மீறப்பட்டிருப்பின் உணவுக் கால்வாயினுள் தேங்கியிருக்கும் உணவு உணர்வழியியலின்போது சுவாசக்குழாயினுள் சென்று மூச்சுத் திணறல் ஏற்படும் பேராபத்தும் உள்ளது. இதைத் தவிப்பதற்கு நீங்கள் உணவுக் கட்டுப்பாடு பற்றிய அறிவுறுத்தல்களை கவனமாகப் பின்பற்ற வேண்டும்.

**உணர்வழியியல் மருத்துவம் அபரிதமான வளர்ச்சியை கண்டுள்ளது**

இவ்வாறு ஒவ்வொரு செயலிலும் பாதுகாப்பை அதிகரித்து கண்ணும் கருத்துமாய் கவனித்து உணர்வழியியலை மேற்கொள்ளும்போது உணர்வழியியலானது இன்றைய காலநகர்வில் மிகவும் பாதுகாப்பான துறையாகவே வளர்ச்சியடைந்துள்ளது.

இதன் வளர்ச்சிக்கு மருத்துவர்களின் அர்ப்பணிப்பு மிக்க பயிற்சிகளும், ஆழமான அறிவாற்றலும், அயராத உழைப்பும் காரணமாக அமைந்துவிளங்குகின்றன. உணர்வழியியல் மருத்துவத்தின் இத்தகு அபரிதமான வளர்ச்சி என்பது, பல சவால் மிக்க சத்திரசிகிச்சைகளை மிகப் பாதுகாப்பான முறையில் ஓர் இனிய அனுபவமாகச் செய்யக்கூடியதாக மாற்றியுள்ளது.

ஞாயிறு
சிறப்பம்சம்
21.10.2018

சூரியகாந்தி
உதயன்



கட்டுரை
முருகேசு சச்சிதானந்தம்

# விக்னேஸ்வரனின் புதிய அரசியல் அறிவிப்பு தமிழருக்கு வரமா? சாபமா?

வ

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் மக்கள் தமிழராகப் பிறந்துள்ள ஒற்றுமையைக் கொண்டுள்ளார்களே தவிர ஒரு தேசிய இனத்துக்குரிய பண்பாட்டு ஒற்றுமையையோ, அரசியல் ரீதியான ஒற்றுமையையோ, ஒருவரை ஒருவர் நம்புகின்ற நிலையையோ கொண்டிருக்கவில்லை. வடக்குக்கிழக்கு என்ற இருவேறு நிலங்களில் வாழுகின்ற இந்த மக்கள் 'யாழ்ப்பாணத்தான்' எனவும் 'மட்டக்களப்பான்' என்றும் பிரிந்தே வாழ்கின்றனர். இவ்விரு சமூகங்களும் கலாசார ரீதியாகவோ, இந்து மதம் என்ற வகையிலோ, தமிழ் மொழி என்ற அடிப்படையிலோ இனம் என்ற அடிப்படையிலோ கடும் இறுக்கத்துடன் இணைந்திருப்பதாகத் தெரியவில்லை. 'நாம் தமிழர்' என்று மேலோட்டமாக மார்தட்டிக் கொண்டாலும் இவர்களின் பிணைப்பிலுள்ள வலிமை அவ்வளவு காத்திரமானதல்ல. ஆயுதப் போராட்டம், அதனால் ஏற்பட்ட உறவுகள், பல்கலைக் கழகக் கல்வியின் ஊடாகத் தமக்குள் நட்பை வளர்த்துக்கொண்டமை போன்ற இன்னோரன்ன காரணங்களால் இவர்கள் மத்தியில் துளிர்த்துக் கொண்ட சிறு சிறு உறவுகள் தேசிய இணைப்பல்ல. அவை ஒவ்வொன்றும் தனிப்பட்ட உறவுகளே. மன்னராட்சிக் காலத்திலோ சுதந்திரத்துக்குப் பின்பான காலத்திலோ தமிழர்கள் இணைந்திருக்கவில்லை. தொடர் பிளவுகள்தான். ஒரு சிறிய இனம் தன்னை விஞ்சிய அளவுக்குக் கட்சிகளை உருவாக்கியிருக்கிறது. அதுபோதாதென்று தற்போதைய முதல்வர் விக்னேஸ்வரனும் ஒரு புதிய கட்சியை உருவாக்கவிருக்கிறாராம்.

தற்போதுள்ள தமிழர் கட்சிகள் ஒவ்வொன்றும் தமிழரைக் கூறுபோட்டிருக்கின்றன. அத்தகைய ஒரு நிலையை மேலும் தூண்டும் வகையிலான செயற்பாடு ஒன்றை ஒக்ரோபர் 24ஆம் திகதி அன்று முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தொடக்கி வைக்கவிருக்கிறாராம். இது தமிழ் மக்களை மேலும் பலவீனப்படுத்தும். ஒக்ரோபர் 23ஆம் திகதி நள்ளிரவுடன் வட மாகாணசபை காலாவதியாகின்றது. இறுதி நாள்வரை முதலமைச்சர் ஆசனத்தில் இருந்துவிட்டு மறுநாள் புதிய அரசியல் நிலைப்பாடு பற்றி அறிவிக்கவிருக்கிறாராம் விக்னேஸ்லரன்.



### விக்னேஸ்வரனை அறிமுகப்படுத்தியவர்களும் பொறுப்பாளிகளே!

2013ஆம் ஆண்டில் வடமாகாணத் தமிழருக்கு அறிமுகமானவர்தான் சி.வி.விக்கினேஸ்வரன். இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குள் நிலவியிருந்த தலைமைத்துவ ஆளுமைகளின் வறுமையே வடக்குக் கிழக்கில் பிறக்காத, இந்து வேளாள நீதிபதி ஒருவரைத் தமிழ் மக்களுக்குள் கொண்டுவந்து நிறுத்த வேண்டிய தேவைக்கு உந்தித் தள்ளியிருந்தது. அவ்வாறு பார்த்தால் இந்த 'ஒக்ரோபர் 24 பிரளயத்தின்' மூல கர்த்தாக்கள் சம்பந்தரும், மாவையும், சுமந்திரனும் தான். சி.வி.விக்னேஸ்வரனை முதலமைச்சர் வேட்பாளராக முன்மொழிந்தபோது இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த உறுப்பினரான பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் போன்றோர் 'தெருவில் நின்றவர்களை எல்லாம் கட்சிக்குள் எடுக்கக்கூடாது' எனக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தரைக் கடிந்து கொண்டார்கள். தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக 2015ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின்போது அறிவிக்கப்பட்ட பேராசிரியர் சி.க சிற்றம்பலம் பின்னர் கூட்டமைப்பினரால் கை கழுவி விடப்பட்டபோது விக்னேஸ்வரனின் தமிழ் மக்கள் பேரவையில் நம்பிக்கை வைத்தார் சிற்றம்பலம். அதில் இருந்தும் ஒன்றும் சாதிக்கப்போவதில்லை என்பதைப் பின்னர் அவரே வெளியிட்டிருந்தார்.

### விக்னேஸ்வரனுக்கு வாக்களித்தவர்கள் கைவிடப்பட்ட நிலை

விக்னேஸ்வரனைத் தேர்தலில் வெற்றி பெற வைக்கவேண்டும் என்பதற்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகித்த இலங்கத் தமிழரசுக் கட்சி, புளொட், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ். என அனைத்துக் கட்சிகளும் தமது விருப்பு வாக்கு ஒன்றைக் கட்டாயமாக முதலமைச்சர் வேட்பாளரான விக்னேஸ்வ ரனுக்குப் போடுமாறு ஊர் ஊராக இறங்கிப்



பரப்புரை செய்தன. இதன் வலியோ, பெறுமதியோ, விக்னேஸ்வரனுக்குத் தெரிந்திருக்காதது யதார்த்தமானதுதான். தனக்காக விருப்பு வாக்கை ஏழைகள், ஊனமுற்றவர்கள், போராட்டத்தால் உறவுகளை இழந்தவர்கள் எனப் பல தரப்பிலிருந்தும் வழங்கியிருந்தார்கள் என்பதை மானசீகமாக உணர்ந்திருந்தால் வடமாகாணசபை ஆட்சி முடிவதற்குள் இந்த மக்களில் 7ஆயிரம் பேருக்காவது வேலை வாய்ப்புக்களைச் சட்டபூர்வமாக வழங்கியிருப்பார். அத்தகை மக்களின் பணம் வீணடிக்கப்படவோ, அல்லது முறைகேடாகப் பயன்படுத்தப்படவோ அனுமதித்திருக்க மாட்டார்.

### ஊழல் செய்தவர்களைக் கையாண்ட புதுமை

ஊழலில் ஈடுபட்டதன் மூலம், மக்களுக்குப் பிழை செய்தவர்களுக்கான தண்டனையாகப் பதவி விலக்குவது போதுமானது என உலகில் எங்குமில்லாத ஒரு சட்ட நடைமுறையை நீதியரசராக இருந்தவரான விக்னேஸ்வரன் வடமாகாண சபையில் அறிமுகப்படுத்தியிருந்தார். இந்த விவகாரங்களை அவரும் அவர் சார்ந்த சிலரும் தமக்குள் அமர்த்தி வாசித்தார்கள். அமைச்சர்கள், திணைக்களத் தலைவர்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள், கோவில் தலைவர்கள் (சிலர்) எனப் பலதரப்பட்ட நிலைகளில் இருக்கின்ற குற்றவாளிகளைக் காப்பாற்றியதால் சாதாரண மக்கள் மத்தியில் விக்னேஸ்வரனுக்கு 'அலிபாபா' பட்டம் வழங்கப்பட்டிருப்பது அவர் அறியாத சங்கதியாக இருக்கலாம். விக்கினேஸ்வ ரனின் இந்த நடவடிக்கையால் சம்பந்தரும் ஏனைய பழைய தலைவர்களும் பரவாயில்லை என மக்கள் நினைக்கும் நிலை ஏற்பட்டது. விக்னேஸ்வரன் என்ற தொழில் முறையில் நீதிபதியாக இருந்தவர் எல்லா விடயத்திலும் அறத்தைக் கடைப்பிடிப்பாரென நினைத்த மக்களுக்குப் பெரும் ஏமாற்றமே எஞ்சியது.

### விக்னேஸ்வரன் மீது அதிருப்தி அடைந்தவர்கள்

விக்னேஸ்வரன் மீது அதிருப்தி அடைந்தவர்கள் யாரென்று தேடிப் பார்த்தால், அதில் 45வயதுக்கு மேற்பட்டவர்களே அதிகமாக உள்ளனர். இவர்கள் 2013ஆம் ஆண்டில் நடைபெற்ற மாகாணசபைத் தேர்தலின்போது விக்னேஸ்வரன் என்ற ஒரு 'மீட்பர்' என உறுதிபடத் தெரிவித்து அவருக்கு வாக்களிக்க வேண்டும் எனத் தமது குடும்ப உறுப்பினர்களை ஜனநாயக நெறிமுறையையும் மீறி வற்புறுத்தியிருந்தார் என்பது அவர்களுக்கு மாத்திரமே தெரிந்த சங்கதி.

### விக்கினேஸ்வரனுக்குப் பின்னால் நிற்பவர்கள்

'ஐந்து வருடங்களை வீணடித்துவிட்டு' என்ற விளிப்புக்குப் பாத்திரமான விக்கினேஸ்வரனின் பக்கம் சார்ந்து யார் நிற்கிறார்கள் என்று பார்த்தால், இந்து வேளாள மேட்டுக் குடிகளைச் சேர்ந்தவர்கள், ஏற்கனவே சம்பந்தன், மாவை, சுமந்திரன் ஆகியோரை விமர்சித்து வந்தவர்கள், இந்திய அரசியல் பின்னணியில் செயற்படும் இந்து அமைப்பினர், தேர்தலில் தோல்வியடைந்த தனி நபர்கள் போன்ற பலரும் அடையாளப்படுவார்கள். அவர்களால் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வாக்கு வங்கிகளை இலகுவில் உடைத்துவிட முடியாது. அதேவேளை விக்னேஸ்வரனுக்கு ஆலோசனை வழங்குபவர்கள் மக்கள் மத்தியில் இறங்கி வேலை செய்தவர்கள் அல்லர். விக்கினேஸ்வரன் தன்னைச் சுற்றி நிற்பவர்களைப் பற்றி அறிந்து கொள்வதற்கு இன்னும் 59வருடங்கள் போதாது. விக்னேஸ்வரனைச் சார்ந்து நிற்பவர்களில் பலர் போகத்துக்குப் போகம் அரசியல் நடத்துபவர்களே.

> “
> புதிய கட்சி ஒன்றின் தோற்றம் என்பது தோல்லி அடைந்தவர்கள் யாராவது ஒருவரின் தலையில் பொறுப்புக்களைச் சுமத்தி விடுவதாகவே இருக்கும். அதன் பின்னர் பொறுப்பேற்குமாறு கூறியவர்கள் விலகிவிடுவர். விக்னேஸ்வரகின் ஒக்.24 அரசியல் அறிவிப்பு என்பது ஒரு பிரளயமாகவே இருக்கப் போகின்றது இது நிச்சயமாக அது தமிழ் மக்களுக்குச் சாதகமாக இருக்கப்போவதில்லை.

### இளைஞர் அணிகள்

இளைஞர் அணி ஒன்றைத் தமிழ் மக்கள் பேரவையும் இலங்கைத் தமிழரசுக் கட்சியும் உருவாக்குவதற்கு அதீத பிரயத்தனம் எடுத்து வருகின்றனர். இந்த இளைஞர்கள் யாரென்று பார்த்தால், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஈ.பி.ஆர்.எல்.எவ், தமிழரசுக் கட்சியின் அதிருப்தியாளர்கள் என்போரே! இந்தக் குறிப்பிட்ட இளைஞர்கள் இரண்டாகப் பிரிவதால், இரண்டு அணிகளுக்கும் அது பின்னடைவே.

ஈ.பி.டீ.பியின் இளைஞர் அணி இதில் இணைவதற்கான சந்தர்ப்பங்கள் அரிது. ஐக்கியதேசியக் கட்சி, சிணறிலங்கா சுதந்திரக் கட்சி, முஸ்லிம் கட்சிகள் என ஏற்கனவே தம்முள் இணைந்து செயற்பட்டு வரும் எவரும் இதில் சேர வாய்ப்பில்லை. அதேவேளை பொரும்பாலான இளைஞர்கள் (ஏற்கனவே கூட்டம் சேர்த்திருக்கும் கூத்தாடிகள் அல்லாமல் காத்திரமாக அரசியலாற்றக் கூடியவர்கள்) அரசியல் விடயங்களில் இறங்கித் தமது காலத்தை வீணடிக்க விரும்புவார்களா? என்பது அடுத்த பிரச்சினை. தமிழரசுக் கட்சியின் அதிருப்தியாளர்கள், விக்னேஸ்வரனை ஒரு கயிறாகப் பிடித்தார்கள். ஆனால், தற்போது ஒருவருக்கும் வாக்களிப்பதில்லை என அவர்களில் பலர் அரசியலில் இருந்து ஒதுங்கும் நிலையே காணப்படுகின்றது.

### புதிய கட்சிக்கு ஏலவே கிடைத்த சந்தர்ப்பம்

விக்னேஸ்வரன் புதிய கட்சியை அறிவிப்பதற்கு மிக நல்ல சந்தர்ப்பம் ஒன்று ஏற்கனவே கிடைத்திருந்தது. அதாவது அவர் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்டபோது அவருடைய மாளிகையை நோக்கிச் சென்ற மக்கள் மத்தியில் துணிவாக இந்த அறிவித்தலை வெளியிடுவார் எனப் பலர் எதிர்பார்த்தார்கள். அந்த ஊர்வலத்தில் சென்ற ஒருவர், "புதிய கட்சி ஒன்றுக்குத் தலைமை தாங்குவார் என அறிவிப்பார் என்று எதிர்பார்த்தேன். அவர் எந்த முடிவும் எடுப்பதாக இல்லை. அவர் தன்னை மையமாக வைத்தே தீர்மானம் எடுக்க நினைக்கிறார். நாங்கள் அவரிடம் எதிர்பார்த்தது மக்கள் மயப்படுத்தப்பட்ட ஒரு தீர்மானத்தையே" என்று அதிருப்தியுடன் கூறினார்.

### ஊடகங்கள் சிலவற்றின் ஊகம்

விக்னேஸ்வரன் முதலமைச்சராக மீண்டும் வரவேண்டும் என வடமாகாண மக்கள் கேட்பதாகத் தெரியவில்லை. ஊடகங்கள் சில பெருந்தொகையான மக்கள் இதற்காகத் தவம் கிடக்கிறார்கள் என்றவாறு செய்தி வெளியிடுகின்றன. சாதாரண கிராமத்துக் கோவில் திருவிழாக்க ளின்போது ஒலிபெருக்கியில் அறிவிப்பவர் 'பக்த கோடிகளே!' என்றுதான் விழிப்பர். உண்மையில் அந்தத் திருவிழாவில் கூடி இருப்பவர்கள் 'பக்த இலட்சங்களோ, பக்த ஆயிரங்களோ அல்ல.. 'பக்த நூறுகள்' என்பதே சரியானது. அதேபோல விக்னேஸ்வரன் விடயத்திலும் சில நூறுகளைக் கோடிகளாகச் செயற்கையாகக் காட்டப்படுகின்றது. ஆனால் உண்மையில் அதைத் தீர்மானிப்பது ஊடகங்கள் அல்ல மக்களே.

விக்னேஸ்வரன் தன்னுடைய பலம் பற்றிக் கூறி வருகிறாரே தவிர மக்களின் பலம் என்ன என்பதை இனிவரும் தேர்தலின்போது காணமுடியும். புதிதாக மேலும் ஒரு கட்சி தமிழருக்குத் தேவையில்லை என மக்கள் நினைக்கும்போது அவ்வாறு ஒன்று தேவை என வலுக்கட்டாயமாக நினைப்பதை மக்கள் எந்தளவுக்கு ஏற்றுக்கொள்வார்கள் என்பதை இனிவரும் தேர்தல் முடிவுகள் அவருக்கு உணர்த்தும்.


### புதிய கட்சியின் தேவைப்பாடும். பயனற்ற தன்மையும்

தமிழர் அரசியலில் பல தோல்விகள் ஏற்பட்டமைக்கு வேலைத் திட்டம்(வேர்க் பிளான்) ஒன்று உரியவாறு வரையப்படாததும் மக்கள் மத்தியிலான அடிப்படை வேலைத்திட்டம் இல்லாது போனதுமே காரணமாகும். புதிய கட்சி ஒன்றின் தோற்றம் என்பது தோல்லி அடைந்தவர்கள் யாராவது ஒருவரின் தலையில் பொறுப்புக்களைச் சுமத்தி விடுவதாகவே இருக்கும். அதன் பின்னர் பொறுப்பேற்குமாறு கூறியவர்கள் விலகிவிடுவர். விக்னேஸ்வரனின் ஒக்.24 அரசியல் அறிவிப்பு என்பது ஒரு பிரளயமாகவே இருக்கப் போகின்றது. இது நிச்சயமாக தமிழ் மக்களுக்குச் சாதகமாக இருக்கப் போவதில்லை. இப்போதைக்குச் சிலர் வரம் என்று நினைத்தாலும் எதிர்காலத்தில் இது சாபமாகவே அமையும். அத்தோடு இந்த ஒக்ரோபர் 24அறிவிப்பு யாருக்குத் தேவைப்படுகிறது என்று பார்த்தால் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிக்கு எதிரான விக்னேஸ்வரன், சுரேஸ் பிரேமச்சந்திரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோருக்கே. இவர்கள் மூவரும் எங்கோ ஒதுங்கிக் கொள்ள வேண்டிய தேவையும், ஒருவரில் ஒருவர் குளிர் காயவேண்டிய தேவையும் காணப்படுகின்றது.

இந்த மூவருக்கு இடையிலான ஒற்றுமை தமிழ் அரசுக் கட்சியை எந்தளவுக்குப் பாதிக்கப்போகின்றது? என்பதே இனியுள்ள கேள்வி.

இப்படியாகத்தான் தமிழரின் அரசியல் என்பது அடிப்படையில் சிங்களவருக்கு எதிரானதாகவோ, முஸ்லிம்களுக்கு எதிரானதாகவோ இருப்பதில்லை. அது இன்னொரு தமிழருக்கு எதிரானதாகவே இருந்து வருகிறது. தமிழினத்தின் 'தேசியம்' என்ற விடயத்தைப் பலவீனப்படுத்தி வருவது இந்த அணுகுமுறையே. விக்னேஸ்வரனின் புதிய அறிவிப்பின் பின் இது மேலும் அதிகரிக்கும் என்பதில் ஐயமில்லை.

# பட்டினிச் சாவை எதிர்கொண்டுள்ள 5,000,000 குழந்தைகள்



ஏமனில் சுமார் 50 இலட்சம் குழந்தைகள் பட்டினிச் சாவை எதிர்நோக்கியுள்ளனர் என்று பன்னாட்டுத் தொண்டு நிறுவனமான 'சேவ் த சில்றன்' அமைப்பு தகவல் வெளியிட்டுள்ளது.

ஏமன் அரசுக்கு எதிராக ஹவுத்தி ஆயுதக் குழு போரிட்டு வருகிறது. ஏமன் தலைநகர் சனாவைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர வேண்டும் என்பதுதான் ஹவுத்தி அமைப்பின் முதன்மைத் திட்டம். ஹவுத்திக்கு எதிராகவும் ஏமனுக்கு ஆதரவாகவும் சவூதி தலைமையில் கூட்டுப்படை போரிட்டு வருகின்றது. இந்தப் போர் அண்மைக் காலமாக உச்சம் தொட்டுள்ளது. உள்நாட்டுப் போர் இடம்பெற்று வரும் பகுதிகளில் மருந்துப் பொருள்களுக்கும் உணவுப் பொருள்களுக்கும் கடும் தட்டுப்பாடு நிலவுகிறது. கொலரா நோயும் அந்தப் பகுதியில் தீவிரமாகப் பரவி வருகிறது. அனைத்து வகையிலான நெருக்கடிகளுக்குள்ளும் சிக்கி சுமார் 50 லட்சம் குழந்தைகள் தவித்து வருகின்றனர். அவர்கள் அனைவரும் பட்டினிச் சாவை எதிர்கொண்டுள்ளனர் என்று 'சேவ் த சில்றன்' அமைப்பு மேலும் குறிப்பிட்டுள்ளது.

**'ஏமனும் பட்டினியும் இரண்டறக் கலந்தவை...'**

. தொகுப்பு

பிரகாஸ்


## ரவுண்ட் த வேர்ல்ட்

## என்றுமில்லாத விரோதப்போக்கு



அமெரிக்க அரசு ஈரானில் ஆட்சி மாற்றத்தை விரும்புகிறது என்று குற்றம் சுமத்தியுள்ளார் ஈரானின் அதிபர் ஹசன் ரவுகானி. ஈரானுடன் கொண்டிருந்த அணுவாயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தில் இருந்து விலகிய அமெரிக்கா ஈரானின் மீது ஏகப்பட்ட பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது. இந்தத் தடைகளால் ஈரான் மிகப் பெரிய பொருளாதாரச் சிக்கலுக்கு முகம் கொடுத்துள்ளது. நாளுக்குநாள் ஈரானின் நாணய மதிப்பு மிகையாகச் சரிந்து வருகிறது. தற்போது அமெரிக்க டொலர் ஒன்றுக்கான ஈரானின் நாணய மதிப்பு ஒரு லட்சத்து 40 ஆயிரம் ரியால்கள் என்ற வகையில் சரிவு கண்டுள்ளது. இந்த நிலையில், அமெரிக்காவின் நகர்வெல்லாம் ஆட்சிமாற்றத்தை இலக்குவைத்துத்தான் என்று சாடியுள்ளார் ரவுகானி.

தற்போதுள்ள அமெரிக்க அரசு ஈரானுடன் கடந்த 40 ஆண்டுகளில் இல்லாத விரோதத்தை கடைப்பிடிக்கிறது. அமெரிக்கா ஈரானில் ஆட்சி மாற்றத்தை எதிர்பார்க்கிறது. அமெரிக்காவால் ஈரான் ஏற்றுமதியை குறைக்க இயலாது. எண்ணெய் தேவையை ஈரானுக்கு பதில் சவூதி ஈடுசெய்யும் என்று அமெரிக்கா கருதுகிறது. ஆனால் ஈரானின் எண்ணெய் தற்போது 80 டொலரை எட்டியுள்ளது. ஏற்றுமதியில் ஈரான் முன்னர் எந்த அளவு வருமா



னம் ஈட்டியதோ அதே அளவு வருமானத்தை தற்போதும் பெறுகிறது என்று குறிப்பிட்டுள்ளார் ரவுகானி.

**'தனிமைப்படுத்தப்படுமா ஈரான்...'**

## 1,800 கோடிகள் எதற்காக?

ஐம்பதல்ல நூறல்ல ஆயிரத்து எண்ணூறு கோடி ரூபாவை அமெரிக்காவுக்கு உதவித் தொகையாக அனுப்பியுள்ளது சவூதி. சிரியாவில் அமெரிக்கா மேற்கொண்டுள்ள தொண்டு நடவடிக்கைகளுக்கு தன்னுடைய பங்கு என்று இந்த நிதியை சவூதி குறிப்பிடுகிறது. எனினும் செய்தியாளர் ஜமால் கொல்லப்பட்டமையை சமாளிக்கத்தான் சவூதியிடம் இருந்து இந்த நிதி அமெரிக்காவுக்குச் சென்றுள்ளது என்கின்றன பன்னாட்டு ஊடகங்கள்.

சவூதி அரசைக் கடுமையாக விமர்சித்து பல்வேறு கட்டுரைகளை எழுதி வந்தார் ஜமால். குறிப்பாக சவூதியின் பட்டத்து இளவரசரைக் கடுமையாகத் தாக்கி அவருடைய கட்டுரைகள் வெளிவந்து கொண்டிருந்தன. இந்த நிலையில் துருக்கியில் உள்ள சவூதியின் தூதரகத்துக்கு ஜமால் அண்மையில் சென்றபோது அவர் மாயமானார். சவூதியே அவரைக் கொன்றது என்று ஆதாரப் பூர்வமாக குறிப்பிட்டு வருகிறது துருக்கி. இந்த விவகாரத்தில் பன்னாட்டுச் சமூகத்தின் எதிர்ப்பை சவூதி சம்பாதித்துள்ளது. அவ்வாறு சவூதிதான் ஜமாலைக் கொன்றதென்றால் அதற்கு கடும் தண்டனை வழங்கப்படும் என்று அமெரிக்கா எச்சரித்துள்ளது. இந்தப் பின்னணியில் அமெரிக்காவின் பிடியில் இருந்து தப்புவதற்காகவே சவூதி ஆயிரத்து 800 கோடி ரூபாவை அமெரிக்காவுக்கு வழங்கியுள்ளது என்கின்றன பன்னாட்டு ஊடகங்கள்.

**'ஜமாலுக்கான விலையா ஆயிரத்து 800 கோடி ரூபா...'**

சீனாவில் வருடாவருடம் கோலாகலமாக இடம்பெறும் வெப்பக்காற்று பலூன்களின் திருவிழா பீஜிங் நகரில் கடந்த வியாழக்கிழமை ஆரம்பமானது.



## காபூலின் பாதுகாப்பு அதிகரிப்பு



ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலின் பாதுகாப்பு பலமடங்கு அதிகரிக்கப்பட்டது என்று பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் செய்தி வெளியிட்டது. ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூல் அண்மைக்காலமாக அடுத்தடுத்து பயங்கரவாதத் தாக்குதல்களுக்கு உட்பட்டு வருகிறது. ஆப்கானிஸ்தான் அரசுக்கு எதிராகப் போராடி வரும் தலிபான்களே இந்தத் தாக்குதலை நடத்தி வருகின்றனர். ஆப்கானிஸ்தான் இராணுவத்துடன் அமெரிக்க இராணுவம் இணைந்து பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்ட போதிலும் எந்தத் தாக்குதலையும் அவர்களால் முறியடித்துவிட முடியவில்லை. இந்த வருடத்தில் மட்டும் சுமார் 300 தாக்குதல்களுக்கு காபூல் முகம் கொடுத்துள்ளது. உலக வரலாற்றில் எந்தத் தலைநகரும் எதிர்கொண்டிருக்காத மோசமான பதிவு இது என்கின்றன அறிக்கைகள். இவ்வாறிருக்க காபூலின் பாது காப்பு இரட்டிப்பாக அதிகரிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.


**'காபூலுக்கு இது புதிதல்ல....'**



# அதியுயர் காண்டத்து மேடைகள்

மேடை - 02

தையிட்டி அ.இராசதுரை



கோ குலத்துத் தீர்த்தக் கரை போல் விளங்கி, பெருநீரா வியான இந்தக் கொடிய காண்டத்துக் கோமாதாக்க ளின் உயிர் வதையான கொடியாந்திர மான இந்தத் தண்ணீர் விடாய்க்கு வகை சொல்லி, ஆறக்கட்டி வைத்த இந்தத் தண்ணீர்த் தொட்டியானது... இன்றைக்கு எங்கையோ ஒரு தெல்லி யிலிருந்து, பிளேன் பிளேனாய்க் கொண்டு வந்து கொட்டிவிடப்பட்ட அந் நியங்களின், கூலிக்குக் குரக்கன் நட வென்று வந்து எல்லைக்கு வழக்குப் பேச வெளிக்கிட்டுவிட்ட ஒரு பொல்லாத கதையாய்... வட்டறச் சொட்டறக் காய்ந்து வறண்டு மருந்துக்குமொரு துளி நக்குத் தண்ணீருக்குமே இடமில் லாமல் போய்விட்டதொரு கண் கொண்டு பார்க்க முடியாத கண்ணறா விக் காட்சி...?

ஒரு பக்கத்தால் ஆளைப் புழுதித்தரை யில் தள்ளிவிட்டு, மற்றப் பக்கதால் இப்ப எப்பிடிச் சுகமேன்று நையாண்டியாய் கேட்டும் விட்டாற்போல... மாடுகளுக் குத் தண்ணீர் ஊற்றிய குற்றத்துக்காக, அதே தண்ணீரைக் குறையாது வாரி வழங்கும் அந்த ஊற்றுப் பெருக்குக் கிணற்றின் தொப்பிக் கட்டில்... 'மர ணவா' (கொலை) எனும் சிங்களச் சொல்லை ஆங்கிலத்தில் எழுதிவிட்ட அபாய அறிவிப்புக் காட்சி...?

இந்த வெருட்டீசுக்காக மாடுகள் தண் ணீர் குடிக்காமலிருக்கப் போவது மில்லை....? இந்தத் தண்ணீரைத் தந்து தவிய இந்தக் கிணறும் ஊற்றடைத்து வற்றி வறண்டு போகப் போவது மில்லை...? இந்தளவு தண்ணீரையும் இந்த மகா கங்கையிலிருந்து இழுத்தெ றிந்த இந்தக் கைகளும்தான் சும்மா விருக்கப்போவதுமில்லை....?

...இப்படியாய், கடும் உணர்ச்சி வசப்பட்டு வீரமுரசம் அடித்து முழக்கியெறிந்துவிட்ட ஓர் அடங்காத் தமிழனாய்.. இந்த அர்ச் சுணா நிமிர்ந்து நின்று கொண்ட வேளை யாய்....

ஒருவர்.... இருவர்.... மூவராய்.... கருட பகவானின் வருகை...!

• • •

பரவசமேலீட்டால், மேலே பார்த்து ஒரு வரபலம் வாங்கிக் கொண்டவனாய்.. இந்தத் தண்ணீர்த் தொட்டியை எப்படியும் மறுபடியும் நிரப்பிப் போகவேண்டுமென்று சங்கற்பம் செய்து கொண்டபோது, கருட



பகவான் கூட்டி வந்து விட்ட மாடுகளாய்... ஒரு ஏழெட்டுப் பத்து மாடுகள் வரைக் தடும் தண்ணீர் விடாய்த்த னத்தோடு, தண்ணீர்த் தொட்டியடியில் வந்து மிதக் கும் மெய் சிலிர்பானதொரு காட்சி...!

வந்து விட்ட அத்தனை மாடுகளும் வெறும் தொட்டியைத் தடவிப் பார்த்து விட்ட ஏமாற் றத்தினால்... அர்ச்சுணாவை வாய் திறந்து கேட்டுக் கொள்ள முடியாததொரு குறையாய் அண்ணாந்து பார்க்கின் றன... அர்ச்சுணாவுக்கும் குளறியழ வேண்டும் போலொரு கடும் பரிதவிப்பு... என்னவோ என்னவோ எல்லாம் செய் யத் தொடங்கி, செய்வதறியாத நிலை யில், அங்கேயுமங்கேயுமாய் ஓடித்தி ரிந்து, பரபரத்த சோதனை போல் மீண்டும் சில மாடுகளின் வருகையும்...

அத்தோடு கூடிய பகவானின் அடுக்கத் தொடுக்கவான வருகை யும்...!!

...விறகு கிடத்தாலும் கட்டக்கொடி கிடைக்காததுபோல தொட்டியின் துவாரமடைக்க ஓர் ஆமான துணி கிடைக்காமல் அவதிப்பட்டு அந்தரப்பட்டு ஆலாய்ப்பறக்கத் தொடங்கிய அர்ச்சுணா.... ஒரு கடைசி முடிவாய்த் தனது முகம் துடைக்கும் அந்தப் புதுத் துவாய்த் துண்டையே எடுத்து வெட்டிக் கிழித்து அந்தக் கடுத்தமான துண் டினாலே தொட்டியை அடைத்து விட்டு ஸ்ரன்ற் படங்களில் வரு மொரு கதாநாயகன் தனித்து நின்று தன்னோடு மோதவரும் பெரும் கூட்டத்துக்குச் செமை யாய்ப் போட்டு வாங்குவதைப் போல் ஒருவித உசார் வெறி யோடு அந்த மகா கங்கையோடு இலாவகமாய் விளையாடித் தள் ளினானே...!!!

• • •

இந்த, இந்தளவு தண்ணீரையும் நொடிப் பொழுதுக்குள் இந்த இவன்தானா வார்த்து முடித் தான்... இல்லை ஓர் அவிழ் சோற் றுப் பருக்கை மாத்திரமிருந்த சோற்றுப் பானைக்குள் சோற்றை நிரப்பிப் பொலிய வைத்த அந்த மாயவன் கிருஷ்ணன்தான்... வார்த்து முடித்தானா...!!

தொட்டி நிரம்பி ஓர் இலட்சண மான அருள்காட்சியாய் வழிந்து பெருகி நான்கு பக்கமும் தண் ணீர் சிந்தித் தெறிக்க....

வந்து, வந்து சேர்ந்துவிட்ட அத்தனை மாடுகளும் ஒரு கடவுள் வணக்கமாய் விழுந்து விழுந்து முடறு முறித்துத் தண் ணீர் குடித்துத் தள்ளுமந்த மாட்சிமை பொருந்திய காட்சியையும் இமைவெட்ட டாது இரசித்துக் கொண்டே.... இந்த அர்ச் சுணா தொட்டித் தண்ணீர் மட்டத்தைக் கீழே இறங்க விடாமல் கையோயாது... சளைக்காது... களைக்காது... இன்னு மின்னுமாய் உசாராய்த் தண்ணீர் வார்ப்பு வேலையை நேர்த்தியாய்க் கொண்டு போய்க் கொண்டிருந்தான்...!!

• • •

மிக எட்டத்திலே துவக்கு வெடிச் சத்தங் கள் கேட்டுத் தொலைக்க... சின்னக் கன் றுகள்... தொடக்கம் பெரிய மாடுகள் வரை... அந்தச் சத்தத்தினைக்கூட மிக நுட்பமாய் 'நோட்' பண்ணி மோப்பமிழுத் தும்... பார்த்துவிட்ட வடிவை... அர்ச் சுணா பெரிய பரிவுடன் புதினமாகப் பார்த்து எனியதுகளுக்கு எவ்வித துன்ப மும் வரவே கூடாததென்று... மனமுருகி காலடியிலிருக்குமந்த விக்கினங்கள் தீரக்கும் வழிக்கரை விக்கினேஸ்வர் பெருமானிடமும், வேண்டுதல் செய்து கொள்கின்றான்....

... அந்தவேளை பார்த்துத்தான்... இந்த மண்ணை விட்டும்.... இந்தத் தொந்தி வயிரவனை விட்டும் ஓடிப்போகாது.... மனைவி சகிதம் இந்த வழிக் கரை யானே இனித் தஞ்சமென்று... அவன் பாதங்களில் சரணமாகிவிட்ட அந்த ஆல யத்தின் பிரதமகுருவான... தேவாரக் குருக்களையா ஒரு நேரப் பூஜையின் நிமிர்த்தமாய்.... அந்த ஆய்க்கினைப் பூச்சிகளின் பயக்கெடுதியோடு... அசை யாமணியை பட்டும் படாமலும் அசுக்கி டாமலுக்கு தட்டி விடுவதோடு நிற்பாட்டிக் கொண்டார்...??

...சில நிமிடங்களின் ஓடிப்பறப்போடு... தண்ணீர் குடித்துவிட்டு ஒரு கட்டமாய்க் கிணற்றடியின் ஒரு ஒதுக்குப்புறமாய்த் திரண்டு நின்று கொண்டிருந்த அத்தனை மாடுகளும்... கோவிலடிப் பக்கமாகப் பார்த்து அலமலக்கத் தொடங்கிக் கலவரப் பட்டுத் தலைகளைத் தூக்கி.... மோப்பமி ழுக்கவும்.... தொடங்கி விட்ட காட் சியை.... அர்ச்சுணாவும் வலு கவனமாய் நோட் பண்ணிவிட்ட.... கைவாங்க முந் தியாக....

... பிள்ளையாரின் கிழக்கு வீதிப்பக்க மாக... யாரோ இரண்டு பேர் காரசாரமா யக் கதைவழிப்படும் சத்தம் கேட்கத் தொடங்கி விடுகின்றது... அந்தச் சத்தமா னது, வரவரப் பலக்கத் தொடங்கவே.... மாடுகளும் ஆட்களின், மணப்புக் கண்டு... ஓட்டம் பிடிக்கத் தொடங்கிவிட்ட காட்சி....!

... அதென்னண்டு பார்த்துவிடும் மன உந்தலோடு அர்ச்சுணாவும் ஓட்டமும் நடையுமாய்க் கோவிலடியைத் தொட்ட விட்ட போது.... கோவில் வாசல் பக்க மாய்க் குருக்களையாவும்.... கரடி கந் தையாகவும் பொடிகாட் குனப்படியும்... அத்தோடு கூடிய சுடப்பட்ட ஆமான இரண்டு மாடுகளின் தலையும்....?


(தொடரும்)

## அகிலத்தின் அனைத்தும் நீயம்மா

அன்பின் எல்லை நீ
பண்பின் பிறப்பிடம் நீ
என் பிறப்பும் நீ
பாலூட்டும் தாயும் நீ
பசிக்கு விருந்தும் நீ
தாகத்துக்குத் தண்ணீரும் நீ
அறிவுச்சுடர் நீ
நலம் காக்கும் நாயகி நீ
என் உயர்வுக்கு நீ
பெருமைக்கு நீ
என் வளர்ச்சிக்கு நீ
வழிகாட்டியும் நீ
என் பெருமைக்கு நீ
புகழுக்கும் நீ
கருணையின் தெய்வம் நீ
என் பிணிக்கு மருந்தும் நீ
இன்ப வாழ்வும் நீ
தினம் தினம் உலகை நினைத்து
என்னை ஏங்க வைப்பவளும் நீ
அகிலத்தின்
அனைத்தும்
நீயம்மா

கவிதை

எஸ்.கலாமணி



# எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான்...!



சிரிப்பு

மிருசுவில்
தமிழ்தாசன்

ஏன் சுவாமி கொட்டாவி கொட்டாவியாக விட்டுக் கொண்டிருக்கின்றீர்கள். எப்போது பார்த்தாலும் ஏதோ 'ரென்சனாகவேயிருக்கின்றீர்கள். போய்ப் படுத்துத் தூங்கி இன்றைக்காவது கொஞ்சம் 'ரிலாக்ஸ்' ஆகுங்கள்"

மிகுந்த வாஞ்சையுடன் சிவபெருமானின் தலையத் தடவி அன்பு காட்டினார் பார்வதியார். ஐயையோ! இப்போது சிவனாரால் தூங்கவே முடியாது. பார்வதியார் சொல்வது போல் 'றெஸ்ற்' ஒன்றும் எடுக்க முடியாது. இன்னும் சில நாளிகைகளில் பூவுலகிலிருந்து கயிலயங்கிரிக்கு வந்திறங்கப் போகின்றார் கந்தவனம் ஆசிரியர். சிவபெருமானின் பெருவிருப்புக்குரிய பக்தன். சதா சிவனையே நினைந்து வழிபடும் ஒருவர். நிஷ்டையிலும் தியானத்திலும் சிவாயநம எனும் ஐந்தெழுத்தை உச்சரித்து சிவ சிவ என்று வாழும் சிவபக்தன்.

வாத்தியாரின் வருகையையொட்டி இங்கே விநாயகப் பெருமானுடன் முருகன், பிரம்மா, விஷ்ணுவுடன் சரஸ்வதி, மகாலட்சுமி என வேண்டியவர்களனைவரின் பிரசன்னங்களும் காணப்பட்டன. இவர்களுடன் தேவேந்திரனும் வீற்றிருந்தான். எங்கேயிருந்து வந்தரோ! அழையா விருந்தாளியாக நாரதமாமுனியும் வந்திருந்தார்.

நடுச்சாமவேளை. நேரம்தான் தெரியவில்லை. வேம்படி சிவன் ஆலயத்தில் தனது தியானத்தை முடித்துவிட்டு வலது கையை ஊன்றி மெல்ல எழுந்தார் கந்தவனம் வாத்தி. கைகால்களை நீட்டி மடக்கிச் சோம்மல் முறித்துக் கொண்டிருக்கும் தருணத்தில்தான் அந்தக் காளைமாடு கோயிலின் உட்பிரகாரத்தில் உள் நுழைந்து வந்து நின்றது. பார்வைக்கு ஜல்லிக்கட்டுக் காளைபோல் கம்பீரமாகக் காட்சியளித்தது.

"ஐ...ஐ...உது ஆற்றை நாம்பனடா! கோயிலுக்கை வந்து நிண்டு சாணியைப் போட்டு சலம்விட்டு அசுத்தப்படுத்தப் போகுது போலை..."

அந்தக் காளையை விரட்டிய போதுதான் கவனித்தார். அவர் நினைத்தது போல அது ஒன்றும் முருகேசு வீட்டுக்காளையல்ல. எல்லாம் வல்ல எம்பெருமானின் இடபவாகனம். வாத்தியாரைக் கைலயங்கிரிக்கு ஏற்றிச் செல்ல இறைவனால் அனுப்பபட்ட 'ஸ்பெசல் ரான்ஸ்போட்'.

தன்னுடைய இடப வாகத்தையே ஒரு பக்தனுக்காக பூவுலகு அனுப்பியிருக்கின்றாரென்றால் கந்தவனத்தாரின் தவவலிமையைச் சொல்லவும் வேண்டுமா!

"எல்லாம் வல்ல பரம்பொருளே! ஈஸ்வரா, பரமேஸ்வரா கைலைநாதா தாங்கள் பாதக் கமலங்களை வணங்குகின்றேன் ஸ்வாமி"

"யார்? கந்தவனம் ஆசிரியரா!? வாரும்! வாரும். அமரும்" இறைவன் கூறிய கணப் பொழுதில் இருக்கையொன்று வழங்கப்பட்டது. வாத்தியார் பவ்வியமாக அமர்ந்துகொண்டார்.

இப்போதுதான் பார்வதியாரின் முகத்தை எதேச்சையாகப் பார்த்த ஈஸ்வரனுக்கு விடயமொன்று புலப்பட்டது. பூவுலகிலிருந்து வரவிருக்கும் கந்தவனத்தாரின் வருகையைப் பற்றி பார்வதியாருக்கு வாயே திறந்திருக்கவில்லை. அவை நிறைய அனைத்துக் கடவுள்களையும் அழைத்து வைத்துக் கொண்ட ஈசனுக்கு தேவி உமையம்மைக்கு மட்டும் இதைச் சொல்ல முடியவில்லையா அல்லது வேண்டுமென்றே தவிர்க்கப்பட்டதா! பார்வதியின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தன. அவரின் பார்வையே கடூரமாயிருந்தது.

முன்பும் இப்படித்தான் சக்தியில்லையேல் சிவமில்லை என்று வரிந்து கட்டிக்கொண்டு சண்டைக்குச் சங்கூதியவர். பிள்ளைகளிருவரும் வளர்ந்து ஆளாகி விட்டார்கள். இனிமேலும் அப்படியொரு நிலை வரக்கூடாது. அதிலும் முருகனிருக்கின்றானே! ஒரு முற்கோபி. தாயைப் போலபிள்ளை. அது ஒருபுறமிருக்கட்டும். இப்போது உமையம்மை தன்னுடன் தகராறு பண்ணாவிட்டால் அது ஒன்றே போதும் ஈசனுக்கு.

* * *

"அதுசரி பக்தனே! உம்முடைய பிரச்சினையைக் கூறும்" கனிவான குரலில் கேட்டார் இறைன். "என்னுடைய பிரச்சினை இல்லை பரம்பொருளே! இது எங்களுடைய சமூகம் எதிர்கொள்ளும் பெரும் பிரச்சினை. ஐயனே! எமது யாழ்ப்பாணத்துப் புனித மண்ணிலே போதைவஸ்துகளும் மதுபானங்களும் எமது இளைய சந்ததியினரின் வாழ்க்கையைப் பாழ்படுத்திக் கொண்டிருக்கின்றது இறைவா! இதன் விளைவால் எங்கே பார்த்தாலும் கொலையும் கொள்ளையும் வழிப்பறிகளும் அடாவடிகளுமாயிருக்கின்றன. ஒரு நகை நட்டைக் கூட ஆசைக்கு அணிய முடியவில்லை. மோதிரமணிந்தால் மோதிரத்துடன் விரலும் போய்விடும். காதணியணிந்தால் காதுகளும் போய்விடும். இத்தனை அபாயகரமான நிலையில்தான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இனியும் தாங்க முடியவில்லை.

"ஆமாம் தந்தையே! அன்றொரு நாள் கவனித்தேன். யாழ்ப்பாணத்திலே என்னுடைய ஆலய சன்னிதானத்திலே எத்தனையோ வெற்று மதுபானக் குப்பிகள், அதுமட்டுமா மா...மி..சத்துண்டுகள்... எலும்புகள்... ஐயையோ சொல்லவே வயிற்றைக் குமட்டுகின்றது"

விநாயகப் பெருமான் கூற உமையம்மையார் ஓடோடி வந்து மகனாரின் மார்பைத் தடவி ஆசுவாசப்படுத்தினார்.

"தந்தையே! அண்ணா சொல்வது முற்றிலும் உண்மை. யாழ்.மண் பாழ்.மண்ணாய் மாறிவிட்டது.

"அதுசரி இதற்கெல்லாம் யார் காரணம்! சொல்லுங்கள் யார் காரணம்?"

சிவனாரின் வார்த்தைகள் உச்சஸ்தாயில் எதிரொலித்தன. கண்களிரண்டும் கொவ்வைப்பழங்களாகச் சிவந்து போயிருந்தன. கோபம் என்றால் அப்படியொரு கோபம். எங்கே நெற்றிக் கண்ணைத் திறந்து தொலைத்து விடுவாரோ என்று கந்தவனம் வாத்தியாருக்குப் பயம் பயமாயிருந்தது.

"நான் சொல்கின்றேன்! அனைத்துக்கும் காரணம் இந்தக்காலத்து ஒழுக்கம்கெட்ட இளைஞர்களின் பெற்றோர்களே. அவர்கள் தங்கள் பிள்ளைகளைக் கட்டுப்பாடாகக் கவனமாக வளர்த்திருந்தால் இவ்வாறான துட்டத்தனமான இளைய சமுதாயம் ஒன்று உருவாகியிருக்க முடியாது. இதுதான் உண்மை"

உமையம்மையார் அடித்துக் கூறினார்.

"இதென்னடா இது! உமையம்மைக்கு இது தேவையில்லாத வேலை. இங்கேயும் பெண்கள் இராச்சியமா!" கந்தவனத்தாருக்குப் பற்றிக் கொண்டு வந்தது.

"ஆம் இறைவா! தந்தை எவ்வழியமைந்தரும் அவ்வழியென்றார். பூலோகத்தில் இறைபக்தி குறைந்துவிட்டது"

"பூலோகத்தில் என்று பொதுவாகக் கூற வேண்டாம் தேவேந்திரனே! யாழ்ப்பாணத்தில் என்று அழுத்தமாகக் கூறும்"

பிரம்மதேவன் இந்திரனுக்குப் பக்கவாத்தியம் வாசித்தார்.

"உண்மைதான். இப்போது நவராத்திரிக் காலம். எத்தனை வீடுகளில் கும்பம் வைத்திருக்கிறார்கள். எத்தனை பேர் விரதமிருந்து எம்மை வழிபடுகிறார்களென்று யாழ்ப்பாணத்தில் போய்ப் பார்த்தால் உண்மை புரியும். பெற்றோர்களே இவ்வாறு இறைபக்தியை மறந்து சதா பணம் பணமென்று பணத்தைத் தேடியலையும் போது பிள்ளைகள் மட்டும் ஆலயம் செல்லப் போகிறார்களா! வழிபடப் போகிறார்ககளா? எத்தனை அமைதியாகக் காணப்பட்ட சரஸ்வதிக்கு இத்தனை கோபாவேசம் எப்படித்தான் வந்ததோ!

தாய்மார்கள் டி.வி.சீரியலில் மூழ்கிப் போயிருக்க தந்தைமார்கள் பிள்ளைகளைப் பற்றிய அக்கறை எதுவுமில்லாமல் பெறுப்பில்லாமலிருப்பதனால்தான் இளைஞர்கள் கடிவாளமில்லாத குதிரைகளாகத்தறிகெட்ட லைகின்றார்கள். இதுவே உண்மை. ஈஸ்வரா! அது மட்டுமல்ல யாழ்ப்பாணத்தில் இப்போது வெளிநாட்டுப் பணம் தாராளம். காசின் அருமை தெரியாது தண்ணீராகச் செலவு செய்கின்றார்கள். ஒரு வீட்டில் மூன்று மோட்டார் சைக்கிள்கள்.

நாரதர் இப்படிக் கூறிக் கொண்டிருக்க மகா விஷ்ணு மகா லட்சுமியை முறைத்து ஒரு மிறாள்ப் பார்வையைப் பார்த்தார். "எல்லாம் உன்னால் வந்த வினை. நான் படித்துப் படித்துச் சொல்லியும் கேட்காமல் செல்வத்தை அள்ளி அள்ளிக் கொடுத்தாளே!" என்பது போன்ற அர்த்தம் பொதிந்திருந்தது அந்தப் பார்வை.

* * *

இத்தனை நேரமாக எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்த பரமேஸ்வரன் குரலைச் செருமி ஏதோ சொல்ல வாயெடுத்தார்.

"பக்தன் கந்தவனமே! கவனமாய் கேளும்"

கிணற்றுக்குள்ளிருந்து பேசுவதைப் போன்று எதிரொலித்தது இறைவனின் குரல். மேல் நீதிமன்ற நீதிபதி தீர்ப்புக் கூறத் தயாராகின்றது போல இருந்தது கந்தவனத்துக்கு. அத்தனை பரபரப்பு.

"இனியாவது உங்களின் பிள்ளைகளின் அன்றாட நடவடிக்கைகளை அவதானித்து அவர்களை திசைமாறிச் செல்லாது பார்த்துக் கொள்ளுங்கள். ஆன்மிக வழிகளை ஊட்டுங்கள். அறத்தைப் போதியுங்கள். அவர்கள் என்றுமே வழி தவறமாட்டார்கள். தீய நண்பர்களுடன் சகவாசம் கொள்ளவிடாது தகுந்த கல்வியை ஊட்டி அவர்கள் மீது அக்கறை கொள்ளுங்கள். எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே! உங்கள் பிள்ளைகள் மீது குற்றம் சுமத்தாதீர்கள். இந்த நிலைக்கு அவர்கள் ஆளானதற்கு நீங்கள்தான் பொறுப்பென்பதை உணருங்கள். சரி போய்வாரும்"

ஈஸ்வரனரின் வார்த்தைகள் ஈட்டிகளாகக் குத்தின கந்தவனத்துக்கு.



# தோடுடைய செவியன்



கவிதை

வேலணையூர்தாஸ்

கடற்கரைச் சாலையில்
அந்தி வானத்தை வெறித்தபடி
நடக்கிறான்
தனிமை தனிமை
நீண்ட யுகங்கள்
தவித்தலையும் தனிமையை
உணர்கிறான் .

ஒரே துணையாக அவனோடு
கஞ்சாப்புகை
புகைக்கப் புகைக்க
வானத்தில் மிதக்கிறான்

இப்பொது அவன் தனித்தவன் இல்லை
அவனுக்குள் ஆயிரம் 'அவன்'கள்
யாரை விடவும் தானே பெரியவன்
ஆகிறான்
இந்த உலகத்தில் தான்
'யார்க்கும்
குடியல்லோன்' என்கிறான்.
நுரைக்கிற பானம் தோழர்
கொண்டுவர
குடித்துக் குளிக்கிறான்.

வாழ்வில் தீராத தாகம்
தீர்ந்ததாய்ச் சொல்கிறான்
மூத்த 'குடி'யின்
மரபுணர்ந்தேன் என்கிறான்
கையில் வாளேந்திச்
சிரிக்கிறான்

"சங்கிலியன் பரம்பரை நான்"
என்றவன்
தெருவில் போகும்
பெண்ணின்
சங்கிலி அறுக்கவும்,
எதிர் வீட்டானை
வாளால் வெட்டவும்,
பேயுறங்கும் சாமம்
வீதியில் அலையவும்,
அச்சப்படாதவன் ஆகிறான்

அவன் நீள்
குழல் தோள் வரை
நீண்ட சடையான்,
ஒரு காதுமட்டும்
தோடணிந்த
தோடுடைய செவியன்.





# குப்பையளை போடுறதும் மனிசர் தானே?

அறிக்கை

கதிரேசன் காத்தவராயன்

அண்டைக்குப் போட்டியளைப் பற்றி வாத்திமார் கதைச்ச விசயத்தைச் சொல்லிப் போட்டனெண்டு சிலபேருக்குக் கோவமாம்..! நானென்ன சும்மாவே சொல்லுறனான். அதுகிடக்க ஊரை மாத்திறமெண்டு ஊரார் வீட்டு மதிலுகள், வேலித் தகரங்கள் எல்லாத்தையும் நாறடிச்சுப் பிரதேச ஆட்சியளைப் பிடிச்சவை இருக்கினமல்லோ? இருக்கினமெண்டு சொல்லிப்போட்டன். இருக்கினமோ? எண்டு கேக்கிறதுதான் சரியாயிருக்கும்.

முந்தியோருக்காவும் சொன்னனான் அல்லே...?
உந்தக் கந்தையா உபாத்தியாயர் வீதியின்ர தலைவிதியை! அது அப்ப நான் சொன்ன காலம் கடுங்கோடை. இப்ப மழைக்காலம். காலம் பருவம் மாறின மாதிரி வாத்தியார் வீதியும் கடுமையாய் மாறிக்கிடக்குது. சமூக சுகாதார நிலையமும் அதுக்கதான். காசைக் கல்லாக்கிற வேலையை வடிவாச் செய்திருக்கிற மாளிகையளும் அதுக்கதான். யாழ்பாணம் பாக்க வாற சிங்களச் சனத்தின்ர வாகனங்களும் அதுக்கதான். ஆனால் பொறுப்பான ஒருதரும் இல்லை எண்ட நிலையிலைதான் அந்த றோட்டு வலு மோசமாகக் கிடக்குது.



ஊருக்குள்ள நல்ல பண்பாளரை உருவாக்கின அந்த மனுசனுக்கு அந்தப் பகுதிச் சனம், உடுவில் பக்கத்தாலை போறவை குடுக்கிற மரியாதையைக் கண்டு கண்கலங்க வேண்டியிருக்கு. அந்த மனிசன்ர பேர் போட்டிருக்கிற போட்டுக்கு முன்னாலை மலையாக் குவிஞ்சும், சிந்துப்பட்டும் நாறியும் கொண்டிருக்கிற குப்பையளைத்தான் சொல்லுகிறனெண்டதாவது விளங்குதே?
நாசமறுவார் போட இடமில்லாத மாதிரி அதிலையல்லே குவிச்சுக் கொண்டிருக்குதுகள்.

❧ ❧ ❧

ஊரைப் பிரட்டிக் காட்டுறமெண்டு குத்தி முறிஞ்சவையாலை அதை அள்ளிக் கொட்டமுடியேல்லை. குப்பையளைப் போடாமல் விடவேணும். அல்லது உடனயுடன அதுகளை அகற்ற வேணும். இதென்னடாவெண்டால் ரெண்டுமே நடக்கிறதில்லை. முதலும் இதுக்கொரு ஆலோசனை சொன்னனானல்லே? ஆர் கவனிச்சியளோ? ஒண்டு அந்த இடத்தைச் சுத்தமாய் வைச்சிருக்கிற வழியைப் பாருங்கோ. அல்லது வாத்தியாற்றை போட்டையும், சமூக சுகாதார நிலையத்தாரின்ர போட்டையும் பிடுங்கி விடுங்கோ.. ஒண்டுக்கொண்டு எதிரெதிரானதுகளை ஏன் ஒரேயிடத்திலை வைச்சிருக்கிறியள்? எங்களை நாங்களே கேவலமாக்கிற வேலை மாதிரி ஆருக்கும் தெரியேல்லையோ?

❧ ❧ ❧

இது இப்பிடிக் கிடந்து நாறுறது ஒரு பக்கமாயிருக்க மற்றப்பக்கம் சுன்னாகத்துப் பக்கத்தாலை வாறவை பெரிய குளமொண்டு வந்து நடு றோட்டிலை கிடக்கிறமாதியான பெரிய நீர்த்தேக்கத்தைத் தாண்டித்தான் பயணப்பட வேண்டியதாய் இருக்கு? போட்ட றோட்டும் பதிவு, தண்ணி போகேலாதமாதிரி அயலிலை கட்டியிருக்கிற மதிலுகள், ரெண்டு பேர் ஒண்டா நிண்டு மூத்திரம் பெஞ்சாலே அது அந்த இடத்திலை தேங்கி நிக்கிற நிலைதான் இருக்குது. இதுகளைப் பாக்கிறது மேய்க்கிறதுக்கெண்டு சம்பளம் வாங்கிறவை இந்த றோட்டைப் பாவிக்கினமோ தெரியேல்லை..?
சுகாதாரத்தைப்பற்றிப் பள்ளிக்கூடங்களிலை வகுப்பெடுக்கிறவையும் வீடு வளவுகளுக்குள்ள கேட்டுக் கேள்வியில்லாமல் அட்டகாசமாய்ப் பூந்து குண்டு தேடுகிற ஆமியை விட மோசமாய்த் தேடித் திரியுற ஆக்களுக்கு இவ்வளவு பெரிய குளமும் குப்பையளும் தெரியேல்லை எண்டுறது பெரிய ஆச்சரியமான விசயமல்லே? அட.. இந்தக் கதிரேசனுக்குத் தெரியிற இதுகள் இதே தொழிலாயிருந்து சம்பளம் வாங்கிறவைக்குத் தெரியேல்லை எண்டால் இந்தக் கதிரேசன்ரை கண்பார்வையைப் பற்றி என்ன நினைக்கிறியள்?


❧ ❧ ❧

ஏதோ அண்டைக்கு அதாலை போனதாலை கண்டது. அது அண்டைக்குத்தான் அப்பிடி எண்டில்லை. ஏனெண்டா அதாலை நெடுகவும் போய்வாற செல்லையரைக் கேட்டனான். அந்தாளும் என்னைப் போலைதான் புறுபுறுத்துது. அதோடை இன்னுமொண்டையும் சொல்லிச்சுது. "உனக்கிது தேவையில்லாத வேலை பேசாமப் போ..
ஏனெண்டா பார்லிமென்ற் தொடக்கம் பிரதேச சபை வரைக்கும் எல்ல இடத்திலையும் இதைவிட நாறுகிற விசயங்கள் கிடக்குது.. ஆனபடியாலை இதை ஒருத்தரும் பாராயினம்.
குப்பையளோடையும் தண்ணிக்குள்ளையும் வாழுறதுக்குப் பழகிறதுதான் வாழுறதுக்கு வழி" எண்டு. என்ன இருந்தாலும் எல்லா இடங்களிலையும் குப்பையைக் கோண்டுபோய்ப் போடுறது நாங்கள் தானே?

தொடர்

தாஸ் மாஸ்ரர்

# சிறைக்கதவில் எத்தனை கம்பிகள்



20

'எவ்2' வாட்டில் நீண்ட நாள்களாகக் கைதிகள் இருக்காததால் எல்லா இடங்களும் தூசு படிந்து கிடந்தன. அதைக் கூட்டுவதற்குத் தும்புத்தடி கேட்டபோது அதுவும் வழங்கப்படவில்லை. குளிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் களு கங்கை ஆற்றின் தண்ணீர் மட்டும் உள்ளே இருந்தது. அதை அனைவருமே அள்ளிக் குளித்தோம். அந்தப் பெரிய அறையில் ஆங்காங்கு கொஞ்சக் கொஞ்சப் பேராகக் கூடியிருந்து கதைத்தோம். சாதாரணமாக ஒரு சாவு வீட்டில் இருப்பதுபோல இருந்தோம். குரலை உயர்த்திக் கதைக்கவில்லை. அந்த அளவு கூடத் தெம்பு இல்லாமல் இருந்தோம். சிலர் கதைத்துக் கொண்டேயிருந்தவாறு அந்தத் தூசி படிந்த நிலத்தில் படுத்துக் கொண்டனர். ஆங்காங்கே சிதறிக்கிடந்தோம். சுவரில் நீண்ட நேரம் சாய்ந்திருந்ததால் இடுப்பும் முதுகுப் பாகமும் எனக்கு நோவாக இருந்தது. கையை மடித்துத் தலைக்குச் சாய்வுகொடுத்துக் கொண்டு சரிந்து, சுருண்டு படுத்துக் கொண்டேன். என்னை அறியாமலேயே நித்திரையாகி விட்டேன்.

• • •

எம்மை 'எவ்2' வாட்டில் பூட்டியபின் அடிக்கடி சிறைச்சாலை அதிகாரிகள் வந்து பார்த்துவிட்டுச் சென்றார்கள். தவிர, எமக்குக் குடிதண்ணீர் ஆவது தருவதற்கான ஒழுங்கைச் செய்யவில்லை.

பிற்பகல் 2மணி இருக்கும். நிறையப் பேர் படிகளில் ஏறுகின்ற சப்பாத்து சத்தங்கள் கேட்டது. கதவைப் பார்த்த வண்ணம் இருந்தோம். கதவு திறக்கப்பட்டது. களுத்துறை மாவட்ட நீதிவான் வந்திருப்பதாகச் சொன்னார்கள். களுத்துறைப் பொலிசாரும் வந்திருந்தார்கள். நீதிவான் உள்ளே வந்தபோது நாம் எழுந்து நின்றோம். அவர் உடனேயே இருக்கச் சொன்னார். இவ்வாறான இக்கட்டான நெருக்கடியான சூழல் ஏற்படும்போது ஒரு கைதியின் மனநிலை பாதிப்பாக இருக்கும் என்பது சிறைச்சாலை நிர்வாகத்துக்குத் தெரியும். அவ்வாறான சூழலில் பார்வையிட வரும் முக்கியஸ்தவரை பணயமாக வைத்துக் கைதிகள் தப்பக்கூடும். அல்லது முக்கிய நபரைக் கொல்லக்கூடும்.

நான் நிலத்தில் குந்தியிருந்தேன். நீதிபதி மெதுவாக ஏதோ பொலிஸ் அதிகாரிக்குக் கூறினார். தனது குறிப்புப் புத்தகத்தில் ஏதோ எழுதிக் கொண்டார். அவர் எங்களிடம் எதுவும் பேசவில்லை. காக்கா குருவியைப் பார்ப்பதுபோல மேலோட்டமாக எல்லோரையும் பார்த்தார். அவ்வளவு தான். பொலிஸ் அதிகாரி கூறினார் 'உங்களுக்கு ஒரு வார கால அவகாசம் நீதிபதியால் வழங்கப்பட்டுள்ளது. அதற்கிடையில் இந்தக் கொலை தொடர்பாக ஏதாவது கூற விரும்பினால் பொலிசாரிடம் கூறலாம்' என்று. கைதிகள் யாரும் எதுவும் பேசவில்லை.

• • •

மாலை 3.30 மணியளவில் சாப்பாடும், தண்ணீரும் கொண்டு வந்தார்கள். உடைந்த, பழுதான பிளாஸ்ரிக் கோப்பைகள் 14 மட்டும் தரப்பட்டன. ஒருவர் சாப்பிட்ட பின்னர் கழிவை ஒரு வாளிக்குள் போட்டுவிட்டு மற்றவருக்குக் கோப்பையைக் கொடுக்க வேண்டும். அதற்குப் பொறுப்பாக வந்த ஜெயிலரும், ஏனைய அதிகாரிகளும் அவசரப்படுத்தினார்கள்.

பலர் சாப்பிட்ட கோப்பையைக் கழுவாமலேயே மற்றக் கைதிகளுக்குக் கொடுக்க அவர்கள் அதில் சோறு வாங்கிச் சாப்பிட்டார்கள். கோப்பைகள் உடைந்தும், ஓட்டையாகவும் இருந்ததால், சோற்றுக்குள் விடப்பட்ட சொதி எல்லாம் (அது தான் முதன்மைக் கறி) நிலத்தில் ஊற்றிற்று. நேற்றைய வாழ்க்கையை விட இன்றையது கஸ்ரமாக இருந்தது.

சாப்பாடு கொண்டுவந்த போது ஒரு தகரப் பரலில் குடி தண்ணீரும் கொண்டு வந்து தந்தார்கள். அதை உள்ளே எடுத்து வைத்துத் தேவை தேவையில்லை என்றில்லாமல் அவ்வப்போது குடித்தோம். காலையில் முகம் கழுவாமல் நிறையப் பேர் இருந்தார்கள். ஏதோ வாய் அலம்பி விட்டுச் சாப்பிட்டாயிற்று. இவை எல்லாவற்றையும் விட எமக்கு என்ன நடக்குமோ என்பதுதான் எண்ணமாக இருந்தது.

• • •

மாலையில் எவ்3 பகுதியிலுள்ள கடுழியச் சிறைத் தண்டனை ஊழியர்களைக் கொஞ்ச நேரம் திறந்துவிட்டார்கள். அவர்களில் பலரை எம்மிடம் இருந்த நீண்ட கால கைதிகளுக்கு ஏற்கனவே பழக்கம். அவர்கள் கீழே வந்ததை அறிந்த எம்மவர்கள், தண்ணீர்த் தொட்டிக்கு மேல் ஏறி நிற்க, அவர்கள் கீழே நம்மவர்களுடன் கதைத்தார்கள். வானொலிச் செய்திகளில் இந்த விடயம் சொல்லப்பட்டதாகவும் கொலையுடன் சம்பந்தப்பட்டவர்களை விசாரணையில் தடுத்து வைத்துள்ளதாகவும் கூறியதாக அவர்கள் கூறினார்கள்.

ஜன்னல் உயரத்தில் இருப்பதால் கீழே இருப்பவர்களை இலகுவில் பார்க்க முடியாது. ஒருவரின் தோளில் மற்றவர் ஏறி ஜன்னலில் தொங்கி எட்டிப் பேசவேண்டும். பின்புறமாக உள்ள தண்ணீர்த் தொட்டியில் ஏறிநின்று கதைப்பது கூட மிகவும் கஸ்ரமானது.

மாலை 4 மணியளவில் களுத்துறை பொலீசார் விசாரணைக்காக எழுமாற்றாக எங்களில் இருவரைக் கூட்டிச் சென்றார்கள். நீண்ட நேரத்தின் பின் எவ்1 (கட்டடத்தின் கீழ்ப்பாகம்) இரும்புக் கதவு திறக்கும் சத்தம் கேட்டது. ஒரு சிறைச்சாலை ஊழியரும் இரண்டு பொலிசாரும் வந்தார்கள். மேலும் இருவரைக் கூட்டிச் சென்றார்கள் பின்னர் புரிந்து கொண்டோம் விசாரணை முடிந்தோரை எங்களுடன் கலக்காமல் வைத்திருக்கிறார்கள் என்று. எங்களிடம் என்ன கேட்கிறார்கள் என்று மற்றவர்களுக்குத் தெரிந்து விடக் கூடாது என்பதே அவர்களின் ஏற்பாடாகும். விசாரணை தொடங்கிய பின்பு யாரைக் கூப்பிடுகிறார்களோ? துன்புறுத்துகிறார்களோ? வெளியில் என்ன நடக்கிறதோ என்று எதுவும் தெரியவில்லை. எங்களில் இருவர் இருவராகக் குறைந்து கொண்டு இருந்தோம். ஆனால் அடிக்கும் சத்தமோ, கத்தும் சத்தமோ கேட்கவில்லை இரவு 9மணியாகியும் தொடர்ந்தும் விசாரணைக்காக எங்களை எடுத்து கொண்டிருந்தார்கள். இருவரைக் கூட்டிச் சென்று ஏறத்தாழ அரை மணிநேரத்தின் பின்பு தான் அடுத்த இருவரைக் கூப்பிட்டார்கள். பகல் சாப்பாடு தந்ததைபோல இரவுச் சாப்பாட்டை அவசர அவசரமாகத் தள்ளிவிட்டுப் போனார்கள். உண்ணவோ, உறங்கவோ, நின்மதியாகவோ இருக்க முடியவில்லை. மனநிலை பாதிப்பு அதிகமாக இருந்தது. சிறையே கொடுமையான ஓர் இடம் அதற்குள் இது வேறு கொடுமையாக இருந்தது.

• • •

இரவு 12.30 அளவில் என்னையும் எனது சங்கத்தில் இருந்த யோகேஸ்வரன் என்ற நண்பரையும் கூட்டிச் சென்றார்கள். படிகளில் இறங்கும்போது எவ்1 பகுதிகளில் விசாரணை முடிந்த கைதிகள் குந்திக் கொண்டு இருந்தார்கள். அவர்களுக்குக் கை காட்டிக் கொள்ளக் கூட அவகாசம் தரவில்லை. அவசரமாகக் கூட்டிச் சென்றார்கள்.

எவ் பிரிவில் ஊழியர்கள் தங்குவதற்கான ஒரு விடுதி இருக்கின்றது. அதில் இரண்டு பகுதிகளில் வைத்து இரு வேறு பொலிஸ் குழுவினர் விசாரணைகளை நடாத்தினார்கள். என்னை முதலாவது அறைக்குக் கூட்டிச் சென்றார்கள். அங்கு விசாரணை மேசையில் இரண்டு பொலிசாரும் மேலதிகமாக இரண்டு பொலிசாரும் இருந்தார்கள். என்னை முன்னால் இருந்த கதிரையில் இருக்கச் சொன்னார்கள். விசாரணையை ஆரம்பித்தவர் பெயர், வயது, படிப்பு, தொழில், எங்கு கைது செய்யப்பட்டது என்று கேட்டு எழுதிய போதும் முரட்டுத்தனமான ஓர் அணுகு முறையையே கையாண்டார்கள். 'நீ சிலவேளை சிறிய குற்றம் ஒன்றுக்காகக் கைதாகி இருக்கலாம். ஆனால் இந்த கொலையில் நீ சம்பந்தபட்டதாகத் தெரிய வந்தால் தூக்குத் தண்டனை தான். சிறைச்சாலைக்குள் நடக்கின்ற குற்றம் பொதுவாழ்வில் செய்யும் குற்றத்தை விட வலியது.' என்று பயமுறுத்தினர். நான் ' எனக்கு எதுவும் தெரியாது' என்று மட்டும் கூறினேன். இவ்வாறு விசாரணை ஆரம்பித்த 5நிமிடத்தில் அந்தப் பொலிஸ் பிரிவுக்குத் தலைமை தாங்குகின்ற அதிகாரி வந்தார். கதிரையில் இருந்த பொலிசார் எழுந்து நின்றனர். அவர் எனக்கு அருகில் இருந்த கதிரையில் இருந்தார். முதலில் என்னைப் பற்றிக் கூறினார்கள்.

' உங்களுக்கு ஆங்கிலம் தெரியுமா'

என்னை பொறுப்பதிகாரி கேட்டார்.

ஆம் என்றேன்.

என்னுடன் உரையாடும்போது அந்தக் கொலை எவ்வாறு நடந்தது என்று எனக்கு விளங்கப்படுத்தினார். வெளி வாட் ஒன்றில் இருந்து மூவர் சி3 யில் இருந்த மூவரை மாற்றி மறு நாள் மாலையில் உள்ளே வந்துதான் அந்தக் கொலையைச் செய்திருக்கிறார்கள். (கொலை செய்தவர்களின் பெயர்களையும் தான் எழுதி வைத்திருந்த ஒரு துண்டுத் தாளில் இருந்து பார்த்துச் சொன்னார்) ' அவர்களைத் தெரியுமா? என்று கேட்டார்.

நான் கூறினேன் ' நான் இங்கு வந்து இரண்டு மாதங்கள் தான் ஆகின்றன. இங்கு நிறையப் பேர் இருப்பதால் பெயர் வாரியாகக் கைதிகளைத் தெரியாது. எனது பகுதியில் உள்ளவர்களை நன்கு தெரியும். அதிலும் முதல் நாள் இரவு கொழும்பில் இருந்து புதிதாகக் கொண்டு வரப்பட்ட மூவர் இருந்தார்கள்' என்றேன்.

சி3 பகுதியில் உள்ள எல்லோரையும் உங்களுக்குத் தெரியும். எனவே புதிதாக யாராவது நேற்றிரவு வந்து தங்கினார்களா? நான் ' காணவில்லை அதைவிட எல்லா அறைக் கதவுகளிலும் பிளாஸ்ரிக் பாய்கள் தொங்கவிடப்பட்டு மறைக்கப்பட்டிருப்பதால் உள்ளே யார் யார் இருக்கிறார்கள் என்று காணமுடியாது. ஓர் அறைக்குள் இருப்பவர்கள் ஓர் சங்கம் என்பதால் அவர்களது சாப்பாடு பொழுது போக்கு எல்லாமே அந்த அறைக்குள் தான் இருக்கும். பொதுவாக ஓர் அறையில் இருப்பவர்கள் மற்ற அறைக்குள் ஏதாவது அலுவல்கள் மட்டும் இருந்தால் போவது உண்டு'

' ஏதாவது வித்தியாசமான சத்தம் கேட்கவில்லையா?'

'இல்லை சாதாரணமாக நள்ளிரவுக்குப் பின்பும் காட்ஸ் (சிறைச்சாலையில் அனுமதியில்லை களவாக வைத்திருப்பது) டாம், கரம்போன்ற விளையாட்டுகளில் ஈடுபடுவோர் பீடி புகைப்பவர்கள் ஒரு குழுவாக இருந்து கதைப்பது, வாக்கு வாதப்படுவது, அடிபாடும் கூட நடக்கும் சுவரில் உதைக்கும் சத்தங்கள் கூட வழமையான நடவடிக்கை அதைவிட அங்குள்ள சிறிய வானொலிப் பெட்டி இரவு, பகல் வேறுபாடு இல்லாமல் பெரிய சத்தமாக வேலை செய்யும். இவற்றுக்கு மத்தியில் புதிதாக எதையும் கேட்க முடியவில்லை' என்றேன். பொலிஸ் அதிகாரி இறுதியாக ஒரு விடயத்தைக் கூறினார். 'இந்தக் கொலையானது விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரன் அண்ணன் என்பவரின் உத்தரவின் பேரில் செய்யப்பட்டுள்ளது. இதில் சம்பந்தப்பட்டவரின் பெயர் பற்றிய முழு விவரமும் எமக்குக் கிடைத்து விட்டது. இதில் பல அப்பாவிகள் தேவையில்லாமல் மாட்டுப்பட்டிருக்கிறார்கள் என்பதும் எமக்குத் தெரியும். இந்தக் கொலை தொடர்பாக ஒரு விசாரணை நடத்த வேண்டிய பொறுப்பு எங்களுக்கு உண்டு. அவ்வளவும்தான்'

(தொடரும்)

கரம் விளையாடுகின்றவர் சந்தர்ப்ப சூழ்நிலையால் குழு ஒன்றின் தலைமையாகப் பரிணமிப்பதுவே 'வடசென்னை' என்று இதன் கதையை ஒரு வரியில் சொல்லலாம். ஆனால், அது மட்டும் என்று இல்லாமல் சற்றுத் திசை மாறியும் பயணிக்கிறது திரைக் கதை.



பரவாயில்லை ரகம்!

**கதை**


வடசென்னைப் பகுதியில் கடலை ஒட்டிப் பிழைப்பு நடத்தும் மக்களை அரசியலும் அதிகாரமும் வெளியேற்றப் பார்க்கிறது. அதற்கு ராஜன் (அமீர்) எதிர்ப்புத் தெரிவிக்கிறார். இதனால் காரியம் சாதிக்க நினைக்கும் அரசியல்வாதி முத்து (ராதாரவி) ராஜனுடன் இருக்கும் நண்பன் செந்திலைத் (கிஷோர்) தூண்டி





விடுகிறார். எம்.ஜி.ஆர். இறந்த அன்று கடலில் படகு மூலம் சாராயம் கடத்துகிறார் செந்தில். இதனால் செந்தில் (கிஷோர்), குணா (சமுத்திரக்கனி), வேலு (பவன்), பழனி (தீனா) உள்ளிட்டோரும் பொலிசிடம் சிக்க, கோபத்தில் அவர்கள் நால்வரையும் அடித்து விடுகிறார் ராஜன். அன்றிரவே சமயம் பார்த்து ராஜன் அந்த நால்வரால் கொலை செய்யப்படுகிறார். அந்தச் சூழலில் பக்கத்தில் இருந்தும் அண்ணனைக் காப்பாற்ற முடியாமல் அழ மட்டுமே செய்கிறார் ராஜனின் தம்பி (டானியல் பாலாஜி).

நால்வரில் சமுத்திரக்கனியும், பவனும் மட்டும் குற்றத்தை ஒப்புக்கொண்டு, கைதாகிச் சிறைத்தண்டனை அனுபவிக்கின்றனர். கிஷோரும், தீனாவும் அவர்களை பிணையில் எடுக்காமல் இழுத்தடிக்கின்றனர். அந்த இடைவெளியில் பெரிய ரவுடிகளாக வலம் வருகின்றனர். பிணையில் வெளிவரும் சமுத்திரக்கனியும், பவனும் கிஷோருக்கு எதிரிகள் ஆகின்றனர். இந்த நிலையில் அன்பு (தனுஷ்) ஒரு பிரச்சினையில்





சிறைக் கைதியாகச் சென்று கிஷோரைப் போட்டுத்தள்ள முயற்சிக்கிறார். அது சொதப்பலில் முடிகிறது. யார் இந்த அன்பு? ராஜனுக்கும் சமுத்திரக்கனி, கிஷோர் உள்ளிட்ட நால்வருக்கும் உள்ள பிரச்சினை என்ன? ராஜனின் அன்பு மனைவி சந்திரா என்ன ஆகிறார்? அண்ணனைக் கொன்றவர்களை டானியல் பாலாஜி என்ன செய்கிறார் ? அன்பு ஏன் ராஜனாக உருமாறுகிறார் ? ஆகிய கேள்விகளுக்குப் பதில் சொல்கிறது திரைக்கதை.

**சற்றுத் தனித்துவமான கதை**

தமிழ் சினிமாவில் தனித்துவமான ஒரு 'குழுத் தலைவனுக்கான சினிமாவைக் கொடுத்த விதத்தில் வெற்றிமாறன் ஆச்சரியப்படுத்துகிறார். கதாபாத்திரத் தெரிவு, அவர்களுக்கான விவரணைகள், தோரணை, காட்சி அமைப்புகள் போன்றவற்றில் அவரது உழைப்புப் பளிச்சிடுகிறது.

படத்தில் நாயகன் இவர்தான் என்று உறுதியாகக் கூற முடியாத அளவுக்குக் கதாபாத்திரங்களுக்கு வலுச் சேர்த்து கட்டமைத்திருக்கிறார் இயக்குநர் வெற்றிமாறன். அதுவே படத்தின் மிகப்பெரிய பலம் என்று சொல்லலாம்.

**பாத்திரங்கள்**

அன்பு கதாபாத்திரத்தில் தனுஷ் மிகையில்லாத நடிப்பைத் தந்திருக்கிறார். புதுப்பேட்டைக்கு முன், பின் எனத் தனுஷின் நடிப்பைப் பற்றி விமர்சிக்கலாம். அது போல இனி வடசென்னைக்கு முன், பின் என்று தனுஷ் நடிப்பு மெருகேறி உள்ளதைக் குறிப்பிட்டே ஆக வேண்டும். காதலில் கிறங்குவது, வசவு வார்த்தை வீசிய ஐஸ்வர்யா ராஜேஷைப் பின் தொடர்ந்து காதலிப்பது, காதலிக்கு முத்தம் கொடுத்ததைக் கலாய்த்த தீனாவைச் சாய்ப்பது, கிஷோரின் ரவுடிக் கூட்டத்தில் இடம் பெறுவது, கரம் போர்ட் விளையாடி நம்பிக்கைக்குரிய ஆளாக மாறுவது எனத் தனுஷ் பிரமாதப்படுத்தி இருக்கிறார். தொழில்முறை நடிகனாகத் தேர்ந்த நடிப்பை வழங்கி இருக்கும் விதம் பாராட்டுக்குரியது. ஆண்ட்ரியாவுக்கு மிகவும் அழுத்தமான கதாபாத்திரம். அதை அவ்வளவு அழகா கச் செய்திருக்கிறார். சேலைத் தலைப்பை இழுத்து செருகுவது போல் துரோகத்தின் நிழலையும், வன்மத்தின் மௌனத் தையும் இறுக்கமான நடிப்பால் வெளிப்படுத்துகிறார். ஐஸ்வர்யா ராஜேஷ் வசவு வார்த்தை வீசுகின்ற தென்றலாக வருகிறார். எதற்கும் அலட்டிக்கொள்ளாமல் வடசென்னைப் பெண்ணாகவே மாறி இரசிக்க வைக்கிறார். தனுஷ் - ஐஸ்வர்யா ராஜேஷ் காதல் காட்சிகள் படத்தின் இரசனையை அதிகப்படுத்துகின்றன. சமுத்திரக்கனி, கிஷோர், அமீர், பவன், பாவல் நவகீதன், ராதாரவி, தீனா, ஹரிகிருஷ்ணன், சுப்பிரமணிய சிவா ஆகியோர் உறுதுணைக் கதாபாத்திரங்களாக நின்று படத்துக்கு உயிர் கொடுத்திருக்கிறார்கள். ஐஸ்வர்யா ராஜே ஷின் தம்பி கதாபாத்திர வார்ப்பும் கூடுதல் கவனம் பெறுகிறது.

**ஒளிப்பதிவு,
இசை, தொகுப்பு**

வேல்ராஜின் கமரா வடசென்னையின் சந்துபொந்துகளை, இண்டு இடுக்குகளை, சிறைச்சாலையில் நடக்கும் அட்டூழியங்களை அப்படியே துல்லிய மாகப் பதிவு செய்திருக்கிறது. சந்தோஷ் நாராயணன் பின்னணி இசையில் படத்தை அடுத்த தளத்துக்குக் கொண்டு செல்கிறார். படம் முழுக்க நிறையக் கதாபாத்திரங்கள், அவர்களுக்கான அறிமுகப் படலங்கள், சண்டை செய்வதற்காகக் காரண காரியங்கள் இருந்தாலும் அவற்றை அலுப்பூட்டாமல், குழப்பம் ஏற்படுத்தாமல் பார்க்க வைக்கும் விதத்தில் வெங்கடேஷின் படத் தொகுப்பு நேர்த்தியின் உச்சம்.

**பலம் பலவீனம்**

ஒரு முத்தம் கொடுத்தது ஏன் இவ்வளவு பெரிய ஆபத்தில் தனுஷைக் கொண்டுபோய் நிறுத்துகிறது என்பதுதான் படத்தின் முக்கியமான முடிச்சு. காதலுக்கான கருவி எப்படிக் கொலைக்கான முகாந்தி ரமாக மாறுகிறது என்பதையும், அன்புவாக இருக்கும் தனுஷ் ஒவ்வொரு படிநிலையாய் ஏறி மாறும் விதத்தையும் எந்தப் பூச்சும் இல்லாமல் மிகச் சரியாகப் பதிவு செய்திருக்கிறார் இயக்குநர் வெற்றிமாறன். அறிமுகக் காட்சி என்ற ஒன்றை தனுஷ்க்கு வைக்காத அவர் கதைக்கான நேர்மையை மட்டும் திரைக்கதையாகச் செதுக்கிய விதத்தில் மிகப்பெரிய ஆளுமை என்பதை நிறுவி இருக்கிறார். சிறைக்காட்சிகள் அசர வைக்கின்றன. தனுஷ் அமீர் வீட்டைப் பயன்படுத்திக்கொள்ள அங்கு தங்குவதாகக் காட்சி அமைக்கப்பட்டிருப்பது கச்சிதம்.



குறைகள் என்று சொல்லப்போனால் டானியல் பாலாஜி ஏன் அண்ணன் சொன்ன வார்த்தைக்காக, அந்த நால்வரையும் அப்படியே விட்டுவிடுகிறான். அதுவும் ஒருகட்டத்தில் சுய சமாதானம் செய்துகொள்கிறான் என்பது தெரியவில்லை. சமுத்திரக்கனி, கிஷோர் கதாபாத்திரங்கள் ஒரு கட்டத்துக்குப் பிறகு தேக்க நிலையை அடைந்து விடுகின்றன. ஆனால், இவற்றைப் பெரிதாகப் பொருட்படுத்தவும் தேவையில்லாத அளவுக்கு திரைக்கதையால் நம்மைக் கட்டிப்போடுகிறார் இயக்குநர் வெற்றிமாறன். விசுவாசத்துக்கும் துரோகத்து க்குமான வேறுபாட்டையும் சமரசமில்லாமல் பதிவு செய்திருக்கிறது எனலாம் 'வடசென்னை'யை. நிலம் குறித்த அரசியலையும், அதிகாரத்தையும் தகர்த்தெறிய உரிமைக்குரல் எழுப்பியதாகப் பதிவு செய்திருக்கிறது.

## தொடர்ச்சியை அறிவித்தபடி முடிகிறது

கொலைசெய்துவிட்டு, நான்கு நண்பர்கள் பேசுவதில் ஆரம்பிக்கும் படம் அதற்குப் பிறகு, அன்பு சிறைக்குள் வருவது, அவனது காதல் கதை, பிறகு சிறைக்குள் வந்ததற்கான காரணம் என படம் முன்னும் பின்னுமாக நகர்கிறது. படம் முடிவை நெருங்கும்போது பல முடிச்சுகள் அவிழ்ந்து, புதிர்கள் விடுபடுகின்றன. ஆனாலும், கதை முடிவை நெருங்காததால் வட சென்னை இரண்டாம் பாகத்துக்கான அறிவிப்போடு நிறைவடைகிறது.

படம் ஆரம்பித்து முக்கால் மணி நேரத்துக்குள் பல பாத்திரங்கள் தொடர்ந்து அறிமுகப்படுத்தப்படுகிறார்கள். அவர்களுக்கிடையிலான உறவும் மோதலும் தொடர்ந்து சொல்லப்படுகிறது. இதனால், கதையைப் புரிந்துகொண்டு ஈடுபாட்டோடு படத்தைப் பார்க்க ஆரம்பிக்கச் சற்று நேரம் பிடிக்கிறது.

தவிர, இடைவேளை வரை படம் எதை நோக்கி நகர்கிறது என்ற குழப்பமும் இருக்கிறது. படத்தின் பிற்பாதியில்தான் கதையில் ஒரு தெளிவு பிறக்கிறது. எண்பதுகளின் பிற்பாதியில் நடக்கும் கதை என்பதால், அந்தக் காலகட்டத்தைத் திரையில் கொண்டுவர உழைத்திருக்கிறார்கள். எம்.ஜி.ஆர். இறப்பு, ராஜீவ் காந்தி கொலைசெய்யப்படுவது, அதை ஒட்டிய கலவரங்கள் என அந்தக் காலகட்டத்துக்கு இழுத்துச் செல்ல முயற்சிக்கிறார் இயக்குநர். அவற்றில் ஓரளவே வெற்றிகிடைக்கிறது.

படம் துவங்கும்போது முக்கிய பாத்திரங்களாகத் தென்படும் பலர், படம் நகர நகர மங்கிப்போக, ஆண்ட்ரியாவும் தனுஷும் மேலெழுவது இரசிக்கும்படி இருக்கிறது. அடுத்த பாகமான 'வட சென்னை 2 அன்புவின் எழுச்சி' குறித்து ஒரு எதிர்பார்ப்பையும் எற்படுத்துகிறது. அதனால், ஒரு முழுமையான திரைப்படத்தை எதிர்பார்த்து வரும் சாதாரண இரசிகர்கள் இந்தப் படத்தை எப்படி எதிர்கொள் வார்கள் என்பது கேள்விக்குறிதான்

**ப**ரியேறும் பெருமாள் படத்தில் ஒரே ஒரு காட்சியில் வந்தாலும் வெகுவாகக் கவர்ந்த சண்முக ராஜா இந்தப் படத்தில் படம் முழுக்க வருகிறார். ஆனால், ஒரு காட்சிகூட நடிக்க வாய்ப்பில்லை. மு. ராமசாமி, தென்னவன் ஆகியோருக்குப் படம் முழுதும், "ஐயா, விடுங்கைய்யா நாங்க பார்த்துக்கிறோம்" என்று சொல்வதும் ராஜ்கிரணையும் விஷாலையும் புகழ்வதும்தான் வேலை. சண்டக் கோழியில் இருந்த புத்துணர்ச்சியும் உற்சாகமும் கச்சிதமான திரைக்கதையையும் எதிர்பார்த்துப் போகிறவர்களுக்குக் கிடைப்ப தென்னவோ வழக்கமான ஒரு அடிதடித் தமிழ் சினிமா தான்.




## வெத்து வேட்டு






**வெ**ளிநாட்டிலிருந்து சொந்த ஊருக்கு வரும் இளைஞன் மண்ணுக்கு மதிப்புக் கொடுத்து அப்பாவின் வாக்கைக் காப்பாற்றப் போராடுகிறார் என்பதாகச் சண்டக்கோழி 2இன் கதையைச் சுருக்கமாகவும் சொல்லிக்கொள்ளலாம். 2015ஆம் ஆண்டின் இறுதியில் வெளியான சண்டக் கோழி படத்தின் தொடர்ச்சி அல்லது அதன் இரண்டாம் பாகத்தை 13ஆண்டுகளுக்குப் பிறகு கொடுத்திருக்கிறார் இயக்குநர் லிங்குசாமி.

### கதை

திருவிழாவில் நடக்கும் கறி, சோறுச் சண்டையில் வரலட்சுமியின் கணவர் கபாலி விஸ்வநாத் கொல்லப்படுகிறார். கணவனைப் பறிகொடுத்துவிட்டு நிற்கும் வரலட்சுமிகணவனின்சாவுக்குக்காரணமானவர்களின் வம்சத்தில் ஓர் உயிர் கூட இருக்கக் கூடாது என்று சபதம் எடுக்கிறார். ஹரீஷ் பெராடி, அர்ஜய் உள்ளிட்ட உறவினர்கள் விஸ்வநாத்தின் சாவுக்குக் காரணமான வம்சத்தைச் சேர்ந்த ஒருவரையும் விடாமல் வெட்டிச் சாய்க்கிறார்கள். இறுதியில் ஹரி என்ற இளைஞன் மட்டுமே மிஞ்சுகிறான். இந்த நிலையில் ஏழு ஆண்டுகளாக நடத்த முடியாத திருவிழாவை நடத்தும் முயற்சியில் ஊர்ப் பெரியவர் ராஜ்கிரண் ஈடுபடுகிறார். வரலட்சுமி தரப்புச் சமாதானமாக, திருவிழா தொடங்குகிறது. ஆனால், அங்கே ஹரியைக் கொலை செய்ய 'வரலட்சுமி அண்ட் கோ' வெறித்தனமாய் வேலை பார்க்கிறது. இதனால் ஹரியைக் காப்பாற்றும் பெரும்பணியை ராஜ்கிரணும், அவரது மகன் விஷாலும் செய்கிறார்கள். அப்பாவிடம் நேருக்கு நேர் கோப முகம் காட்டி, எதிர்த்துப் பேசியதையே தாங்கிக்கொள்ள முடியாதவர் விஷால். அப்படிப்பட்டவர் ராஜ்கிரணுக்கும், ஹரிக்கும் ஆபத்து வந்தால் என்ன செய்வார்? திருவிழா எந்த அசம்பாவிதமும் இல்லாமல் சரியாக நடந்து முடிகிறதா? ஹரி என்ன ஆனார்? போன்ற கேள்விகளுக்குப் பதில் சொல்கிறது திரைக்கதை. திருவிழா, அடிதடி, பழிவாங்குதல் என்று தமிழ் சினிமாவின் அம்சங்களுக் கிடையே புகைப்பிடித்தல், மது அருந்துதல் போன்ற காட்சிகளை வைக்காமல் தவிர்த்த இயக்குநரின் அக்கறையை, பொறுப்புணர்வை வரவேற்கலாம்.

### கதாபாத்திரங்கள்

துரை ஐயா மகன் பாலு கதாபாத்திரத்தில் விஷால் சரியாகப் பொருந்துகிறார். கீர்த்தி சுரேஷிடம் காதலில் விழுவது, வாகன ஓட்டுநர் என்று நம்பும்படியாக நடிப்பது, அப்பாவுக்கு முன் சவடால் பேசிய நபரை ஒரே அடியில் சாய்ப்பது, அப்பாவின் வாக்கை நிறைவேற்றுவதற்காகப் பொறுமை காப்பது, பழிவாங்கும் படலத்திலும் அன்பைக் கையாளுவது எனத் தேவையான நடிப்பைக் கொடுத்திருக்கிறார். சில இடங்களில் ஒரே மாதிரியான முக பாவனைகளில் வந்து போவது நெருடல் தருகிறது. வாத்தியார் மகள் செம்பருத்தியாகக் கீர்த்தி சுரேஸ்க்கு வாய் வலிக்கப் பேசும் கதாபாத்திரம். நாயகனைக் காதலிக்கும் ஒரே வேலை மட்டுமே அவருக்குக் கொடுக்கப்பட்டிருப்பதால், கீர்த்தி தொடர்ந்து பேசிக் கொண்டே இருப்பது அலுப்பை வரவழைக்கிறது. ராஜ்கிரணை அவரது வீட்டில் பார்க்கும் ஒற்றைக் காட்சியில் மட்டும் கீர்த்தி நடிகையாகத் தன்னைத் தக்கவைத்துக் கொள்கிறார். வரலட்சுமி கோபமும் வேகமுமாக மட்டுமே பேசுகிறார். அந்தப் பேச்சு எடுபடாமல் சலிப்பை வரவழைக்கிறது. ராஜ்கிரண் கதாபாத்திரத்துக்குத் தேவையான பக்குவமான நடிப்பை வழங்கி இருக்கிறார். மு.ராமசாமி, சண்முகராஜன், தென்னவன், கஜராஜ், கஞ்சா கருப்பு, ஹரீஷ் பெராடி, அர்ஜய், ஞானசம்பந்தன், மயில்சாமி, முனீஸ்காந்த் என்று படத்தில் ஏகப்பட்ட கதாபாத்திரங்கள் இருந்தும் அவர்களுக்குப் போதுமான வாய்ப்பு வழங்கப்படவில்லை. இதனால் ராஜ்கிரண் உட்பட மற்ற நடிகர்களும் மனதில் இடம்பிடிக்கத் தவறுகிறார்கள்.



### ஒளிப்பதிவு, இசை, படத்தொகுப்பு

ஒளிப்பதிவாளர் கே.ஏ.சக்திவேலும், இசையமைப்பாளர் யுவன் ஷங்கர் ராஜாவும் படத்தைத் தூக்கி நிறுத்துகிறார்கள். பின்னணி இசையில் யுவனின் உழைப்பு திகைக்க வைக்கிறது. பாடல்கள் மட்டும் வேகத்தடைகள். தொகுப்பாளர் பிரவீன் கே.எல். இரண்டாம் பாதியில் கொஞ்சம் கத்தரி போட்டிருக்கலாம். எஸ்.ராமகிருஷ்ணன், பிருந்தா சாரதியின் வசனங்கள் படத்துக்கு வலுச் சேர்க்கின்றன.

### பலம் – பலவீனம்

முன்னைய படத்தின் தொடர்ச்சியிலிருந்து தொடங்கியிருக்கலாம் அல்லது அதற்கான நியாயத்தைப் படத்தில் வேறு எங்காவது சொல்லியிருக்கலாம். ஆனால், அப்படி ஒரு முக்கியமான காட்சி வீணடிக்கப்பட்டுள்ளது. அதுவும் அது அஜித் பட சாயலைத் தழுவி எடுக்கப்பட்டுள்ளது. அடிதடி, வெட்டுக்குத்து, கலவரம், பழிவாங்குதல், திருவிழாச் சண்டை, இரண்டு தரப்பு மோதல் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு பல படங்கள் தமிழ் சினிமாவில் வந்திருக்கின்றன.

'சண்டக்கோழி 2'விலும் அது புதுமாதிரியாக இல்லாமல் பழைய மாதிரியாகவே இருப்பதால் திருவிழாவில் உற்சாகமிழந்த சூழல்போல் ஆகிவிட்டது.

ஹரியைக் காப்பாற்றுவது, திருவிழாவைத் தடையில்லாமல் நடத்துவது மட்டுமே திரைக்கதைக்கான முடிச்சுகளாக இருப்பதால் சுவாரஸ்யமும் விறுவிறுப்பும் குறைந்து கொண்டே சென்று தொய்வு நிலையை அடைகிறது. வேட்டைக் கருப்புக்கு அஞ்சாதவர்கள் ஏன் ஏழுவருடங்களாக அமைதியாக இருக்கிறார்கள், ஹரியின் கழுத்தில் துண்டு போடும் அர்ஜய் அப்போதே அவரைப் பழிவாங்கி இருக்கலாமே, கலெக்டர் ஆன பிறகும் ஹரி ஏன் அமைதியாக இருக்கிறார் என்று கேள்விகள் எழுகின்றன.


ராஜ்கிரணையும், விஷாலையும் புகழ்பாடிக்கொண்டே இருக்கும் துதிபாடிகளாகவே உறுதுணைக் கதாபாத்திரங்கள் பயன்படுத்தப்பட்டிருப்பது படத்தின் பலவீனம். வழக்கமான தமிழ் சினிமாவாகவே சண்டக்கோழி 2வைப் பார்க்கலாம்.

---

கவிதை

# மரணித்துவிட்டதா மனிதம்...?

வேலணையூர் தனு



நண்பிக்கு விடை கூறி
நடைபயின்ற எனக்கு
எருமையில் எமன் வருவது
ஏன் என்று தெரியவில்லை
படிகள் ஒவ்வொன்றாய் நானிறங்க
பக்குவமாய் என் பின்னே
அவனும் வந்தான்
சீரான கதி சீரற்று மாறியதில்
சிறப்பாகவே நானும் பின்தள்ளப்பட்டேன்

'சடார்' என்ற சத்தம்
அமைதிக்கு இடியாக
மாடியில் எப்படி மரங்கள் சாத்தியம்
மனதின் கேள்விக்கு விழிகள் விடை தேட
விறைத்துப் போன ஒருடல்
என் காலருகே அதன்
விழிகள் எங்கோ முறாய்த்தன
ஒருவேளை
காலிடறவைத்த காலனைத்தானோ

வாடிக்கையான வேடிக்கைப் படலம்
விதிவிலக்காய் நானும் தோழியும்
தூக்கமுயன்றும் தோல்வியே
உதவி கோரிய பின்
இரு உள்ளங்கள் ஈரமாயின
தூக்கிய வேளை சொட்டிய உதிரம்
எந்தத் தாயின் தாய்ப்பாலோ

இறுதியில் மனதின் கேள்விக்கு
மூளையின் பதிலோ
மரத்துப் போன மனித நெஞ்சங்கள் மட்டுமே

கட்டுரை

ராஜேஸ்மணாளன்

# உலக்கையும் உளிப்பிடியும்



விளையாட்டுத் துறை ஒவ்வொன்றிலுமே 'அசாத்திய வீரர்கள்' என்று பலர் வந்து போகிறார்கள். எத்தனை வருடங்கள் கழிந்தாலும், அவர்கள் எம் மனங்களை விட்டு அகல்வதேயில்லை. குத்துச் சண்டை விளையாட்டை எடுத்தால், மொகமட் அலி என்று தன் பெயரை மாற்றிக் கொண்ட காஸ்ஸியஸ் கிளே என்ற "வண்ணத்துப் பூச்சி குத்துச்சண்டை வீரரை" எப்படி ஒரு ரசிகரால் மறக்க முடியும்? காற்பந்தாட்டம் பக்கம் சென்றால், மிக இலாவகமாக விளையாடி பலர் மனதையும் கொள்ளை கொண்ட பிரேசில் வீரர் பீலே நம் மனங்களை விட்டு அகல மறுப்பவர். மின்னல் வேகத்தில் ஓடி, ஒலிம்பிக் விளையாட்டுக்களில் பதக்கங்களைக் குவித்த கார்ல் லூயிஸ் என்ற கறுப்பின அமெரிக்கரின் மின்னல் வேக ஓட்டத்தை யார்தான் மறப்பார்? டென்னிஸ் மட்டையை இலாவகமாகப் பிடித்து எதிராளிகளைப் பந்தாடிய செக் நாட்டு டென்னிஸ் வீராங்களை மார்ட்டீனா உங்கள் ஞாபகத்திற்கு வருகிறாரா? கோல்ப் விளையாட்டில் அமெரிக்கரான டைகர் வுட்ஸ், மீன் குஞ்சு போல மிக இலாவகமாக நீந்தி , உலகின் அதி சிறந்த நீச்சல் வீரராக ஜொலித்த அமெரிக்கரான மிக்கெயில் பெல்ப்ஸ், நீண்ட தூர ஓட்டப் பந்தயங்களில் நான்தான் ராஜா என்று புகழ்பெற்ற சோமாலி நாட்டவரான மொகமட் பாரா (இப்பொழுது சேர் பட்டம் பெற்ற பிரிட்டன் பிரஜை)....... இப்படி நீள்கின்றது பட்டியல்



**கிரிக்கெட் உலகின் இராட்சதர்கள்**

இப்படி விளையாட்டு உலகின் நட்சத்திரங்களை பட்டியலிட்டால், அது தொடர் சங்கிலி




யாக நீண்டு கொண்டே போகும். இங்கே நாம் இன்றைய மே.இந்திய கிரிக்கெட் அணி பக்கம் நம் பார்வையைத் திருப்புவோம்.

மே.இந்தியத் தீவுகள் தனித்துவமான இசைக்கு மட்டும் பிரபல்யமானவை அல்ல. கிரிக்கட் என்றதும் சட்டென ஞாபகத்திற்கு வருபவர்கள் ஆஜானுபாகுவான தோற்றம் கொண்ட மே.இந்திய கிரிக்கெட் வீரர்கள்தான். அந்த அளவுக்கு ஒரு காலத்தில் கொடிகட்டிப் பறந்தது இவர்கள் இராஜ்யம். சமீபத்தில் நடந்து முடிந்து விட்ட இரு டெஸ்ட் போட்டி அணிகளிலும் இவர்கள் இந்தியாவிடம் "வாங்கிக் கட்டிக் கொண்ட"தோரணையைப் பார்க்கும்போது, அட கடவுளே என்று தலையில் அடித்துக் கொள்ளத்தான் முடிகின்றது. எனது பள்ளிக் காலத்தில் அதாவது 50 வருடங்கள் பின்னோக்கி நகர்ந்தால், பார்படோஸ் தீவுக்காக விளையாடிய வெஸ்லி ஹால் என்ற நெடுத்த தோற்றம் கொண்ட மே.இந்திய கிரிக்கட் வீரர் உங்கள் முன் வருவார். 1958 தொடக்கம் 1969 வரை விளையாடிய இவர் களத்தில் இறங்கினால், துடுப்பாட்ட வீரர்களுக்குப் பயங்கரந்தான். இவர் பந்து வீசும்போது, இவர் கையசைவைப் பார்த்தே, துடுப்பாட்ட வீரர்கள், பந்து எங்கே நிற்கிறது என்றுகண்டு பிடிப்பார்களாம். அந்த அளவு வேகமாக பந்து வந்து விழும்.

றோகன் கன்ஹாய் என்ற ஓட்டங்கள் குவிக்கும் இயந்திரத்தை எவர் மறப்பார்? அதிசிறந்த தொடக்க ஆட்டக்காரரான கோர்டன் கிரீனிட்ஜ் எப்படி நம் மனதை விட்ட கல்வார்? இன்றுவரையில் இவர் டெஸ்மன்ட் ஹெயின்ஸ் என்பவருடன் இணைந்தாடியவைதான், உலகின் அதி சிறந்த ஆரம்ப ஆட்ட ஜோடி ஆட்டங்கள் என்ற பெயரைப் பெற்றுள்ளன. சேர் பட்டம் பெற்றவரும் முன்னாள் அணித் தலைவருமான ஸோபேர்ஸ் என்ற ஒப்பற்ற துடுபபாட்ட வீரரைப் பற்றி ஒரு புத்தகமே எழுதலாம். 1983 வரை விளையாடிய இன்னொரு மின்னல் வேக பந்து வீச்சாளர் அன்டி றொபேர்ட்ஸ், 1985 வரை விளையாடிய இன்னொரு பிரபல்யமான அணித் தலைவர் கிளைவ் லொயிட்ஸ், 1991இல் ஓய்வு பெற்ற விவ் றிச்சார்ட்ஸ் என்ற துடுப்பாட்ட மந்திரவாதியாரை விடுவது யாரைச் சேர்ப்பது? குழப்பமே மேலிடுகின்றது.

அன்டி றொபேர்ட்ஸ், மிக்கெயில் ஹோல்டிங், மல்கம் மார்ஷல், ஜோயல் கார்ணர், கொலின் குறொப்ட் இந்தப் பந்து வீச்சுப் படை வந்தால், எதிராளிகள் படை துவம்சந்தான். சந்தனக்காட்டு வீரப்பன் போல, எண்பதுகளில்,தொண்ணூறுகளில் "கிலியூட்டும் கிரிக்கெட் வீரர்களாக " இருந்தவர்கள், இன்று "மிதிபடும் வீரர்களாகி" இருப்பது ஏற்புடையதல்ல!

**போய்விட்ட பொற்காலம்**

இந்த அணியினரது பொற்காலம் என்று 1976க்கும் 1995க்கும் இடைப்பட்ட காலத்தைத் துணிந்து சொல்லி விடலாம். இந்தக் காலகட்டத்தில் தாம் விளையாடிய 137 டெஸ்ட் போட்டிகளில் 71 மோதல்களை இவர்கள் வென்றுள்ளார்கள். 18 மோதல்களில் மாத்திரமே தோல்வியைத் தழுவி இருக்கிறார்கள். கோக்லியின் தலைமையிலுள்ள இன்றைய இந்திய அணியினருக்கு தற்போதைய காலம் பொற்காலாக இருப்பது போல, மேற்கிந்திய அணிக்கு அந்தக் காலம் அப்பொழுது பிரகா சித்துள்ளது. "கலிப்ஸோ மன்னர்கள்" என்று செல்லமாக அழைக்கப்பட்ட இவர்கள் எண்பதுகளிலும், தொண்ணூறுகளின் நடுவிலும் 31 டெஸ்ட் போட்டிகள் விளையாடி 21 மோதல்களில் வென்றுள்ளார்கள். ஒன்றேயொன்றில் மாத்திரம் தோற்றார்கள் என்று அறிய வரும்போது, அவர்களின் அன்றைய அசுர பலம் உங்களுக்கு நன்றாகவே புலனாகி இருக்கும். "கிவிஸ்" என்ற செல்லப் பெயர் கொண்ட நியூசிலாந்து அணியே இவர்களை அப்பொழுது தோற்கடித்திருந்தது. மார்ஷல், கார்னர் என்ற அசுரப் பந்துவீச்சாளர்கள், எதிராளிகளைப் பந்தாடிய உச்சக்கட்ட காலம் அது.

**ஒரு நாள் ஆட்டத்திலும் மன்னர்கள்தான்**

டெஸ்ட் போட்டிகளில்தான் நின்று நிதானமாக ஆடி ஓட்டங்கள் குவித்தார்கள் என்றில்லை. இடையில் புகுந்த ஒருநாள் ஆட்டங்களிலும் இவர்கள் கைவரிசை நன்றாகவே தெரிந்தது. 1975,1979ஆம் ஆண்டுகளில் உலக வெற்றிக் கிண்ணத்தை வென்றது ஒருபுறமிருக்க1979-1995 காலகட்டத்தில் விளையாடிய 270 ஒருநாள் ஆட்டங்களில் 173ஆட்டங்களில் வெற்றி நாயகர்கள் இவர்கள்தான்! இந்தக் காலகட்டத்தில் அணிக்கு தலைமை தாங்கிய விவியன்றிச்சார்ட்ஸ் என்பவர் களத்தில் புகுந்தால், எல்லாமே தலைகீழாக மாறிவிடும்!!!

**வியாபாரப் பொருளாக மாறிவிட்ட கிரிக்கெட்**

தொண்ணூறுகள் தொடக்கம் கிரிக்கெட்குறிப்பாக ஒரு நாள் கிரிக்கெட் ஒரு வர்த்தகப் பண்டமாக மாறி விட்டது கொடுமையிலும் கொடுமை. பணம் கொட்டும் இயந்திரம் என்று நன்றாக அறிந்து, ஒருநாள் ஆட்டத்தை உப கண்டத்திற்கு, 1996 இல் இழுத்து வந்த பெருமை ஜக்மோகன் டல்மியா என்ற இந்திய(கல்கத்தா) வர்த்தக பிரமுகரையே சார்கிறது. உழைப்பிற்காக விளையாடும் நிலை கிரிக்கெட்டில் நிலைகொள்ள ஆரம்பித்தபோது, மே.இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையும் ஆட்டம் காணத் தொடங்கியது. எமது திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கவில்லை என்று அணிவீரர்கள் குரல்கொடுக்க, பல் இழந்த வேட்டைச் சிங்கங்களின் நிலைதான் உருவாகிற்று. 2000மாவது ஆண்டுகளில் ஒப்பந்தப் பிரச்சினைகள் தலைதூக்கலாயின. பணம் பந்திக்கு வரத் தொடங்கி விட்டது. இதன் விளைவாக சிதறியது பலமான மேற்கிந்திய அணி.

**பூனையாகிய யானை**

ஐ.பி.எல் என்ற இந்தியன் பிரிமியர் லீக் ஒரு தங்கச் சுரங்கமாகியது. அன்றைய காலத்தில் தங்க வேட்டைக்குப் புறப்பட்டதுபோல, உலக நாட்டு வீரர்கள் பலர் இதனால் ஈர்க்கப்பட்டு, இந்தக் களததில் குதித்தனர். மே.இந்திய அணி வீருகள் பணமுடை காரணமாகவே , தங்கள் கிரிக்கெட் சபையுடன் முரண்பட்டுக் கொண்டதால், இந்த வாய்ப்பை அவர்கள் நழுவலிடத் தயாராக இல்லை. கிரிஸ் கெயில், பிராவோ, பொலார்ட், சமி, போன்ற சிறந்த விரர்கள், ஐபிஎல் நட்சத்திரங்களாகியது நாமறியாத கதை அல்ல. இன்று இவர்கள் இந்திய அணியிடம் படு மோசமாகத் தோல்வியைத் தழுவியிருக்கலாம். ஆனால் இது அவர்கள் முடிவல்ல. இன்றும் கூட அவர்களது ரி20 அணி மிகச் சிறப்பானதாக இருந்தாலும், டெஸ்ட் அணியும், 50 பந்துப்பரிமாற்றங்களுக்கான அணியும் நிலை குலைந்து போயிருக்கின்றன. இலங்கை அணி இன்று பல பிரச்சினைகள் காரணமாக சீர்குலைந்து இருப்பது போல, இவர்கள் அணியும் மோசமான நிலையில் இருக்கின்றது.

ஆனால் மீண்டும் கட்டியெழுப்ப முடியாத அணி இவை என்று நாம் ஒதுக்கி விட முடியாது. சாம்பரிலிருந்து உயிர்த்தெழுந்து, புத்துயிர் பெறும் பீனிக் போல, இவர்ள கிரிக்கெட் புத்துயிர் பெற வேண்டும்.1928இல் டெஸ்ட் போட்டிகள் விளையாடும் அங்கீகாரத்தைப் பெற்ற ஓர் அணி, 90 வருடங்கள் விளையாடி விட்டு, ஒரேயடியாச் சுருண்டு விட முடியுமா? கூடவே கூடாது.... யானைக்கு ஒரு காலம் பூனைக்கு ஒரு காலம் என்பார்கள். யானையாய் இருந்தவை பூனைகளாகத் தான்றுவதால், யானைகள் பூனைகளாகி விடலாமா? இந்த அற்புத அணி மீண்டும் திரண்டு பலம் மிக்க ஆனைகளாக மிளீர வேண்டும் என்பதே இரசிகர்கள் விருப்பம்!





மாதவிடாய் என்பதை இந்த ஆன்மிக இயக்கத்தின் நிறுவனரான பங்காரு அடிகளார் இயற்கையான ஒன்றாகவும். எல்லா உயிர்களுக்கும் பொதுவான ஒன்றாகப் பார்க்கவேண்டும் என்றும் வலியுறுத்துகிறார். எல்லாப் பெண்களும் எல்லா நாள்களிலும் கருவறைக்குள் சென்று வழிபாடு செய்யலாம் என்று வரவேற்கிறார்.


# மாதவிடாய்க் காலத்திலும் பெண்களைக் கருவறைக்குள் அனுமதிக்கும் கோயில்

*கேரள மாநிலம் பத்தனம் திட்டாவில் உள்ள பிரசித்தி பெற்ற சபரிமலை ஐயப்பன் கோயிலுக்குள் இதுவரை காலமும் ஆண் பக்தர்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டு வந்தனர். பெண்களில் 10வயது முதல் 50 வயதுக்குட்டப்பட்டவர்களுக்குக் கோவிலுக்குள் செல்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. பல ஆண்டுகளாகப் பின்பற்றப்பட்டு வரும் இந்த நடைமுறைக்கு எதிர்ப்புத் தெரிவித்து உச்ச நீதிமன்றத்தில் இந்திய இளம் வழக்கறிஞர்கள் அமைப்பு உள்ளிட்ட பலர் வழக்கு தொடர்ந்தனர்.*

*அந்த வழக்கில் அனைத்து வயதுப் பெண்களையும் சபரிமலைக் கோயிலுக்குள் அனுமதிக்க உத்தரவிட வேண்டும். இது அடிப்படை உரிமைகளுக்கு எதிரானது. பாலின சமத்துவத்துக்கு எதிரானது எனக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. இந்த வழக்கில் தீர்ப்பளித்த நீதிபதிகள் அனைத்து வயதுப் பெண்களையும் சபரிமலை கோயிலுக்குள் நுழைய அனுமதிக்குமாறு குறிப்பிட்டிருந்தனர். இந்த வழக்கை ஐந்து நீதிபதிகள் கொண்ட குழு விசாரித்தது. அதில் தலைமை நீதிபதி தீபக் மிஸ்ரா தனது தீர்ப்பில் "சபரிமலை கோயிலில் நீண்ட காலமாகவே பெண்களுக்கு பாகுபாடு காட்டப்படுகிறது. பெண்கள் பலவீனமானவர்கள் அல்ல. பெண்கள் ஆண்களுக்கு சமமானவர்கள். வழிபாட்டில் பெண்களுக்கு பாகுபாடு காட்டக்கூடாது. சபரிமலை ஐயப்பன் கோயிலுக்குள் அனைத்து வயதுப் பெண்களையும் கட்டாயமாக அனுமதிக்க வேண்டும். கோயிலுக்குள் பெண்களை அனுமதிக்க மறுப்பது சட்டவிரோதம். கோயிலுக்குள் பெண்களை அனுமதிக்க மறுப்பது சுதந்திரம், மரியாதை, பாலின சமநிலைக்கு எதிரானது. இதை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது" எனக் கூறித் தீர்ப்பளித்திருந்தார்.*

**போராட்டம்**

*சபரிமலைக் கோயிலுக்குச் செல்லும் உரிமை அனைத்து வயதுப் பெண்களுக்கும் உள்ளது எனத் தீர்ப்பளித்ததும் தீர்ப்பை எதிர்க்கின்ற பெண்கள் தாங்கள், "மாதவிடாய்க் காலம் முடிவடையும் வரைக் காத்திருக்கத் தயார்" எனக் கூறித் தங்கள் எதிர்ப்பைப் பதிவு செய்யத் தொடங்கினர். கேரளாவில் பல்வேறு இடங்களில் பெண்கள் எதிர்ப்புப் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். இன்னும் பல அமைப்புக்கள் கட்சிகளாலும் பல இடங்களில் போராட்டங்கள் இடம் பெற்று வருகின்றன. இந்த விடயத்தை மேற்கோள் காட்டி வெளியாகியிருக்கும் கட்டுரை இது.*



சபரிமலை ஐயப்பன் கோயிலில் வயது வித்தியாசமில்லாமல் பெண்களை அனுமதிக்க வேண்டும் என இந்திய உச்சநீதிமன்றம் தீர்ப்பு அளித்திருந்தாலும், மாதவிடாய் ஏற்படும் வயதில் உள்ள பெண்களை அனுமதிக்க முடியாது என பா.ஜ.கா. ஆதரவு அமைப்புகளைச் சேர்ந்த பெண்கள் போராடிவருகின்றனர். ஆனால், தமிழ்நாட்டில் உள்ள புகழ் பெற்ற மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி கோயில் கிட்டத்தட்ட அரை நூற்றாண்டாகப் பெண்களைக் கருவறைக்குள் அனுமதிப்பது மட்டுமின்றி, அவர்களையே அபிஷேகம், பூசை செய்யவும் வைக்கிறது. எல்லாவற்றுக்கும் மேலாகப் பெண்கள் மாதவிடாய்க் காலத்திலும் அந்தக் கோயிலுக்குள் முழுச் சுதந்திரத்துடன் வலம் வரலாம் என்று கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**கோவில் உருவான வரலாறு**

மேல் மருவத்தூரில் உள்ள ஒரு வேப்ப மரத்தில் பால் வடிந்ததாகவும், அதன் பிறகு அந்த மரம் வீழ்ந்து அதன் அடியில் ஒரு சுயம்பு லிங்கம் வெளியில் வந்ததாகவும் கூறி அந்த இடத்தில் அருள்வாக்குச் சொல்லத் தொடங்கினார் உள்ளூரில் பள்ளி ஆசிரியராக இருந்த ஒருவர்.

அந்த இடத்தில் ஓர் ஆதிபராசக்தி கோயிலும் உருவானது. இந்த இடம் அதன் பக்தர்களால் ஆதிபராசக்தி சித்தர் பீடம் என்று அழைக்கப்படுகிறது. இந்த வழியைப் பின்பற்றும் பக்தர்கள் ஒருவரை ஒருவர் பால் வேறுபாடு இல்லாமல் சக்தி என்றே அழைத்துக்கொள்கின்றனர். சென்னை - விழுப்புரம் தேசிய நெடுஞ்சாலையில் உள்ள மேல் மருவத்தூர் என்ற சிறு கிராமம் பல்லாயிரம் பேர் பல மாநிலங்களில் இருந்து வந்து செல்லும் மிகப் பிரபலமான திருத்தலமாக மாறியது. இதெல்லாம் தொடங்கியது 1966ஆம் ஆண்டில்.

**மாதவிடாய் தீட்டு அல்ல**

மாதவிடாய் என்பதை இங்குள்ள ஆன்மிக இயக்கத்தின் நிறுவனரான பங்காரு அடிகளார் "இயற்கையான ஒன்றாகவும், எல்லா உயிர்களுக்கும் பொதுவான ஒன்றாகப் பார்க்கவேண்டும் என்றும் வலியுறுத்துகிறார். எல்லாப் பெண்களும் எல்லா நாள்களிலும் கருவறைக்குள் சென்று வழிபாடு செய்யலாம் என்று வரவேற்கிறார். அப்படிப் பெண்கள் இந்தக் கோயிலின் கருவறைக்குள் சென்று குங்கும அர்ச்சனை, பாலாபிஷேகம் ஆகியவற்றைச் செய்கின்றனர்.

மாதவிடாய் இங்கு தீட்டாகப் பார்க்கப்படுவதில்லை" என்கிறார் அவர்.

உலகம் முழுவதும் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆதிபராசக்தி வழிபாட்டு மன்றங்கள், 56 சக்தி பீடங்கள் ஆகியவை உள்ளன. வழிபாடும் தமிழ் மந்திரங்களை ஓதி நடக்கிறது. மேல் மருவத்தூரில் உள்ள சித்தர் பீடத்தில் சாதி. மத. பாலின வேறுபாடு இல்லாமல் எல்லோரும் கருவறை வரைச் சென்று செய்கிறார்கள்.

"முதல் முதலாக இந்தக் கோயிலின் கருவறைக்குள் சென்றபோது பெரிய ஆச்சரியமாக இருந்தது. மிகப்பெரிய சுதந்திரத்தை அனுபவித்தோம். அதுமுதல் இந்தக் கோயிலுக்கு வருவதை தாய்வீட்டுக்கு வருதைப் போலவே உணர்கிறோம்." என்று இந்தக் கோவிலைச் சென்று வழிபடும் பெண்கள் தங்களுடைய அனுபவத்தைப் பகிர்ந்து கொள்கிறார்கள்.

**பாகுபாடுகள் இல்லை**

இங்கே. பாலின வேறுபாடு மட்டுமில்லாமல் வேறு எந்த பாகுபாடும் இல்லை. தென்காசியில் உள்ள சலவைத் தொழிலாளர்கள், துப்புரவுத் தொழிலாளிகள் ஆகியோரும் பேராசியர்களும் ஒரே மன்றத்தில் இருந்தனர். இங்கே வரும் போது அனைவரும் சக்தி என்றே அழைக்கப்படுகின்றனர்.

சாதி வேறுபாடு இல்லாமல் அவர்களும் கருவறைக்குள் வழிபாடு செய்கின்றனர். இந்தக் கோயிலுக்கும் பெண்கள் இருமுடி கட்டி யாத்திரை வருகிறார்கள்.

"இது ஆன்மிகத்தின் மூலம் கிடைத்த 'சுகமான சுதந்திரம்" என்கின்றார் ஒரு பேராசிரியர்.

**தகவல் பி.பி.சி தமிழ்**



(சென்றவாரத் தொடர்ச்சி)

# சமோவா

வாரம் ஒரு நாடு


கட்டுரை
ஏ.ஜே.ஞானேந்திரன்



**பச்சை குத்தும் பழக்கம் உண்டு**

ஆண் பெண் என்ற பேதமின்றி இரு பாலாரும் தம் உடம்பில் பச்சை குத்திக் கொள்கிறார்கள். ஆண்கள் முழங்காலுக்கு மேலே இடுப்பு வரையிலும் பெண்கள் முழங்காலிலிருந்து தொடை வரையிலும் பச்சை குத்திக் கொள்ளும் வழக்கம் காணப்படுகிறது. இரண்டு பாலாரின் பச்சை குத்துதலுக்கும் இவர்கள் மொழியில் தனித்தனிப் பெயருண்டு. முக்கியமான கலாச்சார முறைகளை வழங்குபவர்கள் என்ற முறையில் பெண்கள் ஆண்களை விட அதிகம் மதிப்பளிக்கப் படுகிறார்கள்.

பாய்கள், மரப்பட்டையால் செய்யப்பட்ட ஆடைகள், போன்றவற்றைப் பெண்கள் ஆண்களுக்கு வழங்க, ஆண்கள் கழுகுகளின் சிகப்பு இறகுகள், மர வேலைப்பாடு நிறைந்த பொருள்கள் போன்றவற்றைப் பெண்களுக்குக் கொடுக்கிறார்கள்.



மரப்பட்டைகளிலான ஆடை 'சியாப்போ' என்று அழைக்கப்படுகின்றது. இது பிஜித் தீவிலுள்ள மஸி எனப்படும் ஆடை வகையைச் சேர்ந்தது. ஒருவகைச் சாயத்தின் உதவியுடன் ஆபரணங்கள், தாவர வகைகள், கடல் சிப்பிகள், நண்டுகள், ஆமைகள், மீன் இனங்கள், போன்றவற்றைச் சித்திரமாக வரையும் பழக்கம் இவர்களிடமுண்டு. கடல் சிப்பிகள், தும்பு போன்றவற்றைப் பயன்படுத்தி அலங்காரப் பொருள்கள் செய்வதுண்டு. பரம்பரையாகத் தொடரும் தமது நாட்டு வைத்தியத்தை முதல் உதவியாகச் செய்யும் பழக்கம் இருக்கின்றது.

**'அவா' கொண்டாட்டம்**

பதவியேற்பது தொட்ககம் பல முக்கிய நிகழ்வுகளின்போது இந்த அவா கொண்டாட்டச் சடங்குகள் இடம்பெறுகின்றன.

இந்தச் சடங்குகளின்போது மரத்தாலான ஒரு கிண்ணம் (ரனோவா) எப்பொழுதுமே இடம்பெறும். ஏனைய பொலினீசிய சமூகத்தினரிடையே காவா என்ற பெயரால் இந்த வட்ட மரக் கிண்ணம் அழைக்கப்படுகின்றது. அவா கொண்டாட்டத்தில் தாவரத்திலிருந்து தயாரிக்கப்படும் ஒரு வகைப் பானத்தை இரவிரவாக இவர்கள் பருகுவதுண்டு. கொண்டாட்டங்களின்போது, அங்கு வந்துள்ளவர்களின் பதவி வரிசைப்படிதான் இந்தப் பானம் குடிப்பதற்குக் கொடுக்கப்படும். மேற்குப் பசுபிக் பிராந்தியத் தீவுகளெங்கும் இந்தப் பானம் குடிக்கப்பட்டு வருவதாக அறியப்படுகின்றது. இது சிரட்டை யில் ஊற்றப்பட்டு, குடிக்கக் கொடுக்கப்படுகின்றது.

**பாரம்பரிய நடனம்**

இந்துக் கடவுளான சிவபெருமானுக்கும் இவர்களுக்கும் இடையில எந்தத் தொடர்பும் இல்லை. ஆனால் 'சிவா' என்றே இவர்களது பாரம்பரிய நடனம் அழைக்கப்படுகின்றது. பெண் வடிவிலான இது மென்மையான அசைவுகளைக் கொண்டதாக இருக்கும். இசைக்கேற்ப கால்களதும், கைகளதும் அசைவுகள் மாற்றம் காணும். 'சாசா' என்பது, மேள ஒலிக்கேற்ப, ஒரு குழுவாக ஆடப்படும் நடனம். உட்கார்ந்து கொண்டே ஆடப்படுவது. ஆண்கள் இசையின் பின்னணி இன்றி ஆடும் நடனமொன்றும் இருக்கின்றது.

சமோவா கலாச்சார நடனங்களில் மேற்கத்தையக் கலாச்சாரம் கலந்து சிதைபடாமல் இன்றும் தனித்துவம் கொண்டதாக இருப்பதைப் பெருமையோடு சொல்லிக் சொல்லிக் கொள்கிறார்கள்.

கிராமத் தலைவர் அல்லது அவரது மனைவி கலந்து கொண்டு ஆடுவது முக்கிய பங்கேற்கிறது. பொதுவாகப் பிறந்த தின, திருமண வைபவங்களில் 'ரவ்வாலுகா' என்ற வகை நடனங்களைக் காண முடியும்.

**றக்பி யூனியன் விளையாட்டுப் பிரியர்கள்.**


றக்பி யூனியன் என்றழைக்கப்படும் றக்பி குழு 1991ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து உலகக் கோப்பையைப் பெற்றுவரும் புகழ்பெற்ற குழுவாகும். மேலும் குத்துச் சண்டை, குஸ்திச் சண்டை, உதைக்கும் குத்துச் சண்டை, சுமோ போன்ற விளையாட்டுகளிலும் கவனம் செலுத்தி வருகின்றனர். இந்தத் தீவெங்கும் றக்பியை விரும்பி விளையாடி வருகிறார்கள். உலகில் சிறந்த ரக்பி அணிகளில் முதல் 20 என்ற பட்டியலில் சமோவா அணியும் உள்ளடக்கம்.

ஒலிம்பிக் விளையாட்டுக்களில் பங்கேற்று பதக்கங்கள் பெற்றவர்களும் இங்கிருக்கிறார்கள். 2016இல் ஒலிம்பிக்கில் விளையாடிய 'றக்பி7' தொடரில் இவர்கள் அணி, வெள்ளிப்பதக்கம் பெற்றிருக்கின்றது.

**எப்படி இருக்கின்றது பொருளாதாரம்?**

காலத்துக்குக் காலம் ஆட்டிப் படைக்கும் வலிமையான புயல்கள் இவர்களுக்கு அழிவை உண்டாக்க வல்லவை. விவசாய ஏற்றுமதிகளையே இவர்களின் பொருளாதாரம் நம்பி இருக்கின்றது. சமோவாவின் முக்கிய விளைச்சலாகத் தேங்காய் உள்ளது. தேங்காய் எண்ணெய், தேங்காய் கிரீம், கொப்பரைத் தேங்காய், ஆகியன திறமையாகச் செய்யப்பட்டு ஏற்றுமதியாகின்றன. மேலும் வாழைப்பழம், கொக்கோ, சொக்லெட், கோப்பிக் கொட்டை, இறப்பர், அன்னாசிப் பழம் ஆகியவையும் விளைகின்றன உல்லாசப் பயணத்துறையும் வளர்கிறது.


நியூசிலாந்து வர்த்தக விடயத்தில் பெரியதொரு கூட்டாளி. வெளிநாடுகளில் வதிகின்ற சமோவா வாசிகள் பெருந்தொகையான பணத்தைத் தமது நாட்டுக்கு அனுப்பி வருகிறார்கள். நாட்டு அபிவிருத்திக்கென்று சீனா, ஜப்பான், ஆஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய நாடுகள் இணைந்து சுமாராக 28 மில்லியன் டொலர் நிதி உதவியை ஆண்டாண்டு அனுப்பி வருகின்றன. எனவே இது வறுமையான நாடல்ல.



## தண்டனை

அன்பே
நான்
ஆயுள் தண்டனை
அளித்தால்தான்
நீ - என்
இதயவறையில்
சிறையிருக்கிறாய்
தயவு கூர்ந்து
மேன்முறையீடு
செய்துவிடாதே

கவிதை
விவேகானந்தூர் சதீஸ்



சிறுகதை

இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன்

# இத்தால் சகலரும் அறிய வேண்டியது என்னவென்றால்...

## [உங்கள் பழைய மூக்குக் கண்ணாடிகளை கவனமாக வைத்திருங்கள்]

அடர்த்தியான மாமரங்கள் நிறைந்த சூழலில் அந்தச் சனசமூக நிலையம் இருந்தது. ஒழுங்கைக் கரையோரம் தூர்ந்து போன கிணறு சகிதம் பெயர் அழிந்த கோலத்தில் சனசமூக நிலையம்.

அதன் ஒரு புறத்தே தகரக் கூரை வேய்ந்த நூல் நிலையம். அரைக் குந்துடன் கூரைத் தகரங்கள் உக்கியிருந்தாலும் வேறு பழைய தகரங்களை மேலதிகமாகச் செருகியிருந்தனர்.

அந்தச் சிறு துண்டு நிலம் முழுக்கச் சொப்பிங் பைகள். கழிவுத்தாள்கள் எனப் பரவிக் கிடந்தன. நாங்கள் அந்த இடத்துக்கு வந்தபோது காலை எட்டரையாகிவிட்டது.

அவனை அழைத்துப் போவதாகச் சொல்லியிருந்த தாஸ் ஒன்பது மணிக்குப் பிறகுதான் வருவான். வீட்டில் நின்று என்ன செய்வது என்று மனம் சலித்துப் புறப்பட்டிருந்தான்.

எப்போதும் புறுபுறுத்துக் கொண்டு இருக்கும் மனைவி. பிள்ளைகள் மூன்று பேருக்கும் ஏதோ வழி செய்து பள்ளிக்கூடம் அனுப்பிவிட்டார்.

வெறும் சாயத் தண்ணியுடன் தங்களின் பிரச்சினையும் முடிந்துவிட்டது. தாஸை வீட்டுக்கு வரச் சொல்லியிருக்கலாம். அவரை வீட்டில் உபசரித்து வரவேற்பது என்பது கஸ்டமான காரியம் என்பதால் இந்த மாமரத்தடியில் சந்திக்க முடிவாயிற்று.

தாஸ் இப்போது இருக்கும் இடம் அல்லது சொந்த இடம் இல்லை. வன்னிதான் அவனது தாய் நிலம். அதே இடம் இன்னமும் விடுவிக்கப்படாத படியால் முகாமில் இருந்து யாழ்ப்பாணம் வந்துவிட்டான்.

தெரிந்த நண்பர்கள் துணையால் ஒரு வளவின் அடிக் கோடியில் மாடு கட்டப் பாவித்த ஒரு கொட்டகையில் வாழச் சந்தர்ப்பம் கிடைத்தது.

அவனது சொந்த வீடும் அப்படியான ஒரு வசதியான ஒரு வீடல்ல. பின்னர் 2008 இல் இருந்து இடம்பெயர்ந்து திரிந்த காலங்களில் எல்லாம் தறப்பாளின் கீழ். களிமண்ணின் மேலும். சுடு மணலின் வெம்மையிலும் வாழ்ந்து அனுபவப்பட்டபடியால் இந்த இடத்தில் வாழ்வது ஒன்றும் புதினமானதாக இருக்கவில்லை.

தாஸுக்குச் சொந்தமாக ஒரு தொழிலும் தெரியாது. எந்த வேலையிலும் தொடர்ச்சியாக நிலைக்க முடியாததால் ஒரு தொழிலிலும் சிறப்புத் தேர்ச்சி பெறமுடியவில்லை.

படிக்கும் காலத்தில் தமிழ் பாடத்தில் கொஞ்சம் நாட்டம் இருந்தது. வாசிக்கும் பழக்கமும் இருந்தது. அதனால் என்னவோ அவனுக்குப் படிப்பித்த ஆசிரியர் ஒருவர் அவனை அந்தப் பணிமனையில் சேர்த்துவிட்டார்.

"தமிழ் எழுத்துப் பிழை திருத்துவாய்தானே?"

"ஏதோ கொஞ்சம்" துணிந்து ஓம் என்றால் தங்கள் புரூவ்ரீடராகி அவன் சேர்ந்துகொண்டது அப்படித்தான். வேலைக்குச் சேர்ந்த புதிதில் எழுத்துக்கள் தெளிவாகத் தெரியாத காரணத்தால் கண் மருத்துவரிடம் போக வேண்டியதாயிற்று.

தனது சொந்த முயற்சியினால் கஸ்டப்பட்டு வவுனியா ரவுணுக்குப் போய்க் கண்ணாடி வாங்கிக் கொண்டு வந்தான்.

அங்கு வேலைக்குச் சேர்ந்த பின்னர் தான் அங்குள்ள ஆசிரிய பீடத்தைக் கவனிக்கத் தொடங்கினான்.



பத்திரிகையைப் பார்ப்பதும். வானொலியைக் கேட்பதுமாக அவர்கள் செய்திகள். கட்டுரைகள் எழுதிக் கொண்டிருந்தனர்.

அதொன்றும் கஸ்டமான வேலையாகப்படவில்லை. எனவே ஓய்வு நேரங்களில் தாஸ் ஆசிரிய பீடத்தில் பணிபுரிய ஆரம்பித்தான்.

*** *** *** *** *** ***

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் உச்சநிலை பெற்றிருந்த அந்தப் புறச்சூழலில் அந்த விடுதலைப் போராட்டத்தை உந்தித் தள்ள மக்களை விழிப்படையச் செய்யும் பணியில் அவன் பணிபுரிந்த நிறுவனத்தின் வெளியீட்டு முயற்சிகள் இருந்தன.

தன்னை நிலைநிறுத்த தான் பணிபுரியும் நிறுவனத்தில் வெளியீடுகளில் நிறுவாகக் கருத்துக்களுக்கு ...... தொனியில் முக்கியத்துவம் கொடுத்தால்தான் மேலே எழும்பமுடியும் என முடிவு செய்தான்.

அரசியல் பரப்புரைக் கூட்டங்கள், தலைவர்களின் பேச்சுகள்.நூல் நிலையங்கள் .. அரசியல் புத்தகங்கள் என அவன் தனது இறகுகளை விரித்தால் தூக்குமேடை பஞ்சுமெத்தை உடல் உயிர் இரண்டும் போராட்டத்துக்கு என்ற மாதிரியான கட்டுரைகளை எழுதத் தொடங்கினான்.

அவன் வேலை செய்யும் நிறுவனம் பிரதான வீதியில் இருந்து கிளைவிரித்துச் செல்லும் பாதையில் பத்து நிமிட நடைக்குப் பின்னர் சிறு காட்டுக்குள் இருந்தது. வீட்டில் இருந்து நடந்து போக எப்படியும் அரை மணித்தியாலம் வேண்டும்.

துணிப்பையைத் தோலில் போட்டவாறு நடக்கத் தொடங்கி பணிமனை போய்சேர களைப்பு வந்துவிடும். "ஒரு சைக்கிள் கேட்டுப் பாருங்கோ. யாழ்ப்பாண இடப்பெயர்வில் சனங்கள் விட்டிட்டு வந்த சைக்கிள்கள் அவையிட்டைத்தான் இருக்கு" என்ற கோரிக்கை வைத்தாள் தங்களின் மனைவி.

தங்கனுக்கு அது சரியாகத்தான் பட்டது என்றாலும் சந்தர்ப்பம் வரும்போது பார்ப்பம் என இருந்துவிட்டான். ஒரு தடவை அவன் எழுதிய கட்டுரை பொறுப்பாளரால் பாராட்டப்பட்டமையால் அடுத்த சில நாள்களில் ஒரு சைக்கிள் அவனுக்குக் கிடைத்தது.

2009 மே 16ஆம் திகதி வட்டுவாகலில் இடம்பெயர்ந்த போது கைவிட்டு வந்த பொருள்களில் அந்த சைக்கிளும் அடக்கம்.

தங்கன் நூல் நிலையத்துக்குள் போனான். தூசு படிந்த மேசையில் இரண்டு பத்திரிகைகள் இருந்தன. இரண்டு வாங்குகள் கையொடிந்தபடி நூல் நிலையத்துள். ஏராளமான வெற்று பிளாஸ்ரிக்கள். அங்கிருந்து பார்க்கும்போது சனசமூக நிலையத்தில் ஒரு பக்கச் சுவர் தெரிந்தது.

அதில் தோற்றம் மறைவுக் குறிப்புக்களுடன் ஒரு வீரவணக்கப் படம் இருந்தது. ஆனால் .... பெரும்பகுதி வர்ணங்கள் பொருக்குக் கிளம்பி அழிந்துவிட்டன.

மோட்டார் சைக்கிள் ஒன்று சட்டென வந்து நின்றது. ஹெல்மட்டைக் கழற்றியபடி தாஸ் இறங்கினான்.

"என்ன ரெடியோ" எனக் கேட்டான்.

"ஓமோம்"

"உம்மைப் பற்றி எல்லாம் வடிவாய் சொல்லிப்போட்டன். உனது பழைய ஆட்கள்தான் கனபேர் வேலை செய்யினம். அவை கேட்கிறதுக்கு எல்லாம் ஓம் எண்டு சொல்லவேணும்".

"சரி"

தோளில் கொழுவும் துணிப்பையும் வட்டுவாகலில் கைவிடப்பட்டதால் புதிதாக ஒரு தோல் பையை வாங்கியிருந்தான் தங்கன். புதிய இடத்துக்கு புதிதாகப் போக வேண்டும் என்ற நினைப்பு வரவே அணிந்திருந்த மூக்குக் கண்ணாடியைத் தொட்டுப்பார்த்தான். வட்டுவாகலில் கைவிட்ட பலவற்றில் இப்போது மிச்சமாக இருப்பது மூக்குக் கண்ணாடி மாத்திரம்தான். "பழைய கண்ணாடி! எட மடையா பழைய மூக்குக் கண்ணாடியோடை போனால் அவங்கள உன்னை நம்புவங்களே. உதையும் வட்டுவாகலில் ஏன் தூக்கிப்போட்டிட்டு வராமல் வந்தனீ" எனத் தாஸ் சத்தம் போட்டான்.

"அப்ப மூக்குக் கண்ணாடிக்கு என்ன வழி"

"அவசரப்படாதே அவர்கள் புதுக் கண்ணாடி தருவாங்கள். அதைப் போட்டுக் கொண்டுதான் பார்க்கவேண்டும்" தாஸ் பதில் சொன்னான்.

தங்கன் தான் போட்டிருந்த மூக்குக் கண்ணாடியை கழற்றி லெதர் பாக்குக்குள் வைக்க முனைந்தான். பிறகு அந்தச் செயற்பாட்டை மாற்றிக் கொண்டு மூக்குக் கண்ணாடியை . உட் சுவர் விளிம்பில் வைத்தான்.

*** *** *** *** *** ***


புதிய இடத்தில் 'தாஸ்' துள்ளித் திரிந்தான். அங்கு வேலை செய்த பலரையும் தாஸ் தான் வேலைக்குச் சேர்த்ததாக தங்கனுக்கு அவன் சொன்னான்.

சிறிது நேரக் காத்திருப்பின் பின்னர் புதிய நிறுவனத்தின் மூத்த அதிகாரியின் சந்திப்பு நடந்தது.

"பழையவற்றை நீங்களும் மறந்துவிடுங்கள். நாங்களும் மறந்துவிடுகின்றோம். ஆனால் பழையவர்கள் மேல் இருந்த விசுவாசத்தைவிட எங்களிடம் அதிக விசுவாசம் காட்டவேண்டும்".

மூத்த அதிகாரி தெரிவித்த கருத்தின் உட்பொருளை தங்கன் முற்றுமுழுதாக உணர்ந்துகொண்டான். "இனிமேல் இந்த மூக்குக்கண்ணாடியைத்தான் பாவிக்க வேணும்' என்ற கண்டிப்பான உத்தரவுடன் மூத்த அதிகாரியால் தடித்த 'லென்ஸ்' கொண்ட மூக்குக் கண்ணாடி தங்கனுக்கு தரப்பட்டது.


43



**புதிய கண்ணாடியை அணிந்த உற்சாகத்தில் அடுத்த நாள் தொடக்கம் வேலைக்கு வர வேணும் என்னும் எண்ணத்துடன் பொக்கற்றினுள் இருந்த பழைய மூக்குக் கண்ணாடியை தூக்கி நடைபாதையில் இருந்த குறோட்டன் செடிகளுக்குள் எறிந்தான். அது போய் விழுந்தது. கூடவே ஒருவகை அச்சமும் பற்றிக் கொண்டது. எறிந்த கண்ணாடிகளையெல்லாம் பாதுகாப்பாக வைத்தால் என்ன?**

தொகுப்பு
அனார்கலி

# தென்கிழக்கு திசையில் இருந்து...



## கூச்சல், குழப்பம்



கல்முனை மாநகரசபையின் மாதாந்த சபை அமர்வு கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றபோது, இந்து ஆலய விவகாரம் தொடர்பில், தமிழரசுக்கட்சி உறுப்பினர்களுக்கும் மேயர் ஏ.எம்.றகீபுக்குமிடையில் ஏற்பட்ட வாதப் பிரதிவாதங்கள் பெரும் கூச்சல் குழப்பமாக மாறியதுடன் சபை அமர்வு இடைநடுவில் மேயரால் முடிவுறுத்தவும் பட்டது.

சபை ஆரம்பமான காலம் முதலே ஒவ்வொரு மாதாந்த அமர்வுகளிலும் இத்தகைய களேபர நிலையே ஏற்படுவதால் அமர்வுகளை இடைநிறுத்துவதும் (இடைநடுவில் நிகழ்ச்சி நிரல் முடியாமல்) முடிவுறுத்துவதும் வழக்கமாகியுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற சபை அமர்வில் தமிழரசுக் கட்சி உறுப்பினர் சாமுவேல் சந்திரசேகரம், கல்முனை தமிழ் உப பிரதேச செயலக வளாகத்தில் நிர்மாணிக்கப்படும் இந்து ஆலயம், சட்டவிரோதமான கட்டடமென தெரிவித்து நீதி மன்றத்தில் தொடரப்பட்டுள்ள வழக்கு விவகாரமாகப் பேச முற்பட்டபோது, அதற்கு மேயர் அனுமதி மறுத்ததாலேயே ஏனைய தமிழரசுக் கட்சி உறுப்பினர்களும் இணைந்து மேயருடன் பெரும் வாதப் பிரதிவாதங்களில் ஈடுபட்டனர்.

அமைதியின்மை தொடர்ந்ததால் சபை அமர்வை முடிவுறுத்தி வெளியேறியார் மேயர் றகீப்.

**கல்முனை மாநகர சபையே, உன் தலைவிதி இதுதானோ?**

## வகிபாகம்

கல்முனை மாநகர சபையின் மாதந்த சபை அமர்வு கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றபோது, ஒரு கட்டத்தில் தமிழரசுக் கட்சி உறுப்பினர் ஹென்றி மகேந்திரனும், மேயர் ஏ.எம்.றகீபும் பிரதேச தமிழ்-முஸ்லிம் உறவில் விரிசலை ஏற்படுத்த முனைவதாக பரஸ்பரம் குற்றம்சாட்டிக்கொண்டனர். மேயரின் தன்னிச்சையான செயற்பாடுகள் சில கல்முனைப் பிரதேசத்தில் தமிழ்-முஸ்லிம் உறவில் விரிசலை ஏற்படுத்துவதற்கு ஏதுவாக அமைந்துள்ளதாக உறுப்பினர் ஹென்றி மகேந்திரன் கூறினார்.

பதிலுக்கு, "தமிழ்-முஸ்லிம் உறவில் விரிசல் ஏற்படும் வகையில் செய்யப்படுபவர்கள் யார் என்பது மக்களுக்குத் தெரியும். இதுவிடயத்தில் தங்களது வகிபாகம் என்னவென்பதும் மக்களுக்குத் தெரியும்" எனப் பட்டெனக் கூறினார் மேயர் றகீப்.

**மக்களை வாழ விடுங்கள்**

## ஏட்டிக்குப் போட்டி

கிழக்கில் நிர்மாணிக்கப்பட்ட ஒலுவில் துறைமுகம் மக்களுக்குப் பெரும் பிரச்சினைக்குரிய விடயமாக மாறியுள்ளது.

ஒலுவில் பிரதேசம் உட்பட்ட நிந்தவூர் போன்ற அயல் பிரதேசங்கள் சில கடலரிப்பினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதுடன் மீனவர்களுக்கும் இந்தத்துறைமுகத்தால் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

தற்சமயம் இத்துறைமுக வாயிலில் குவிந்துள்ள மணலை அகற்றி மின்பிடிக்கு உதவுமாறு ஒரு சாரரும், மணலை அகற்றினால் கடலரிப்பு உக்கிரமடையும் எனவே அகற்ற வேண்டாமென மற்றொரு சாராரும் ஏட்டிக்குப் போட்டியாக ஆர்ப்பாட்டப் பேரணிகளையும், போராட்டங்களையும் நடத்தி வருகின்றனர்.

துறைமுகத்தை மூடிவிடுவதே மேலானது என்ற குரலும் ஒலித்து வருகின்றது.

**தீர்வுதான் என்னவோ?**

## மலிவு, மலிவு மீன் மலிவு

அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களில் கடந்த சில வார காலமாகக் கடல் மீன்பிடி அமோகமாக இடம்பெற்று வருவதால் இந்த மாவட்டத்தில் மீனின் விலை பெரு வீழ்ச்சி அடைந்துள்ளது.

குறிப்பாக கரைவலை மின்பிடியாளர்களுக்குத் தினமும் பெருமளவில் மீன்கள் பிடிபடுவதால் இந்த விலை வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. குறிப்பாக கீரி, பாரைக்குட்டி போன்ற இன மீன்கள் ஒரு கிலோ நூறு ரூபாவுக்கு விற்பனையாவதுடன் சில சமயம் இரண்டு கிலோ 150 ரூபாவுக்கும் மலிவாக விற்பனையாகி வருகின்றன.





## பின்னர் தோற்கடியுங்கள்


கல்முனை மாநகரசபையின் மாதாந்த சபை அமர்வு கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றபோது அமர்வுக்குத் தலைமை வகித்த மேயர் ஏ.எம்.றகீப், 2019ஆம் ஆண்டுக்கான சபையின் வரவு செலவுத்திட்டம் தயாரிக்கவேண்டியிருப்பதால் உறுப்பினர்களைத் தமது முன்மொழிவுகளை இதற்கெனத் தருமாறுகோரினார்.

இதன்போது எதிரணி உறுப்பினர்கள் பக்கம் திரும்பிய மேயர் றகீப் "நீங்கள் இப்பொழுது முன்மொழிவுகளைத் தாருங்கள். பின்னர் வரவு செலவுத் திட்டத்தைத் தோற்கடியுங்கள்" என ஹாஸபுயமாகக் கூறினார்.

**சபையில் சிரிப்பொலி கிளம்பியது.**

## நிதி ஒதுக்கீடு

கல்முனை மாநகர சபைக்குட்பட்ட பாண்டிருப்பு தமிழ்க் கிராமத்தின் கடற்கரை வீதி அபிவிருத்திக்கென ஒன்பது மில்லியன் ரூபா நிதியை நகரத்திட்டமிடல் நீர்வழங்கல் அமைச்சரும் முஸ்லிம் காங்கிரஸின் தலைவருமான ரவூப் ஹக்கீம் ஒதுக்கியுள்ளார். கல்முனை மாநகரசபை ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினர் புவனேஸ்வரி விநாயகமூர்த்தி விடுத்த கோரிக்கையின்பேரில் இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



கட்டுரை

க.நா.சபாரத்தினம்

# நல்லிணக்கத்துக்கான பாதை...?

நல்லிணக்கம் என்பது வேறுபாடின்றி, ஏற்றத்தாழ்வின்றி, வெறுப்பின்றி, அன்புடன், சமநிலையில் ஒருவருடன் ஒருவர் இணங்கிச் செயற்படும் ஒரு சூழல் எனக் குறிப்பிடலாம். ஒருவரைவிட மற்றவர்கள் பொது இடங்களில் சலுகைகளை எதிர்பார்த்தலாகாது. ஒருவர் பெறும் சலுகை மற்றவர் மனங்களை பாதித்தல் ஆகாது. இதன்போதே இணக்கம் ஏற்படும். சமுதாயச் சூழலில் பிறந்து வாழும் ஒவ்வொரு மனிதனும் உலகிலுள்ள தம்மால் பங்களிக்கக் கூடிய விடயங்களின் உரிமைகள், ஏனைய சலுகைகளைப் பாகுபாடின்றிப் பெற அனுபவிக்க தன் தகைமைகளைப் பாவித்துச் செயற்பட உரித்துடைவரானவர். அதற்கு இடையூறாகத் தகைமை, அறிவு, ஆற்றல், முயற்சி தவிர்ந்த முரண்பாட்டை உருவாக்கக் கூடிய ஏனைய காரணிகள் இருந்துவிடக்கூடாது.

### பாகுபாடு

இனம், மதம், மொழி, பால்நிலை போன்ற காரணிகளால்; ஒருவருக்கு ஏதாவது உரிமைகள் மறுக்கப்படுமாயின் அங்கே நல்லிணக்கம் உருவாக முடியாது. அத்தோடு வசதிகள், பணம், பலம் என்பன தடையாக இருத்தலாகாது. கல்வித்தகைமை குறிப்பிட்ட முயற்சிக்கான உழைப்பு ஆகிய தகைமைகளைக் கொண்டு ஒவ்வொருவரும், நாட்டின் சகல பிரசைகளும் அனுபவிக்கும் உரிமைகளுக்குத் தடை இருத்தலாகாது. மனிதன் என்ற வகையில் ஏற்றம் இறக்கம், கூடுதல் சலுகை குறைந்த சலுகை முன்னுரிமை, சம சந்தர்ப்பம் வழங்கத் தடை ஆகிய காரணிகள் நல்லிணக்கத்துக்கு உரிய பாதையாக அமையமாட்டாது. ஒருவர் தனது முயற்சி மூலம் கல்வி, உடல் உழைப்பு, சுயஅறிவியல் ஆற்றல் என்பன மூலம் உலகிலுள்ள எந்தத் தொழில் மூலமும் எந்தப் பதவியையும் எந்த வருமானத்தையும் குறுக்குவழியின்றிப் பெற்றுக் கொள்ளத் தடை இருத்தலாகாது. அவருடைய முயற்சிக்கு இடையூறான காரணிகள் அமையும்போது, அவர் அதிருப்தியாளர் ஆகின்றார். அதற்காகத் தன்னை முழுமையாகச் சமுதாயத்திலிருந்து இணைந்து போக மறுக்கின்றார். இதன்போது பிணக்கு ஏற்படுகின்றது. இவை அதிகமாக மதம், இனம், மொழி போன்ற விடயங்களில் ஏற்படுவது அவதானிக்கப்பட்டுள்ளது.

### மதபோதனை

எந்தவொரு மதமும் மற்றவர்களுடைய மனதைப் புண்படுத்தக்கூடிய கொள்கைகளை முன்வைப்பதில்லை. அவை தர்மம், சாந்தி, சமாதானம், மனிதாபிமானம், நல்லிணக்கம் என்பவற்றையே போதிக்கின்றன. சில சமயவாதிகள் மட்டும் ஏனைய சமயங்களைவிட முன்னுரிமை தேவை என வாதிடுகின்றனர். இவர்களது கூற்று அவர்கள் சார்ந்த சமயத்தின் எந்தவொரு பகுதியிலும் முன்வைக்கப்படுவதில்லை. இருப்பினும் எம்மை முன் செல்லவிடுங்கள். எமக்கே கூடுதல் உரிமை எனக் குறிப்பிடுவது தமது சமயக் கொள்கைகளைச் சிதைப்பதற்குச் சமமாகும். இது அவர்களால் உணரப்படுவதில்லை. மற்றவர் மனநிலை பாதிக்கப்பட்டாலும் மன உளைச்சலுக்கு ஆளானாலும் நாம் முன்னிலையில் நிற்போம் எனச் சிந்திக்கும் நிலமை அவர்களை அவர்களது சமயத்திலிருந்து விலக்கி வைக்கப் போதுமானதாகும். குறிப்பிட்ட மதபீடங்களில் நியாயாதிக்கச் சபைகள் இருப்பின் இவர்களை இனங்கண்டு மதச் செயற்பாட்டில் இருந்து ஒதுக்கி வைப்பது சிறந்தது. மதமாற்றம்போன்ற செயல்களில் சிலர் செயற்படுவதும் சில மதங்களில் உண்மையில்லை எனவும் நாம் கடைப்பிடிக்கும் மதமே உண்மையானது எனவும் வதந்திகளைப் பரப்பில மதமாற்ற முயற்சிகளை மேற்கொள்வது நல்லிணக்கத்தைப் பாதிக்கும். தெய்வம் எனப்படுவது எமக்கு மேலாக ஒரு சக்தி என்பதும் ஒவ்வொரு சமயத்தினரும் அவரவர் பின்பற்றும் தத்துவங்களையும் அடையாளங்களையும் மனதிலிருந்து வழிபடுவது வழமையாகும். இந்த நிலையில் ஒன்றுக்கு மேற்பட்ட தெய்வம் உண்டு என எவரும் நினைத்தலாகாது.

மனிதன் என்பவன் இறைவனது படைப்பு. அவனைத் தெய்வங்கள் "என் பக்கம் வா! என் பக்கம் வா!" என அழைப்பதில்லை. தெய்வம் ஒன்றே, அதன் அருவ, உருவ, அருவுருவ வழிபாட்டு முறையில் அந்தந்த மத வழிகாட்டல் வேறுபடும். தெய்வங்கள் பல இருந்தால் அவை அரசியல்வாதிகள் போல சண்டையிட்டு உலகமே அழிந்துவிடும். ஒன்றே தெய்வம் ஒருவனே தேவன் என்னும் தத்துவம் உண்மையானதாகும். இதைச் சகலரும் ஏற்றுக் கொள்ள வேண்டும். இதன்போது முரண்பாடுகள் வளர இடமில்லை. சிலர் சமயங்களில் உள்ள பற்று அதிகரிப்புக் காரணமாகத் தாங்கள் சார்ந்த சமய விடயங்களை முன்னிலைப்படுத்த முயற்சிப்பதும், அவை தமது சமயத்துக்குப் பெருமை என நினைப்பதும் மதப்பித்தை உருவாக்குகின்றது. இவையே குரோதம், துன்பம், துரயம் ஏற்பட வழிவகுக்கின்றது. இப்படியான செயற்பாடுகளைத் தூண்ட எந்த மதபோதனைகளும் தத்துவங்களும் அறிஞர்களும் கூறவில்லை. ஒரு பகுதியை மிகைப்படுத்தி அதைப் பிரபல்யமாக்க மற்றவர்கள் மனதைப் புண்படுத்தி செயற்படும் செயற்பாடு என்பது சிலரின் தவறான சிந்தனையின் வளர்ச்சி, அறிவின்மை எனக் கூறினாலும் மிகையாகாது. எந்த ஒரு செயற்பாடும் மற்றவர் மனதை புண்படுத்துவதாக அமைந்துவிடல் கூடாது. இதனையே மதபோதனை செய்யும் மதத்தலைவர்கள் வலியுறுத்தவேண்டும். இதுவே உண்மையான சமயம். இதில் சேருங்கள் எனக் கூறி மதமாற்றம் முயற்சிகள் கொலைக்கு சமமாகும். மதபோதனையாளர்கள் நற்சிந்தனைகளை போதிப்பதோடு ஏனைய மதம் சார்ந்தவர்களை மதித்து நடத்தல் வேண்டும்.

### முரண்பாட்டு நிலமைகள்

சமயம் சார்ந்த தலைவர்கள், சமயம் சாராத அரசியல் போன்ற நடவடிக்கையில் ஈடுபட்டால் ஆன்மிகச் சிந்தனை உள்ள மனித சமுதாயம் குழப்பமடையும். அரசியல் என்பது அதிகார ஆசை நிறைந்ததும் முரண்பாடுகள் நிறைந்ததும் ஒருவரை ஒருவர் கண்டிப்பதும் குரோதங்களைத் தூண்டுவதாகவுமே அமைந்து வருகிறது. எந்த ஒரு அரசியல் குழுவும் 100 வீதம் சமுதாயம் ஏற்றுக் கொள்ளும் தத்துவங்களைக் கொண்டிருப்பதில்லை. விகிதாசார வித்தியாசங்கள் இருக்கவே செய்யும். இதன்போது ஒருவரை ஒருவர் ஏற்றி, இறக்கிப் பேசும் நிலமைகள் ஏற்படும். இதை மதத் தலைவர்கள் செய்யும்போது முழுமையாக இல்லாவிடினும் குறிப்பிட்ட விகித மக்கள் மனதில் அவர்களை மதத் தலைவர்களாகப் பார்க்க முடியாமலிருக்கும். இதனால் மதத் தலைவர்கள் தங்கள் மதிப்பு, மரியாதையை இழக்க வேண்டியிருக்கும். எந்த ஒரு நபரும் (மதத் தலைவர்கள் உட்பட) அரசியலில் ஈடுபட தடையில்லை. ஆனால், உயர் மதிப்பில் உள்ளவரை ஏனைய அரசியல் விடய ஈடுபாட்டில் பார்க்கும்போது அவர் தனக்குரிய மதிப்பை இழக்க வேண்டி ஏற்படும். இதன்போது முரண்பாடுகள் ஏற்படும். இதனைத் தவிர்ப்பதற்கு மதத் தலைவர்கள் அரசியலைத் தவிர்த்து ஆன்மிக வழிகாட்டிகளாக இருந்து மனிதத்தை வளர்க்க முன்வரவேண்டும்.

### சமுதாயப் பொறுப்பு

ஆரம்பக் கல்வியிலிருந்து மனிதன் நற்சிந்தனை, நல்வழிப்படுத்தல், தர்மபோதனைகள் என்பவற்றைப் பெற்றோர்கள், பிள்ளைகளுக்குக் கிடைக்க வழிசெய்வதுடன் அவர்களுக்கு தோன்றக்கூடிய தவறான சிந்தனைகள் இருப்பின் அவர்களை நல்வழிப்படுத்த வேண்டிய பொறுப்பு பெற்றோருடையதாகும்.

பெற்றோர்கள் தமது பிள்ளைகளை நற்பிரசைகளாக வளர்க்க முயற்சிப்பதுபோல் சமுதாயத்தில் உள்ள அறிஞர்கள், கல்விமான்கள், சமய வழிகாட்டிகள், அரசியலில் ஈடுபடுவோர் அனைவரும் மனிதனை மனிதன் என மதிக்கும் செயற்பாட்டைத் தோற்றுவிப்பதற்காக உள சுத்தியோடு செயற்பட்டு ஒருவரை ஒருவர் நேசிக்கும்போது ஒருவர் கூடுதலாக அனுபவிக்க வேண்டும். ஒருவர் குறைவாக அனுபவிக்க வேண்டும் என்ற சிந்தனை அழிந்துவிடும்.

### அரசியல் விடயங்களில்





### நல்லிணக்கத்துக்குரிய தடைகள்

அரசியல் விடயங்கள் எனப்படும்போது சமூகம், சமயம், இனம், மதம், மொழி, பிரதேசம் எனச் சமஉரிமை மறுக்கப்படுதல் என்பதே முக்கியமானதாகும். இதன்போது கூடுதல் உரிமைகள், சமஉரிமை வழங்க முடியாது என்ற கருத்துக்கள் ஒரு சாரரால் முன்வைக்கப்படுவதும் அதை ஏற்கமுடியாது எனக் கூறி உரிமைகள் மறுக்கப்படுபவர்கள் எதிர்வாதம் செய்வதும் தமது உரிமைகளைப் பெறுவதற்கு முயற்சிப்பதும் பிணக்குநிலைச் சூழலாகும். இவற்றில் இணக்கச் சூழலை உருவாக்கும்போது எல்லோரிடத்தி லும் மனநிலை மாற்றங்கள் ஏற்படும். இது பெரிய விடயமாக இல்லாது விடினும் அதை எல்லோரும் விரும்ப மாட்டார்கள். இதில் குறிப்பிட்ட விகிதத்தினரின் செயற்பாடே நல்லிணக்கத்துக்குரிய தடைகளாகும். இதற்கான காரணிகளில் ஒன்று அரசியல்வாதிகள் ஒவ்வொரு பதவிகளிலும் இருப்பதற்குக் காலவரையறைகள் தடை இல்லாது இருப்பதாகும். காலவரையறை இருக்குமாயின் தத்தம் பதவிக்காலத்தில் ஏதாவது நல்ல விடயங்களைச் செய்து பெயர் பெற்று விலக விரும்புவார்கள்.

மறுபுறம் மறுக்கப்படும் உரிமைக்காகப் போராடுவோம் எனப் பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் ஒரு பகுதி அரசியலில் ஈடுபடுவார்கள். இதுவே அரசியல் வரலாறுகள் ஆகும். அவர்களும் காலகதியில் தங்களுக்குள் வேற்றுமைகளை வளர்த்துக் கொண்டு கோஷ்டி கட்டுவார்கள். இப்படியான சூழல் வளர்ச்சி ஏற்படும்போது உரிமைப் போராட்டம் வெற்றியடைய முடியாது. இவை அரசியலில் ஈடுபடும் நூறு வீத மாணவர்களையும் விமர்சிப்பதல்ல. குறிப்பிட்ட விகிதத்தினர் (ஒருவீதம் இருந்தால் போதும்) செயற்பாட்டால் ஊர் இரண்டுபடுவது போல் நிலமை தவிர்க்க முடியாததாகும்.

### நாம் வாழும் சூழலைத் திரும்பிப் பார்ப்போம்

நல்லிணக்கம் என்பது அரசியல் சூழலில் அரசியல்வாதிகளால் மட்டுமல்லாது சமுதாயச் சூழலிலும் பொது அமைப்புக்களை நோக்குமிடத்து ஒவ்வொரு கிராம மட்டத்திலும் பல கிராம இணைப்பு மட்டத்திலும் இணைந்து செயற்படுவோம். கூடி உழைப்போம் என ஆரம்பிக்கப்படும் பொது அமைப்புக்கள், ஆலய நிர்வாகங்கள் ஏனைய நிறுவனங்களில் சில காலகதியில் ஆகக் குறைந்தது 5 வருடங்களாவது ஒற்றுமையாக இருக்கமாட்டார்கள்.

### காரணிகள்

எமது பிரதேசத்தில் எமக்குத் தெரிந்தவர்கள் கூட உள்ளார்கள். நாம் இதற்குள் ஒரு கோஷ்டி கட்டலாம் அதிகாரங்களை நாமே வைத்துக் கொள்ளலாம். பதவிகளை இந்த வட்டமே பிடித்துக் கொள்ளலாம் என்ற சில அரசியல்வாதிகளின் மனோநிலை போன்ற சில அமைப்புக்கள் இல்லாமலில்லை. இவை எப்படி அந்தச் சமூக அமைப்பில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும்? எப்படி அந்த அமைப்பு வளர்ச்சி பெறும். இது மனித சமுதாயத்துக்குப் பிடித்த சாபக்கேடாகும். இதனாலேயே சில பொதுஅமைப்புகள் ஆரம்பித்த இலக்குகளை அடைய முடியாது சிதைந்து சின்னாபின்னமாகின்றன.

அரசியல் அணுகுமுறை ஆரம்பகாலம் தொடக்கம் தற்காலம் வரை நாட்டில் ஏற்பட்ட நிலமைகள் நியாயமான, நியாயமற்ற செயல்முறைகள் அதனால் ஏற்பட்ட விளைவுகள் இதன்போத ஏற்பட்ட செயற்கை உயிரிழப்புகள், சொத்தழிவுகள் என்பவற்றால் மனித சமுதாயம் அனுபவித்த துன்பங்கள் தொடராதிருக்க, எதிர்காலச் சமுதாயம் அமைதியாக இருக்க வழி ஏற்படுத்த வேண்டும். இற்கான ஒரு முயற்சியே நல்லிணக்கம் எனக் கூறலாம். இதை அடைவதற்கு எத்தனை தடைகளை விலக்கி எவ்வளவு தூரம் பயணிக்க வேண்டும்? இதில் யார் யார் பங்குகொள்ளவேண்டும்? எதிர்கால சமுதாயமாவது அமைதியாக வாழ வேண்டும்? என்பதற்கான பாதை கண்டுபிடிக்கப்பட்டால் அதுவே நல்லிணக்கத்துக்கான பாதையாகும். இவை அரசியல்வாதிகளால் உருவாக்கப்படும் என எண்ணுவது எந்தளவில் பூர்த்தியாகும் எனக் கூற முடியாது. ஏனெனில் சில விடயங்களுக்குப் பலகாலமாகத் தீர்வுகாண முடியாதவர்களாகவே இவர்கள் உள்ளார்கள்.

சூரியகாந்தி
ஞாயிற்றுக்கிழமை 21/ஒக்ரோபர் /2018

கட்டுரை

சந்திரசேகர ஆசாத்

## தமிழர்களின் உரிமைப் போராட்டத்தில்

# அகிம்சைப் பாதை

மகாத்மாகாந்தியின் 150ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு இலங்கையின் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட ஒத்திவைப்புப் பிரேரணை மீதான உரையில், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க் கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் வெளியிட்ட ஒரு கருத்து மிக முக்கியமானதாகப் பார்க்கப்படுகிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரான நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் அந்த உரை தொடர்பாகக் கருத்து வெளியிடும்போது எதிர்க் கட்சித் தலைவரின உரை வியப்பில் ஆழ்த்திவிட்டதாகவும் அவர் மிகவும் மன வேதனையுடன் அதைக் கூறியதாகவும் தெரிவித்திருந்தார்.

அவர் தனது உரையில் 1977ஆம் ஆண்டு தாங்கள் வடக்குக் கிழக்கில் நாடாளுமன்றத் தேர்தலில் பெரும் வெற்றி பெற்றிருந்ததாகவும் ஒரு ஆசனத்தைவிட ஏனைய சகல ஆசனங்களையும் தாங்கள் கைப்பற்றியதாகவும் அன்று அரசுக்கு எதிராக வடக்குக் கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றிணைந்து அகிம்சை வழியில் போராடியிருந்தால், தாம் சுயாட்சியைப் பெற்றிருக்க முடியும் எனவும் அதேநேரம் பெரியளவிலான இழப்புக்களையும் தவிர்த்திருக்கலாம் எனவும் தெரிவித்திருந்தார்.

**சுய விமர்சனமா? புலிகள் மீது சேறு பூசும் செயலா?**


இது அன்றைய தமிழ்த்தலைமைகள் அவர் உட்பட செய்யத் தவறியமை தொடர்பான சுய விமர்சனமா? அல்லது விடுதலைப்புலிகளதும், அவர்களின் அர்ப்பணிப்பும் தியாகமும் கொண்ட நேர்மையான விடுதலைப் போராட்டம் தொடர்பாக மறைமுகமாகச் சேறு பூசும் நோக்கம் கொண்டதா? என்ற சந்தேகங்கள் எழுகின்றன. அதாவது அகிம்சை ரீதியில் பேராடிப் பெறக்கூடிய சுயாட்சியைப் போராளிகள் ஆயுதம் ஏந்திப் போராடி இல்லாமல் செய்து விட்டார்கள். பேரழிவுகளை ஏற்படுத்தி விட்டார்கள் என்ற வகையிலான குற்றச்சாட்டா? எனவும் கேள்வி எழுகிறது.

**அரசியல் தரப்பினர் முன்னெடுத்த அகிம்சையும் அதன் செயற்பாட்டுத் தன்மையும்**

1977ஆம் ஆண்டில் இடம்பெற்ற தேர்தல் வெற்றியின் பின்பு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அகிம்சைப் போராட்டத்தை நடத்தவில்லையா? தனிநாட்டுக் கோரிக்கையை வலியுறுத்தித் துண்டுப் பத்திரிகை விநியோகித்தமைக்காகத் தமிழர் விடுதலைக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கைதுசெய்யப்படவில்லையா? அரசமைப்பின் 6ஆவது திருத்தத்துக்கு ஏற்ப சத்தியப்பிரமாணம் செய்யாமையால் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவிகளை இழந்தமையை இல்லையென்று சொல்லமுடியுமா? ஆனால் அதன் பின்பு அவர்களின் போராட்டம் தொடரவில்லை. ஒரு கொடிய ஆயுத அடக்குமுறையின் முன் அகிம்சைப் போராட்டம் செயலிழந்து போனதுதான் வரலாறு. இன்னொருபுறம் தனிநாட்டுக் கோரிக்கையைத் தேர்தல் கோஷமாக முன்னெடுத்தபோதும் அதிலிருந்த உத்வேகம் அதற்காகப் போராடுவதில் இவர்களிடம் இருக்கவில்லை. என்பது மட்டுமல்ல அதற்காக உயிரைக் கொடுத்து அர்ப்பணிப்புடன் பணியாற்றுவதற்கும் அரசியல் தரப்பினர் தாயாராக இருக்கவில்லை. அத்தகைய தலைமையில் இரா.சம்பந்தனும் ஒருவராக இருந்தார். அத்தோடு தலைவர் அமிர்தலிங்கத்துக்கு மிகவும் நெருக்கமானவர் என்பதையும் மறந்துவிட முடியாது. அப்படியான ஒருவர் இப்போது இப்படிச்சொல்வது ஒரு சுயவிமர்சனம்போல் தோன்றலாம். அப்படி இது ஒருசுயவிமர்சனமென்றால் ஏன் அந்தத் தவறு இன்னும் திருத்தப்படவில்லை? இனியாவது திருந்தப்படுவதற்கான முன்முயற்சிகள் ஏன் எடுக்கப்படவில்லை?

**தற்போது மக்கள் முன்னெடுக்கின்ற அகிம்சைப் போராட்டங்களில் கூட்டமைப்பின் வகிபாகம் ஏன் இல்லை?**

2010ஆம் ஆண்டுத் தேர்தலில் 1977ஆம் ஆண்டுத் தேர்தல்போலவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மக்கள் தமது ஒருமித்த ஆதரவுடன் வெற்றிபெற வைத்தனர். ஆரம்பத்தில் வலி.வடக்கு, சம்பூர்



ஆகிய பகுதிகளில் படையினரால் அபகரிக்கப்பட்ட தமிழ் மக்களின் காணிகளை விடுவிக்கக்கோரிச் சில போராட்டங்கள் நடத்தப்பட்டன. அவற்றுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்களிப்பும் வழங்கப்பட்டது. அவற்றுக்கு எதிராகச் சில மிரட்டல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டாலும் இராணு ஒடுக்கு முறைகள் எதுவும் நேரடியாக மேற்கொள்ளப்படவில்லை. ஆனாலும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் போராட்டம் நீதிமன்றங்களுக்குள் முடக்கப்பட்டது. அவற்றுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அகிம்சைப் போராட்டங்கள் முடிவுக்கு வந்துவிட்டன. கேப்பாப்பிலவு, புதுக்குடியிருப்பு, மணலாறு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தமது காணிகளை விடுவிக்கக்கோரி ஈடுபட்டுவரும் போராட்டங்கள், காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான போராட்டங்கள், அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பான மக்களின் போராட்டங்கள் தொடர்ந்தும் அறவழியிலே இடம்பெற்று வருகின்றன. உண்மையிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அகிம்சைப் போராட்டத்தில் நம்பிக்கை வைத்தால் மக்கள் முன்னெடுத்து வருகின்ற இத்தகைய போராட்டங்களைத் தலைமையேற்று நடத்தியிருக்க வேண்டும். இவை எமது உரிமைகளை வென்றெடுக்கும் உன்னத போராட்டத்தின் ஆரம்பமாக விரிவடைந்திருக்க முடியும். சுயநிர்ணய உரிமைக்கான வலிமையான மக்கள் போராட்டமாகப் பரிணாமித்திருக்க முடியும்.



ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அந்தப்போராட்டங்களைப் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை.

**அரசியல் கைதிகளின் போராட்டத்துக்கும் பங்காற்றியிருக்கவில்லை**


அரசியல் கைதிகளின் உணவு ஒறுப்புப் போராட்டங்கள் தொடர்பாகக் கூடக் கூட்டமைப்புப் பேச்சுக்களை நடத்துவதும் சட்டவினைஞர்களைக் கேட்பதும் என்ற வட்டத்துக்கு வெளியே வரவில்லை. அரசியல் கைதிகள் ஒரு முறையல்ல பலமுறை சாகும்வரையான உணவுதவிர்ப்புப் போராட்டங்களை அகிம்சை வழியில் நடத்தினர். ஒவ்வொரு முறையும் அரச தரப்பில் சில வாக்குறுதிகள் வழங்கப்பட்டுப் போராட்டங்கள் நிறுத்தப்படும். அவை தொடர்பாகத் தமிழ்தேசியக் கூட்டமைப்பு அரச தரப்புடன் பேச்சுக்களை நடத்தும். சட்டமா அதிபரும் சட்ட விளக்கங்களுடன் வாக்குறுதிகள் வழங்குவார். பின்னர் பேச்சு திசை மாற்றப்படும். சில கைதிகளின் பிரச்சினைகள் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு மேற்கொள்ளப்படும். வழக்குகளில் குற்றங்கள் நிரூபிக்கப்படாத நிலையிலும் சட்டத்தரணிகளின் வாதங்கள் காரணமாகவும் சில கைதிகள் விடுவிக்கப்பட்டதுண்டு. ஆனால் காத்திரமான தங்களின் பேச்சுக்கள் காரணமாகவே கைதிகள் விடு விக்கப்பட்டார்கள். அவ்வாறே மேலும் விடுவிக்கப்படுவார்கள் என அரசுக்கு முண்டு கொடுப்பதுண்டு. இரா. சம்பந்தன்கூட அரசு சில காரியங்களைச் செய்கின்றது ஆனால், மந்த கதியிலேயே செய்கிறதென வெளிநாட்டு ராஜதந்திரிகளிடம் கூறியதுண்டு. எனவே அரசியல் கைதிகளின் போராட்டத்தின் வீச்சு அரச தரப்பால் மட்டுமல்ல தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாலும் திசை திருப்பப்பட்டு மழுங்கடிக்கப்பட்டிருப்பதை நாம் காண முடியும். இந்த நிலையில் 1977ஆம் ஆண்டில் நாம் அகிம்சைப் போராட்டத்தைத் தொடராமல் விட்டுத் தவறிழைத்து விட்டதாகக் கூறப்படும் அவரின் கூற்று எப்படிச் சுயவிமர்சனமாக இருக்க முடியும்?

**அகிம்சையால் சுதந்திரம் கிடைத்ததாக வரலாறு இல்லை**

இன்றுவரை எந்தவொரு நாடோ அல்லது இனமோ அகிம்சைப் போராட்டம் மூலம் விடுதலை பெற்றதாக வரலாறு இல்லை. அப்படி ஒன்றிரண்டு விடுதலை கிடைத்திருந்தால் அதன் பின்னணியில் பெரும் ஆயுத எழுச்சிகள் இருந்தமையை மறுக்க முடியாது. இந்திய விடுதலையிலும் இதுதான் உண்மை.

இந்தியாவின் முதலாவது சுதந்திரப் போராட்டம் என அழைக்கப்படும் ராஜ்பிஹாரி போஸ் தலைமையேற்று நடத்திய சிப்பாய்க் கலவரம், இரண்டாவது சுத்ந்திரப் போராட்டம் என அழைக்கப்படும் கடற்படைப்புரட்சி, சூர்யாசென், கல்பனா தத்தா் தலைமையில் இடம்பெற்ற சிட்டகாங் ஆயுதக் கிடங்கு கைப்பற்றப்பட்ட போராட்டம், பகத்சிங், சந்திரசேகரஆசாத் தலைமையிலான இந்துஸ்தான் சோவிலிஸ்ட் கழகத்தின் தாக்குதல்கள், உட்பட வாஞ்சிநாதன் வா.வே.சு ஐயர், சுப்பிரமணியம் சிவா ஆகியோர் தலைமையில் நடத்தப்பட்ட ஆயுத நடவடிக்கைகள் என இந்திய விடுதலைப் போராட்டத்துக்கு ஒரு வலிமையான ஆயுதப் போராட்ட வரலாறு உண்டு. இரண்டாம் உலகப் போரில் பிரிட்டன் சந்தித்த நெருக்கடிகள் சுபாஷ்சந்திரபோஸ் தலைமையிலான தேசிய விடுதலை இராணுவம் பர்மாவைக் கைப்பற்றி இந்தியாவின் மணிப்பூர் வரை முன்னேறிய நிலைமை போன்றவையே இறுதியில் பிரிட்டன் ஆட்சியை இந்தியர்களிடம் ஒப்படைத்துவிட்டு வெளிறேய வேண்டிய நிலைமையை ஏற்படுத்தியிருந்தது.

இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேசிய அளவிலும் பன்னாட்டு அளவிலும் ஒரு பெறுமதிமிக்க கட்சியாக விளங்குகின்றதென்றால் அது விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டமும், அந்தப் போராட்டம் தமிழ் மக்களின் பிரச்சினையை உலகம் முழுவதற்கும் கொண்டு சென்றமையாலேயுமே ஆகும். எனவே அரச தரப்பு எப்படி விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டத்துக்குப் 'பயங்கரவாதம்' என்று சேறு பூசுகிறதோ, அதே பணியைச் செய்வதற்கு முனைவதை விடுத்து எமது சுயநிர்ணய உரிமையைப் பெறுவது தொடர்பாக இதய சுத்தியுடன் செயற்படுவதே தமிழ்மக்களின் ஏக பிரதிநிதிகளின் முன்னுள்ள தற்போதைய தேவையாகும்.



# தனது முதலாவது அத்தியாயத்தை முடிக்கும்

## வடமாகாண சபைக்கு ஒரு பகிரங்க மடல்!




*அன்புடன் வடக்கு மாகாண சபைக்கு...,*
*வணக்கம்!*

இந்த வணக்கம், வடமாகாண சபையின் பேரவை மண்டபத்துக்கு அல்ல! மாறாக எதில் இதுவரை உறுப்பினர்களாக அங்கம் வகித்து விடைபெறும் உறுப்பினர்களான உங்கள் அனைவருக்கும் தான்!
கைதடியில் எழுந்தருளியிருக்கின்ற சிறி கற்பக விநாயகரின் துணைகொண்டு தாங்கள் அனைவரும் நலமே இருப்பீர்கள் என்பது எனது நம்பிக்கை.
வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வாரம் ஒன்றுக்குள் இன்று நாம் கால் பதிக்கின்றோம். அறுபத்தியொரு மாதங்களுக்கு முன் இதே 21ஆம் திகதியில் தான் உங்களை நாம் தேர்ந்தெடுத்திருந்தோம். எதிர்வரும் புதன்கிழமை நடுநிசியுடன், வடக்கு மாகாண சபையின் முதலாம் ஆயுட்காலம் நிறைவடைகிறது. அந்தப் புல்லரிப்பே என்னைக் கடந்த ஐந்தாண்டு காலத்தைத் திரும்பிப் பார்க்க வைத்து இந்த மடலை எழுத உந்தித்தள்ளியது.
வீட்டிலிருந்து சந்தைக்குப் புறப்படுகின்ற தந்தையார் தனக்கெனத் தின்பண்டம் எதையாவது வாங்கி வருவார் என நம்பிக்கையோடு காத்திருக்கும் சிறுமி போலத்தான் நாம் வடக்கு மாகாண சபைக்கான தேர்தலை எதிர்பார்த்து இருந்தோம். இலங்கைக்கு மாகாண சபை முறைமை அறிமுகப்படுத்தப் பட்டபின் வடக்கு - கிழக்கு இணைந்த மாகாண சபைக்கான தேர்தலே முதலில் நடந்திருந்தது. ஆனால்!

**இழுத்தடிக்கப்பட்ட தேர்தல்**


ஒன்றாக இணைந்திருந்த வடக்குகிழக்கு மாகாணங்கள் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பின் படி இரண்டு வேறு நிர்வாக அலகுகளாகப் பிரிக்கப்பட்ட பின் வடக்கு மாகாண சபைக்கான தேர்தல் உடனடியாக நடந்து விடவில்லை. அதை நடத்துவதற்கு ஆர்வம் காட்டவும் இல்லை. மற்றைய மாகாண சபைகளைத் தம்வசம் வைத்திருந்த மஹிந்த ராஜபக்ச, வடமாகாண மக்களின் மனநிலையை அறிந்து இந்தத் தேர்தலை இழுத்தடித்தே வந்தார். கொடுக்கப்பட்ட புற அழுத்தங்கள் ஒருவாறு வடமாகாண சபைத் தேர்தலை 2013ஆம் ஆண்டு செப்ரெம்பர் 21 ஆம் திகதியன்று நடத்த வைத்தன. மக்கள் வாக்குப் பலத்தைக் காட்டினார்கள். இன்றைக்கு மாகாணசபையின் எரிகிற வீட்டு நெருப்பில் எண்ணெய் சேர்க்கவும், பிடுங்கியவற்றை வைத்து இலாபம் பார்க்கவும் தயாராக இருக்கும் கூட்டம், தேர்தலைக் கைவிட்டு ஒதுங்கிக்கொள்ள வைப்பதற்காக உங்களை மாகாண சபை ஆசனங்களில் தைரியத்துடன் அமர்த்த விரும்பினார்கள். தான் உண்டு தன் வேலையுண்டு என்றிருந்தவரையும், நீதிப்பின்புலமும், சட்டஅனுபவமும் எங்களுக்கான இலக்குகளை இலகுவில் வென்றெடுக்க உதவுமென்று நம்பி தலைமையாளராய்த் தெரிந்து விட்டிருந்தனர் தலைமைகள்.

**சத்தியப்பிரமாணத்திலேயே சந்தி சிரித்தது**

நாம் ஒன்றுபட்டுத் தெரிவு செய்து விட்டவர்கள் ஒற்றுமையாக எத்தனை விடயங்களில் உழைக்கப்போகிறார்கள்? என்று மாகாணசபையினரின் நகர்வுகள் சம்பந்தமாக ஊடகங்களைப் புரட்டி உருட்டினால், முதற்கோணலாக வந்திறங்கியது சிதறுதேங்காயாக நடந்த சத்தியப்பிரமாணம். முல்லைத்தீவில் சிலர், முதல்வரும் வேறு சிலரும் கொழும்பில், வவுனியாவில் ஒரிருவர், மீதமானவர்கள் யாழ்ப்பாணத்தில். உங்களைத் தெரிவு செய்து நாங்கள் ஒன்றுபட்டபோதிலும் அந்த ஒரு சம்பவத்தில் நீங்கள் ஒன்றுபடத் தவறியது விளையும் பயிரை முளையிலேயே இனங்காட்டியிருந்தது.

**உள்வீட்டுக் குத்துவெட்டுக்களும் குடுமிப்பிடி சண்டைகளும்**

ஆரம்பத்தில், கொழும்பு அரசின் கட்டுப்பாட்டாலும் மாகாண ஆளுநரின் அதிகாரத்தாலும் தான் மாகாணசபை இயங்காமல் இருக்கிறதென்று விதியை நொந்தபடி நாம் இருந்தோம். ஆனால், ஒவ்வொன்று ஒவ்வொன்றாய் வந்து குதித்த குற்றச்சாட்டுக்கள், கறுப்பாடுகள் சில அடிமடியில் தான் குடியி ருக்கின்றன என்பது எம்மைப் பேரதிர்ச்சிக்கு உள்ளாக்கியது. இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்களும் அதைத் தொடர்ந்த நிலைவரங்களும் இங்கு மீளமொழியப்பட வேண்டிய அவசியமே இல்லை. சொந்தப் பணத்தில் சூனியம் வைத்த கதையை எங்களுக்கு அடிக்கடி ஞாபகமூட்டின உங்களது நடவடிக்கைகள். வந்த காசையும் வகை பிரிக்கத்தெரியாமல் தடுமாறி வழியனுப்பி வைத்ததாகவும் ஆளத்தெரியாமல் தப்புத்தாளம் போடுவதாகவும் தெற்கு அடிக்கடி கைகொட்டிச் சிரித்தது. நீங்கள் மறுத்தீர்கள். அபிவிருத்தி சார் ஆக்கபூர்வக் கூட்டங்களுக்கு மாகாண சபைக்கு அழைப்பிதழ் தந்தால் புறக்கணிப்புச் செய்வீர்கள். அழைப்பிதழ் தராவிட்டால், ஏன் எங்களை அழைக்கவில்லை என்று அதிக்குதி போடுவீர்கள்.



எதிர்வரும் 24ஆம் திகதி, 134ஆவது தடவையாக வும் கடைசியாகவும் கூடவிருக்கும் நீங்கள், இது வரை நடந்த அமர்வுகளில் 19நியதிச் சட்டங்களை யும் 437 பிரேரணைகளையும் நிறைவேற்றி யிருக்கிறீர்களாம். இதில் எவையெல்லாம் நீங்கள் ஆசனத்தை விட்டு அகலும் முன்பே பலன் தந்தன என்பதும் ஆசனத்தை விட்டு அகன்ற பின்பும் பலன் தருவன என்பதும் உங்களுக்குத் தான் வெளிச்சம், அடியேனுக்கு இருள்!

**உத்தியோகத்தர்களாகிய உறவினர்கள்!**

உறுப்பினர்களுக்கான ஒதுக்கீட்டை உரியவாறு பகிர்ந்தளித்துள்ளீர்களோ என்று தேடிப்பார்த்தல் உங்களுடைய உறவினர் பலரும் உங்களைச் சுற்றிய உத்தியோகத்தர்களாக வலம் வந்திருக்கிறார்கள்.

**செய்தீர்கள்!**

**ஓடி மறைந்த கடந்த ஐந்தாண்டில் நீங்கள் நிறைவேற்றிய** பணிகளையும் பெற்றுத்தந்த உதவிகளையும் மறக்கவில்லை. வடமாகாண சபை மீது இருந்த எதிர்பார்ப்பெல்லாம் மங்கி, மழிந்து போனாலும் கண்ணில் படுகிறமாதிரியும் நெஞ்சை உறுத்துகிறமாதிரியும் நீங்கள் புரிந்துவிட்டுப் போகும் அபிவிருத்தித் திட்டங்களை நாங்கள் நன்றியுடன் தான் பார்க்கிறோம்.
நீங்கள் ஆற்றிய கருமங்கள் கதைக்கப்பட்டதை விட, நீங்கள் புரிந்தசர்ச்சைகளும், லீலைகளும் தான் ஊடகங்களுக்குத் தீனியாகின.

**இதுவரை சாதித்தது...?**

எதிர்வரும் 24ஆம் திகதி, 134ஆவது தடவையாகவும் கடைசியாகவும் கூடவிருக்கும் நீங்கள், இதுவரை நடந்த அமர்வுகளில் 19நியதிச் சட்டங்களையும் 437 பிரேரணைகளையும் நிறைவேற்றியிருக்கிறீர்களாம். இதில் எவையெல்லாம் நீங்கள் ஆசனத்தை விட்டு அகலும் முன்பே பலன் தந்தன என்பதும் ஆசனத்தை விட்டு அகன்ற பின்பும் பலன் தருவன என்பதும் உங்களுக்குத் தான் வெளிச்சம், அடியேனுக்கு இருள்!

**அடுத்த தேர்தல் இப்போதைக்கு இல்லை**

விலை அதிகரிப்புக்களாலும் ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி யாலும். ஆடிப்போயிருக்கின்ற அரசு, மாகாணசபைக்கான தேர்தலை எப்போதைக்கு வைக்கப்போகிறதென்பது தொடர்பில் எவருக்கும் வெளிச்சம் இல்லை. ஏற்கெனவே கலைக்கப்பட்ட அவைகள் எல்லாம் காத்துக்கொண்டுதான் இருக்கின்றன. அந்தப் பட்டியலில் இந்த வாரத்திலிருந்து நாங்களும் இணைகிறோம்.
வடமாகாண சபையை முதன்மையான இயங்குதளமாக வைத்துப் பின்னர் கிழக்கு மாகாணசபையையும் இணங்க வைத்து, வடக்குக் கிழக்கு இணைப்புக்கான இராஜதந்திரங்களை நகர்த்தலாம் என்று நாம் மனக்கோட்டை கட்டினால், அதை மணற்கோட்டையாக்கியிருக்கிறது நீங்கள் நடந்து கொண்ட இலட்சணம். தனிநாடு ஒன்றுக்காகக் கர்ப்பம் தரித்துத் தணிந்து போயிருந்த நப்பாசையும் உங்களுடைய நடவடிக்கைகளைப் பார்த்து தானாகவே தகர்ந்து போயிற்று.

**வடிகட்ட வேண்டியும், களையப்பட வேண்டியும் இருக்கிறீர்கள்**


2013ஆம் ஆண்டில் மகாணசபை தொடங்கியபோது இருந்த சிலர் இப்போது மண்ணிலும் இல்லை. மாகாணசபையிலும் இல்லை. அவர்களையும் நினைத்துக்கொள்கிறேன். பிள்ளையார் கல்யாணமாகப் பின்தள்ளியே போனாலும், என்றோ ஒருநாள் அடுத்த மாகாணசபைத் தேர்தல் வரும். உங்களில் சிலரை வடிகட்டி மீண்டும் அனுப்ப வேண்டிய கட்டாயம் எங்களுக்கு உண்டு. கறுப்பாடுகளைக் களையவேண்டியதும் எங்கள் கடமை. இந்தவார நிகழ்வுகள் தமிழ்த் தேசியப் பரப்பில் அதிர்வுகளைத் தோற்றுவித்து, அவை எமது பிரதேச அரசியல் பரிமாணங்களை வடமாகாண சபையின் முதலாம் அத்தியாயத்துக்கு முன், அத்தியாயத்துக்குப் பின் என்று தெளிவாக வேறுபடுத்துமா, என்பது கேள்வியாக இருக்கிறது. உங்களிடமிருந்த அதிகாரங்கள் ஆளுநரிடம் கைமாறும் இந்த வேளையில், அந்த விவகாரம் புதுப்புது இடர்களுக்குத் தோற்றுவாயாக அமைந்துவிடுமோ? என்னும் கேள்வியுடனேயே கைகூப்பிக்கொள்கிறேன்.

*நன்றியுடன்,*
*ஸ்டோ ஸ்வாமி*

கட்டுரை

# வடக்கின் வீழ்ச்சியும் யாழ்ப்பாணத்தின் தாக்கமும்

ந.லோகதயாளன்



2018ஆம் ஆண்டுக்கான தரம் 5புலமைப் பரிசில் பரீட்சையில் வட மாகாணத்தில் 878பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் தோற்றியிருக்கின்றனர். அதில் 458பாடசாலைகளில் இருந்து ஒரு மாணவன் ஏனும் வெட்டுப்புள்ளியைத் தாண்டியிருக்கவில்லை. இந்த வருடம் புலமைப் பரிசிலுக்கு முகம்கொடுத்த பாடசாலைகளில் இந்த எண்ணிக்கை விகிதம் அரைவாசிக்கும் அதிகமாக இருப்பது கவனிக்கத்தக்கது.

இலங்கையில் 99கல்வி வலயங்கள் உள்ளன. இதில் 12கல்வி வலயங்களை மட்டும் கொண்ட வட மாகாணத்தில் எல்லாமுமாக 983 பாடசாலைகள் இயங்குகின்றன. இதில் ஆரம்பப் பிரிவுகளை உடைய 878 பாடசாலைகளில் 2018ஆம் ஆண்டின் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை இடம்பெற்றது. குறித்த பாடசாலைகளில் இருந்த 18 ஆயிரத்து 811 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றினர். இவ்வாறு தோற்றிய மாணவர்களில் 2ஆயிரத்து 240 மாணவர்களே வெட்டுப் புள்ளியைத் தாண்டியுள்ளனர். இவ்வாறு வெட்டுப் புள்ளியை தாண்டிய 2ஆயிரத்து 240 மாணவர்களும் 420பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களே! இதன் அடிப்படையில் வடக்கு மாகாணத்தின் ஏனைய 420 பாடசாலைகளில் இருந்து ஒரு மாணவன்கூட வெட்டுப் புள்ளியைத் தாண்டியிருக்கவில்லை என்பது தெளிவாகின்றது.

### யாழ்ப்பாணத்தின் நிலவரம்

யாழ்ப்பாணக் கல்வி வலயத்திலிருந்து 92பாடசாலைகளைச் சேர்ந்த 2 ஆயிரத்து 789மாணவர்கள் இந்த வருடப் புலமைப் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர். இதில் 45 பாடசாலைகளைச் சேர்ந்த 537 மாணவர்கள் வெட்டுப்புள்ளியைத் தாண்டியிருக்கிறார்கள். 47 பாடசாலைகளில் இருந்து எந்தவொரு மாணவனும் வெட்டுப்புள்ளியைத் தாண்டவில்லை. வலிகாமம் கல்வி வலயத்தில் 124பாடசாலைகளைச் சேர்ந்த 2ஆயிரத்து 606மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றியபோதிலும் 59 பாடசாலைகளைச் சேர்ந்த 309 மாணவர்களே வெட்டுப்புள்ளியைத் தாண்டியுள்ளனர்.

தீவகக் கல்வி வலயத்தில் இருந்து 54 பாடசாலைகளைச் சேர்ந்த 612 மாணவர்கள் பரீட்சை எழுதிய நிலையில் 21 பாடசாலையின் 35மாணவர்களே வெட்டுப் புள்ளியைத் தாண்டியிருக்கிறார்கள். வடமராட்சிக் கல்வி வலயத்தில் 73 பாடசாலைகளைச் சேர்ந்த ஆயிரத்து 505 மாணவர்கள் பரீட்சையில் தோற்றியிருக்க 47 பாடசாலைகளைச் சேர்ந்த 206 மாணவர்கள் மட்டுமே வெட்டுப் புள்ளியைத் தாண்டியுள்ளனர். தென்மராட்சி கல்வி வலயத்தைப் பொறுத்தமட்டில் 54பாடசாலைகளின் 876 மாணவர்கள் புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றியிருக்க, 29 பாடசாலைகளைச் சேர்ந்த 101 மாணவர்களே வெட்டுப் புள்ளியைத் தாண்டியுள்ளனர். 25 பாடசாலைகளில் எந்த மாணவனும் வெட்டுப் புள்ளியைத் தாண்டவில்லை.



### கிளிநொச்சி மாவட்டத்தின் நிலமை

கிளிநொச்சி மாவட்டமானது ஒரேயொரு கல்வி வலயத்தைக் கொண்டது. இங்குள்ள 104பாடசாலைகளில் ஆரம்ப நிலையில் உள்ளவை 94 பாடசாலைகள். இவற்றில் இருந்து 2ஆயிரத்து 752மாணவர்கள் பரீட்சை எழுதிய நிலையில் 68பாடசாலைகளைச் சேர்ந்த 306 மாணவர்கள் வெட்டுப் புள்ளியைத் தாண்டியுள்ளனர். 26 பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களால் வெட்டுப் புள்ளியைத் தாண்ட முடியவில்லை.

### முல்லையின் நிலை,

முல்லைத்தீவு மாவட்டமானது இரண்டு கல்வி வலயங்களைக் கொண்டது. முல்லைத்தீவுக் கல்வி வலயத்தில் 55 பாடசாலைகளைச் சேர்ந்த ஆயிரத்து 589 மாணவர்கள் பரீட்சையில் தோற்றியிருக்கிறார்கள். இதில் 33 பாடசாலைகளைச் சேர்ந்த 218 மாணவர்கள் வெட்டுப் புள்ளியைத் தாண்டியுள்ளனர். மற்றையது துணுக்காய்க் கல்வி வலயம். இதில் உள்ள 61 பாடசாலைகளில் 54 பாடசாலைகளைச் சேர்ந்த 829 மாணவர்கள் தோற்றிய நிலையில் 14 பாடசாலைகளின் 34மாணவர்கள் வெட்டுப் புள்ளியைத் தாண்டியுள்ளனர்.

### மந்த நிலையில் மன்னார்

மன்னார் மாவட்டத்தைப் பொறுத்த மட்டில் 2018ஆம் ஆண்டுப் புலமைப் பரீட்சையில் வடக்கில் மிகவும் கீழ் நிலையில் உள்ள மாவட்டமாகக் கருதப்படக் கூடிய பெறுபேற்றைப் பெற்றுள்ளது. மடுக் கல்வி வலயத்தில் உள்ள 52 பாடசாலைகளில் 39 பாடசாலைகளைச் சேர்ந்த 493 மாணவர்களே பரீட்சையில் தோற்றிய நிலையில் 14 பாடசாலைகளின் 27மாணவர்கள் வெட்டுப் புள்ளியைத் தாண்டியிருக்கிறார்கள். மன்னார் கல்வி வலயத்தில் உள்ள 88 பாடசாலைகளில் 83 பாடசாலைகளைச் சேர்ந்த ஆயிரத்து 809 மாணவர்களில் 26 பாடசாலைகளின் 103 மாணவர்கள் வெட்டுப் புள்ளியைத் தாண்டியுள்ளனர்.

### வவுனியா மாவட்ட நிலவரம்

வவுனியா மாவட்டத்தில் வவுனியா தெற்குக் கல்வி வலயத்தில் உள்ள 96 பாடசாலைகளில் 79 பாடசாலையின் 2 ஆயிரத்து 296 மாணவர்கள் தோற்றியிருக்கிறார்கள். அவற்றில் 45 பாடசாலைகளின் 327 மாணவர்கள் வெட்டுப் புள்ளியைத் தாண்டியிருக்கிறார்கள். வவுனியா வடக்குக் கல்வி வலயத்திலுள்ள 76 பாடசாலைகளில் 63 பாடசாலைகளின் 655 மாணவர்களில் 19 பாடசாலைகளின் 47 மாணவர்கள் வெட்டுப் புள்ளியைத் தாண்டியுள்ளனர்.

### மாகாண ரீதியிலான வளர்ச்சி

மேற்கூறப்பட்ட மாவட்ட நிலையிலான தரவுகளின் அடிப்படையிலே வட மாகாணத்தில் 878 பாடசாலைகளைச் சேர்ந்த 18 ஆயிரத்து 811 பேரில் 420 பாடசாலைகளின் 2 ஆயிரத்து 240 மாணவர்கள் வெட்டுப் புள்ளியைத் தாண்டியிருக்க, 458 பாடசாலைகளில் ஒருவரேனும் வெட்டுப் புள்ளியைத் தாண்டவில்லை. என்கின்ற விடயம் சுட்டிக்காட்டப்படுகின்றது. இந்த வருடத்துக்கான புலமைப் பரீட்சையின் படி, வடக்கு மாகாணப் பாடசாலைகளில் வெட்டுப்புள்ளியைத் தாண்டிய வீதமானது 50 விகிதத்தைக்கூட எட்டிப்பிடிக்க முடியாதிருக்கின்றது. அது 47.5 விகிதத்தையே அடைந்துள்ளது.

### யாழ்ப்பாணம் தந்திருக்கின்ற அதிர்ச்சி

இதேநேரம் குறித்த புலமைப் பரிசில் பரீட்சைத் தரவுகளின் அடிப்படையில் மற்றுமோர் அதிர்ச்சியான விடயமாக யாழ்ப்பாணக் குடாநாட்டின் குழந்தைப் பேற்று விகிதம் வருடாந்தம் வீழ்ச்சி கண்டு செல்வது உணரப்பட்டிருக்கின்றது. இந்த ஆண்டின் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோன்றிய மாணவர்களின் எண்ணிக்கை இதை உறுதி செய்து நிற்கின்றது. வடக்கு மாகாணத்தில் உள்ளவர்களின் குடும்பம் ஒன்றில் கடந்த காலங்களில் சராசரியாக 5 பிள்ளைகள் இருந்து வந்தனர்.

இந்த எண்ணிக்கை 3ஆகவும் அதிலும் அதிக குடும்பங்கள் இரண்டு பிள்ளைகளுடனேயே காணப்படும் நிலையில் மக்கள் தொகை விகிதம் வீழ்ச்சி கண்டு வருகின்றது. 2016ஆம் ஆண்டு வடக்கு மாகாணத்தில் 20ஆயிரத்து 506 மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றியிருக்கிறார்கள். 2017ஆம் ஆண்டில் 19 ஆயிரத்து 90 பேர் தோற்றியிருந்தனர். 2018ம் ஆண்டில் இந்த எண்ணிக்கை மேலும் வீழ்ச்சி கண்டு 18ஆயிரத்தைத் தொட்டு நிற்கின்றது. குறித்த வீழ்ச்சி நிலமையில் அதிக செல்வாக்குச் செலுத்துவது யாழ்ப்பாண மாவட்டமே. இங்கு 2016ஆம் ஆண்டில் 9 ஆயிரத்து 289 மாணவர்களும், 2017ஆம் ஆண்டில் 9 ஆயிரத்து 554 மாணவர்களும், 2018ஆம் ஆண்டில் 8 ஆயிரத்து 363 மாணவர்களுமே இந்தப் பரீட்சைக்குத் தோற்றியுள்ளனர்.

இலங்கையில் 99கல்வி வலயங்கள் உள்ளன. இதில் 12கல்வி வலயங்களை மட்டும் கொண்ட வட மாகாணத்தில் எல்லாமுமாக 983 பாடசாலைகள் இயங்குகின்றன. இதில் ஆரம்பப் பிரிவுகளை உடைய 878 பாடசாலைகளில் 2018ஆம் ஆண்டின் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை இடம்பெற்றது. குறித்த பாடசாலைகளில் இருந்த 18 ஆயிரத்து 811 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றினர். இவ்வாறு தோற்றிய மாணவர்களில் 2ஆயிரத்து 240 மாணவர்களே வெட்டுப் புள்ளியைத் தாண்டியுள்ளனர்.

தவிர, கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் குறித்த பரீட்சைக்குத் தோற்றுகின்ற மாணவர்களின் எண்ணிக்கை சற்று அதிகரித்த தன்மை கானப்படுகின்றது. ஏனைய மூன்று மாவட்டங்களான மன்னார் , முல்லைத்தீவு வவுனியா ஆகிய மாவட்டங்களின் எண்ணிக்கை வீதம் இறுதி மூன்று ஆண்டுகளும் சமாந்தர நிலமையிலேயே காணப்படுகின்றது. யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்போது உணரப்பட்டிருக்கும் குழந்தைப்பேறு குறைவடைந்து செல்லும்தன்மை எதிர்காலத்தில் தமிழர்களின் இருப்பையே கேள்விக்குள்ளாக்கும் நிலமைக்கு மிக முக்கிய காரணமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

***கட்டுரையாளர்: மாநகர சபை உறுப்பினர்***



# வெற்றிகரமான வாழ்வுக்கு மென்திறன்கள்

கட்டுரை

அ.அஜந்தன்

வேகமாக வளர்ந்துவரும் உலகில் எமக்கென ஓர் இடத்தைத் தக்கவைப்பதற்குப் பாடப்புத்தக அறிவுமட்டும் போதுமானதன்று. சமகால வளர்ச்சிக்கு ஏற்ப பல சிறப்புத் திறன்களையும் பெற்றிருக்க வேண்டியது அவசியமாகின்றது. அவ்வாறான திறன்களின் கூட்டே 'மென் திறன்கள்' எனப்படுகின்றது. தொழில்வாய்ப்புப் பெறுவதில் உள்ள சிரமங்களுக்கும், பதவி உயர்வுகிடைக்கப் பெறாமல் போவதற்கும், தொழில்வாய்ப்பைப் பெற்றபின்பும் அந்தப் பணியில் நிலைத்து நிற்க முடியாமல் அல்லது திருப்தியற்றுப் போவதற்கும் இந்த மென்திறன்களை விருத்தி செய்யாதமையே காரணமாகின்றது. அண்மைக் காலங்களில் தேசிய மட்டத்திலேயே அதிகமான நேர்முகத்தேர்வுகள் நடைபெறுகின்றன. தேசிய ரீதிலான சவால்களையும், பல்திறன்கொண்ட மனிதர்களையும் எதிர்கொண்டே எமது வாழ்வை நிலைநாட்ட வேண்டியுள்ளது. இதனாலேயே மென்தீறன்கள் என 87 திறன்களை அடையாளப்படுத்துகின்றனர். இருப்பினும் அவற்றில் சில முக்கியமான திறன்களே எமக்குப் போதுமானவை.

தொடர்பாடல், குழுவாகப் பணியாற்றுதல், நெகிழ்வுத்தன்மை, பிரச்சினைக்குத் தீர்வுகாணுதல், நேரமுகாமைத்துவம், விமர்சனச் சிந்தனை, முரண்பாட்டு முகாமைத்துவம், தலைமைத்துவம் போன்றவற்றை இவற்றில் குறிப்பிடலாம்.

**1. தொடர்பாடல் திறன்**

ஒரு மனிதன் வாழ்வதற்குத் தொடர்பாடலும் மொழித் தேர்ச்சியும் மிகவும் அவசியம். இவற்றில் பேச்சு, எழுத்து, செவிமடுத்தல் மற்றும் உடல் மொழிகள் மிகவும் அவசியமானவை. ஒருவரை அவரது உரையாடல், மொழித்திறனை வைத்து அதிகம் எடைபோடுவார்கள். இவற்றில் பணியிடங்களில் சக பணியாளர்களுடனான தொடர்பாடல் அவர்களின் உறவை வலுப்படுத்துவதுடன் வினைத்திறனான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு உந்துசக்தியா அமையும். திட்ட முன்மொழிவுகளைத் தயாரித்தல், அறிக்கை எழுதுதல், ஆய்வுகளை எழுதுவது, கடிதங்களை எழுதுவது போன்ற எழுத்துத் திறன்களில் அதிக கவனம் செலுத்தப்படவேண்டும். அதேபோல் உரையாற்றுவது, நேருக்கு நேர் உரையாடுவது, விடயங்களைத் தெளிவாக முன்வைப்பது போன்ற விடயங்களைத் தொடர்பாடல் திறனில் வளர்ப்பது மிகவும் அவசியம்.

**2. குழுவாகப் பணியாற்றும் திறன்**

மனிதன் வாழ்வதும், பணியாற்றுவதும் குழுக்களாகவே. எனவே குழுவாகச் சேர்ந்துபணியாற்றுவதற்கு விமர்சனங்களை ஏற்கும் மனப்பாங்கு, இசைந்துபோகும் தன்மை, வேறுபட்ட சூழல்களைக் கையாளும் திறன், இயலாமை யுடையோர் தொடர்பான விழிப்புணர்வு உணர்வார்ந்த அறிவு, வேறுபட்ட ஆளுமைகளையுடைய மனிதர்களைக் கையாளும் திறன், ஒத்துணர்வு, வலையமைப்பை உருவாக்கும்திறன், சுயவிழிப்புணர்வு, குழுவைக் கட்டியமைக்கும் திறன், சமூக அறிவு மற்றும் ஆளி டைத் தொடர்பு போன்றன விருத்தி செய்யப்படுதல் வேண்டும். குழுவாகப் பணியாற்றும் பொழுது மாறுபட்ட திறன்களை எமக்குள் வளர்க்க முடியும்.

**3. நெகிழ்வுத் தன்மை**

திட்டமிட்டபடி எல்லாம் நடைபெறும் என்று எண்ணக்கூடாது. பல மாற்றுவழிகளையும் கொண்டிருக்க வேண்டும். வெற்றிபெற்ற தலைவர்கள் பிரச்சினைகள் எழும்பொழுது எப்படி நெகிழ்வுத்தன்மையைக் காண்பிப்பது என்பதை அறிந்தவர்களாகவே இருக்கமுடியும். நிலைத்து நின்று பணியாற்றுவதற்கு இந்த நெகிழ்வுத்தன்மை பேருதவி புரியும். தேவையற்ற மனக்குழப்பங்களையோ, முரண்பாடுகளையோ இது அகற்றிவிடும்.

**4. பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணுதல்**

எப்பொழுதுமே பிரச்சினைகளோடு வருபவர்களைவிட அதற்கான தீர்வுகளுடன் வருபவர்களையே அதிகாரிகளோ, சக ஊழியர்களோ விரும்புவர். அனேகமான நிறுவனங்கள் அல்லது தொழில் துறையினர் இவ்வாறான ஓர் ஆளுமையுள்ளவர்களையே தமது பணியாளர்களாக வைத்திருக்க விரும்புவர். பிரச்சினைகளை இனம்கண்டு அதன் விளைவுகளை மதிப்பிட்டு அதற்கான தீர்வை முன்வைப்பதன் மூலமாக ஒரு நம்பிக்கைக்குரிய நபராகவும் ஆளுமைமிக்கவராகவும் மதிக்கப்பெறுவீர்கள்.

**5. விமர்சனச் சிந்தனை**

விமர்சனச் சிந்தனை என்பது ஆக்கத்திறனுள்ளதாகவும், நெகிழ்வுத்தன்மை, கலைத்திறனுள்ளதாகவும், விமர்சனங்களை அவதானிப்பதாகவும், ஆர்வமும், கற்றல் ஆர்வமும், புத்தாக்கச் சிந்தனையோடும், சாத்தியமான சிந்தனை யோடும், பொறுமையுடனும், ஆராயும் திறனுடனும் மற்றும் வளம்மிக்கதாகவும் இருக்கவேண்டும். அப்பொழுது தூன் உங்கள் சிந்தனைகளுக்குப் பிற பணியாளரும் அதிகாரிகளும் அடிபணிவர் அல்லது ஆதரவளிப்பர்.



**6. நேர முகாமைத்துவம்**

நேரமுகாமைத்துவம் நெருக்கீடான நிலையைக் குறைத்து வினைத்திறனை அதிகரிப்பதுடன் உங்கள் மதிப்பையும் உயர்த்தும். முன்னுரிமைப் படுத்தல், வேலைகளை ஒழுங்குபடுத்தல், முன்கூட்டியே திட்டமிடல் போன்றன நேரமுகாமைத்துவத்தில் அவசியமாகின்றன. நேர முகாமைத்தவத்தை நாம் கடைப்பிடித்தல் தவறுகள் குறையும், பணியும் சிறக்கும். நெருக்கீடு விளைவிக்கும் சந்தர்ப்பங்களைக் குறைக்கும் மற்றும் எல்லோருக்கும் முன்மாதிரியாகத் திகழ்வீர்கள்.

**7. முரண்பாட்டை நிர்வகித்தல்**

ஒரு நிறுவனத்தில் அல்லது பணியிடத்தில் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் பணியாற்றுவதால் முரண்பாடுகள் வருவதற்கான வாய்ப்புக்கள் அதிகம். புரிந்துணர்வின்மை, ஒத்துழையாமை, வன்முறையான தொடர்பாடல்,


வேலைப்பளு, அதிகார முறைகேடு, ஏற்றத்தாழ்வு அல்லது வேற்றுமை காட்டுவதால் முரண்பாடுகள் தோற்றுவிக்கப்படலாம். அவற்றை நிர்வகிக்கும் திறன் ஓர் இலக்கு நோக்கிய குழுப் பணிக்கு இன்றியமையாத ஒன்றாக மாறியுள்ளது. அனேகமான சந்தர்ப்பங்களில் நேரடியாகப் பிரச்சினைகளைக் கதைத்துத் தீர்வு காண்பதும் எவரையும் பாதிக்காத வகையில் முரண்பாட்டை நிர்வகித்தலும் அவசியம்.

**8. தலைமைத்துவம்**

எல்லா விடயங்களும் ஒரு தலைமையின்கீழ் அமைவதே சிறப்பு. முடிவெடுத்தல், பிரச்சினைகளைத் தீர்த்தல், தீர்வுகளை மு ன்வைத்தல், திறமைகளை அடை யாளம் காணுதல், முன்நின்று நடாத்துதல், தெளிவான பின்னூட்டலை வழங்குதல், வழிகாட்டுதல், சிக்கலான தொடர்பாடல்களை நிவர்த்தி செய்தல், பின்தங்கிய வர்களை நிர்வகித்தல், நம்பிக்கையைக் கட்டி வளர்த்தல், ஊக்கமளித்தல், கண்காணித்தல் மற்றும் வெற்றிகரமாக வழிநடத்துதல் போன்றன சிறந்த தலைமைத்துவத்துக்குத் தேவைப்படுகின்றன.

மேலே குறிப்பிட்ட அத்தனை மென் திறன்களும் எம்மை ஒரு நிறைவான இடத்துக்கு அழைத்துச் செல்வதோடு மன நிறைவான வேலைவாய்ப்பையும் தேடித் தருகின்றன்.

## காதல்




காதல் இல்லையேல் சாதல் எனப்பலர்
மொழிந்தனரே அன்றும்-அந்த
காதல் இல்லையேல் சாதலுக்கு இராது
உயிரினங்கள் ஒன்றும்
காதலெனும் அச்சில்தான் சூழலுது பூமி
அன்றுமுதல் இன்றும்-இந்த
காதலே உலகை சூழன்றாட வைக்கும்
நூலாகும் என்றும்

கண்டதும் ஆசை கொண்டதும் இணைந்து
கொள்ளுதலா காதல்-தேன்
வண்டதும் மலரைக் கண்டதும் தேனுண்டு
விலகுமப்போல் காதல்
உண்டதும் நித்திரை கொண்டதும் எழுந்து
செல்வது போலாதல்-அல்ல
கண்டுளம் கவர்ந்து கனிவுடன் கலந்து
பண்புடன் நிலையாதல்
இரண்டுளம் சேர்ந்து ஒன்றொன்றைப் புரிந்து
பழகுதலே காதல்-அன்பு
கொண்டுளம் உறுதி கொள்ளும்காதல் வாழ்வில்
இருக்காது அலைமோதல்


அன்பெனும் மரம்விட்ட கிளையாகும் இந்த
காதலெனும் ஒன்று-அந்த
காதலெனும் கிளை தான்விட்ட கிளையே
ஆசையெனும் ஒன்று
ஆசையெனும் கிளை தனில்வந்த கனிகளே
உயிரினங்கள் என்று-இவை
உருவாகக் காரணம் அன்புடன் காதல்
ஆசையெனும் மூன்று

தெருமுனை, கடற்கரை, சினிமா கொட்டகை
காணுகின்ற காதல்
இருமனம் அல்லார் உடல்சேர முயலும்
இன்றைய காதல்
ஒருவரை ஒருவர் மனதார நேசித்தன்பை
பொழிகின்ற காதல்-இன்னும்
இருஏழு ஜென்மமும் இவ்வுலகம் தூய்மையென
மொழிகின்ற காதல்

கவிதை

டே.த.எட்வின்

# அகம்பாவம் அழிவைத் தரும்



தோட்டத்தில் ரோஜா, முல்லை, கனகாம்பரம் போன்ற பூச்செடிகள் இருந்தன. தக்காளி, கத்தரி, வெண்டைச் செடிகளும் தென்னை, முருங்கை போன்ற மரங்களும் இருந்தன.
தோட்டத்தைச் சுற்றிலும் கள்ளிச் செடிகளே வேலியாக நின்றிருந்தன. ஒரு பக்கம் மட்டும் பெரிய மூங்கில் கதவு செய்து பூட்டி வைத்திருந்தார் தோட்டக்காரர்.
"நாம் எவ்வளவு அழகாக இருக்கிறோம்! நறுமணம் மிக்கப் பூக்களைப் பூக்கவும் செய்கிறோம். ஆனால் நம்மைச் சுற்றிலும் நிற்கும் செடிகளைப் பாரேன். உடலெங்கும் முட்களாகப் பார்க்கவே சகிக்கவில்லை" என்று தன் அருகில் நின்ற முல்லைக் கொடியிடம் சொன்னது ரோஜா செடி.
"ஆமாம், நீ கள்ளிச் செடிகளைப் பற்றித்தானே சொல்கிறாய்? நீ சொல்வது சரிதான். அழகான நம்மைச் சுற்றி அசிங்கமான இந்தச் செடிகளை ஏன் விட்டுவைத்திருக்கிறார்களோ என்று தெரியவில்லை" என்று அலுத்துக்கொண்டே சொன்னது முல்லைக் கொடி.
ரோஜாவும் முல்லையும் பேசுவதைத் தென்னை மரம் கேட்டுக்கொண்டிருந்தது. இது வழக்கமாக நடைபெறும் நிகழ்வுதான். ரோஜாவும் முல்லையும் எப்போதும் தங்கள் அழகு குறித்து தற்பெருமை பேசுவது மட்டுமின்றி, மற்ற செடி, கொடிகள் பற்றி கேலி செய்தும் வந்தன.
உயிரினங்களில் உயர்வு, தாழ்வு என்று எதுவும் இல்லை என்பதைக் கற்றுக் கொடுக்கும் நேரம் வந்துவிட்டது என்று நினைத்தது தென்னை மரம்.
அருகருகே நின்ற இரு கள்ளிச் செடிகளைப் பார்த்து சைகையால் ஏதோ சொன்னது.
தென்னையின் சைகையைப் புரிந்துகொண்ட கள்ளிச் செடிகள் இரண்டும் எதிர் எதிர்த் திசைகளில் சாய்ந்துகொண்டன. இப்போது கள்ளிச் செடிகளின் நடுவில் ஒரு பெரிய இடைவெளி உருவானது.
அந்த வழியே சென்ற இரண்டு ஆடுகள், கள்ளிச் செடிகளின் நடுவில் இருந்த இடைவெளி வழியே தோட்டத்துக்குள் புகுந்தன. அவை முதலில் புற்களை மேய்ந்தன. ஆடுகள் புற்களைச் சாப்பிடுவதை ரோஜாவும் முல்லையும் பார்த்துக்கொண்டு இருந்தன. சிறிது நேரத்தில் ஆடுகளில் ஒன்று ரோஜாவை நோக்கி வந்தது. மற்றோர் ஆடு முல்லையை நோக்கிச் சென்றது. ரோஜாவுக்கும் முல்லைக்கும் பகீர் என்று இருந்தது.
"ஆடுகள் வரும் வேகத்தைப் பார்த்தால் இன்று நம் இருவரையும் ஒரு வழி பண்ணிவிடும் போல் தோன்றுகிறதே... இப்போது நாம் என்ன செய்யலாம்?" என்று நடுங்கியபடி சொன்னது ரோஜா செடி.
இரு ஆடுகளும் அங்கும் இங்கும் இருந்த செடிகளை முகர்ந்து பார்த்துக்கொண்டே வந்தன. ரோஜா செடியின் அருகில் வந்த ஓர் ஆடு, அதன் இலையைக் கடிக்கத் தொடங்கியது. இன்னோர் ஆடு முல்லை இலையைக் கடிக்க ஆரம்பித்தது.
"ஐயோ, எங்களைக் காப்பாற்ற யாருமே இல்லையா? இந்த ஆடுகளின் வாயில் நாங்கள் இரையாகப் போகிறோமே" என்று அலறியது ரோஜா. முல்லையும் கதறியது.
திடீரென்று ஏதோ விழுந்ததுபோல் சத்தம் கேட்டது. மிரண்டு போன ஆடுகள், கள்ளிச் செடிகளின் இடைவெளி வழியே பாய்ந்து வெளியே ஓடிவிட்டன.
ரோஜாவும் முல்லையும் நிம்மதியடைந்தன. நன்றியோடு தென்னை மரத்தைப் பார்த்தன.
"எங்களுக்கு ஆபத்து என்றவுடன் தேங்காய்களை விழச் செய்து, ஆடுகளை விரட்டி விட்டாய். உன்னைப்போல் ஒரு நண்பன் கிடைக்க நாங்கள் கொடுத்து வைத்திருக்க வேண்டும். உன்னை எங்கள் வாழ்நாள் முழுவதும் மறக்கவே மாட்டோம்" என்று இரண்டும் ஒரே குரலில் கூறின.
"நான் ஒன்றும் பெரிதாக எதுவும் செய்துவிடவில்லை. தினம் தினம் உங்கள் உயிரைக் காப்பாற்றிக்கொண்டிருப்பது கள்ளிச் செடிகள்தான். முட்கள் கொண்ட கள்ளிச் செடிகள் வேலியாக இருப்பதால்தான் ஆடுகளும் மாடுகளும் உள்ளே நுழையாமல் இருக்கின்றன. வாழ்நாள் முழுவதும் ஆடுகளிடமிருந்து உங்களைக் காப்பாற்றிக் கொண்டிருக்கின்றன. கள்ளிச் செடியின் முட்களுக்குப் பயந்துதான் ஆடுகள் இந்தப் பக்கம் வருவதில்லை. இன்று அவை சற்று விலகியதால்தான் ஆடுகள் புகுந்தன. உங்களுக்குப் பெரிய ஆபத்து காத்திருந்தது" என்று சொன்னது தென்னை. ரோஜாவும் முல்லையும் கள்ளிச் செடிகளைப் பார்த்து, "எங்களை மன்னித்து விடுங்கள். இந்த உலகில் எந்த உயிரும் தாழ்ந்ததில்லை என்பதைப் புரிந்துகொண்டோம். இனி யாரையும் இழிவாக நினைக்க மாட்டோம்" என்று ஒன்றாகக் கூறின. கள்ளிச் செடிகள் மகிழ்ச்சியோடு தலையாட்டின.

# குரல்



பேசுவதற்கு, பாடுவதற்கு, கத்துவதற்கு, கதறுவதற்கு, இருமுவதற்கு எனக் குரல் தொடர்பான எல்லாச் செயல்களுக்கும் துணை நிற்பது, 'குரல் பெட்டி' (Voice box). மருத்துவத்தில் இதற்குக் குரல்வளை (Larynx) என்று பெயர். இதன் வழியாகத்தான் நுரையீரலுக்குக் காற்றுச் செல்கிறது.


குரல்வளையானது குருத்தெலும்புகள் (Cartilages), பிணையங்கள் (Ligaments), தசைகள் (Muscles) ஆகியவற்றால் பின்னப்பட்டுள்ள சிறு உறுப்பு. 'ஹையாட்' எலும்பு ' (Hyoid bone) இதைத் தாங்கிக் கொள்கிறது.

குரல்வளை மூடியைத் திறந்து பார்த்தால், வீணையில் நாண்கள் இருப்பதைப்போல், குரல்வளையின் பக்கவாட்டுச் சுவர்களில், வலப்பக்கம் ஒன்றும், இடப்பக்கம் ஒன்றுமாக இரண்டு குரல் நாண்கள் (Vocal cords) இருக்கின்றன. குரல்வளைத் தசைகளால் (Vocalis) ஆன இவைதாம் நமக்குக் குரல் தரும் கொடையாளர்கள். பொதுவாக, குரல்நாண்களின் நீளம், அவற்றின் நிலைகள் ஆகியவற்றைப் பொறுத்து குரலின் அடர்த்தி, தன்மை போன்றவை மாறும். பதின்ம பருவத்துக்குப் பிறகு ஆண்களுக்குக் குரல்நாண்களின் நீளம் அதிகமாகும். எனவே, அவர்களுக்குக் குரல் கனமாக இருக்கிறது. பெண்களுக்கு இவற்றின் நீளம் சிறிது குறைவாகவே இருக்கும். எனவே, அவர்களுக்குக் குரல் மென்மையாக இருக்கிறது.

# ஜோர்தான்








1. தென்மேற்கு ஆசியாவில் அமைந்துள்ள ஓர் அரபு நாடு.
2. இதன் அருகில்தான் சாக்கடல் (Dead sea) அமைந்துள்ளது.
3. இந்த நாட்டின் தலைநகர் அம்மான்.
4. அகதிகளை ஏற்றுக்கொள்வதற்குத் தயக்கம் காட்டாத நாடு இது. பாலஸ்தீனம், சிரியா போன்ற நாடுகளின் அகதிகள் இங்கு குடியேறியுள்ளனர். இப்போதுள்ள மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கினர் அகதிகள்தான்.
5. பெட்ரா மிகப் பழமையான நகரம். 'ரோஸ் நகரம்' என்றும் அழைக்கப்படுகின்ற இந்த நகரில் அற்புதமான கட்டடக் கலைக்குச் சான்றாகப் பல கட்டடங்கள் அமைந்துள்ளன.
6. பெற்றோல் கிணறுகள் இங்கு இல்லை.
7. இஸ்ரேலுடன் அமைதி ஒப்பந்தத்தில் ஈடுபட்டுள்ள இரண்டு நாடுகளுள் இதுவும் ஒன்று.
8. கறுப்பு, வெள்ளை, பச்சை நிறப் பட்டைகளின் இடது பக்கத்தில் சிவப்பு முக்கோணத்தில் நட்சத்திரத்துடன் காணப்படுகிறது இதன் தேசியக் கொடி.
9. 1946ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்ற நாடு.
10. அரேபிய மறிமான் (Arabian oryx) தேசிய விலங்கு.

# வழிகாட்டுவோம்



# முயன்று பார்ப்போம்



ராசனுக்கு கிடைக்கும் தொகையின் இரு மடங்கு ஈசனுக்கும், மும்மடங்கு நேசனுக்கும் கிடைத்தக்கவாறு 54 தோடம்பழங்கள். ராசன், ஈசன், நேசன் ஆகிய மூவருக்கும் பகிர்ந்து கொடுக்கப்பட்டால் நேசன் எத்தனை தோடம்பழங்கள் பெறுவான்?

..........................................................

# தமன்னாவைப் பாராட்டிய விஜய்



தேவி படத்தின் வெற்றியை தொடர்ந்து அதன் இரண்டாம் பாகத்தில் நடித்து வரும் தமன்னாவை இயக்குநர் விஜய் பாராட்டியுள்ளார்.

பிரபுதேவா,தமன்னாநடிப்பில்விஜய்இயக்கத்தில்வெளியான படம்தேவி. இதில்தமன்னாசிறப்பாகநடித்துவிமர்சனங்களில் பெயர் எடுத்தார். முக்கியமாக 2 பாடல்களுக்கு தம்ன்னா ஆடிய நடனம் பாராட்டுக்களைக் குவித்தது.

தேவி படத்தின் தொடர்ச்சியாக தேவி 2 உருவாகி வருகிறது. இதில் தமன்னா தொடர்பான காட்சிகள் படமாக்கப்பட்டு விட்டது. இந்தப்படத்திலும்தமன்னாசிறப்பாகநடித்துள்ளார். அவருக்கு இது முக்கியமான படம் என்று இயக்குநர் விஜய் வாழ்த்தியுள்ளார்.

## பணம் பற்றிய பொன்மொழிகள்

- பணம் இருந்தால் உன்னை உனக்குத் தெரியாது. பணம்இல்லாவிட்டால், யாருக்கும்உன்னைத்தெரியாது.
  ஸ்மித்.
- பணக்காரனாய் சாக வேண்டும் என்பதற்காக வறுமையில் வாழ்வது வடிகட்டிய முட்டாள்தனம்
  ஜீவெனால்.
- பணக்காரன்ஆகவேண்டுமா? அதற்குப்பணத்தைக் குவிக்க வேண்டியது இல்லை. தேவைகளைக் குறைத்துக் கொள்.
  வீப்பர்.
- நாம் பணக்காரர்களாக இருக்க கடமைப்பட்டிருக்கவில்லை. ஆனால்ஒழுக்கமுள்ளவர்களாக இருக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.
  பெர்னார்ட்ஷா.
- பணப்பிரச்சினை என்றால், எல்லோரும் ஒரே மதத்தினர்தான்.
  வால்டேர்.
- பணம் ஒன்றே வாழ்வின் இலட்சியம் என்றால் அது தவறான வழியிலேதான் தேடப்படும்.
  ரஸ்கின்.
- பணத்துக்குக் கடல் நீரின் குணம் ஒன்று உண்டு. கடல் நீரைக் குடிக்கக் குடிக்கத் தாகம் அதிகமாகும்.
  ஷோப்பன் ஹொபர்.
- சிலர் பணத்தை வெறுப்பதாகக் கூறுவர். ஆனால், அவர் வெறுப்பது பிறரிடமுள்ள பணத்தை!
  கோல்ட்டஸ்.
- பணம் தலைகுனிந்து பணியாற்றும் அல்லது தலைகுப்புறத் தள்ளிவிடும்.
  ஆலிவர் வெண்டல்.
- பணத்தின் உண்மையான மதிப்பு பிறரிடம் கடன் கேட் கும் போதுதான் தெரியும்.
  பிராங்க்ளின்.
- பணத்தை வைத்திருப்பவனுக்குப் பயம். அது இல்லாதவனுக்குக் கவலை
  பாரசீகப் பழமொழி.



## ‘ஈகோ’ தவிர்ப்போம்

சொந்த வீட்டிலேயே உரிமை கொண்டாட முடியாததாக இருப்பதுதான் தன்னார்வம் என்கிறார்.

சிக்மண்ட் ஃப்ராய்டு (SIGMUND FREUD).

எல்லா மனிதர்களுக்குமே ஆழ்மனதில் `நான்' என்கிற தன்னார்வம் இருக்கத்தான் செய்யும். ஆனால், அந்த மமதையை அடக்கிவைத்திருக்கும்மனிதன்தான்எல்லாவற்றையும் கடந்து போகிறான். எதிலும் வெற்றி பெறுகிறான். எந்தத்துறையில்எத்தனை பெரிய ஜாம்பவானாக இருந்தாலும் ஆணவத்துக்கு இடம் கொடுத்துவிட்டால் பின்னடைவு நிச்சயம்.

இப்போதெல்லாம் `நான் யார் தெரியுமா?' என்கிற வாசகத்தைசர்வசாதாரணமாகக்கேட்கமுடிகிறது. கோபத்தில் உதிர்க்கும் வாசகம் இது.

கொஞ்சம்வசதி, சமூகத்தில்மரியாதை, உதவிக்குஓடிவர நான்கு பேர் இருந்தாலே போதும். தன்னார்வம் அந்த ம்னிதனிடம் வேகமாகவே ஒட்டிக்கொண்டுவிடுகிறது. இந்த அகம்பாவம்பலநேரங்களில்நமக்கேவினையாகிவிடும்.

## சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | 2 | |
| | | 3 | 4 | | 7 | | | |
| | 1 | 8 | | | | | 6 | 7 |
| | | 9 | | | 6 | 4 | | 1 |
| | | | | | | | | |
| 6 | | 5 | 3 | | | 9 | | |
| 1 | 8 | | | | | 6 | 5 | |
| | | | 5 | | 1 | 7 | | |
| | 5 | | | | | | | |

நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 3 | 6 | 4 | 1 | 9 | 5 | 8 | 7 |
| 4 | 8 | 7 | 5 | 2 | 3 | 9 | 1 | 6 |
| 5 | 1 | 9 | 8 | 6 | 7 | 4 | 3 | 2 |
| 3 | 7 | 4 | 2 | 8 | 6 | 1 | 9 | 5 |
| 8 | 9 | 1 | 7 | 4 | 5 | 6 | 2 | 3 |
| 6 | 2 | 5 | 3 | 9 | 1 | 7 | 4 | 8 |
| 1 | 5 | 8 | 6 | 3 | 4 | 2 | 7 | 9 |
| 9 | 6 | 3 | 1 | 7 | 2 | 8 | 5 | 4 |
| 7 | 4 | 2 | 9 | 5 | 8 | 3 | 6 | 1 |



## இன்றைய நாள்

**மேடம்:** மனதில் உற்சாகம் நிலைத்திருக்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி உருவாகும். மேலதிக வருமானத்தால் சேமிப்பு உயரும். வழக்கு, விவகாரங்களில் சாதகமான தீர்வு வந்து சேரும்.

**இடபம்:** வாழ்வில் புதிய வசந்தகாலம் உருவாகும். தொழில், வியாபாரம் முன்னேற்றம் பெறும். அபரிமிதமான பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் சலுகை பெறுவர். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்குவர்.

**மிதுனம்:** நண்பரின் யதார்த்த பேச்சு சங்கடம் ஏற்படுத்தும். தொழில், வியாபாரத்தில் சராசரி இலாபம் கிடைக்கும். பணவரவுக்கேற்ப செலவுகளை திட்டமிடுவீர்கள்.

**கடகம்:** குடும்பத்தினரின் அன்பும், ஆதரவும் நம்பிக்கை தரும். பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் நிர்ணயித்த இலக்கு நிறைவேறும். சிலருக்கு கடன் வாங்கும் நிலை ஏற்படலாம்.

**சிங்கம்:** உங்கள் வாழ்வில் கூடுதல் வளம்பெற புதிய வாய்ப்பு உருவாகும். தன்னம்பிக்கையுடன் பணிகளில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இலாபம் அதிகரிக்கும்.

**கன்னி:** உங்களின் நற்செயலை சிலர் பரிகாசம் செய்யலாம். தொழில், வியாபாரம் செழிக்க விடாமுயற்சி தேவைப்படும். பணவரவு மிதமாக இருக்கும். சொத்து, ஆவணம் பிறர் பொறுப்பில் தரக் கூடாது.

**துலாம்:** எதிர்வரும் பணிகளுக்காக முன்னேற்பாடு செய்வது நல்லது. தொழிலில் உற்பத்தி, விற்பனை ஓரளவுக்கு இருக்கும்.சேமிப்பு பணம் திடீர் செலவாகும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாவர்.

**விருச்சிகம்:** மற்றவர் விஷயத்தில் தலையிட வேண்டாம். தொழில் வியாபாரம் செழிக்க கூடுதல் உழைப்பு தேவைப்படும். பணவிஷயத்தில் பாதுகாப்பு தேவை.

**தனுசு:** உறவினரின் பேச்சால் அதிருப்தி கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட பணிகளில் தாமதம் ஏற்படலாம். பணவிஷயத்தில் விழிப்புடன் இருக்கவும்.

**மகரம்:** எதிர்கால வளர்ச்சிநோக்கில் புதிய திட்டம் உருவாக்குவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் பணவரவு அதிகரிக்கும். பணியாளர்கள் சலுகை பெற்று மகிழ்வர்.

**கும்பம்:** எதிர்பார்த்த நற்செய்தி வந்து சேரும். மனதில் உற்சாகமும், நம்பிக்கையும் வளரும். தொழில், வியாபாரம் செழிக்க கூடுதல் நேரம் பணிபுரிவீர்கள்.

**மீனம்:** தடைகளை முறியடிக்க புதிய உத்திகளை கையாள்வீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை சிறக்கும். இலாபம் உயரும். பணியாளர்களுக்கு நிர்வாகத்திடம் எதிர்பார்த்த சலுகை கிடைக்கும்.

## twitter

சிலந்தி™ @NANDHU_TWITTS



மூணு வேளையும்
நல்லா கொட்டிகிட்டுதான்
இருக்காங்க..
சாலையோரம்
குப்பைகளை..!!


வெட்டி வீழ்த்தும் போது
உன்னால் தடுக்க
முடியவில்லை!
வெயில் வாட்டி வதைக்கும்
போது என்னால் தடுக்க
முடியவில்லை!
மரங்கள்



சாய்ராம் @SairSairam

ஒரே நாளில் விடுதலை
தபால் பெட்டியில்
அடைக்கப் பட்ட
காகிதக் கைதிகளுக்கு!

# இயற்கையின் அதிசயம் வாழைப்பூ



இன்றைய நவநாகரிக வாழ்க்கையில் மனிதனை வாட்டும் பல நோய்களுள் நீரிழிவு நோய் முக்கியமானது. இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்கள் வாழைப்பூவைச் சுத்தம் செய்து, சிறிது சிறிதாக நறுக்கி, அத்துடன் சின்ன வெங்காயம், பூண்டு, மிளகு சேர்த்துப் பொரியல் செய்து சாப்பிட்டு வந்தால் நீரிழிவு நோய் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும். இதன் துவர்ப்புச் சுவையானது, குருதியில் கலந்துள்ள அதிகளவு சீனிப் பொருளைக் கரைத்து வெளியேற்றுகிறது. இதனால் சீனியின் அளவு குறைகிறது.


சிலருக்கு மலம் கழிக்கும்போது கூடவே குருதியும் சேர்ந்து வெளியேறும். இதைக் 'குருதி மூல'ம் என்று அழைப்பர். இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்கள், வாரம் இரண்டு முறைகள் வாழைப்பூவை உணவில் சேர்த்து வந்தால் 'குருதி மூலம்' விரைவில் குணமாகும். வாழைப்பூவைத் தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் குருதியில் கலந்துள்ள தேவையற்ற கொழுப்புகளைக் கரைத்துக் குருதியைச் சுத்திகரிக்கும். இதனால் குருதியானது அதிகளவு ஒட்சிசனை உட்கிரகிக்கும். தொடர்ந்து அதிகளவு இரும்புச்சத்து உட்கிரகிக்கப்படுவதால் குருதி அழுத்தம், குருதிச்சோகை போன்றவை வராமல் தடுக்கப்படுகின்றன.



# இது புதுசு

பெண்களுக்கான புதிய வடிவ அமைப்புடைய சட்டைகள் சந்தைக்கு அறிமுகமாகியுள்ளன. இவை 2ஆயிரத்து 100ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

# சரும வறட்சி, முதுமையை தடுக்கும் 'ஒலிவ் எண்ணெய்'




ஒலிவ்எண்ணெயில்விற்றமின்கள், கனிமச்சத்துக்கள் அடங்கியுள்ளன.
இந்த எண்ணெய் அனைத்து வகையான சருமத்தினருக்கும் ஏற்ற ஒன்று. இதில் ஆன்டிஆக்ஸிடன்ட் பொருள்கள் ஏராளமாகஇருப்பதால்தான், சருமப்பராமரிப்புக்குப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இத்தகைய ஒலிவ் எண்ணெயைத் தினமும் இரவில்படுக்கும்முன், முகத்தில்தடவி நன்குமசாஜ் செய்து, மறுநாள் காலையில் முகத்தைக் கழுவினால், ஏராளமான நன்மைகளைப் பெறலாம்.

முகத்தில் ஏதேனும் தழும்புகள் இருந்தால் தினமும் இரவில் ஒலிவ் எண்ணெயைக் கொண்டு மசாஜ் செய்து வாருங்கள். இதனால் அந்த இடத்தில்புதியகலங்கள்உருவாக்கப்பட்டு, சருமத்தின் நெகிழ்வுத்தன்மைஅதிகரிக்கும். மேலும்இந்தச் செயல்மூலம்நாளடைவில்தழும்புகளும்மறையும்.

* தினமும் ஒலிவ் எண்ணெய் கொண்டு மசாஜ் செய்வதன் மூலம், அதில் உள்ள விற்றமின் ஈ, சருமக்கலங்கள்சீரழிவடைவதைத்தடுத்து, சருமம் விரைவில் முதுமைத் தோற்றம் அடைவதைத் தடுக்கும்.
சருமத்தின் நெகிழ்வுத்தன்மையை அதிகரித்து, சருமம் தளர்வதைத் தடுத்து, இளமையுடன் வைத்துக்கொள்ள உதவும்.

* மிகுந்த வறட்சியான சருமம் எனில், ஒலிவ் எண்ணெய்யைக் கொண்டு தினமும் இரவில் சருமத்தை மசாஜ் செய்து சரும வறட்சி ஏற்படுவதைத் தடுக்கலாம்.



# சத்தான ஓட்ஸ் வெங்காய தோசை

**தேவையான பொருள்கள் :**

அரிசி மாவு - ஒரு கப்
ஓட்ஸ் - 100 கிராம்
பச்சை மிளகாய் - 1
கடுகு, சீரகம் தலா ஒரு கரண்டி
இஞ்சி - சிறிதளவு
கொத்தமல்லி - சிறிதளவு
வெங்காயம் - 2
உப்பு, எண்ணெய் தேவையான அளவு

**செய்முறை :**
கொத்தமல்லி, ப.மிளகாய், வெங்காயம், இஞ்சியைப்பொடியாகநறுக்கிக் கொள்ளவும். ஓட்ஸை வெறும் கடாயில் போட்டு வாசனை வரும் வரை வறுத்து, ஆறியதும்பொடித்துக்கொள்ளவும். ஒரு பாத்திரத்தில் பொடித்த ஓட்ஸ், அரிசி மா, கொத்தமல்லி போட்டு தேவையான அளவு தண்ணீர் சேர்த்துக் கரைத்துக் கொள்ளவும். சட்டியில் எண்ணெய் விட்டு கடுகு சேர்த்துத் தாளித்த பின்னர் நறுக்கிய பச்சை மிளகாய், வெங்காயம், இஞ்சி, சீரகம் சேர்த்து வதக்கிக் கரைத்தமாவுடன்சேர்த்துநன்றாகக் கலந்துகொள்ளவும். தோசைகல்லை அடுப்பில் வைத்து சூடானதும் மாவைத் தோசைகளாக ஊற்றிச் சுற்றிச் சிறிது எண்ணெய் ஊற்றி, வெந்ததும் திருப்பிப்போட்டுஎடுத்துப் பரிமாறவும்.

**சத்தான ஓட்ஸ் வெங்காய தோசை தயார்.**

# குடற்புண் நோயாளர்கள் கடைப்பிடிக்க வேண்டியவை



பரபரப்பான வேலைச் சூழ்நிலையில் உள்ளவர்கள், நீண்ட நேரம் கண் விழித்து வேலை செய்பவர்கள் பசி வந்தவுடன் உணவு உண்ணக்கூடிய சூழ்நிலை இல்லையென்றால் கைக்கால்கள் நடுங்கும், படபடப்பு அதிகமாகும், மயக்கம் ஏற்படும், எளிதில் எரிச்சலடைவார்கள்.

இவர்கள் உணவைக் கண்டதும் பரபரப்படைந்து அவசர அவசரமாகச் சாப்பிடுவார்கள்.

இவ்வாறு சாப்பிடும் உணவானது அரைகுறையாகச் சமிபாடடைவதால் வயிற்றுக் கோளாறுகள் ஏற்படுத்துகின்றன.

பசி இன்றியும், மன அமைதி இன்றியும் உண்ணப்படும் அனைத்து உணவுகளும் வயிற்றுக் கோளாறுகளை ஏற்படுத்தக் கூடியவை. இதுவும் குடற்புண் ஏற்பட முக்கிய காரணமாகும். எனவே உணவு உண்ணும் போது அமைதியும், நிதானமும் தேவை.
குடற்புண் நோயாளிகள் எப்போதும் அதிகளவான உணவை உண்ணக் கூடாது. வயிற்றுக்கு இரண்டு விதமான செயற்பாடுகள் உள்ளன. ஒன்று உணவைச் சமிபாடடையச் செய்தல். இரண்டாவது மன அமைதியை ஏற்படுத்துதல்.

**தவிர்க்க வேண்டியவை**
குடற்புண் உள்ளவர்கள் பால், தயிர், மோர் போன்ற திரவ உணவு வகைகளைத் தவிர்க்க வேண்டும். மேலும் புளிப்பான பழ வகைகள், இனிப்பில்லாத இளநீர், வாழைப்பழம் போன்றவைகளையும் தவிர்க்க வேண்டும்.

**சாப்பிட வேண்டியவை**
கொஞ்சம் மணத்தக்காளிக் கீரையை விதையுடன் எடுத்து, அத்துடன் சிறிது கசகசாவையும், ஒரு துண்டு தேங்காயையும் சேர்த்து அரைத்து, அந்தச் சாற்றை காலைவேளையில் வெறும் வயிற்றில் சாப்பிட்டு வந்தால் 15 - 20 நாள்களில் குடற் புண் ஆறிவிடும்.
உணவுடன் தினமும் அகத்திக் கீரையை சேர்த்துக் கொள்வது நல்லது. இதற்குப் புண்களை ஆற்றும் தன்மை உள்ளது. வயிற்றில் வலிஏற்பட்டால் சிறிது சர்க்கரையையோ அல்லது உப்பையோ வாயில் போட்டுச் சுவைத்தால் கொஞ்ச நேரத்தில் வலி மறைந்து விடும்.

(33ஆம் பக்கத் தொடர்ச்சி)

# இத்தால் சகலரும் அறிய வேண்டியது என்னவென்றால்...

அதனை அணிந்தபோது கண்களுக்கு அது சற்று உறுத்தலாக இருந்தது.
"கண் உறுத்தலோ, மன உறுத்தலோ என்ன செய்யப் போறது. சாப்பாடா தரும்" என நினைத்தான் தங்கன்.
"கண்ணாடி நல்லாய் இருக்கு" என்று மூத்த அதிகாரிக்கு ஒப்புக் கொடுத்த தங்கவேல் அடுத்த நாளில் இருந்து வேலைக்கு வரும்படி பணிக்கப்பட்டான்.
முதல்நாள் வேலைக்குப் போனபோது அவன் வேலைக்கு நேரடிப் பொறுப்பாக இருந்தவர் சற்று உறைப்பாகக் கட்டளை பிறப்பித்தார்.
"உங்கடை பழைய கோட்பாடுகளை அதற்குக் காரணமானவர்களைக் கண்டித்துச் சுவையான ஒரு கட்டுரையை எழுதிக் கொண்டுவா."
'ஒற்றைக்கண் வைகுந்தன்' என்ற பெயரில் அவன் எழுதிய கட்டுரை புதிய நிர்வாகத்தால் பாராட்டப்பட்டது.
தொடர்ந்து வேறு பெயர்களிலும் அவர் எழுதத் தொடங்கி தங்கன் பிரபல்யமானான். விடயம் அறிந்த மனைவி சொன்னாள்.
"சம்பளத்தைக் கூட்டிக் கேட்டுப்பாருங்கோவன்"
தங்கனுக்கு அது சரியாகப் பட்டது.
காலவோட்டத்தில் தங்கனுக்குப் புதிய வேலை தேட வேண்டிவந்துவிட்டது. வேலை தேடுவதற்குப் புதிய மூக்குக் கண்ணாடி தடையாக இருந்தது. அதைக் கழற்றி வைத்து விட்டுத் தேடினாலும் கண்ணாடி போட்ட அடையாளம் இருந்தபடியால் சிரமமாகத்தான் போய்விட்டது.
வன்னியில் அவனது சொந்த இடம் இப்போது குடியிருப்பதற்கு அனுமதிக்கப்பட்டதால் அங்கு போய் ........... இருந்தான். வயல்வேலை, வேறு வேலைகள் செய்து பார்த்தான் ஒன்றும் சரிவரவில்லை.



மிகுந்த அவநம்பிக்கையுடன் ஒருநாள் பஸ் எடுத்து யாழ்ப்பாணம் வந்து பலமணி நேர அலைக்கழிப்பின் பின்னால் அவரைச் சந்தித்தான்.
எல்லாவற்றையும் கேட்டார். நடந்ததைச் சொன்னான். எப்போதும் தனக்குப் படியளக்கும் தலைமைக்குத் தான் விசுவாசமாக இருப்பேன் என்பதை அறுதியிட்டுச் சொன்னான்.
தங்கனை அவர் சரியாகப் புரிந்துகொண்டார். யாரைக் கொண்டு என்ன செய்தான். எப்படியெல்லாம் என்பதைப் புரிந்துகொண்ட அவர் தங்கனை வேலைக்கு எடுத்துக் கொண்டார்.
முகத்தில் போட்டிருந்த மூக்குக் கண்ணாடியின் ஞாபகம் இலேசாக வரச் சட்டென அதனைக் கழற்றி லோங்ஸ் பொக்கற்றினுள் வைத்தான். கூடவே அவனை யாரும் கவனிக்கவில்லை என்பதையும் உறுதி செய்தான்.
"எல்லாம் சரிதானே. போகேக்க முன் கவுண்டரில் உங்கடை புது மூக்குக் கண்ணாடி இருக்கு. அதை வேண்டிப் போட்டுக்கொண்டு போங்கோ" என்றார் அவர்.
சிரித்து தலையாட்டியபோது லோங்க்ஸ் பொக்கற்றில் இருந்த பழைய மூக்குக் கண்ணாடி கனத்தது. கவுண்டரில் தரப்பட்ட மூக்குக் கண்ணாடி புதியது அல்ல. யாரோ பாவித்தது போல இருந்தது. ஒரு பக்க லென்ஸில் சிறிய வெடிப்பு வேறு.
அதனை வாங்கிப் போட்டுக் கொண்டால் பார்வை மங்கலானது போல இருந்தது. ஆனால் என்ன, வேலை நிச்சயம்.
புதிய கண்ணாடியை அணிந்த உற்சாகத்தில் அடுத்த நாள் தொடக்கம் வேலைக்கு வரவேணும் என்னும் எண்ணத்துடன் பொக்கற்றினுள் இருந்த பழைய மூக்குக் கண்ணாடியைத் தூக்கி நடைபாதையில் இருந்த குறோட்டன் செடிகளுக்குள் எறிந்தான். அது போய் விழுந்தது.
கூடவே ஒருவகை அச்சமும் பற்றிக் கொண்டது. எறிந்த கண்ணாடிகளையெல்லாம் பாதுகாப்பாக வைத்தால் என்ன? எப்போதாவது அவை உதவமாட்டாதா? எதுதான் நிரந்தரம்? என்ற கேள்வி அவனுள் எழுந்தது.

## சொற்சிலம்பம் போட்டி இல: 545

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | ■ | 5 | 6 |
| 7 | | ■ | 8 | | | | |
| 9 | | 10 | | | ■ | | ■ |
| | ■ | 11 | | ■ | 12 | | 13 |
| ■ | 14 | | ■ | 15 | | ■ | |
| 16 | | | | | ■ | 17 | |
| 18 | | | ■ | 19 | 20 | | |
| 21 | | ■ | 22 | | | | |

அனுப்புபவர் பெயர்:..............................................
முழுமையான தபால் விலாசம்: ..............................
.................................................................
கையொப்பம்:..............................................

### இடமிருந்து வலம்

1. மிதவாதி அல்லன்
5. அதிக
7. களிம்பு நிலையில் உள்ளது
8. சமுத்திரத்தில் பிடிப்பது
9. வாழும் ஸ்தானம்
12. சர்ப்பம்
14. பரிசுத்த
15. தீப்பிழம்பு வடிவம்
16. தாமரை
17. இது இரண்டொழிய வேறில்லை
18. இல்லாமல் அழித்தொரி
19. இது வந்திட பத்தும் பறந்திடுமாமே
21, முக்கால ஆயுதம்
22. வலிமை மிக்கவன்

### மேலிருந்து கீழ்

1. இந்துக்களின் திருநாள்களில் ஒன்று
2. பகுபத உறுப்பில் ஒன்று
3. மருத்துவம்
4. உறுதி
5. நாணம்
6. மழை காலத்தில் உதவும்
10.பிள்ளையார்
12. அரைவாசி
13. மகன்
14. உறங்கல்
15. இதைவிட்டு சுறுசுறுப்பாக இரு
16. அரசியல்வாதிகள் பெரிதும் விரும்புவது
20. பலவல்ல

வாசகர்கள் மத்தியில், குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
சொற்சிலம்பம் போட்டி இலக்கம் 543 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**
(1) ஏமாப்பு 4) கமுகு (7) கலை (8) திராவிடம் (10) பானம் (11) துவரம் (13) அன்பு (15) வழுதி (16) மாடி (17) தாசன் (19) அதி (20) கசம் (21) முதிர (22) உடன்பாடு (23) தின்

**மேலிருந்து கீழ்**
(1) ஏகத்துவம் (2) மாலை (3) புதினம் (4) கவி (5) முடவன் (6) கும் (9) ராம் (10) பாரதிதாசன் (12) வழு (13) அடி (14) புத்திரன் (19) அதிதி (20) கட

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே
ரூபா 300/=, ரூபா 250/=,
ரூபா 200=, ரூபா 150/=
ரூபா 100/=
பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

**சொற்சிலம்பம் போட்டி இல.545**
பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், (31.10.2018 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாக, தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 543இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
த.நிர்மலன்,
இல.2 நாலாம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

**2 ஆம் பரிசு**
சி.பாலசுந்தரம்,
சண்டிலிப்பாய் வடக்கு,
சண்டிலிப்பாய்.

**3 ஆம் பரிசு**
விபீசண்யா நாகேந்திரன்,
தாவளை, இயற்றாலை,
கொடிகாமம்.

**4 ஆம் பரிசு**
திருமதி ஸ்ரீகிருஷாந்தி உமாபதிசிவம்,
இல.18, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.

**5 ஆம் பரிசு**
பி.ஸ்ரீவரஞ்சினி,
இல.8 பிளர்ச்சபை ஒழுங்கை,
சுண்டுக்குளி.

**பாராட்டுப் பெறுவோர்**

ப.சிவன்நேசன்,
'நிம்மதி' தேவாலய வீதி,
சங்கானை.

திருமதி ம.செல்லத்துரை,
புலோலி தென்மேற்கு,
புலோலி.

கே.இராஜகோபால்,
அடைக்கலம் தோட்டம்
கந்தசுவாமி கோவிலடி,
வட்டுக்கோட்டை.

சொற்சிலம்பம் போட்டி இல.545 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 04.11.2018ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

போட்டிகளில் வெற்றியீட்டியவர்களாக அறிவிக்கப்பட்டு, இதுவரை தமக்கான பரிசுக் காசோலைகள் கிடைக்கப்பெறாதவர்கள் வார நாள்களில் உதயன் அலுவலக நிதிப் பிரிவில், போட்டிக் கூப்பன்களில் தாம் குறிப்பிட்ட தமது பெயர், வதிவிட விவரங்களை உறுதிப்படுத்தி தமக்கான கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ள இயலும். போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**சொற்சிலம்பம் போட்டி 543 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.**



# இந்த வாரம்

**21.10.2018 முதல் 27.10.2018 வரை**

*உங்களுக்கு எப்படி?*

## மேடம்

சூரியன், சந்திரனால் நற்பலன் வந்து சேரும். செயல்களில் நிதானம் இருக்கும். சகோதரர்கள் அன்பு பாராட்டுவர். வாகனத்தில் உரிய பாதுகாப்பு வேண்டும். பிள்ளைகளின் எண்ணங்களில் நல்ல மாற்றம் உருவாகும். சமயோசித செயலால் வழக்கு விவகாரத்தில் சுமுக தீர்வு கிடைக்கும். மனைவியின் ஆர்வம் மிகுந்த செயல் குளறுபடியாகலாம். தொழில், வியாபாரத்தில் பணவரவு ஓரளவுக்கு இருக்கும். பணியாளர்கள் அதிக உழைப்பால் முன்னேற்றம் அடைவர். பெண்கள் செலவில் சிக்கனம் பின்பற்றுவர். மாணவர்கள் படிப்பில் மட்டும் அக்கறை கொள்ளவும்
மாணவர்கள் படிப்பு தவிர பிற விவாதம் பேச வேண்டாம்.

## இடபம்

ராகு, புதன், குரு அனுகூல அமர்வில் உள்ளனர். உற்சாகமுடன் பணி புரிவீர்கள். வீடு, வாகனத்தில் அறிமுகம் இல்லாதவர்க்கு இடம் தர வேண்டாம். பிள்ளைகள் தகுதி திறமைகளை வளர்த்துக் கொள்வர். பூர்வ சொத்தில் வளர்ச்சி கூடும். உடல் ஆரோக்கியத்திற்கு மருத்துவ சிகிச்சை தேவைப்படும். ஒவ்வாத உணவு உண்ண வேண்டாம். மனைவி வழி சார்ந்த உறவினர்களின் உதவி கிடைக்கும். தொழிலில் உற்பத்தி, விற்பனை ஓரளவுக்கு இருக்கும். பணியா ளர்களுக்கு சலுகை பெற தாம த மாகலாம். பெண்கள் பிள்ளை களின் நலனில் அக்கறை கொள்வர்.

## மிதுனம்

சுக்கிரன், சந்திரனால் ஓரளவு நன்மை கிடைக்கும். அறப்பணிகளில் ஈடுபடுவீர்கள். மனதில் மகிழ்ச்சியும், உற்சாகமும் கூடும். விலகிய உறவினர் சொந்தம் பாராட்டுவர். வீடு, வாகனத்தில் சில மாற்றம் தேவைப்படும். பிள்ளைகள் உங்கள் சொல்லை மதித்து செயல்படுவர். இஷ்ட தெய்வ அருளால் சுமுக வாழ்வு அமையும். முக்கியஸ்தரின் உதவி கிடைக்கும். மனைவியின் நற்செயல் குடும்பத்திற்கு பெருமையைத் தேடித்தரும். தொழில், வியாபாரம்செழித்துவளரும். பணியாளர்கள் சுறுசுறுப்பாக பணிபுரிவர். பெண்கள் வீட்டு உபயோகப்பொருட்கள் வாங்குவர்.

## கடகம்

பெரும்பான்மைக் கிரகங்கள் அனுகூல அமர்வில் உள்ளனர். நிகழ்வு களின் போக்கு உணர்ந்து செயல்படுவீர்கள். வாகனப்பயன்பாடு அதிகரிக்கும். இதமான அணுகுமுறையால் பிள்ளைகளின் மனதில் நம்பிக்கையை பலப்படுத்துவீர்கள். குடும்பத்தில் சுப நிகழ்வு ஏற்படும். வீட்டுத் தேவைகள் தாராள பணச்செலவில் பூர்த்தியாகும். உடல் ஆரோக்கியம் சீராக இருக்கும். மனைவி கருத்து ஒற்றுமையுடன் நடந்து கொள்வார். தொழில், வியாபாரம் செழித்து பணவரவு கூடும். பணியாளர்கள் குறித்த காலத்தில் பணி இலக்கை நிறைவேற்றுவர். பெண்களுக்கு தாய் வீட்டு உதவி கிடைக்கும்.

## சிங்கம்

செவ்வாய், சுக்கிரன், கேது, சந்திர னால் அளப்பரிய நன்மை உண்டாகும். உங்கள் பேச்சில் நிதானம் இருக்கும். உடன்பிறந்தவர்களுக்கு உதவுவீர்கள். வெளியூர் பயணம் எதிர்பார்ப்புக்களை நிறை வேற்றும். பிள்ளைகள் பெற்றோரிடம் நண்பர்க்கு இணையாகப் பழகுவர். குடும்பத்தில் மகிழ்ச்சி நிறைந்தி ருக்கும். உடல் ஆரோக்கியம் பலம்பெறும். கடன் குறையும். மனைவி உங்களின் ஆலோசனையை முழு மனதுடன் ஏற்றுக்கொள்வர். தொழிலில் உற்பத்தி, விற்பனை சுமாராக இருக்கும். பணியாளர்கள் நிர்வாகத்தின் சட்டதிட்டம் தவறாமல் பின்பற்றவும்.

## கன்னி

ராகு, சுக்கிரன், சந்திரன் நற்பலன் வழங்குவர். மனதில் இருந்த குழப்பம் விலகும். செயல்களில் நிதானம் அதிகரிக்கும். உடன்பிறந்தவர்களுக்குசுபநிகழ்ச்சிநடந்தேறும். வாகனப் பராமரிப்பு தேவைப்படும். பிள்ளைகளின் அறிவுத்திறன் மேம்படும். பூர்வசொத்தில் ஓரளவு பணவரவும் கிடைக்கும். விவகாரங்களில் மாற்று உபாயத்தால் சுமுக தீர்வு பெறலாம். விருந்து, விழாவில் ஆரோக்கியம் உணர்ந்து கலந்து கொள்ளலாம். மனைவி பாசத்துடன் உதவுவார். தொழில், வியாபாரத்தில் இடையூறுகளை தாமதமின்றி சரி செய்யவும். பணியாளர்கள் அதிக வேலை வாய்ப்பை ஏற்றுக்கொள்வர். பெண்கள் பிறருக்காக பணப்பொறுப்பு ஏற்க கூடாது.

## துலாம்

குரு, சுக்கிரன், சனீஸ்வரர், சந்திர னால் அனுகூலபலன் கிடைக்கும். திட்டமிட்ட பணிகள் எளிதாக நிறைவேறும். வாழ்வியல் நடைமுறை சுமுகமாகும். செலவில் தாராளம் இருக்கும். தம்பி தங்கைக்கு உதவுவீர்கள். புதிய வீடு, வாகனம் வாங்கலாம். பிள்ளைகளின் செயல் பெற்றோர்க்கு பெருமை சேர்க்கும். மனைவி வழி சார்ந்த உறவினர் உங்கள் நற்செயலை பாராட்டுவர். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை அளவுடன் இருக்கும். பணியாளர்கள் பணியில் கவனமுடன் ஈடுபட வேண்டும்.

## விருச்சிகம்

சூரியன், சுக்கிரன், செவ்வாய், கேது ராஜயோகபலன் தருவர். ஆர்வம் மிகுந்த செயலால் பணி சிறப்பாக நிறை வேறும். தம்பி தங்கை உங்களின் அறிவு ரையை விரும்பி ஏற்றுக்கொள்வர். அறிமுக மில்லாதவர்க்கு வீடு, வாகனத்தில் இடம்தர வேண்டாம். பிள்ளைகள் மனதில் ஞானசிந்தனை வளரும். பகைவர் சொந்தச் சிரமங்களால் விலகுவர். நிலுவைப்பணம் வசூலாகும். மனைவி அன்புடன் நடந்து கொள்வார். உறவினர்களின் வருகை மகிழ்ச்சி தரும். தொழில், வியாபாரத்தில் அபி விருத்தி செய்வீர்கள். பணியாளர்கள் எளிதாக பணி இலக்கை நிறை வேற்றுவர்.

## தனுசு

சூரியன், புதன், சுக்கிரன் வியத்தகு அளவில் நற்பலன் வழங்குவர். குடும்ப உறுப்பினர்களிடம் ஒற்றுமை வளரும். வீடு, வாகன வகையில் திருப்திகரமான பலன் உண்டு. பிள்ளைகளின் செயலில் மதிநுட்பம் வளர்ந்திட உதவுவீர்கள். நோய் தொந்தரவு விலகி உடல் ஆரோக்கியம் பலம் பெறும். மனைவியின் சிறு செயலும் சிறப்பாக அமைந்து அதிர்ஷ்ட பலன் தரும். அரசியல்வாதிகள் பதவி பெற அனுகூலம் உண்டு. தொழில், வியாபாரத்தில் போட்டி குறைந்து இலாபம் அதிகரிக்கும். பணியாளர்களுக்கு பணியிடத்தில் அனுகூலமான சூழல் இருக்கும். பெண்கள் ஆடை, ஆபர ணம் வாங்குவர்.

## மகரம்

சந்திரன், குரு, புதனால் நற்பலன் ஏற்படும். அக்கம் பக்கத்தவர் அன்பு பாராட்டுவர். நிலுவைப்பணிகள் நிறைவேறும். வீடு, வாகனப் பராமரிப்பால் பணச்செலவு அதிகரிக்கும். பிள்ளைகள் படிப்பு, வேலையில் அதிக கவனம் வேண்டும். பூர்வ சொத்தில் அளவான பணவரவு கிடைக்கும். உங்களுக்கு எதிர்ப்பாக செயல்பட்டவர் மனதில் நல்ல மாற்றம் ஏற்படும். வெளியூர்ப் பயணம் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யும். மனைவியின் கருத்துக்கு முக்கியத்துவம் தர வேண்டும். தொழில், வியாபாரத்தில் சில மாற்றம் செய்வீர்கள். பணியாளர்கள் கடமையை உணர்ந்து செயல்படுவர்.

## கும்பம்

ராகு, சுக்கிரன், சந்திரன், சனீஸ்வ ரரால் அதிக நன்மை வந்து சேரும். உங்கள் பேச்சும், செயலும் வசீகரமாகும். புதியவர்களின் அன்பும், உதவியும் கிடைக்கும். குடும்பத்தில் ஒற்றுமை கூடும். வாகனப்பயணம் பாதுகாப்பாக அமைந்திடும். பிள்ளைகள் விரும்பிய பொருள் அதிக தரம் உள்ளதாக வாங்கித்தருவீர்கள். மனை வியின் சொல்லும் செயலும் சிறப்பாக இருக்கும். தொழில் வளர்ச்சி பெற புதியவழி ஏற்படும். வரவு செலவு திருப்திகரமாகும். பணியாளர்கள் தொழில்நுட்ப அறிவில் மேம்படுவர். பெண்கள் தெய்வ வழி பாட்டில் ஈடுபடுவர். மாணவர்கள் படிப்பில் முன்னேற நண்பர்கள் உதவுவர். பெண்கள் உறவினர் குடும்பத்தில் சுப நிகழ்ச்சி நடத்த உதவுவர்.

## மீனம்

பெரும்பான்மையான கிரகங்கள் அனுகூல அமர்வில் உள்ளனர். மனதில் புதிய சிந்தனை பிறக்கும். எதிர்ப்புக்களை சமயோசிதமாக சரி செய்வீர்கள். வெளியூர்ப் பயணம் இனிய அனுபவம் தரும். பிள்ளைகளின் ஆர்வம் நிறைந்த செயல் நிறைவேற உதவுவீர்கள். குடும்பத் தேவைகளுக்கான பணச்செலவில் தாராளம் இருக்கும். மனைவியின் அன்பு நெகிழ்ச்சியை தரும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சியும் அதிக பணவரவில் சேமிப்பும் கூடும். பணியாளர்கள் கூடுதல் தொழில்நுட்பம் அறிந்து கொள்வர். பணி எளிதாக நிறைவேறும். பெண்கள் கணவரின் அன்பில் மகிழ்ச்சிகர வாழ்வு நடத்துவர். மாணவர்களுக்கு படிப்பில் ஞாபகத்திறன் வளரும்.



# எழுத்தாளர்கள், வாசகர்களுக்கு....!

2019ஆம் ஆண்டின் தைப்பொங்கல் தினத்தில் உதயன் பத்திரிகையின் வருடாந்த கலை, இலக்கியப் பொங்கல் மலர் வழமைபோல் வெளிவர உள்ளது. ஈழத்தின் முக்கியமான படைப்பாளர்கள், பேராசிரியர்கள், தமிழ்ப் புலமையாளர்கள் இணைந்து கொள்ளும் இந்த மலரில் உங்கள் ஆக்கங்களும் இடம்பெறுவதை நாங்கள் விரும்புகிறோம். தரம்கண்டுபதிப்பாக்கவிருக்கிறோம். எனவேசிறுகதை, கவிதை, கலை, இலக்கியம், ஈழத்துச் சினிமா, நாடகம், நாட்டுப்புறக் கலைகள், அரசியல், பண்பாடு, வரலாறு, ஆய்வு, சமூகம்சார்ந்தகட்டுரைகள், ஏனையஆக்கங்கள்எனஎந்தவகைப் பாட்டிலாவதுபொருந்தக்கூடியதங்களுடையபடைப்புக்களைஅனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.
படைப்புக்களை எதிர்வரும் 20.12.2018க்கு முன்னர் எங்களுக்குக் கிடைக்கக் கூடி யவாறு அனுப்பவும். அனுப்பும் படைப்புக்கள் உங்களுடையவை என்பதை உறுதிப்படுத்தவும். அத்துடன் உங்கள் முழுப்பெயர், முகவரி, தொலைபேசிஇலக்கம், மின்னஞ்சல் முகவரி(இருந்தால்) போன்றவற்றுடன் முத்திரை அளவுடைய உங்கள் ஒளிப்படம், அத்துடன் உங்களைப் பற்றிய சிறு குறிப்புப் போன்றவற்றைத் தவறாது இணைக்கவும்.



# பாலுக்கும் காவல் பூனைக்கும்...?

## சொல்லத்தான் நினைக்கிறார் செல்லத்தம்பி

செ.மகேஷ்



நீண்ட இடைவேளைக்குப் பின்னர் செல்லத்தம்பியரைச் சந்தித்தார் சிவபாதத்தார். அவருடைய மனதில் எப்போதோ எழுந்து, அப்போதிலிருந்து பல்வேறு சந்தேகங்களை எழுப்பி நின்ற கேள்வியொன்றைச் செல்லத்தம்பியரிடம் கேட்டுவிடத் தக்க சந்தர்ப்பம் இதுதான் என்று எண்ணியவர், தனது கேள்வியை முன்வைத்தார்.
"சமூகத்தில் குற்றங்கள் எற்படாமல் தடுப்பதற்காக இந்தக் காவல் துறையினர் நியமனம் பெற்றார்களா? அல்லது குற்றங்கள் செய்பவர்களைக் கண்டுபிடித்து அவர்களுக்குத் தண்டனை வழங்குவதற்காக நியமனம் பெற்றார்களா?"
இந்தக் கேள்வி செல்லத்தம்பியரையும் ஒரு கலக்குக் கலக்கித்தான் விட்டது. சிந்தித்தார்...? குற்றவாளிகள் பெருகாமல் இருக்கவேண்டும் என்பதே பொதுவான நோக்கம் என்பது அவருக்குத் தெரிந்தது. ஆனால் சிவபாதத்தாரின் கேள்வியோ செல்லத்தம்பியருக்கு மயக்கத்தைத் தந்தது.
உண்மையிலேயே காவல்துறை அதிகாரிகள் யாவரும் குற்றங்கள் நிகழாமல் தடுப்பதை நோக்காகக் கொண்டே நியமிக்கப்படுகின்றனர் என்பதே பலரும் அறிந்த விடயம். செல்லத்தம்பியருக்கும் அவ்வாறே தெரிந்திருந்தது. ஆனால், அது குற்றவாளிகளெனும் அடையாளத்துக்குள் சந்தேகத்துக்குரியவர்களாகக் காணப்படுபவர்களைத் தேடிப்பிடித்து இன்று வழக்குத் தொடரும் ஒரு சேவை போலவே தெரிந்தது.

• • •

சமூகத்திலுள்ள குற்றங்களைத் தடுப்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட காவல்துறை இன்று குற்றவாளிகளைக் கண்டறியும் ஒரு சேவையாகவே இயங்குவது தெரிந்ததும் அதைச் சொல்லலாமா? விடலாமா? என்று சிந்தித்தார் ஆனால், அதைச் சொல்லவதற்குச் சிறிது தயங்கினார்.
"பாதையில் வாகனங்கள் வேகமாகப் பயணிப்பதால் ஏற்படும் ஆபத்துக்கள், விபத்துக்கள் பற்றி யாவருமே அறிந்திருக்கிறார்கள். அவ்வாறே குடிபோதையில் வாகனம் ஓட்டுவதால் ஏற்படும் விபத்துக்கள், ஆபத்துக்கள் பற்றியும் நாம் அறிந்திருக்கிறோம். இவ்வாறு குற்றம் செய்யும் சாரதிகளைத் கண்டதும் காவல்துறையினர் இடைமறித்துத் தண்டப்பணம் அறவிடுகிறார்கள். வழக்குத் தொடர்கிறார்கள். எனினும் இந்தப் பயணங்களில் ஏற்படும் விபத்துக்களை தடுப்பதற்கு முன்கூட்டியே என்ன செய்யலாம்?" செல்லத்தம்பியர் சிந்தித்தார்.
"அவ்வாறே கொலை, கொள்ளைச் சம்பவங்களும் தண்டனைக்குரியவையாக இருப்பினும் இன்னமும் அவை தொடர்வது ஏன்?" கேள்விக்கு மேலாகக் கேள்விகளே குவிந்தன. குற்றவாளிகள் தப்பித்துக் கொள்ளவும் நிரபராதிகள் தண்டிக்கப்படவும் இன்றைய நீதிச் சட்டங்களுக்குள் ஓட்டைகள் நிறையவே உள்ளன என்பதாகச் சிந்தித்த செல்லத்தம்பியர் அதைச் சொல்லத் தயங்கினார்.

• • •

"பணமுள்ள ஒருவன் அந்தப் பணத்தை முன்வைத்துத் தான் செய்த குற்றத்திலிருந்து தந்திரமாகத் தப்பித்துவிடுகிறான். அவன் தொடர்ந்து குற்றமிழைக்கவும் தயங்கமாட்டான். பணத்தால் நீதியும் மயங்கிப் போகிறதோ! என்னவோ? ஆனால் உண்மைகள் இந்த வகை நீதிக்குள் ஒளிந்து கொள்வதை அனுமதித்தல் குற்றந்தானே! காவல் துறையினர் குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பவர்களாக மாத்திரமல்ல குற்றங்களைத் தடுப்பவர்களாக இருக்க வேண்டுமானால் என்ன செய்யலாம்? எமக்கு வழிகாட்டுபவர்களே குற்றவாளிகளாக இருப்பதாகத் தோன்றுகின்றபோது குற்றம் இழைக்கும் ஏனையோரைத் தடுப்பது இயலாதல்லவா? ஏன் நீதி இவ்வாறு மௌனித்திருக்கிறது?" செல்லத்தம்பியர் நீளமாகச் சிந்தித்தார்!
விடைகள் பல வந்து போயின. கேள்விகளுக்காக மேலெழுந்த விடைகள் யாவும் அவரைப் பயமுறுத்துவனவாகவே தோன்றின. பாலுக்கும் காவல் பூனைக்கும்......! என்பதாகத் தொடரும் யாரோ சொல்லிய பழமொழியொன்று அவருக்குப் பலதையும் விளக்கினாலும் மௌனமே சிறந்ததென எண்ணினார். அதனால் எதையும் அவர் வெளியில் சொல்லவில்லை.





# பொது வெளியின் வம்பளப்பிகள்

நடந்து கொண்டிருக்கிறது
வம்பர் மகாசபையினது நாளாந்த ஒன்றுகூடல்

அவர்கள் சப்பித் துப்பிக் கொண்டிருந்தனர்
அவர்களையெல்லாம் நம்பிக் கெட்ட கடந்த காலத்தை
தலைகளுக்கும் இதயங்களுக்கும் தொடர்பற்றதாய்
அலைந்து கொண்டிருந்தன நாக்குகள்

ஒவ்வொரு நாக்குகளும் அநியாயத்துக்கு ஒரு
ஊரையே ஒத்தியெடுக்குமளவுக்கு நீண்டிருந்தன

விரும்பியவாறு பரிமாறப்பட்டுக் கொண்டிருந்தன
தொட்டுக் கொள்ளச் சுயநலத்துடன் ஊர்வம்புச் சிற்றுண்டி

எதற்குமெதிர்க்காத எதிர்க்காட்சி போல
தலையாட்டுவதே தம் பிறவிப் பயனெனக் கொண்ட சில
தலைகளும் அங்கிருந்தன

போராட்டம் பிழை என்றனர் சிலர்
போராட்டம் சரி போராளிகள் பிழையென்றனர் சிலர்
அரசு பிழை என்றனர் சிலர்
அரசு சரி அரசியல்வாதிகள் பிழையென்றனர் சிலர்
பாலியல் விரும்புவோர் பாலியல் கதைத்தனர்
அரசியல் விரும்புவோர் அரசியல் கதைத்தனர்
தூசணம் விரும்புவோர் தூசனம் கதைத்தனர்
மனிதம் பற்றி எவருமே கதைத்தாரில்லை

சலித்துப் போயிருப்பினும்
காலத்தினெல்லாவற்றையும் கண்டு மனம் வெதும்பிய காற்று
போராளிகளின் கல்லறைகளைத் தழுவி வந்த
ஆசுவாசத்திலும் என்னதான் செய்யவென
சுவாசத்துக்கான சேவையை வழங்கிக் கொண்டிருந்தது

நித்திரை கொள்ள வழியில்லையேயென்று
தள்ளிப்போய்ப் படுத்தது சொறிநாயொன்று

செத்த காலமென்ன,
செத்துக் கொண்டிருக்கிறது நிகழ்காலம் எதிர்காலம்...?

அவர்கள் சப்பித் துப்பிக் கொண்டிருந்தனர்
தலைகளுக்கும் இதயங்களுக்கும் தொடர்பற்றதாய்

மாலை கவியவே
ஏதோ பொழுது போனது என
கலைந்து சென்றது வம்பர் மகா சபை

நம்பிக் கெட்ட காலத்தின் மீது
இருள் சூழத் தொடங்கியிருந்தது

கவிதை

ஈழநல்லூர் கண்ணதாசன்

# நுண்ணுணர் திறன்



இயற்கை பேரழிவுகள் இடம்பெறப் போவதை முன்கூட்டியே விலங்குகள் உணர்ந்துகொள்கின்றன என்ற தகவலை அமெரிக்க ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.


தொலைதூரம் பறந்துசெல்லும் பறவைகள் குறித்து ஆய்வினை மேற்கொண்டிருந்த அமெரிக்க ஆய்வாளர்கள், இந்த முடிவை அறிவித்திருக்கிறார்கள். 'கரண்ட் பயாலஜி' என்கின்ற விஞ்ஞானச் சஞ்சிகையில் இந்த ஆய்வு முடிவுகள் வெளியாகியுள்ளன.

"கடந்த 2014 ஆம் ஆண்டு ஏப்ரல்மாத காலப்பகுதியில் தென்னஸ்ஸி பிரதேசத்தில் தாங்கள் முட்டையிட்டு குஞ்சுபொரிக்கும் கூடுகளில் இருந்து ஒரே சமயத்தில் வெளிப்பட்ட சின்னஞ்சிறிய பாடும் பறவையினங்களில் ஒன்றான 'பொன்னிறப்பறவைகள்' அந்த பகுதியை விட்டு அண்ணளவாக 700 கிலோமீற்றர் தூரம் பறந்து சென்று மெக்ஸிகோவை அடைந்தன. அவை அங்கிருந்து புறப்பட்ட சில நாள்களில் தென்னஸி பிரதேசத்தை மோசமான சூறாவளி தாக்கியது. அங்கு அனைத்து விடயங்களும் சுமூகமானதும் இந்தப் பறவைகள் அனைத்தும் மீண்டும் தங்களின் இருப்பிடம் நோக்கி வந்தன.

தவிர, இந்தப் பறவைகள் அனைத்தும் கொலம்பியாவில் இருந்து அண்ணளவாக 5 ஆயிரம் கிலோமீற்றர் பறந்து வந்து, சூறாவளி வீசுவதற்கு முன்பான நாளில் தான் தென்னஸி பிரதேசத்தில் முட்டையிடுவதற்கான கூடுகட்டும் பணியை ஆரம்பித்திருந்தன.

ஆனாலும் மிகத் தெலைவான தூரம் பறந்து வந்திருந்த களைப்பையும் மீறி, வரவிருக்கும் ஆபத்தை உணர்ந்து கொண்டு உடனடியாகவே வேறு இடத்துக்கு இடம்பெயர்ந்தன. மனிதக் காதுகளால் கேட்கமுடியாத ஒலி அலைகளின் சத்தத்தை கேட்டே இந்தப் பறவைகள் அங்கிருந்து வெளியேறின." என்று இந்த ஆய்வறிக்கை கூறுகிறது.

ஒன்பது கிராம் நிறையுடைய இந்தச் சின்னஞ்சிறிய பாடும்பறவை கொண்டுள்ள 'நுண்ணுணர் திறன்' பற்றி விஞ்ஞானிகள் அறிந்து கொண்டிருந்தாலும், இந்த குறிப்பிட்ட பரிசோதனையின் மூலம் 'நுண்ணுணர்' திறனின் முழுமையும் உறுதி செய்யப்பட்டிருப்பதாக இந்த ஆய்வை மேற்கொண்ட விஞ்ஞானிகள் தெரிவித்திருக்கிறார்கள்.



# மனிதப் பரிணாமம்

## மரபணுக்களில் இருந்தான வளர்ச்சியின் சங்கதி

பிரித்தானியாவில் நடந்த ஆராய்ச்சியில் தாவரங்களின் மரபணுக்களை பெற்று மனிதர்கள் பரிணாமம் அடைந்திருக்க வாய்ப்புகள் இருப்பதாக முடிவுகள் வெளியாகியுள்ளன. பிரித்தானியாவில் உள்ள கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் கடந்த 2001 ஆம் ஆண்டு முதல் மனித இனத்தின் பரிணாம வளர்ச்சிக்கு முக்கிய காரணமான மரபணு குறித்து பல ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகிறது.

இதில் மனிதர்கள் மரபணுக்களை தனது இனத்திடமிருந்து மட்டும் பரிமாற்றம் செய்துகொண்டனரா அல்லது வேறு இனத்திலிருந்தும் மரபணு பரிமாற்றம் நடந்துள்ளதா என தீவிர ஆராய்ச்சியில் ஈடுபட்டு வந்தது.

இந்த ஆராய்ச்சியின் முடிவில் மனித இனமானது தாவரங்கள், நுண்ணிய தாவரங்கள் மற்றும் பூஞ்சைகளின் மரபணுக்களையும் பரிமாற்றம் செய்துகொண்டு பரிணாமம் அடைந்திருக்க வாய்ப்புள்ளதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அண்மையில் வெளியான இந்த ஆராய்ச்சி முடிவுக்கு எதிராக பல விமர்சனங்கள் எழுந்தன. ஆனால் தற்போது 'கொறிசோண்டல் ஜெனரிக் ட்ரான்ஸ்பெர்' எனப்படும் கிடைமட்ட மரபணு பரிமாற்றம் என்ற முறையில் தாவரங்களிலிருந்து ஒரு குறிப்பிட்ட பக்டீரியா மூலம் மனித இனத்துக்கு மரபணுப் பரிமாற்றம் நடந்திருக்க வாய்ப்பு இருப்பதாக சில விஞ்ஞானிகள் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

அதாவது ஏனைய இனங்களைப் போல நேரடியான இனப்பெருக்கம் மூலம் வம்சாவளியை உருவாக்குவது மட்டுமல்லாது, 'எச்.ஜி.ரி' முறையில் தன்னைச் சுற்றி வாழும் தாவரங்கள் உள்ளிட்ட உயிரனங்களின் மரபணுக்களை பெற்று மனித இனம் இனப்பெருக்கத்தில் ஈடுபட்டிருக்க வாய்ப்புள்ளதாக ஆராய்ச்சி முடிவுகள் தெரிவிக்கின்றன.

மனிதர்களின் மரபணு பரிமாற்றம் குறித்து ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கும் மருத்துவர் 'அலிஸ்ரெயர் கிறிஸ்ப்' கூறுகையில், மரபணு பரிமாற்றத்தின் ஆரம்பக்கட்டம் குறித்து முதன் முதலாக மேற்கொள்ளப்பட்டிருக்கும் இந்த ஆராய்ச்சியில் 'எச்.ஜி.ரி' மூலம் விலங்குகள், தாவரங்கள் மற்றும் மனிதர்களிடமிருந்து ஆயிரக்கணக்கான மரபணுக்கள் பரிமாற்றம் நடந்துள்ளதை காட்டுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் அரிதாக நிகழ்ந்திருக்கும் இந்த மரபணுப் பரிமாற்றமானது தற்போதும் அனைத்து விதமான விலங்கினங்களிலும் (மனிதர்கள் உட்பட) செயற்பட்டு வருவதாக தெரிவித்த அவர் மனித இன பரிணாமம் குறித்து எமக்கு இருக்கும் கருத்தை வேறு கோணத்தில் சிந்திப்பது அவசியம் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

> **இதில் மனிதர்கள் மரபணுக்களை தனது இனத்திடமிருந்து மட்டும் பரிமாற்றம் செய்துக் கொண்டனரா அல்லது வேறு இனத்திலிருந்தும் மரபணு பரிமாற்றம் நடந்துள்ளதா என தீவிர ஆராய்ச்சியில் ஈடுபட்டு வந்தது.**





# என்ன செய்யப்போகிறது பிபா?

கட்டாருடன் தூதரக உறவுகளை முறித்துக் கொண்ட நாடுகளில் 6 நாடுகள், 2022ஆம்ஆண்டுகட்டாரில்இடம்பெறத்திட்டமிடப்பட்டுள்ள கால்பந்தாட்ட உலகக் கிண்ணத்துக்கான உரிமத்தை அந்த நாட்டிலிருந்து பறிக்க வேண்டுமெனவும், இல்லாதுவிடின் அந்த உலகக் கிண்ணத்தைப் புறக்கணிக்கப் போவதாகவும் எச்சரித்துள்ளன.

சவூதி அரேபியா, ஏமன், மொரித்தானியா, ஐக்கிய அரபு இராச்சியம், பக்ரைன், எகிப்து ஆகியனவே கட்டாருக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியுள்ளன. இந்த விவகாரம் வெறும் கால்பந்தாட்டத்துடன் தொடர்புபட்டதல்ல. அதைத் தாண்டி பல்வேறு அரசியல்க் கோர்வைகள் இதில் உள்ளன.

கடந்த வருடம் கட்டாருக்கும் வளைகுடா நாடுகளுக்கும் இடையே அரசியல் ரீதியாக பல்வேறு மோதல்கள் இடம்பெற்றன. கட்டார் ஈரானுக்கும் ஆயுதக் குழுக்களுக்கும் உதவி செய்கிறது என்று வலியுறுத்திய வளைகுடாநாடுகள்கட்டாரைத்தனிமைப்படுத்தும்முயற்சியில்ஈடுபட்டன. கட்டாரின் வானூர்திகள் தமது வான் பரப்புக்குள் பறக்கவும் வளைகுடா நாடுகள் தடை செய்துள்ளன. அத்துடன் ஏகப்பட்ட பொருளாதாரத் தடையையும் கட்டாருக்கு விதித்தன. ஆனால் அனைத்துச் சவாலையும் மிகமிக சாதுார்யமாகக் கையாண்டது கட்டார். தமது முயற்சிகள் அனைத்தும் தோற்றுப்போய்விட தற்போது கால்பந்தாட்ட உலகக்கிண்ணத்தை கையிலெடுத்துள்ளன வளைகுடா நாடுகள்.

திட்டமிட்டபடி அடுத்த உலகக்கிண்ணம் கட்டாரில் நடைபெற்றால் அந்த நாட்டில் பொருளாதாரம் பல மடங்கு உயரும். சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை சடுதியாக அதிகரிக்கும். இது கட்டாரை மேலும் செல்வச் செழிப்பு மிக்கதாக்கும். இவை அனைத்தையும் தகர்க்கும் விதமாகவேசவூதியும்அதன்தலைமையிலானசிலநாடுகளும்வரிந்து கட்டிக்கொண்டுநிற்கின்றன. ஆனால்கட்டாரைப்புறக்கணிக்கும்ஆறு நாடுகளில் எந்தவொரு நாடும் 2022 கால்பந்தாட்ட உலகக்கிண்ணத் தொடருக்குத் தகுதி பெறுவதை இன்னமும் உறுதி செய்யவில்லை. ஆதலால் கட்டாருக்கு ஏற்பட்டுள்ள எதிர்ப்பலை பன்னாட்டுக் கால்பந்தாட்டச் சம்மேளனத்தைப் பொறுத்த மட்டில் ஒரு பொருட்டேயில்லை.

விளையாட்டு

பிரகாஸ்

## இந்திய வீரர்களுடன் மனைவிமார் தங்க பி.சி.சி.ஐ. அனுமதி!

வெளிநாட்டில் சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் போது வீரர்களின் மனைவிமார் வீரர்களுடன் தங்குவதற்கு அனுமதிக்க வேண்டும் என்று இந்திய அணியின் தலைவர் கோக்லி விடுத்திருந்த கோரிக்கையை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை ஏற்றது.

இந்திய அணி வெளிநாடுகளின் சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் போது வீரர்கள் தமது மனைவியர் மற்றும் தோழிகளை தம்முடன் அழைத்துச் செல்லக்கூடாது என்பதில் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை உறுதியாக இருந்தது. இந்த நடைமுறை மாற்றப்பட வேண்டும் என்று கோக்லி அண்மையில் கோரிக்கையை முன்வைத்தார். அவரின் கோரிக்கையை இந்திய கிரிக்கெட் சபை ஏற்றது.



## சொன்னது என்னாச்சு

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் 20 இலக்குகளைக் கைப்பற்றுவேன் என்றநம்பிக்கையை வெளிப்படுத்தியிருந்த யாசீர் ஷா சமூக வலைத்தளங்களில்தற்போது உச்சக்கட்ட கேலிக்கு உட்பட்டுள்ளார்.

இரண்டு ஆட்டங்களைக். கொண்டதாக இந்த டெஸ்ட் ஆட்டம் அமைந்தது. ஒட்டு மொத்தமாகவே 40 இலக்குகளைத்தான் வீழ்த்த முடியும் என்கிறபோது அதில் 50 சத வீதமான இலக்குகளைக்கைப்பற்றுவேன் என்று தெரிவித்த யாசிர் வெறும் 8 இலக்குகளைக் கைப்பற்றினார். இவ்வளவும் காணுமே எமது வலைத்தள வதையர்களுக்கு. யாசிர்தான் தற்போது வலைத்தளங்களில் பொழுதுபோக்கு.



## ஆஸ்திரேலியா – இந்தியா தொடரும் எதிர்பார்ப்பும்

இந்திய அணி மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராகவும் ஆஸ்திரேலிய அணி பாகிஸ்தானுக்கு எதிராகவும் தற்போது விளையாடி வருகின்றன. ஆனால் இந்த



இரண்டு தொடர்களையும் விடுத்து இன்னும்சிலவாரங்களில்நடைபெறப்போகின்ற ஆஸ்திரேலியா-இந்தியா இடையிலான தொடர் தொடர்பில்தான் தற்போது வார்த்தைப்பரிமாற்றங்கள்உச்சம்தொட்டுள்ளன. இந்தத்தொடர் ஆஸ்திரேலியாவில்நடைபெறவுள்ளது. ஆஸ்திரேலியாவில் ஆஸ்திரேலிய அணியை எதிர்த்து விளையாடுவது அவ்வளவு இலகுவானதல்ல. இதனால் இந்தத் தொடரில் இந்தியாவுக்குப் பெரியதொரு சவால் காத்திருக்கிறது என்கின்றனர் விமர்சகர்கள். ஆனால் பந்தைத் திட்டமிட்டு சேதப்படுத்திய குற்றச்சாட்டில் சிமித், வோர்ணர், பான்குரொப்ட் மூவரும் தடைசெய்யப்பட்டுள்ளனர். இந்த மூவரும் இல்லாத ஆஸ்திரேலிய அணி பலவீனப்பட்டிருக்கும். ஆதலால் வெற்றி இந்தியாவுக்கே என்றும் கருத்துக்கள் இல்லாமலில்லை.

## உலகச் சம்பியனுக்கு நிகரானது பெல்ஜியம்



பன்னாட்டுகால்பந்தாட்டசம்மேளனத்தின்(பிபா)தரப்படுத்தலில்முதலிடம்பிடித்தது பெல்ஜியம். ஏற்கனவே முதலிடத்தில் இருந்து வந்த உலகச்சம்பியனான பிரான்ஸுடன் முதலிடத்தைப் பகிர்ந்து கொண்டுள்ளது அந்த அணி.

பன்னாட்டுக் கால்பந்தாட்டச் சம்மேளனம் தனது தரவரிசைப்பட்டியலைநேற்றுமுன்தினம்புதுப்பித்தது. பிரான்ஸ், பெல்ஜியம் இரண்டும் தலா ஆயிரத்து 729 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தில் உள்ளன. ரஷ்யாவில் இந்த வருடம் நடைபெற்ற கால்பந்தாட்ட உலகக்கிண்ணத் தொடரில் கிண்ணம் வென்ற பிரான்ஸுடன் பெல்ஜியம் நிகராக நிற்பது பெரிய அடைவுதான்.

# தென்மராட்சிப் பிரதேச செயலக சிறுவர்கள், முதியோர் தின விழா



சாவகச்சேரி, ஒக்.21

தென்மராட்சி பிரதேச செயலக பன்னாட்டு சிறுவர் முதியோர் மற்றும் மாற்று வலுவுள்ளோர் தின விழா நேற்று முன்தினம் தென்மராட்சிக் கலைமன்ற கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

பிரதேச செயலர் திருமதி தேவந்தினி பாபு தலைமையில் நடைபெற்ற விழாவின் விருந்தினர்களாக உலக தரிசன நிறுவன யாழ்.மாவட்ட திட்ட முகாமையாளர் கொன்சகா அனுராஜ், சாவகச்சேரி அஞ்சலதிபர் இன்பராஜ் லம்பேர்ட், கைதடி சாந்தி நிலைய அத்தியட்சகர் த.கிருபாகரன், தென்மராட்சி முதியோர் பேரவைத் தலைவர் மருத்துவர் இ.கந்தையா ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் விருந்தினர்கள்; முதியோர்கள், சிறுவர்கள், மாற்றுத்திறனாளிகள், சாவகச்சேரி சிவன் கோவில் முன்றிலிலிருந்து மாலை அணிவித்து ஊர்வலமாக விழா மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

மண்டப நிகழ்வுகளாக நுணாவில் மத்தி முதியோர்களின் கும்மி ஆட்டமும், மட்டுவில் வடக்கு சிறுவர் கழகத்தின் கிராமிய நடனமும், சிறுவர்களின் பேச்சு, தனி நடனம், குழு நடனம் மற்றும் சந்திரபுரம் முதியோர் சங்கத்தின் கோலாட்டமும் நடைபெற்றன.

பன்னாட்டு முதியோர் வாரத்தை முன்னிட்டு ஆண், பெண் முதியோர்களிடையே நடத்தப்பட்ட கூடைக்குள் பந்து போடுதல், வேகநடை, சங்கீதக் கதிரை, கிடுகு பின்னுதல், நீர் நிரப்புதல் ஆகிய எட்டு விளையாட்டுப் போட்டிகளில் வெற்றியீட்டிய 28 முதியோர்களுக்கும், மாற்று வலுவுள்ளோர் தினத்தை முன்னிட்டு ஆண், பெண் மாற்றுவலுவுள்ளோருக்கு நடத்தப்பட்ட முச்சக்கர வண்டி ஓட்டம், பலூன் ஊதி உடைத்தல், 100 மீற்றர் ஓட்டம் ( காது கோளதவர்கள் ), நீர் நிரப்புதல் ஆகிய விளையாட்டுப் போட்டிகளில் வெற்றியீட்டிய 28 மாற்றுத்திறனாளிகளுக்கும், மனித உரிமைகள் வெற்றியாளர்களான 'மூத்த பிரஜைகளை கொண்டாடுவோம்' என்ற தொனிப்பொருளில் மாணவர்களிடையே தென்மராட்சி கல்வி வலயம் ஊடாக நடத்தப்பட்ட கவிதை, கட்டுரை, பேச்சு ஆகிய போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கும் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

பிரதேச சமுர்த்தி அலகினரால் சமுர்த்தி சிறுவர் கழகங்களுக்கிடையில் நடத்தப்பட்ட சித்திரம், கவிதை, கட்டுரை, பாட்டு, கிராமியப் பாடல், நாட்டார் பாடல், சிறுவர் கதை கூறல், பேச்சு அறிவிப்பாளர், குறுநாடகம் ஆகிய போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற 62 சிறுவர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (ற-9,159)











செலான் சேமிப்புக் கணக்குகளுக்கு
இருமடங்கு வட்டி வழங்கும் மூன்று மாத போனஸ் வரம்

நடைமுறையில் உள்ள சேமிப்புக் கணக்குகளின் மீதித் தொகையை அதிகரியுங்கள்.
அல்லது புதிய வங்கிக் கணக்கு ஒன்றை ஆரம்பியுங்கள்.

போனஸ் வட்டிச் சலுகை 2018 ஒக்டோபர் 01 முதல் டிசெம்பர் 31 வரை செல்லுபடியாகும் என்பதுடன் செலான் சாதாரண சேமிப்புக் கணக்கிற்கு மாத்திரம் செல்லுபடியாகும்.

செலான் சேமிப்பு

011 200 88 88

செலான் வங்கி
அன்புடன் அரவணைக்கும் வங்கி

**வேலையாள்கள் தேவை**

கொழும்பில் தங்கியிருந்து வேலை செய்யக்கூடிய வேலையாள்கள் தேவை. **தொடர்மாடிகளில் அலுமினிய** வேலை செய்யக் கூடியவர்களுக்கு சிறந்த சம்பளம் தரப்படும்.

(en. 1453841) (13,17)

**077 302 2443**

**வாடகைக்குண்டு**

யாழ்ப்பாணம் Stanley Road இல் முதலாம், இரண்டாம் மாடியில் அலுவலகம் (Office) நடத்துவதற்கு உகந்த இடம் நீண்டநாள் வாடகைக்கு உண்டு.
தரகர்கள் தேவையில்லை. (IN/10586) (11,17)

**011 250 4788, 077 731 6766**

**தேவை**

வெள்ளவத்தையில் பெண்கள் அழகுக்கலை நிலையம் ஆரம்பிப்பதற்கு பெண் பங்காளர் தேவை. பணம் முதலீடு செய்யக்கூடியவர் விரும்பத்தக்கது (Beauty Parlour)

(en. 1453841) (13,17)

**077 446 3321**

சாவகச்சேரி,நுணாவில் கிழக்கு, துர்க்கையம்மன் வீதியில் அமைந்துள்ள கிணற்றுடன் அமைந்த வெற்றுக்காணி 10 பரப்பு விற்பனைக்குண்டு.
தொடர்புகட்கு:- 0718008251

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் நாவலர் வீதி, மனோகரா தியேட்டருக்கு சமீபமாக பிரப்பங்குளம் லேனில் 4¼ பரப்பு காணி விற்பனைக்குண்டு

(en. 1453841) (13,17)

**077 071 2092, 077 779 4157**

**கார் விற்பனைக்கு**

**AQUA - X - URBAN**
**தயாரிப்பு - 2015**
**Pearl White, WP - CAG XXXX**
**39000 KM**
விலை பேசித் தீர்மானிக்கப்படும்

(CS/20713) (11,17)

**077 383 7468 - கந்தர்மடம்**

**விற்பனையாளர் தேவை**

யாழ்நகருக்கு அண்மையில் இயங்கும் பல்பொருள் விற்பனை நிலையத்துக்கு (Food City) அனுபவமுள்ள அல்லது அனுபவமற்ற பெண்விற்பனையாளர் தேவை.

(en. 1453841) (13,17)

**077 437 4093**

**காணி விற்பனைக்கு**

K.K.S.காட்டடைப்பு வீதியில் 6 பரப்புக்காணி விற்பனைக்குண்டு (புகையிர நிலையம். பஸ் நிலையம். வங்கி. தபால்நிலையம். வெளிச்ச வீடு. சுற்றுலா விடுதி. துறைமுகம் நடேஸ்வரா கல்லூரி ஆகியவற்றுக்கு மிகவும் அருகில்.

**076 212 4312**

**மணமகள் தேவை**

1977 ஆம் ஆண்டு பிறந்த குறுகிய காலத்தில் விவாகரத்துப் பெற்ற மணமகனுக்குப் பொருத்தமான மணமகள் உடன் தேவை. (AVA/404) (11,17)

**076 223 4070, 076 807 8451**

**நீர்கசிவை தடுப்பதற்கு**

வட மாகாணத்தில் Water Proofing ஐ (நீர் கசிவை) தடுப்பதற்கான மருந்து வகைகளை முதன் முதலில் அறிமுகம் செய்தவர்கள் 10வருட உத்தர வாதத்துடன் நீர் கசிவை நிறுத்தித்தருகிறோம்.

**077 232 3000, 077 524 4177**

**வேலையாள்கள் தேவை**

குருநாகலில் உள்ள பலசரக்குக் கடை ஒன்றுக்கு வேலையாள்கள் தேவை.

(CS/20700) (11,17)

**077 770 5466, 077 886 3346**

**ஜெயக்குமார் திருமண சேவை**

வெளிநாட்டில் உள்ள மணமகன், மண மகளுக்கு இலங்கையில் IT படித்த மண மகன், மணமகள் தேவை. மற்றும் வெளி நாட்டிலுள்ள மணமக்களுக்கு இலங்கை யில் படித்த மணமக்கள் தேவை. (CS/20705) (11,17)

**077 535 3289**
**0094 767 250144 - Viber மட்டும்**

**வான் விற்பனைக்கு**

Dolpin JL xxxx 5L புதிய இன்ஜின், புதிய டயர், Allow Wheel, புதிய பற்றறி, பச்சை நிறம், DOULAL விற்பனைக்குண்டு.

**077 789 2028 (45 இலட்சம்)**

**வேலை வாய்ப்பு**

01) தாதியர் அனுபவம் உள்ளவர்கள்
02) தாதியர் பயிற்சி பெற விரும்புபவர்கள்

**தொடர்பு - 077 8730 129**

**வேலையாள்கள் தேவை**

யாழ்.நகருக்கு அண்மையில் உள்ள விருந்தினர் விடுதிக்குத் தங்கியிருந்து வேலை செய்வதற்கு ஆண் தொழிலாளர்கள் தேவை. வயதெல்லை - 25 இற்கும் 55 இற்கும் இடைப்பட்டவர்கள். (AVA/404) (11,17)

**077 810 5102, 077 301 3659**

**மணமகன் தேவை**

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் 31 வயது, மிதுனம், புனர்பூச நட்சத்திரம் உடைய Bsc in Computing படித்த மணமகளுக்கு படித்த மணமகன் தேவை.

**077 352 9884, +141 683 87892**

**வாடகைக்குண்டு**

தொண்டமானாறு ஆலய சூழலில். பருத்தித்துறை வீதிக்கு அண்மையில் ஐந்து அறைகள். இணைந்த குளியலறை. சமையலறை. ஹோல் வாகனத் தரிப்பிட வசதிகளுடன் வீடு உண்டு. தனியார் நிறுவனங்கள். அரச வங்கிகளுக்கும் மேலும் சந்நிதி யாத்திரிகர் இல்லமாக நடத்துபவர்களும். யாத்திரிகர்கள் நாள், மாத வருட அடிப்படையில் தங்கும் வசதியுண்டு.

**071 843 4576, 077 834 2718** (IN/10582) (11,17)

**மணமகள் தேவை**

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட IT முதுமாணி, Consultant in A Leading New York Based Co இல் தொழில்புரியும் மண மகனுக்கு, வயது - 30-33, உயரம் - 5' 5" - 5' 8", மெல்லியவர், நிறம் முக்கியமல்ல, பல்கலைப் பட்டம் பெற்ற மணமகள் தேவை.

**754 252 0213 (அமெரிக்கா)** (CS/20706) (11,17)

**வீடு வாடகைக்கு**

யாழ்.பலாலி வீதியில் திருநெல்வேலி அம்மாச்சி நிலையத்துக்கு Farm School இற்கு அருகில் 5 அறைகள் / 2 குளியலறைகள் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.
(தரகர் தேவையில்லை)
உத்தியோகத்தர்களின் குடும்பங்கள் விரும்பத்தக்கது. (ACO/332) (11,17)

**077 440 0432**

**தேவை**

வெள்ளவத்தையில் அமைந்துள்ள புத்தக வெளியீட்டு அலுவகத்துக்கு Machine Operator ஒருவர்தேவை.

**077 650 3432**

**கட்டடத்தின் மேற்பகுதி வாடகைக்கு**

யாழ்ப்பாணம் பலாலி வீதியில் கட்டடத்தின் மேற்பகுதி வாடகைக்குண்டு. அலுவலகங்கள். கல்வி நிலையங்கள் மற்றும் களஞ்சியப்படுத்தல் தேவைகள் போன்றவற்றிற்கு உகந்தது.
**தொடர்பு - 076 546 0811**

**விற்பனைக்குண்டு**

உணவக தளபாடங்கள் மற்றும் கோழிக்கூடும் விற்பனைக்குண்டு. கடையும் வாடகைக்குண்டு.

**077 375 5429** (CS/20729) (11,17)

**வாகனம் விற்பனைக்கு**

UNIMO பட்டா DAA தொடர் இலக்கத்தைக் கொண்ட வாகனம் விற்பனைக்குண்டு.

**076 411 1974**

**கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு**

**ஒருநாள் கோழிக்குஞ்சுகள் விற்பனைக்குண்டு.**

**076 153 0857, 076 405 6861**

**காணி விற்பனைக்கு**

திருநெல்வேலி சந்தியை அண்மித்து கலாசாலை றோட் ( Road ). 22/1, பிள்ளையார் வீதியில் 10.64 குளி ( Kuli )கிட்டத்தட்ட 3/4 பரப்பு வெறும் காணி உடனடி விற்பனைக்கு. வியாபாரத்தை கூட்ட. களஞ்சிய அறை ( Stores ) அமைக்க அருமையான இடம். (IN/10583) (11,17)

**077 251 7640**

**Luxury Apartment வாடகைக்கு**

1 B/Room, 2 B/Room, 3 B/Room



**நாள், கிழமை, மாத அடிப்படையில்**
**கொழும்பு 3, 4, 6, மற்றும் தெஹிவளையில்**
Sea View, Complete Furnished, Wi-fi, Cable TV, Kitchen Appliance, Washing Machine and Parking, 24 Hours Security Also Provide Transport Facilities
0773 540 632 / 0774 440 586
0776 332 580 / 0779 919 388
011 2363991

**கொள்ளுப்பிட்டியில் ( Colombo - 03 )**
**காணி விற்பனைக்குண்டு**



கொள்ளுப்பிட்டியில் 7.29 பேர்ச் வெற்றுக்காணி உடனடி விற்பனைக்குண்டு, தூய உறுதி 40 வருடத்திற்கு மேல்,பதிவு செய்யப்பட்ட சேவையர் பிளான், காணி சம்பந்தப்பட்ட அனைத்து ஆவணங்களும் உள்ளது. மிகக் கூடிய விலை கோரலுக்கு, கண்டிப்பாக புறோக்கர் வேண்டாம்

**தொடர்பு : 077 350 6089**
**077 509 9053,077 726 8385**


max adz

## மரண அறிவித்தல்

# நாகலிங்கம் சிவசுப்பிரமணியம்

*(Left Hander)*

*Difind Counsil Retired Hospital Secretary - **பதுவை, நீர்கொழும்பு (அரச வைத்தியசாலைகள்),***
*Retired C.C. - **மாவட்ட வைத்தியசாலை தெல்லிப்பழை.***
*Former A.O. -(Cancer Home Tellipalai).*
***முன்னாள் தலைவர் - ப.நோ.கூ. சங்கம் சங்கானை,***
***கால்நடை வளர்ப்போர் கூ. சங்கம், வட்டுக்கோட்டை.]***



பர்மாவைப் பிறப்பிடமாகவும் வட்டு. கிழக்கு, வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் சிவசுப்பிரமணியம் நேற்று (20.10.2018) சனிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாக லிங்கம்(புகையிரத நிலைய அதிபர் ரங்கூன்)-விசாலாட்சிதம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற வர்களான அன்னபூபதி (பூபதி), ஜெயலக்சுமி (பேபி) ஆகியோரின் அன்புத் தம்பியும் காலஞ்சென்ற மனோன்மணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கந்தப்பு (புகை யிரத நிலைய அதிபர் - ரங்கூன்) - இராசம்மா தம்பதிகளின் இளைய மருமகனும் திருமகள் (யசோ), திருக்குமார் (ரகு), காலஞ்சென்ற கலை மகள் (கலா), திருக்கேதீஸ்வரன் (கேசவன்) ஆகியோரின் அன்புத் தந்தை யும் மோகனதாஸ், மனோரஞ்சிதமலர், சுபாஜினி ஆகியோரின் அன்பு மாமனாரும் கலாவினன் (கைலாஸ்), கவிநன் (அபி), ஆதினன் (ஆதி) ஆகியோரின் அன்புப் பேரனும் கால்ஞ்சென்றவர்களான தங்கம்மா, S.K. பரம், செல்லம்மா, கமலாம்பிகை, சண்முகம், கந்தசாமி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.10.2018) ஞாயிற்றுக் கிழமை மு.ப. 09.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவு டல் கோட்டைக்காடு, கொத்துத்துறை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மனோன்மணி வாசம்,**
**வட்டு. கிழக்கு, வட்டுக்கோட்டை.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

# இராசரத்தினம் சிவசோதி (சோதி)



நவக்கிரி புத்தூரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இராசரத்தினம் சிவசோதி (சோதி) கடந்த (19.10.2018) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் இராசரத்தினம் (கோபாலி) காலஞ்சென்ற றோபதி தம்பதியரின் அன்பு மகனும் கனகரட்ணம் (ஆச்சான் ஏழாலை), சின்னத்தங்கச்சி தம்பதியரின் அன்புமருமகனும் ஞானமணியின் அன்புக்கணவரும் பர்மிலா, கிருத்திகன், மதுமிலா ஆகியோரின் அன்புத்தந்தையும் வனிதாவின் அன்புச்சகோதரரும் காலஞ் சென்றவர்களான அரியகுட்டி செல்லம்மா ஆகியோரின் பேரனும் காலஞ்சென்ற வர்களான சண்முகநாதன், கனகம்மா மற்றும் குணரட்ணம் ஆகியோரின் பெறாமகனும் அன்னராசா காலஞ்சென்ற இரத்தினம் ஆகியோரின் அன்பு மருமகனும் சிவசக்தி, காலஞ்சென்ற ஐங்கரன், குஞ்சன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.10.2018) திங்கட் கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நிலாவரை இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இராச வீதி, நவக்கிரி**
**புத்தூர்.**

தகவல் :
**குடும்பத்தினர்.**

**விற்பனைக்கு**

150 CC Honda யுனிகோன் மோட்டார் சைக்கிள். Bap xxxx மவுண்டன் சைக்கிள். வோசிங் மிசின் 7kg விற்பனைக்குண்டு.
**தொடர்பு - 076 112 4145**

**வாடகைக்கு**

அரியாலை யூதாதேவி ஆலயத்துக்கு அருகில் இரு அறைகள் வாடகைக்கு விடப்படும். **தொடர்பு - 077 4064 773**

**விற்பனைக்கு**


ஆட்டோ, ரயர் கடைக்குரிய கொம்பிரசர்கள் + ஏனைய பொருள்கள், வாகனம் கழுவும் High Pressure, அலுமினியம் சோக்கேஸ்கள், கடைக்கு முன் அலுமினியம் பிற்றிங் ஏன்பன விற்பனைக்கு. தொடர்பு - பிருந்தா மில்ஸ் 179, சிவன்பண்ணை வீதி, யாழ்ப்பாணம். **077 991 2304**

**விற்பனைக்குண்டு**

நல்ல நிலையிலுள்ள அலுமினியம் நகைக்கடை சோகேஸ், கவுண்டர் யாழ்.நகரில் விற்பனைக்குண்டு.
**077 613 8964** (CS/20726) (11,17)


## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை சிவம் (மலேயன்பென்சனியர்)



காரைநகரைப் பிறப்பிடமாகவும், சித்தங்கேணியை வசிப்பிட மாகவும்கொண்டவேலுப்பிள்ளை சிவம் நேற்று (20.10.2018) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை சின்னம்மா (மலேயன் பென்சனியர்) தம்பதி யரின் அன்புப்புத்திரனும் மகேஸ்வரி, சிவனேஸ்வரி, பரமேஸ்வரி, சிவா (பாதான வைரவ கோயிலடி வடலி யடைப்பு) ஆகியோரின் அன்புச் சகோதரரும் தீபா, திலக், அகில் ஆகியோரின் பெரியதந்தையும் ஆருயனின் பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.10.2018) ஞாயிற்றுக் கிழமை பிள்ளையார் கோயிலடி சித்தன்கேணியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப. 10 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பிள்ளையார் கோயிலடி,**
**சித்தன்கேணி.**

**தகவல் :**
**குடும்பத்தினர்.**

## 33ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

19.09.2018 புதன்கிழமை இறைபதம் எய்திய எமது குடும்பத் தெய்வம்

அமரர்

### தணிகாசலம் தவமணி



தோற்றம் 03.10.1938 | மறைவு 19.09.2018

அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (21.10.2018) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் மு.ப. 11.00 மணியளவில் நடைபெற்று அதனை தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்தில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எமது குடும்ப தெய்வம் அமரத்துவம் அடைந்த செய்திகேட்டு எமது இல்லத்திற்கு வருகைதந்தும் தொலைபேசி, மின்னஞ்சல் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் கண்ணீர் அஞ்சலிப் பதாதைகள், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்ட அனை வருக்கும் எமது நன்றியை தெரிவிக்கின்றோம்.

**நந்தாவில் ஒழுங்கை, தாவடி.**

**குடும்பத்தினர்.**

## தெல்லிப்பழையில்...

உபபொலிஸ் பரிசோதகர் உதயாந் தலைமையிலான பொலிஸ் அதிகாரிகள், முச்சக்கர வண்டியில் மாவாவுடன் சென்றதாகத் தெரிவித்து 41 வயதுடைய ஒருவரைக் கைது செய்துள்ளனர். அவர் காங்கேசன்துறைப் பொலிஸில் ஒப்படைக்கப் பட்டுள்ளார்.

(5,26)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 11 . 04 . 1953 | உதிர்வு 01 . 11 . 2017



### அமரர் ஞானேஸ்வரி இராஜகோபால்

*திதி - ஐப்பசி, வளர்பிறை, துவாதசி*

அன்புத் தெய்வமே!
பாசத்தின் உறைவிடமாய்
பரிவுடன் எமையணைத்து அறிவூட்டி
வாழ்க்கைக்கு வழிகாட்டிய அம்மையே
ஆண்டுத் திதியதனால் உமை வணங்குகிறோம்.
வந்து எமை பார்த்திடாயோ!

உங்கள் நினைவுகளுடன் ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

சீனியர் ஒழுங்கை,
கலட்டி அம்மன் கோவிலடி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.


விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com,
021 493 1111
உதயன்


## மரண அறிவித்தல்

### கந்தசாமி நிமலன்

(கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் வ.மா)



புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும், இல. 29, ஆசிர்வாதப்பர் வீதி, நல்லூர் யாழ்ப்பாணத்தினை வசிப்பிட மாகவும் கொண்ட கந்தசாமி நிமலன் (கூட்டுறவுஅபிவிருத்தி உத்தியோகத்தர் வ.மா) கடந்த (19.10.2018) வெள்ளிக் கிழமைகாலமானார்.

அன்னார் புளியங்கூடல் கந்தசாமி செல்வநாயகி (ஓய்வு பெற்ற அதிபர்கள்) தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும் கல்முனை பாலரெட்ணம் மங்கையற்கரசி தம்பதியரின் அன்புமருமகனும் கவிதாவின் (மகளிர் விவகார அமைச்சு வ.மா) அன்புக் கணவரும் கிருத்திகன் (யாழ். இந்துக்கல்லூரி), ஜக்சியா (புனித யோன் பொஸ்கோ), நிவாசன் ஆகியோரின் அன்புத்தந்தையும் கலைச்செல்வி (ஆசிரிய ஆலோசகர் வலயக்கல்வி அலுவலகம் கிளிநொச்சி), நிரஞ்சன் (கனடா) ஆகியோரின் அன்புச்சகோதரரும் சங்கர் (சங்கர் ஸ்ருடியோ கிளிநொச்சி), புவனராஜன், அருள்ராஜன், கோகுலராஜன் (RDOகல்முனை), குமுதினி (CDOகல்முனை), பகீரதன் (தபாலதிபர் அம்பாறை) ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற வர்களான வடிவேலு, சொர்ணகாந்தி, ரகுபதி (ஓய்வு பெற்ற பிரதிக்கல்விப் பணிப்பாளர், வவுனியா வடக்கு), கமலாதேவி காலஞ்சென்றவர்களான தவராசா, தர்மராசா, தயாபரன் ஆகியோரின் அன்புப்பெறாமகனும் காலஞ்சென்ற தர்ம ராசா (கனடா) மற்றும் சண்முகராசா (கனடா), இராஜேஸ்வரி (கனடா), நிர்மலா (கனடா), காலஞ்சென்ற நாகராசா லோகேஸ்வரி (நர்மதா நகையகம்) ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**021 222 6763,**
**077 376 1793**

**தகவல் :**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

பிறப்பு 20 . 12 . 1951 | இறப்பு 20 . 10 . 2018



### கந்தையா கயிலைநாதன்

நல்லூர், செட்டித்தெருவைப் பிறப்பிடமாகவும் செட்டியார் தோட்டம், பருத்தித் துறை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கயிலைநாதன் நேற்று (20.10.2018) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா குமாரசாமி தம்பதிகளின் அன்பு மகனும் கதிர்காமநாதன் மற்றும் குணரட்ணம் ஆகியோரின் சகோதரனும் சரஸ்வதியின் அன்புக் கணவரும் துவாரகா, துஷ்யந்தி, நளினி, பிரதீபா, கதிர்ச்செல்வன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.10.2018) முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 2.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**852/11, செட்டியார் தோட்டம்,**
**பருத்தித்துறை வீதி, நல்லூர்,**
**யாழ்ப்பாணம். 077 836 7430**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை

# நற்செய்தியைப் பகிரும் மறைபணியாளராகுங்கள்

## அயர்லாந்து குடும்பங்களின் உலக மாநாட்டில் பாப்பரசர் அழைப்பு

உலக அரங்கில் அதிகம் பேசப்படும் ஒருவராக பாப்பரசர் பிரான்சிஸ் விளங்குகிறார். குறிப்பாக அவரின் திருத்தூதுப் பயணங்களும் அங்கு அவர் வெளியிடும் கருத்துக்களும் முக்கியமானவை. அண்மையில் பாப்பரசர் பிரான்சிஸ் மேற்கொண்ட அயர்லாந்து திருத்தூதுப் பயணம் பற்றியும் அங்கு அவர் மேற்கொண்ட சந்திப்புக்கள், தெரிவித்த கருத்துக்கள் பற்றியும் இவ்வாக்கம் பேசுகிறது.

**திருத்தந்தைக்கு கோலாகல வரவேற்பு**

திருத்தந்தை பிரான்சிஸின் அயர்லாந்து திருத்தூதுப் பயணத்தை முன்னிட்டு அயர்லாந்து அஞ்சல் அலுவலகம் இரு புதிய தபால்தலைகளை வெளியிட்டது. 9ஆவது உலக குடும்பங்கள் மாநாட்டுக்காக அயர்லாந்துக்கு திருத்தந்தை மேற்கொள்ளும் திருத்தூதுப் பயணத்தின் நினைவாக வெளியிடப்பட்டுள்ள ஒரு யூரோ தபால்தலை திருத்தந்தை பிரான்சிஸ் புறாவுடன் பயணத்தை தொடங்குவது போலவும் 1.50 யுரோ மதிப்புடைய பன்னாட்டு தபால்தலை கடற்கரையில் குடும்பங்கள் ஒன்று சேர்ந்து நடப்பது போலவும் வடிவமைக்கப்பட்டுள்ளன.

1171ஆம் ஆண்டிலிருந்து மூன்று கட்டமாக எழுநூறு ஆண்டுகளுக்கு மேலாக பிரித்தானியர்கள் அயர்லாந்தை ஆக்ரமித்திருந்ததன் அடையாளமாக அந்த நாட்டின் அரச தலைவர் அரண்மனை விளங்கு கிறது. அவ்விடத்தில் அயர்லாந்து தலைமை அமைச்சர் திருத் தந்தையை வரவேற்றார். பின்னர், "எல்லாம்வல்ல இறைவன் அயர்லாந்து மக்களை ஆசிர்வதிப்பாராக. அமைதி மற்றும் மகிழ்வின் கொடைகளை அவர்கள் மீது பொழிவாராக, பிரான்சிஸ்" என திருத்தந்தை விருந்தினர் புத்தகத்தில் கையெழுத்திட்ட பின்னர் புனித பாட்ரிக் அரங்கத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். அந்த அரங்கத்தில், அமர்ந்திருந்த அரசு, தூதரக அதிகாரிகள், கலாசார, சமயப் பிரதிநிதிகள், பொது நிலைத் தலைவர்கள் மற்றும் திருஅவை பிரதி நிதிகளைச் சந்தித்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

**அயர்லாந்து தலைமை அமைச்சரின் வரவேற்புரை**

முதலில் அயர்லாந்தின் தலைமை அமைச்சர் திருத்தந்தையை வரவேற்றுப் பேசினார். "திருத்தந்தையே தங்களை அயர்லாந்து மரபுப்படி இலட்சக்கணக்கான வாழ்த்துக்களால் வரவேற்கிறோம். 1980ஆம் ஆண்டில் இயேசு சபையினரின் மையத்தில் ஆங்கிலம் கற்றுக்கொள்வதற்காக அயர்லாந்து வந்து சில வாரங்கள் தங்கியிருந்தீர்கள். இப்போது மீண்டும் தங்களை வரவேற்பதில் மகிழ்கிறோம். திருத்தந்தை 2ஆம் ஜோன் போல் அயர்லாந்துக்கு வந்த அடுத்த ஆண்டில் அதாவது 1980ஆம் ஆண்டில் புனித வெள்ளி ஒப்பந்தத்தின் வழியாக இந்தத் தீவில் அமைதி கிட்டியது. திருத்தந்தையே நம் பொதுவான இல்லமாகிய இப்பூமிக் கோளத்தையும் அதன் மக்களையும் பாதுகாப்பது எம் கடமையாகும். இப்பூமியைப் பாதுகாப்பதற்கு தாங்கள் எடுத்துவரும் முயற்சிகளுக்கு நன்றி. குடும்பங்களின் உலக மாநாட்டிற்காக தாங்கள் அயர்லாந்து வந்திருந்தாலும், ஏனைய சந்திப்புக்களையும் நடத்துவதற்கு நேரம் ஒதுக்கியதற்கு நன்றி. தங்களின் இப்பயணம் நூற்றாண்டுகளுக்கு முன்னர் அயர்லாந்துக்கு விசுவாசத்தைக் கொணர்ந்த கத்தோலிக்கத் திருஅவைக்கும் அயர்லாந்துக்கும் இடையேயுள்ள உறவு பற்றி மேலும் மிக ஆழமாகச் சிந்திக்க வைத்துள்ளது.

அயர்லாந்து கவிஞரும், வல்லுனரும், துறவியுமான புனித கொலும்பானுஸ் ஆறாம் நூற்றாண்டில் இக்கண்டத்திற்கு நற்செய்தியைத் திரும்பக் கொண்டு வந்தார். அவரின் பணியால் அவர் அயர்லாந்தின் முதல் ஐரோப்பியர் எனவும் ஒன்றிணைந்த ஐரோப்பாவைக் கட்டியெழுப்பும் வழிகளைத் தேடுவோர்க்கு அவர் பாதுகாவலர் எனவும் போற்றப்படுகிறார். நாங்கள் பரந்த உலகின் குடிமக்கள் மற்றும் உலகளாவிய குடும்பத்தின் அங்கம் என்பதைப் புரிந்துகொள்வதற்கு கத்தோலிக்கத் திருஅவை உதவியுள்ளது "- என்றார்.



**அயர்லாந்தில் திருத்தந்தையின் முதல் உரை**

தலைமை அமைச்சரின் வரவேற்புரைக்குப் பின்னர் திருத்தந்தையும், அயர்லாந்து நாட்டிற்கு தன் முதல் உரையை ஆற்றினார். "அயர்லாந்து நாட்டில் என் திருத்தூதுப்பயணத்தின் துவக்கத்திலேயே இந்த நாட்டின் சமூக, கலாசார, மற்றும், மத பிரதிநிதிகளையும், நாடுகளின் அரசியல் தூதுவர்களையும் சந்திப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். உலக குடும்பங்கள் மாநாட்டில் பங்குபெற நான் வந்துள்ளேன் என்பது நீங்கள் அறிந்ததே. குடும்பங்களை ஊக்கப்படுத்தவேண்டிய அவசியம் திருஅவைக்கு உள்ளது. இந்த குடும்பங்களின் மாநாடு என்பது குடும்பங்கள் ஒருவருக்கொருவர் ஆதரவு தர வேண்டும், தங்களுக்குள் ஒருவருக்கொருவர் விசுவாசமாக இருக்க வேண்டும் என்பதை மீண்டும் வலியுறுத்துவதற்காக மட்டுமல்ல மாறாக தங்கள் குடும்ப அங்கத்தினர்களின் கல்வியிலும் வளர்ச்சியிலும் முக்கிய பங்கு வகித்து, உறுதியான சமூக இணக்கத்தை உருவாக்க உதவுவதற்குமாகும்.




இன்றைய குடும்பங்கள் சந்திக்கும் பிரச்சனைகள் எண்ணற்றவை. திருமண முறிவுகளும், குடும்பப் பிரிவினை களும், வருங்கால சமூகங்களை பல நிலை களிலும் பாதிக்க வல்லவை. எல்லாச் சூழல்களிலும் குடும்பங்கள் பாதுகாக்கப்பட்டு ஊக்குவிக்கப்பட வேண்டும். வாழ்வின் முதல் அடிகளை நாம் அனைவருமே, குடும்பங்க ளில் தான் எடுத்து வைத்தோம். அங்குதான் இணக்க வாழ்வையும் சுயநல உணர்வுகளை வெற்றி கொள்வதையும், முரண்பாடுகளி டையே ஒப்புரவை உருவாக்குவதையும், வாழ்க்கை மதிப்பீடுகளையும் கற்றுக்கொண்டோம். இந்த உல கம் அனைத்தையும் ஒரே குடும்பமாக நோக்கினோமென்றால் ஒன்றிப்பு மற்றும் ஒருமைப்பாட்டிற்கான எமது அழைப்பை குறிப்பாக நம் பலவீனமான சகோதரர், சகோதரிகளுடனான ஒருமைப்பாட்டிற்கான அழைப்பை நாம் உணர்வோம். ஆனால் இன்றைய உலகின் ஏழை பணக்கார இடைவெளி அதிகரிப்பு, மனித உரிமை மீறல், மனித மாண்பு புறக்கணிப்பு, வன்முறை, மோதல், நிற இன பகைமை போன்றவைகள் முன்னால், வலிமையற்றவர்களாக உணர்கிறோம். உண்மை அமைதி என்பது கடவுளிடமிருந்தே வருகிறது. இருப்பினும் நம் மனமாற்றங்கள் தொடர்ந்து இடம்பெறவேண்டிய தேவையும் உள்ளது. பொருளாதார வளம், நம்மிடையே நீதியான, சரிநிகரான, ஒரு சமூக ஒழுங்குமுறையை உருவாக்கும் என எம்மால் கூறமுடியுமா? அல்லது இன்றைய, பயன்படுத்தி தூக்கியெறியும் கலாசாரம் ஏழைகளின் தேவைகள் குறித்த எம் பாராமுகத்தை உருவாக்கியுள்ளதா? பிறக்கவிருக்கும் குழந்தைகளின் வாழும் உரிமையைப்பறிக்கஎமக்குஉரிமைஉள்ளதா? எம் மனச்சான்றிற்கு சவாலாக இருக்கும் கேள்வி, அகதிகள் நெருக்கடி பற்றியது.

**1500 ஆண்டுகளுக்கு முன்னரே இந்த நாட்டில் நற்செய்தி**

1500 ஆண்டுகளுக்கு முன்னரே இந்த நாட்டில் நற்செய்தி அறிவிக்கப்பட்டுள்ளது. அது இந்த நாட்டு மக்களின் வாழ்விலும் கலாசாரத்திலும் ஒரு பகுதியாகவே மாறியுள்ளது. நற்செய்தியைப் பெற்ற இந்த நாட்டு மக்கள் வேறு இடங்களுக்கும் மறைபோதகர்களாக நற்செய்தியை எடுத்துச் சென்றுள்ளனர். இந்த நாட்டின் மக்கள் தங்கள் விசுவாசத்தால் பிறந்த ஞானத்தின் துணைகொண்டு தேசிய வாழ்வை வளப்படுத்தியுள்ளனர் வளப்படுத்தி வருகின்றனர். கடவுளின் ஞானம், மகிழ்ச்சி, மற்றும் அமைதியின் அருளை உங்கள் அனைவருக்காகவும் இறைவனிடம் இறைஞ்சுகின்றேன்" - என்றவாறாக பாப்பரசரின் உரை அமைந்தது.

**கோக் பூங்கா அரங்கத்தில் குடும்பங்கள் விழா**

குடும்பங்கள் விழாவில் கலந்து கொள்வதற்காக திருப்பீட தூதரகத்திலிருந்து, டப்ளின் நகரின் கோக்பூங்கா அரங்கத்திற்கு காரில் சென்றார் திருத்தந்தை பிரான்சிஸ். ஐரோப்பாவிலுள்ள மிகப்பெரிய அரங்கங்களில் இதுவும் ஒன்று. அயர்லாந்தின் தனித்துவம் மற்றும் வரலாற்றின் அடையாளமாகத் திகழும் இந்த அரங்கத்தில் 82 ஆயிரத்து 300 பேர் அமரலாம். திருத்தந்தை கலந்துகொண்ட இந்த நிகழ்வில் ஏறத்தாழ எழுபதாயிரம் பேர் இருந்தனர். குடும்பங்கள் சாட்சியங்களைப் பகிர்ந்து கொள்ளும்போதும், கலைநிகழ்ச்சிகளிலும் திருத்த ந்தைக்கு நெருக்கமாய் எல்லாரும் அமர்வதற்கு வசதியாக 'சந்திப்பின் வட்டம்' என்ற கருத்தில் இந்த அரங்கம் வடிவமைக்கப்பட்டிருந்தது.

**மும்பையிலிருந்து வந்து சாட்சி**

இந்தியா, கனடா, ஈராக், அயர்லாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த குடும்பத்தினர் மேடையில் தங்கள் பிள்ளைகளுடன், திருத்தந்தையின் முன்பாகச் சாட்சி பகர்ந்தனர். இந்தக் குடும்பங்களில் ஒன்றில் பத்து பிள்ளைகள் இருந்தனர். ஒவ்வொரு குடும்பத்தினரையும் கைகுலுக்கி ஆசிர்வதித்து, செபமாலைகள் கொடுத்தார் திருத்தந்தை பிரான்சிஸ். இந்தியாவின் மும்பையிலிருந்து வந்து சாட்சி சொன்ன குடும்பத்திற்குப் பதிலளித்த திருத்தந்தை, சமூகத்தொடர்பு சாதனங்களைப் பயனுள்ள முறையில் பயன்படுத்துவது பற்றிச் சொன்னார். நட்புறவு, ஒருமைப்பாடு மற்றும், ஒருவருக்கொருவர் ஆதரவு ஆகியவற்றை வலைத்தளத்தைக் கட்டியெழுப்புவதற்கு, சமூகத் தொடர்பு சாதனங்கள் பயன்படுத்தப்பட வேண்டும். சமூகத்தொடர்பு சாதனங்கள், அளவோடும், விவேகத்தோடும் பயன்படுத்தப்பட்டால் அவை பயனுள்ளவையாய் இருக்கும் என்றும் திருத்தந்தை கூறினார். இறுதியில், குடும்பங்களின் உலக மாநாட்டிற்காகச் செபித்து, அனைவரையும் ஆசிர்வதித்து நிகழ்வை நிறைவு செய்தார்.

**அயர்லாந்து ஆயர்களுடன் திருத்தந்தையின் சந்திப்பு**

நம்பிக்கை தளராமல் முன்னேறிச் செல்லும் அயர்லாந்து தவத்திருஅவைக்கு அந்நாட்டு ஆயர்கள் வழியே தன் நன்றியையும், பாராட்டையும் திருத்தந்தை பிரான்சிஸ் தெரிவித்தார். பல்வேறு பிரச்சினை களை எதிர்கொண்டாலும் நம்பிக்கையில் உறுதியாக இருக்கும் அயர்லாந்து திரு அவைக்கு தன் நன்றியைத் தெரிவிப்பதாக திருத்தந்தை பிரான்சிஸ் அறிவித்தார். தன் அயர்லாந்து திருத்தூதுப் பயணத்தின் இறுதி நிகழ்வாக டப்ளின் நகரின் தொமினிக்கன் துறவு சகோதரிகள் இல்லத்தில் அந்த நாட்டு ஆயர்களைச் சந்தித்து உரை வழங்கிய திருத்தந்தை பிரான்சிஸ், உதவி தேவைப்படும் வறியோருக்கும், வீடற்றோருக்கும், போதைப்பொருள் பழக்கத்திற்கு அடிமையானவர்களை மீட்பதற்கும், அயர்லாந்து திருஅவை ஆற்றிவரும் பணிகளைப் பாராட்டுவதாகக் கூறினார்.

அயர்லாந்தில் குடும்பங்களின் உலக மாநாட்டை நிறைவு செய்து திரும்பும் வழியில் வானூர்தியில் பத்திரிக்கையாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்த திருத்தந்தை குடியேற்றதாரர்கள் மற்றும் புலம்பெயர்ந்தோரை ஏற்றுக்கொள்ளும் நாடுகள் அவர்களை சமுதாயத்தின் ஓர் அங்கமாக உணரவைக்க வேண்டியது அவசியம் என்றார்.

கருக்கலைத்தல் குறித்தும் தன் கருத்துக்களைப் பத்திரிகையாளர்களுடன் பகிர்ந்துகொண்ட திருத்தந்தை இதை ஒரு மதப் பிரச்சினையாகப் பார்க்காமல் சமூகப் பிரச்சினையாகப் பார்க்க முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். தன் கேள்வி பதில் பகுதியின் இறுதியில் அயர்லாந்து மக்களின் ஆழமான விசுவாசம் குறித்து தன் பாராட்டுக்களையும் வெளியிட்டார் திருத்தந்தை பிரான்சிஸ்.

**வீடற்றவர் மையத்தில் திருத்தந்தையின் பகிர்வு**

கப்புச்சின் சபையைச் சேர்ந்தவர்கள் மக்களுக்கு மிக நெருங்கியவர்களாக வாழ்கின்றனர். துன்புறும் மக்கள் வழியே கிறிஸ்துவின் காயங்களைத் தியானிக்கும் அருளைப் பெற்றுள்ளனர். மக்கள் இவர்களை அணுகி வருவதற்கு ஒரு முக்கிய காரணம் இம்மக்கள் தங்கள் மாண்பை இழக்காத வகையில் இவர்கள் உதவிகள் செய்து வருகின்றனர். இச்சபையினர் மீது மக்கள் கொண்டிருக்கும் இந்த நம்பிக்கைக்கு நன்றி. திருஅவைக்காக, அருள்பணியாளர்களுக்காக, ஆயர்களுக்காகச் செபியுங்கள். எனக்காகவும் செபிக்க மறக்காதீர்கள் என்றார் திருத்தந்தை பிரான்சிஸ்.

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 3098 திகதி: 2018.10.20 சனிக்கிழமை
பச்சை
SATURDAY FORTUNE
வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து: 09 27 37 60 D
போனஸ் இலக்கம்: 49
அடுத்த திங்கட்கிழமை ஜக்பொட்: 46,969,895/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB space LOT space SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 409
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2018.10.20
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 61,932,785/-
வெற்றி இலக்கங்கள்: 14 22 37 57
ஆங்கில எழுத்து: S
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB space LOT space AK என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778
இளநீலம் நிற டிக்கெட்டுக்கள் இன்றைய சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

සංවර්ධන වාසනාව
அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 188
சீட்டிழுப்பு திகதி 20.10.2018 சிவப்பு
ஆங்கில எழுத்து: R
வெற்றி இலக்கங்கள்: 13 60 64
விதி எண்: 04
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 1, 45,67, 752/=

ஸ்வர்ண திலின

| | |
|---|---|
| அம்பாறை | 3639673 |
| முல்லைத்தீவு | 2710190 |
| இரத்தினபுரி | 5747637 |
| கேகாலை | 3230385 |
| கம்பஹா | 4781950 |

2018.10.25 ம் திகதி வியாழக் கிழமை நீல நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர்.டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 011 333 546-47 துரித அழைப்பு 0114 824 824 www.dlb.lk

## மரண அறிவித்தல்



### திருமதி செல்வநாயகி சுகுணறஞ்சன்

*(சந்திரா)*

மூளாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் சம்மட்டி ஒழுங்கை, மானிப்பாய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சுகுணறஞ்சன் செல்வநாயகி (சந்திரா) நேற்று (20.10.2018) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் பரமேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகளும் நடராசா தவமணிதேவி தம்பதிகளின் அன்பு மருமகளும் சுகுணறஞ்சனின் பாசமிகு மனைவியும் டினோசா, றதிசன், டயானி சதிஸ் ஆகியோரின் பாசமிகு தாயாரும் கைலைநாயகி, சுந்தரலிங்கம், லோகநாயகி, காலஞ்சென்ற ஜெயலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சத்தியபாலனின் (கனடா) அன்பு மாமியாரும் மனோறஞ்சினி (ராசாத்தி), மனோறஜனி (வதனி சுவிஸ்) ஆகியோரின் மைத்துனியும் காலஞ்சென்ற ஆனந்தராஜனின் சகலியும் ஜெயக்குமாரின் (சுவிஸ்) சகோதரியும் மிதிலா, நிருசா (கனடா), பிரியன் (சுவிஸ்) ஆகியோரின் மாமியாரும் தர்மநாதன், சுஜிபன் (கனடா) ஆகியோரின் சிறிய தாயாரும் பிரணயன், றேஜியன் ஆகியோரின் பேர்த்தியும் சத்தியசீலன் சூரியதர்சினியின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.10.2018) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சம்மட்டி ஒழுங்கை,
மானிப்பாய் வடக்கு, மானிப்பாய்.
ரஞ்சன் 077 958 9758,
சதீசன் 077 123 2262

தகவல்:
குடும்பத்தினர்.

## உடல் எடை குறைய வேண்டுமா?

- எடை கூடுகிறதா?
- ஊளைச் சதையா?
- உடல் எடை கூடி பல்வேறு நோய்களால் அவதிப்படுகிறீர்களா?
- வயிற்று கோளாறா?
- வயிறு, மார்பு குறைக்க வேண்டுமா.
- உடல் எடை குறைகிறதேயில்லை என்ற கவலையா?

100% பக்கவிளைவற்ற ஆயுள்வேத ஔடதம் (பால்மா, குளிசை, கிறீம்) 2 வாரங்களில் அற்புதமான மாற்றத்தை உணர்வீர்கள்.

**(விலை - 3500, 5500, 9000)**

## தலைமுடி நீளமாக வளர வேண்டுமா?

- தலைமுடி வளர வேண்டுமா?
- பேன், பொடுகு தொல்லையா?
- முடி கொட்டுகிறதா?
- இளநரையா?
- தலையிடியா?
- முடி அடர்த்தி இல்லையா?
- புதிதாக முடி முளைக்க வேண்டுமா?

பொன்னாங்காணி, கரிசலாங்காணி, இலாமிச்சைவேர், கருவேப்பிலை, வல்லாரை, நெல்லி சேர்த்துக் காய்ச்சிய எண்ணெய் 100% ஆயுள்வேத முறைப்படி காய்ச்சிய இவ்வெண்ணையைப் பாவித்து பலனடைய.

**பதிவு இல: 16168**
**077 210 6155** **221, நாவலர் றோட், யாழ்.**

## தவறிவிட்டது

ந.ஆறுமுகம் என்பவருடைய கிராம அலுவலர் இலட்சணை அடையாள அட்டை (632942664), சாரதி அனுமதிப் பத்திரம், ஒருதொகைப் பணத்துடன் மேலும் சில ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் கைதடி நுணாவில் வைரவர் கோயில் சந்திக்கும் நல்லூருக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

**076 604 9334** (IN/8111) (11,17)

*ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ!*

## மரண அறிவித்தல்

### திருமதி வாகீஸ்வரி நாகேந்திரம்



யாழ். ஆனைப்பந்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வாகீஸ்வரி நாகேந்திரம் நேற்று (20.10.2018) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கோபாலு - வாலாம்பிகை தம்பதிகளின் அன்பு மகளும் சுழிபுரத்தைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான செல்லப்பா - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் நாகேந்திரம் (முன்னாள் பரந்தன் இரசாயன கூட்டுத்தாபன ஊழியர்) இன் அன்பு மனைவியும் விஸ்வரூபன் (ஸ்ரீசிவராம் றேடர்ஸ் கணக்காளர்), கிரிதரன், சுபாசினி (முகாமைத்துவ உதவியாளர் - பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் திறியம்பகமூர்த்தி, விஸ்வதேவி (வசந்தா) ஆகியோரின் அருமைச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான லோகநாதன், தர்மலிங்கம், புஸ்பகுணம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.10.2018) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. 2.00 மணிக்கு யாழ். கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

## வேலை வாய்ப்பு

எமது நிறுவனத்துடன் இணைந்து பணிபுரிவதற்கு
**மேசன், கம்பி வேலை செய்பவர், சட்டறிங் வேலை செய்பவர்கள் உடன் தேவை**
தெரிவு செய்யப்படுபவர்களுக்கு சம்பளத்துடன் எமது நிறுவன ஊழியர் நலன்புரிசங்கத்தினால் வழங்கப்படும் சலுகைகளும் வழங்கப்படும். (ex.cs 15043) (13)

076 826 4859, 076 826 4857

## தொழில்சார் கற்கைகள் நிறுவனம்
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

**பட்ட, பட்டமேற்படிப்புப்பிரிவுகள்**
Fast Track Programme - 18/19

*English, *Nursing, *Education, *Management, *Computer Science, *Engineering, *Psychology etc.....
(கற்கைகள் யாவும் UGC இன் அங்கீகாரம்)

**ஆரம்பம் - 21.10.2018 - 31.10.2018**

தொடர்பு - 076 292 4387
email : degreepgrm08@gmail.com

*தமிழ்...*

போது இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி சார்பில் போட்டியிட்டு திருமதி அனந்தி சசிதரன் வெற்றி பெற்றிருந்தார். 2015ஆம் ஆண்டு அரச தலைவர் தேர்தலின்போது, தேர்தலைப் புறக்கணிக்க வேண்டும் என்று அனந்தி பரப்புரை மேற்கொண்டிருந்தார். அனந்தி மீது தமிழ் அரசுக் கட்சியினால் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. கட்சியிலிருந்து இடைநிறுத்தப்பட்டிருந்தார்.

தமிழ் அரசுக் கட்சிக்கும், முதலமைச்சருக்கும் இடையிலான முரண்பாட்டில் முதலமைச்சர் அணியுடன் இணைந்து செயற்படுவதாக அனந்தி வெளிக்காட்டியிருந்தார். புதிய கட்சியை தொடங்கும் முயற்சியிலும் அவர் ஈடுபட்டிருந்தார்.

இந்த நிலையில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியிலிருந்து விலகுவதாக நேற்றுமுன்தினம் 19ஆம் திகதியிட்ட கடிதத்தை, கட்சிக்கு நேற்றுக் கையளித்துள்ளார். வடக்கு மாகாண சபையின் பதவிக் காலம் எதிர்வரும் 24ஆம் திகதி நள்ளிரவுடன் முடிவுக்கு வரும் நிலையில், அனந்தி சசிதரன் தனது பதவி விலகல் கடிதத்தை இறுதி நேரத்தில் கையளித்துள்ளார். இதேவேளை அனந்தி சசிதரனின் ஈழத் தமிழர் சுயாட்சிக் கழகம் என்ற புதிய கட்சியின் அறிமுக நிகழ்வு யாழ்ப்பாணத்தில் இன்று இடம்பெறவுள்ளது. (5,105)

## பணிப்பெண் தேவை

வீட்டு வேலை செய்வதற்கு பணிப்பெண் தேவை.
**தொடர்பு - 076 354 6157**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் ஐந்து அறை கொண்ட வீடு 2 1/2 பரப்புக்கு உட்பட்ட காணியில் விற்பனைக்குண்டு. யாழ். மாநகர சபைக்குட்பட்ட பகுதியில் இல - 40 / 1 இரண்டாம் ஒழுங்கை பலாலி, வீதியில் அமைந்துள்ளது. **தொடர்பு - 075 580 8707**

## தேவை

பிரபல தனியார் பாலர் பாடசாலைக்கு அச்சுவேலி, புத்தூர், கோப்பாய், மானிப்பாய், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்கு ஆசிரியைகள் தேவை.

077 468 2951/ 077 700 9653

## வேலை வாய்ப்பு

பிரபல முதற்தர கல்வி நிறுவனத்திற்கு இணைப்பாளர்கள் : பட்டதாரி. வரவேற்பாளர்கள் O/L. சந்தைப்படுத்தல் அலுவலர்கள் - O/L, அலுவலக பராமரிப்பாளர்கள் தரம் - 8. வேலைவாய்ப்புக்கள் உள்ளன. அடிப்படைச்சம்பளம் - 15000/= இலிருந்து வழங்கப்படுவதுடன் வயது 30 வயதிற்குள் இருத்தல் அவசியமானதாகும்.

உடன் தொடர்புகளுக்கு - 077 6021 794

## எண்ணெய்க் காப்பு இன்று

யாழ்ப்பாணம், ஒக். 21

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் அமைந்துள்ள சிறீ ஞானவைரவப் பெருமானின் குடமுழுக்கு இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை 3 மணி முதல் எண்ணெய்க் காப்புடன் ஆரம்பமாகும். நாளை திங்கட் கிழமை காலை 9.05 மணிக்கு குடமுழுக்கு நடைபெறும் என்று தெரிவித்துள்ளது. (7)

### தன்மீதான ...

துருக்கி, பிரிட்டன் உள்ளிட்ட பல நாடுகள் போர்க்கொடி தூக்கியுள்ளன. ஜமால், அமெரிக்காவில் உள்ள 'வொசிங்டன் போஸ்ட்' செய்தி நிறுவனத்தில் சவூதி அரேபிய அரசையும், அந்த நாட்டின் பட்டத்து இளவரசர் பின் சல்மானையும் கடுமையாக விமர்சித்துக் கட்டுரைகளை எழுதி வந்தார். இவர் கடந்த வாரம் துருக்கியில் உள்ள சவூதியின் தூதரகத்துக்குச் சென்றபோது மாயமானார். அவரை சவூதி கொன்றுவிட்டது என்று துருக்கி குற்றஞ்சாட்டியது.

இந்தக் குற்றச்சாட்டை சவூதி மறுத்துவந்த நிலையில் துருக்கி நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை காணொலி ஆதாரங்களை வெளியிட்டது. 'ஜமால் விரல்கள் துண்டிக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டுக் கொல்லப்பட்டார்' என்று துருக்கி குறிப்பிட்டது. இதையடுத்து ஜமால் கொல்லப்பட்டதை சவூதி நேற்று ஏற்றுக்கொண்டது.

'சவூதி அரேபியாவின் தூதரகத்தில் ஜமால் சந்திக்கச் சென்ற நபருடன் ஏற்பட்ட வாக்குவாதத்தை அடுத்தே ஜமால் கொல்லப்பட்டார்' என்று குறிப்பிட்டுள்ள சவூதி தனது இரண்டு அதிகாரிகளை பணிநீக்கம் செய்துள்ளது. இதையடுத்து சவூதிக்கு எதிராக கொதித்தெழுந்துள்ளன உலக நாடுகள்.

ஜமாலின் குடும்பத்தினருக்கு இரங்கலைத் தெரிவித்துள்ள வெள்ளை மாளிகை, இந்த விவகாரத்தில் பன்னாட்டு விசாரணை தேவை என்று வலியுறுத்தியுள்ளது.

முன்னதாக (கடந்த வியாழக்கிழமை) சிரியாவில் அமெரிக்கா மேற்கொள்ளும் தொண்டு நடவடிக்கைகளுக்கு தமது சார்பான நிதி என்று குறிப்பிட்டு இலங்கை மதிப்பில் சுமார் 2 ஆயிரத்து 100 கோடி ரூபாவை அமெரிக்காவுக்கு சவூதி வழங்கியது. இந்த நிதி 'ஜமாலின் கொலை விவகாரத்தில் இருந்து அமெரிக்கா பின்வாங்குவதற்காக சவூதி கொடுத்துள்ள கையூட்டு' என்று பன்னாட்டுச் செய்தி நிறுவனங்கள் விமர்சித்திருந்தன. (ம)

### போர்க்குற்றச்....

'ஐ.நாவின் உத்தரவையடுத்து அவரை இலங்கைக்கு மீள அழைத்துள்ளோம்' என்று இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

ஸ்டீபன் டுஜாரிக் மேலும் தெரிவித்ததாவது, "அவரது மனித உரிமை பதிவுகள் பற்றிய அண்மைய தகவல்கள் ஆய்வு செய்யப்பட்ட பின்னர், ஐ.நா. இந்த முடிவை எடுத்துள்ளது. மாலியில் ஐ.நா. அமைதிப்படையில் பணியாற்றுவதற்குச் செல்ல முன்னர், இவரது மனித உரிமைப் பதிவுகள் ஐ.நாவால் ஆய்வுக்குட்படுத்தப்பட்டன. அண்மையில் புதிதாகக் கிடைத்த தகவல்களின் விளைவாகவே ஐ.நா. இந்த முடிவை எடுத்துள்ளது. இராணுவத் தளபதி ஏற்கனவே நாடு திரும்பாவிடின், அவர் மிகவிரைவில் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படுவார். கூடிய விரைவில், லெப்.கேணல் அமுனுபுரேவுக்குப் பதிலான அதிகாரியை நியமிக்குமாறு இலங்கையிடம் ஐ.நா கேட்டுள்ளது, என்றும் அவர் கூறினார்.

மேற்கு ஆபிரிக்க நாடான மாலியில், 200 பேர் கொண்ட இராணுவ அணியொன்று ஐ.நா. அமைதிப்படையில் பணியாற்றி வருகிறது. லெப்.கேணல் அமுனுபுரே மீதான போர்க் குற்றச்சாட்டு தொடர்பான விவரங்கள் எதையும், ஐ.நா. பேச்சாளர் வெளியிடவில்லை.

மாலியில் உள்ள, பெயர் வெளியிடப்படாத' இராணுவ அதிகாரி ஒருவர், இறுதிக்கட்டப் போரில் போர்க்குற்றங்களை இழைத்தார் என்று குற்றம்சாட்டப்பட்டுள்ளதாக கடந்த ஜூலை மாதம் தி கார்டியன் நாளிதழ், செய்தி வெளியிட்டிருந்தது.

தென்னாபிரிக்காவைத் தளமாக கொண்ட யஸ்மின் சூகாவை தலைவராக கொண்ட பன்னாட்டு உண்மை மற்றும் நீதி திட்டம், ஐ.நா. அமைதிப்படையில் பணியாற்றும் படையினர்

# விக்கியை முதலமைச்சராக்கியது தமிழ் அரசுக் கட்சி செய்த பாவம்

## மாவை. எம்.பி. ஆதங்கம்

முல்லைத்தீவு, ஒக். 21

வடக்கு மாகாண முதலமைச்சராக சி.வி.விக்னேஸ்வரனை தெரிவு செய்தது நாங்கள் செய்த பாவம் என்றும், அந்தப் பாவத்தை கடந்த 5 ஆண்டுகளாக அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம் என்றும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியித் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை.சோ.சேனாதிராசா தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில், நில அதிகாரமும் அதிகாரப் பகிர்வும் என்ற சிறப்பு பேருரை ஒட்டுசுட்டான் சிவன் கோவிலில் நேற்று மாலை இடம்பெற்றது. இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், திருமதி சாந்தி சிறிஸ்கந்தராசா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சோ. சேனாதிராசா தெரிவித்ததாவது,

தமிழர்களின் பிரச்சினை தொடர்ந்து கொண்டே செல்கின்றது. நாங்கள் பேசிக் கொண்டு இருக்கின்றோம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விக்னேஸ்வரன் காரசாரமாகக் கண்டிக்கின்றார். நாங்கள் விரைவில் பதிலடி கொடுப்போம். கஜேந்திரகுமாரும் நீதியரசர் விக்னேஸ்வரனும் என்ன சொன்னார்கள். இந்த இடைக்கால அறிக்கையினை நிராகரியுங்கள் என்று சொன்னார்கள். ஏன் அப்படி சொன்னார்கள். தமிழ் தேசியக் கூட்டமைப்பினால் இந்த பிரச்சினைக்குத் தீர்வு காண்டுவிடக்கூடாது என்பதற்காகத்தான் அப்படிச் சொன்னார்கள்.

பேரனும் சொல்கிறார் அடுத்த பேரனும் சொல்கிறார். அத்தோடு இப்போது ஒரு நீதியரசரும் சொல்கிறார். அவர் இப்போது நீதிமன்றத்தில் நீதிமன்ற அவமதிப்பு வழக்குக்காகக் காத்திருக்கின்றார். அவர் பெரிய நீதியரசர் என்று சொல்லுகின்றார். நாங்கள் இப்போது பொறுமையாக இருக்கின்றோம். சிறிது காலத்தில் அவர் பற்றிய அரசியல் விடயங்களையும் ஒழுங்காகச் சொல்லுவோம்.

இடைக்கால அறிக்கை முடிந்த முடிவு அல்ல. இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கு அது முழுமையானது அல்ல. அதில் சில இணக்கமானவைகள் இருக்கின்றன. இணங்க முடியாதவைகள் திருத்தி அமைக்க வேண்டும். இணக்கம் இல்லாது விட்டால் அது எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாதவையாகத்தான் இருக்கும்.

இந்த ஆண்டுக்குள் புதிய அரசமைப்பு, நிலங்கள் விடுவிப்பது, கைதிகளின் விடயம் இவ்வாறு பல விடயங்களுக்கு தீர்வு காணப்பட வேண்டும். நிலம் எங்களுக்கு எவ்வளவு முக்கியமானது. நிலத்தை இழந்துவிட்டு தமிழீழ குடியரசாக இருந்தாலும் எங்கே நாங்கள் ஆளப்போகின்றோம்.

இந்த அரசும் எங்களுடைய பிரச்சனைக்கு தீர்வு தரவில்லை என்றால் அடுத்த கட்டம் என்ன? யாராவது கதைக்கின்றார்களா அதைப்பற்றி? ஆக சம்பந்தனை பற்றி, சுமந்திரனை பற்றி, என்னை பற்றி கதைக்கிறார்கள். எங்கள் தலைமையினை மாற்ற வேண்டும் அதுதான் முக்கியம். எங்கள் தலைமையினை மாற்ற வேண்டும். ஒரு புதிய தலைமையினை கொண்டு வர வேண்டும் என்று ஆளாளாக அடிபட்டுத் திரிகின்றார்கள். அது அல்ல இப்போது எங்களின் பிரச்சினை. இந்த அரசும் எங்களை ஏமாற்றுமாக இருந்தால் இந்த ஆண்டின் இறுதியில் சில முக்கியமான தீர்மானங்களை எடுக்க வேண்டி வரும் என்றார். (5,ரி3)

தொடர்பாக அந்த அறிக்கையில் தகவல்களை வெளியிட்டிருந்தது. இது தொடர்பில் கருத்துத் தெரிவித்திருந்த இராணுவப் பேச்சாளர், அவர் குற்றமிழைக்கவில்லை என்று நிரூபித்த பின்னர் மீண்டும் அவரை அமைதிப்படை நடவடிக்கைகளில் ஈடுபடுத்தவுள்ளோம். இந்த விவகாரம் காரணமாக ஐக்கிய நாடுகளுக்கும், அமைதிப் பணிகளில் ஈடுபட்டுள்ள இலங்கைப் படையினருக்கும் இடையிலான உறவுகளில் பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை எனவும் இராணுவப்பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பன்னாட்டுப் பங்களிப்புடன் சிறப்பு நீதிமன்றத்தை நிறுவி போர்க்குற்ற விடயங்களை ஆராய வேண்டும். நடவடிக்கை முன்னெடுக்கப்படாவிடின் உலகளாவிய நியாயாதிக்கம் என்ற மாற்றுவழியை ஆராயுமாறு உறுப்புநாடுகளை ஐ.நா. மனித உரிமைகள் முன்னாள் ஆணையாளர் ஹுசைன் கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (5)

### எங்கள் தமிழ்...

சென்று நித்திரையில் ஆழ்ந்தது தான் எமது சரித்திரம். சுற்றி என்ன நடக்கின்றது என்பதை அறியாத அப்பாவிகளாக இருந்தார்கள். இன்றும் இருந்து வருகின்றார்கள். இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்படும், 'சூழல் அரசியலும் நில அபகரிப்பும் போரின் பச்சை முகம்' என்ற தொனிப் பொருளிலான உரை அரங்கு, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சபாலிங்கம் அரங்கில் நேற்று மாலை இடம்பெற்றது. அங்கு முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்துகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

சிங்கள அரசியல் தலைமைகள் வடகிழக்கைத் தம்வசம்படுத்தும் பல திட்டங்களைத் தீட்டியுள்ளார்கள். அதே சந்தர்ப்பத்தில் இதற்குச் சமாந்தரமாக சந்தடி எதுவுமின்றி அந்த அரசியல் முன்னெடுப்புக்களை நிறைவேற்றுகின்ற குழுக்களாக வேறு குழுக்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. உதாரணமாக ஜே.ஆர்.ஜெயவர்த்தன அரசதலைவராக வீற்றிருந்த காலத்தில் உள்நாட்டுப் போர் வலுப்பெற்று எல்லைப்புறக் கிராமங்களில் இனங்களுக்கிடையே போர் நடைபெற்ற காலத்தில் ஜே.ஆரின் மகனான ரவி ஜெயவர்த்தன இந்த நிறைவேற்றுக் குழுவொன்றுக்குத் தலைமை தாங்கினார்.

வவுனியாவுக்கு அப்பால் உள்ள பம்பைமடு, ஈரற்பெரிய குளம் போன்ற பகுதிகளில் தென் பகுதியில் இருந்து சிங்கள மக்களைக் கொண்டுவந்து குடியேற்றியது மட்டுமன்றி அவர்களுக்கு துப்பாக்கிச் சுடும் பயிற்சி மற்றும் இன்னோரன்ன இராணுவப் பயிற்சிகளை வழங்கி அவர்களை அங்கு குடியேற்றினார்.

ரவி ஜெயவர்த்தன அரசியல் மேடைகளில் காட்சியளிக்காத போதும் இந்த நிறைவேற்று கடமைகளை திறம்பட ஆற்றினார். எனக்கு மூத்தவராக என் கல்லூரியில் கற்ற அவர் 'ரைஃபிள் க்ளப்' என்ற எமது சங்கம் ஒன்றில் சேர்ந்து சூட்டுப் பயிற்சி பெற்று மாணவனாக இருந்த காலத்தில் துப்பாக்கி சுடுவதில் பத்துக்குப் பத்து என்ற கணக்கில் இலக்குகளை சுட்டு வீழ்த்தக் கூடியவராக இருந்தார் என்று குறிப்பிட்ட முதலமைச்சர், இலங்கையின் தமிழ்ப் பகுதிகளில் சிங்கள அரசுகளினால் முன்னெடுக்கப்பட்டுவந்த இன அழிப்பு அல்லது இனச் சுத்திகரிப்புப் பற்றி உலக நாடுகள் பலவும் அறிந்திருக்கின்றன. ஆனால் தற்போது எதுவித ஆரவாரங்களுமின்றி துப்பாக்கி முழக்கங்கள் இன்றி, குருதி சிந்தாமல், பச்சைப் போர் என்ற பெயரால் எமது தமிழ்ப் பிரதேசங்கள் ஆக்கிரமிக்கப்பட்டு வருகின்றன. அதற்கு சூழல் அரசியல் என்ற மாயைச் சொல்லை பயன்படுத்தி உலக நாடுகளை நம்பச் செய்கின்ற கனகச்சிதமான செயற்பாடுகள் இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்றார். (5.8)

### எங்கள் பிரதிநிதிகளுக்கு...

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்படும், சூழல் அரசியலும் நில அபகரிப்பும் போரின் பச்சை முகம் என்ற தொனிப் பொருளிலான உரை அரங்கு, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சபாலிங்கம் அரங்கில் நேற்று மாலை இடம்பெற்றது. அங்கு முதன்மை விருந்தினர் உரை நிகழ்த்துகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

நில அபகரிப்புக்கான பல சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. புதிய புதிய சட்டங்களை உருவாக்கி அந்தச் சட்டங்களின் கீழ் எமது மக்களின் பூர்வீகக் குடியிருப்புக் காணிகள் அரசுடமைகளாக்கப்பட்டு வருகின்றன. எமது மக்களை அவர்களின் இருப்பிடங்களில் இருந்து அகற்றுவதும் அவர்கள் நிலங்களில் பயிற்செய்கைகள் மேற்கொள்ள முடியாமல் தடுப்பதும் என்று பலவித வழிகளில் இந்தப் பச்சைப் போர் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இவை பற்றி எதுவும் அலட்டிக் கொள்ளாமல் எமது அரசியல் தலைமைகள் தொடர்ந்தும் ஆட்சியாளர்களுக்கு நிபந்தனையற்ற ஆதரவுகளை நல்குவதும் தமிழ் மக்களின் ஏகோபித்த குரல்களுக்கு எதிராக அரசுக்கு வக்காளத்து வாங்குவதுமான நிகழ்வுகள் எம்மை வெட்கித்தலை குனிய வைக்கின்றது. ஒரு இனத்தையே இல்லாமல் அழிப்பதும் அவர்களின் இருப்பிடங்களை இல்லாமல் செய்வதுக்குமான செயல்களுக்கு எம்முடைய தலைமைகள் துணை போகின்றார்கள்.

வடகிழக்கு சிறப்பு அரச தலைவர் செயலணியின் கூட்டத்துக்குப் போகாது வருட முடிவின் முன் அரசியல் தீர்வைத் தாருங்கள் என்று நெருக்கடி கொடுக்க இதுவே தருணம் என்றேன். இரா.சம்பந்தன், நாடாளுமன்றக் கூட்டத்தைக்கூட்டி இந்தச்செயலணிக்கூட்டத்துக்கு நாம் சென்றேயாக வேண்டும். அரசியல் தீர்வும் பொருளாதார முன்னேற்றமும் சமாந்தரமாக நடைபெற வேண்டும் என்று கூறி எம்மவர் அடுத்த கூட்டத்துக்குப் போனார்கள். நெருக்குதல்களைக் கொடுக்காது தொடர்ந்து வரும் அரசுகளிடமிருந்து அரசியல் தீர்வை எவ்வாறு பெறப் போகின்றோம் என்ற அடிப்படை அறிவு கூட இல்லாத தமிழ்த் தலைமைகளைத் தான் நாம் இன்று கொண்டுள்ளோம். கடைசியில் தீர்வு எதுவும் கிட்டாது. பொருளாதார அபிவிருத்தி என்ற பெயரில் சிங்கள முதலீட்டாளர்களை வடக்குக்கு கொண்டு வருவதாகவே இது முடியும்.

அடுத்த கிழமை முதல் ஆளுநர் பொறுப்பேற்ற பின் அவருடன் இணைந்து அடுத்த மார்ச் மாதத்தில் இலங்கை அரசு மீண்டும் இரண்டு வருடங்கள் நீடிப்புப் பெற சகல நடவடிக்கைகளையும் எடுக்க இருக்கின்றது. சௌம்மியமூர்த்தி தொண்டமான் கூறுவார், அரசியலில் தோசையை எப்போது திருப்ப வேண்டும் என்று தெரிந்து வைத்திருக்க வேண்டும் என்று. தோசையே போடத் தெரியாதவர்கள் தான் எமது பிரதிநிதிகளாக இருக்கின்றார்கள். நீண்ட காலப் போரில் பல்லாயிரக்கணக்கான உயிர்களை அழித்து பெறமுடியாத வெற்றிகளை, இன்று அரசு குருதி சிந்தாமல், சந்தடிகள் எதுவுமின்றி, திணைக்களங்களின் உதவிகளுடன் முன்னெடுப்பதும் அதற்கு அரசின் முகவர்களாக விளங்கக்கூடிய எமது உயர் அதிகாரிகளும் உடந்தையாக இருந்து வருகின்றார்கள். அவர்கள் ஒரு நாள் பதில் சொல்ல வேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாக்கப்படுவார்கள். அந்தநாள் விரைவில் கிட்ட வேண்டும்.

**தொல்பொருள் திணைக்களம்**

அரசின் கபட நோக்கங்களை நிறைவேற்றுகின்ற ஒரு திணைக்களமாக தொல்பொருளியல் திணைக்களம் இயங்கி வருகின்றது என்றே கூற வேண்டும். உதாரணமாக திருக்கேதீச்சரம் பகுதியில் கோவிலுக்குச் சொந்தமான நிலத்தில் தென்னை மரங்கள் நாட்டப்பட்டு அவைகள் காய்த்துக் குலுங்குகின்ற இந்தவேளையில் அந்த மரங்களுக்குத் தேவையான உரக்கலவைகளை இடுவதற்கு நிலத்தை கொத்தி செப்பனிடுவதற்கு தொல்பொருளியல் திணைக்களம் தடை விதித்திருக்கின்றது. காரணம் கேட்டால் தொல்பொருள் தடையங்கள் காணப்படக்கூடிய பகுதியாகையால் அந்தப் பகுதிகளில் நிலத்தை அகழ்வதற்கோ அல்லது மண்வெட்டி கொண்டு கொத்துவதற்கோ அனுமதி இல்லை என்று கூறப்படுகின்றது.

ஆனால் அதே பகுதியில் நிலத்தைக் கொத்தாமல், அடையாளங்களை சிதைக்காமல், கிறிஸ்தவர்களும் பௌத்தர்களும் எவ்வாறு குடியேறினார்கள் என்பது புரியாப்புதிராக இருக்கின்றது. நான் இங்கு மதம் சார்ந்து குதர்க்கமாக பேசுகின்றேன் என யாரும் குறை விளங்க வேண்டாம். உண்மை நிலையை எடுத்துச் சொன்னேன். அவ்வளவு தான். வேண்டுமானால் போய்ப் பார்த்து உண்மையை உணர்ந்து கொள்ளலாம் என்றார். (5,8)

# மகாஜனாவை வென்றது யாழ்ப்பாணம் பற்றிக்ஸ்



யாழ்ப்பாணம், ஒக். 21
பிரான்ஸ் தமிழர் கால்பந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் அழைக்கப்பட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 20 வயதுப்பிரிவு அணிகளுக்கான கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி வெற்றிபெற்றது. இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி மோதியது.
2:0 என்ற கோல் கணக்கில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி வெற்றிபெற்றது. (ம-23)

## இளந்தளிர் அணி போராடி வென்றது

யாழ்ப்பாணம், ஒக். 21
திருநகர் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் இளந்தளிர் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது. திருநகர் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் இளந்தளிர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென். பிலிப்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.
நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணிகளும் தலா ஒரு கோலைப் பதிவுசெய்ததை அடுத்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.
முடிவில் 3:2 என்ற கோல் இளந்தளிர் அணி வெற்றிபெற்றது. (ம)



## பரந்தன் அணி வெற்றிபெற்றது

யாழ்ப்பாணம், ஒக். 21
திருநகர் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் பரந்தன் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.
திருநகர் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் பரந்தன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சுடரொளி விளையாட்டுக் கழக அணி மோதியது.
நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணிகளும் தலா ஒரு கோலைப் பதிவு செய்ததை அடுத்து சமநிலைத் தகர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.
முடிவில் 2:1 என்ற கோல் கணக்கில் பரந்தன் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது. (ம-23)

இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனத்தால் நடத்தப்படும் இரண்டாம் பிரிவு அணிகளுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இன்று இரவு 8 மணிக்கு இடம்பெறவுள்ளது.
இந்த இறுதியாட்டத்தில் யாழ்ப்பாணம் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பேருவளை கிறேட் ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ம-23)




## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஒக். 21

**இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தின் தொடர்**
இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனத்தினால் நடத்தப்படும் டயலொக் வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆரம்ப நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை இரவு 6 மணிக்கு யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இன்றுஇடம்பெறும் ஆட்டத்தில் பேருவளை சுப்பர் சண் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வென்னப்புவ நியூ யங்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**மன்னார் சுப்பர் லீக்**
மன்னார் துடுப்பாட்டச் சங்கம் நடத்தும் மன்னார் சுப்பர் லீக் ரி20 தொடரின் ஆட்டங்கள் நானாட்டான் பொது விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் நானாட்டான் ஈகிள்ஸ் அணியை எதிர்த்து மாந்தை கோப்ராஸ் அணி மோதவுள்ளது. பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மடு பீனிக்ஸ் அணியை எதிர்த்து மன்னார் பையிற்ரர் அணி மோதவுள்ளது.

**ஏபி கழகத்தின் துடுப்பாட்டம்**
ஏபி விளையாட்டுக் கழகம் நடத்தும் துடுப்பாட்டத் தொடரின் ஆட்டங்கள் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் மைதானத்தில் இன்று இடம்பெறவுள்ளன. இந்தத் தொடரில் இன்று காலை 9.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கே.ஸி.ஸி. விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. நண்பகல் 12.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் திருநெல்வேலி கிரிக்கெட் கழக அணியை எதிர்த்து வட்டுக்கோட்டை ஓல்ட் கோல்ட்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)

# தொடரை இழந்தது இலங்கை







இலங்கைக்கு எதிரான ஒருநாள் தொடரில் நேற்று நடைபெற்ற நான்காவது ஆட்டத்திலும் வெற்றிபெற்றுத் தொடரைக் கைப்பற்றுவதை உறுதி செய்தது இங்கிலாந்து அணி.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி நிர்ணயிக்கப்பட்ட 50 பந்துப் பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 273 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக சானக 66 ஓட்டங்களைக் குவித்தார். 66 பந்துகளில் 4 சிக்சர்கள் உள்ளடங்கலாக் இந்த ஓட்டத்தை சானக எட்டினார். அவரைவிட ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் டிக்வெல்ல 52 ஓட்டங்களையும், திசர பெரேரா 44 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் மொயின் அலி 2 இலக்குகளையும், வோக்ஸ், கரன், ரசிட் மூவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இங்கிலாந்து அணிக்கு ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் கேல்ஸ் 12 ஓட்டங்களுடன் ஏமாற்றினாலும் றோய், ரூட் இருவரும் இணைந்து இங்கிலாந்து அணியைத் தூக்கி நிறுத்தினார்கள். 45 ஓட்டங்களுடன் றோய் ஆட்டமிழந்தார். ரூட்டுடன் இணைந்து சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தினார் மோர்கன். சிக்சர்கள், பவுண்டரிகள் என மோர்கன் விளாச இங்கிலாந்தின் சராசரி ஏற்றம் கண்டது. 27 பந்துப்பரிமாற்றங்களில் இங்கிலாந்து அணி 2 இலக்குகளை இழந்து 132 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது மழை குறுக்கிட்டதை அடுத்து டக்வேர்த் லூயிஸ் முறைப்படி 18 ஓட்டங்களால் வெற்றிபெற்றது இங்கிலாந்து அணி.

இங்கிலாந்தின் சராசரியை உயர்த்தி வெற்றிக்கு வழிவகுத்த இங்கிலாந்து அணித் தலைவர் மோர்கன் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

**இறுதியாட்டம் நாளைமறுதினம்**

இந்த இரண்டு அணிகளுக்கு இடையிலான ஐந்தாவதும் இறுதியானதுமான ஆட்டம் நாளைமறுதினம் நடைபெறவுள்ளது. நான்கு ஆட்டங்களின் முடிவில் இங்கிலாந்து அணி 3:0 என்ற அடிப்படையில் (ஓர் ஆட்டம் மழையால் கைவிடப்பட்டது) முன்னிலையில் உள்ளதால் இறுதியாட்டத்தின் முடிவு எவ்வாறு அமைந்தாலும் கிண்ணம் இங்கிலாந்திடமே செல்லும். (ம)




## இந்தியா – மே.தீவுகள் ஒருநாள் தொடர் இன்று

இந்தியா - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையிலான ஐந்து ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடர் இன்று ஆரம்பமாகிறது.

பகலிரவு ஆட்டமாக இன்றைய ஆட்டம் நடைபெறவுள்ளது. டெஸ்ட் தொடரை இந்தியா முழுமையாகக் கைப்பற்றியதை அடுத்து ஒருநாள் தொடரையாவது கைப்பற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி எத்தனிக்கும். அதேநேரம் இந்திய அணி தனது சொந்த மைதானத்தில் தொடரை இழக்க விரும்பாது. இதனால் இந்த ஆட்டத்தில் விறுவிறுப்புக்கும் பஞ்சம் இருக்காது என்று கருதப்படுகிறது. (ம)

## ஆஸ்திரேலியா மாறவில்லை சர்பிராஸ் அகமட் தெரிவிப்பு



பந்தைத் திட்டமிட்டுச் சேதப்படுத்திய விவகாரத்துக்குப் பின்னர் ஆஸ்திரேலிய அணிக்குள் ஏகப்பட்ட மாற்றங்கள் குறிப்பாக ஒழுக்க நடத்தைகளில் பல மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன என்று ஆஸ்திரேலிய அணியின் தலைவர் பெய்ன் மற்றும் தலைமைப் பயிற்சியாளர் லாங்கர் வெளியிட்ட கருத்துக்களை பாகிஸ்தான் அணியின் தலைவர் சர்பிராஸ் அகமட் ஏற்க மறுத்தார்.

ஆஸ்திரேலிய அணி கடந்த சில மாதங்களுக்கு முன்னர் தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடிய போது, அளவுக்கதிகமான வார்த்தை மோதல், மோதல் போக்கு, பந்தைத் திட்டமிட்டுச் சேதப்படுத்தியமை உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்களில் ஆஸ்திரேலிய அணி சிக்கியது. பந்தைத் திட்டமிட்டுச் சேதப்படுத்திய விவகாரத்தில் சிமித், வோர்ணர் ஆகியோர் ஓர் ஆண்டும், பான்குரொப்ட் மீது ஒன்பது மாதங்களும் தடை விதித்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதையடுத்து அணியின் தலைமைத்துவம் பெய்னிடமும் பயிற்சியாளர் பொறுப்பு லாங்கரிடமும் கொடுக்கப்பட்டது.

பெய்ன் - லாங்கர் கூட்டணி ஆஸ்திரேலிய அணிக்குள் ஒழுக்கத்தை ஏற்படுத்துவதுதான் தமது முதல் நோக்கம் என்று தெரிவித்து சில நடவடிக்கைகளை மேற்கொண்டது. ஆஸ்திரேலிய அணி இனி தேவையற்ற வார்த்தை மோதல்களில் ஈடுபடாது என்றும் பெய்ன் - லாங்கர் கூட்டணி தெரிவித்தது. இந்த மாற்றங்களுக்குப் பின்னர் ஆஸ்திரேலியா தனது முதலாவது தொடரை பாகிஸ்தானுக்கு எதிராக விளையாடி முடித்துள்ளது. நேற்றுமுன்தினம் இந்தத் தொடர் நிறைவுக்கு வந்தது. இதையடுத்து இந்தத் தொடரில் ஆஸ்திரேலிய அணியில் மாற்றங்கள் தெரிந்ததா என்று பாகிஸ்தானின் தலைவர் சர்பிராஸ் அகமட்டிடம் கேட்கப்பட்டது. அதற்கு அவர் "இல்லை" என்றே பதில் வழங்கியுள்ளார்.

"ஆஸ்திரேலிய அணியில் எந்த மாற்றத்தையும் என்னால் அவதானிக்க முடியவில்லை. வார்த்தை மோதல்களும் வம்பிழுத்தல்களும் அந்த அணிக்குள் ஆழமாக ஊடுருவியுள்ளன. ஆஸ்திரேலிய வீரர்கள் அமைதியாக உள்ளனர். அமைதியாக விளையாடுகிறார்கள் என்று கூறி விட முடியாது. அவர்கள் அமைதியாக இல்லை. குறிப்பாக லையன் ஏராளமாகப் பேசுகிறார்" என்று சர்பிராஸ் மேலும் தெரிவித்தார். (ம)

## நீக்கப்படலாம் மெண்டிஸ்

தொடர்ச்சியாக தடுமாற்றங்களை வெளிப்படுத்தி வருகின்ற காரணத்தால் இலங்கை அணியில் இருந்து குசல் மெண்டிஸ் நீக்கப்படலாம் என்று கருதப்படுகிறது.

மூன்று வகையான ஆட்டங்களுக்கான இலங்கை அணியில் இடம்பிடித்திருந்த குசல் மெண்டிஸ், அண்மைக்காலமாக தொடர்ச்சியாக தடுமாற்றங்களை வெளிப்படுத்தி வருகின்றார். இங்கிலாந்துக்கு எதிராகத் தற்போது நடைபெற்றுவரும் ஒருநாள் தொடரிலும் குசல் மெண்டிஸ் தொடர்ச்சியாக தடுமாறுகிறார். ஒரு தடவையேனும் அவர் பதின்மத்தைத் தாண்டவில்லை. இதனால் அவர் அணியில் இருந்து நீக்கப்படலாம் என்று கருதப்படுகிறது. (ம)



# உலக சம்பியன்ஷிப்பில் இருந்து காயத்தால் விலகினார் சிமோனா

பன்னாட்டு ரென்னிஸ் தரப்படுத்தலில் முதல் எட்டு இடங்களில் உள்ள வீராங்கனைகள் மட்டும் பங்குபற்றும் உலக சம்பியன்ஷிப் ரென்னிஸ் தொடரில் இருந்து விலகினார் சிமோனா கேலப். ஒவ்வொரு ஆண்டும் இறுதிப் பகுதியில் பன்னாட்டுத் தரப்படுத்தலில் முதல் எட்டு இடங்களிலும் உள்ள வீரர்களைத் தெரிவுசெய்து அவர்களுக்கு இடையில் தொடரொன்று நடத்தப்படும். இந்தத் தொடர் உலக சம்பியன்ஷிப் என்று அழைக்கப்படுகிறது. இந்த ஆண்டுக்கான தொடர் இன்று தொடக்கம் எதிர்வரும் 28ஆம் திகதி வரை சிங்கப்பூரில் நடைபெறவுள்ளது. இந்தத் தொடரில் இருந்து காயம் காரணமாக விலகினார் பன்னாட்டுத் தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ளவரான சிமோனா கேலப். (ம)




**காணி விற்பனை**

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் (யூனியன் லேன்) 1 பரப்பும் 3.63 குளியும் உடைய காணி விற்பனைக்கு உண்டு. கூடிய விலை கோருபவருக்கு முன்னுரிமை.

077 949 3023 (CS 20680) (11.17)

**காணி விற்பனைக்கு**

நாவலர் வீதி, இல. 132/1இல் (கஸ்தூரியார் வீதிக்கு அருகில்) நில. பரப்பு 1 குழி 0.51 அளவுள்ள காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு - 077 978 5717

**விற்பனைக்கு**

யாழ். C.T.B பஸ் தரிப்பிடத்துக்குப் பின்பாக இலக்கம் 175, மின்சார நிலைய வீதியில் HNB வங்கிக்கு அருகில் 12 அடி அகலம், 100 அடி நீளம் கொண்ட தனிக் கடையும், யாழ். சிவகுருநாதன் வீதியில் 3½ பரப்பு வெற்றுக்காணியும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு - 077 723 2535

**அமெரிக்க லொத்தர் இலவச விசா**

உடனடியாக பதிவு செய்யுங்கள்

இந்த வருடமே இறுதி வருடம்

இன்னும் சில நாட்களில் பதிவுகள் நிறைவடைகிறது

V2 TRAVELS இனது விளம்பரம் பார்த்து இருக்காவிட்டால் எனக்கு இன்று அமெரிக்காவில் கை நிறைய சம்பளத்துடன் நிரந்தர குடியுரிமையும் வாய்ப்பு கிடைத்து இருக்காது. V2 TRAVELS க்கு நன்றிகள்.

செல்வராஜா - அருணன்

V2 TRAVELS

0768226243

**விற்பனைக்கு**

நவாலி சங்கரத்தை வட்டுக்கோட்டையில் 8 பரப்புக் காணியில் அமைந்துள்ள வீடு, வெதுப்பகம், வியாபார ஸ்தலங்கள் இரண்டு என்பன விற்பனைக்குண்டு

076 411 1974

**S.K. Broking இல - NAL/DS/1442**

**காணிகள் விற்பனைக்குண்டு**

திருநெல்வேலி விவசாயப்பண்ணைக்கு முன் ஒழுங்கை கலைவாணி வீதியில் 1 1/4 பரப்பும், கோப்பாய் இராச வீதியில் 4 பரப்பும், கோண்டாவில் இருபாலை வீதியில் 2 1/2 பரப்பும், நாவற்குழி அரச உணவுக்களஞ்சியத்திற்கு முன் ஒழுங்கையில் 4 பரப்புக்காணியும் விற்பனைக்குண்டு.

தொடர்பு - 077 461 3884, 077 193 3490

**முக்கிய அறிவித்தல்**

எள்ளின் விலை அதிகரிப்பால் 21.10.2018 இன்றிலிருந்து பரிமளாஸ்ரோர்ஸ் தயாரிப்பான V.S.P நல்லெண்ணையின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது என்பதனை வாடிக்கையாளர், ஏக விநியோகஸ்தர்களுக்கு மனவேதனையுடன் அறியத்தருகின்றோம்

விலை விவரம்:

ஆகக்கூடிய சில்லறை விலை

➤ 750 ml - 650 /= ➤ 350 ml - 325 /= ➤ 200 ml -200 /=

(cs.cr 15043) (13)

பரிமளா ஸ்ரோர்ஸ்

இல.26A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

021 222 4135, 021 222 9165

**பொதுக்கூட்டமும், புதிய நிர்வாகத் தெரிவும்.**

கிளி /வன்னேரிக்குளம் யோகசுவாமிகள் திருவடி நிலைய முதியோர் இல்லத்தின் பொதுக்கூட்டமும், புதிய நிர்வாகசபைத் தெரிவும் மாவட்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர். கரைச்சி பிரதேச செயலக சமூக சேவைகள் உத்தியோகத்தர் தலைமையில் 2018.10.23 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 10 மணிக்கு இல்லவளாக மண்டபத்தில் நடைபெறும். இதில் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். நிர்வாகம்.





இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.10.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.